அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும்

நெல்லை நெடுமாறன்
ஆ. தசரதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும்

தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன்
முனைவர் ஆ. தசரதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை 600 113

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச்
சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்)
வரிசை எண் : 24

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Aracakulac cāṉṟōr varalāṟum maturaikkāñciyum
Authors	:	S.D. Nellai Nedumaran Nalumavadi, Tuttukkudi District Dr. A. Thasarathan International Institute of Tamil Studies
General Editor	:	Prof. Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Tharamani, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	721
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2011
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	xvi + 240
No. of Copies	:	1200
Price	:	Rs. 115/- (Rupees One hundred and fifteen Only)
Printed by	:	Sri Venkateswara Offset New No. 47, Rajanga Mathiya Street Vadapalani, Chennai - 600 026
Subject	:	The history of Sanror community and the ancient classic Maturaikanchi.

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் . கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக் காஞ்சியும் எனும் இந்நூல் தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்களும் செவ்வியல் மொழி அறிஞர் முனைவர் ஆ. தசரதன் அவர்களும் இணைந்த நிலையில் எழுதப்பட்டுள்ளது.

பாண்டியரின் சந்ததியினர் இறுதியில் சமீன்தார் நிலையை எய்தித் தென்பாண்டி நாட்டில் ஓர் ஊரில் இருந்து வருவாராயினர் எனச் சதாசிவ பண்டாரத்தார் தம் நூலில் நிறுவுகின்றார்.

பாண்டிய மன்னனுக்குப் பஞ்சவன் எனும் பெயருண்டு எனக் கூற வந்த இந்நூலாசிரியர்கள்

ஐவர் ராசாக்கள் கதை	*(அஞ்சுபேர் ராசாக்கள்)*
பஞ்சபாண்டியனூர்	*(தென்காசி அருகேயுள்ள ஊர்)*
பஞ்சவர் ஏறே	*(புறம். 58: 8)*
ஐவர் பாண்டியர்	*(கி.பி. 870 கல்வெட்டு)*
ஐவர் மலை	*(மதுரை மாவட்டம்)*

எனும் சான்றாதாரங்கள் கொண்டு விளக்குகின்றனர். சந்திரகுலப் பாண்டியர்கள் எனக் கூறவந்தபோது சிலப்பதிகார வரிகளைச் சான்று காட்டுகின்றனர்.

முற்காலப் பாண்டியர்கள் குறித்து எவ்வாறெல்லாம் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன எனப் புறநானூறு வழியே நின்று எடுத்துரைக்கப்படுகின்றது.

பழைய பாண்டிய அரச குடியும் சான்றோர் குடியும் எனும் தலைப்பில் மதுரைக்காஞ்சியை மையமிட்டும் பல கல்வெட்டுச் சான்றுகளைக் காட்டியும் பாண்டியர் சான்றோர் குடியினரே என நூலாசிரியர்கள் நிறுவுகின்றனர்.

சான்றோர் எனும் பெயர் பாண்டியருக்குண்டு எனக் கி.பி. 905, கி.பி. 921 ஆம் ஆண்டுகள் காலக்கல்வெட்டுகள், செப்பேடுகள் வழியேயும் தேவாரம் (880) சம்பந்தர் பாட்டு வழியேயும் கூறுகின்றனர். ஒருவர் தொல்லியல் சான்றாதாரங்கள் வழியும் மற்றொருவர் இலக்கியச் சான்றாதாரங்கள் வழியும் காட்டிப் பக்கங்கள்தோறும் எழுதிச் செல்வது பல நூல்களையும் கல்வெட்டுச் செய்திகளையும் செப்பேட்டுச் செய்திகளையும் நாம் அறிந்துணர வாய்ப்பு நல்குவதாக உள்ளது.

சான்றோர் மகளிரின் கற்பு ஒழுக்கங்கள் குறித்தும் சான்றோர் குறித்தும் மூவேந்தர் மரபினரைச் சொல்லும் போதும் ஆதாரங்கள் காட்டி விளக்கியுள்ளனர்.

எழுமுடிகெழீஇய திருஞெமர்... எனும் தொடர் இடம்பெறும் பதிற்றுப்பத்து (14, 16, 40) மற்றும் பிற இலக்கியச் சான்றுகளைக் காட்டிச் சேர சோழ பாண்டிய அரசர்கள் அன்றி வேளிர் ஆகியோருக்கும் இச்சிறப்பு உரியது எனக் கூறியுள்ளனர். சான்றோர் என்பது வீரர் எனும் பொருளாகவும் படும் என்றும் கூடுதலாக விளக்கியுள்ளனர் இந்நூலாசிரியர்கள்.

மூத்தோர் இருவரும் என்பது அந்தணரையும் சான்றோரையும் குறித்தது என்பதோடு பழமொழி நானூறு வழியே முதுபெரும் சான்றோர் எனச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் வீரர் மரபினர் என்றும் பொருள் காட்டி விளக்கப்படுகின்றது.

வேளிர் ஆன சான்றோர் குடியும் வேள்வியும் எனும் தலைப்பில் வேளிரும் வேந்தரும் சான்றோரும் தொல்குடியினர் என ஆதாரங்கள் காட்டி விளக்கும்போது வேளிர் குலத்தாரைச் சிறப்பாக விளக்கியிருப்பது கவனிக்கத்தக்கது.

1. அறக் களவேள்வி
2. மறக் களவேள்வி

எனக் களவேள்வி இரு வகைகளாகின்றது. மறக்கள வேள்வி செய்தவன் பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி என மதுரைக்காஞ்சியைச் சான்று காட்டி விளக்கியுள்ளமையும் பாண்டியர் வெளியிட்ட காசுகள் குறித்து விரிவுற எழுதி யுள்ளமையும் பாண்டியரை அறியக்காட்டியுள்ளவையாக அமைகின்றன.

ஒக்கூர் மாசாத்தியார் பாடல்

கெடுக இவள் சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே

எனும் வரிகளைக் காட்டி மூதில் மறமகளிர் எனும் பட்டம் வேளிர்குலப் பெண்டிற்குரியதாகும் எனும் முடிவுக்கு வள்ளுவம், சிறுபஞ்சமூலம், இளம்பூரணர் உரை, இளங்கோவடிகளின் சிலம்பு எனப் பல நூல்களிலிருந்து சான்று காட்டி விளக்கியுள்ள திறன் வியப்புக் குள்ளாகிறது.

பெரியபுராணம், வேள்விக்குடி சாசனம், பன்னிருபாட்டியல், அகப்பாடல், இறையனார் அகப்பொருள், அடியார்க்குநல்லார் உரை, சேக்கிழார் புராணம் எனுமாறு பலநூல்களிலிருந்து பல சான்றாதாரங்கள் காட்டிப் புதுப்புது விளக்கங்களை ஆய்வுக் கண்ணோட்டத்தில் தந்துள்ளது இந்நூல்.

தண்டநீதித் தலைவர், நாணுடை மறவர், வேளிர் குடியைச் சேர்ந்தவர், நாடு காப்பார், ஊர் காப்பார், பாடி காப்பார் விளக்கங்கள், களிறை வெட்டிய குருசிலர், எறுழ்தோள் மறவர், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் குறித்த விளக்கம் எனப் பலவற்றைப் புதுநோக்கில் சான்றாதாரங்கள் காட்டி எழுதப்பட்டுள்ளது இந்நூல்.

செப்பேடுகள், நடுகல்செய்திகள், கல்வெட்டுகள் எனப் பலநிலைகளில் இருந்து சான்றாதாரங்கள் காட்டி ஆய்ந்துள்ள இந்த ஆய்வுநூல் தொல்லியல் துறை, வரலாற்றுத் துறை, தமிழ்த்துறை, பண்பாட்டுத் துறை, சமூகவியல் துறை, அரசியல் துறை எனும் பல துறையினருக்கும் பயன்படும் வகையில் இந்நிறுவன வெளியீடாக வெளிவருவது பெருமையாக உள்ளது. இந்நூலாசிரியர்களின் கடின உழைப்பில் விளைந்த இந்நூல் தமிழுலகில் சிறப்பு நல்கும்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.பி. சண்முகநாதன்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. து.நா. இராமநாதன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தமும் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் இச்சொற்பொழிவு மற்றும் நூல் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீவெங்கடேஸ்வரா அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

நன்றியுரை

அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் என்ற இந்நூல் வெளிவருவதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஐயா டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள், தம் பெயரில் நிறுவியுள்ள அறக்கட்டளை ஆகும். ஆதலால் முதற்கண் ஐயா டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு எம் நன்றி உரித்தாகுக.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் அவர்களே இந்த அறக்கட்டளைக்குப் பொறுப்பாளரும் ஆவார். இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவு இன்று இங்கு நடைபெறுவதற்கும் அதைத் தொடர்ந்து அது நூலாக்கம் பெற்று அறக்கட்டளைச் சொற்பொழிவன்றே நூல் வெளிவருதற்கும் காரணமாய் அமைந்தவர் இந்நிறுவன இயக்குநர் பேராசிரியர் முனைவர் கரு.அழ. குணசேகரன் அவர்கள். அவர்கள் காட்டிய அக்கறை அளவில்லாதது. அது போன்று இந்நூலை முழுதும் ஆழ்ந்து சுவைத்துப் படித்து அறிவுப்பூர்வமான அணிந்துரை ஒன்றையும் இந்நூலில் நல்கியுள்ளமைக்கு எம் நன்றி.

இச்சொற்பொழிவுக்கான எழுத்துருவை முதற்கண் கணியச்சுச் செய்த தேவ் டிசைன் நிறுவனத்தாருக்கும் இச்சொற்பொழிவின் எழுத்துருவாக்கத்தின் போது உடனிருந்தும் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டும் உதவியவர்களான திரு. பத்மநாபன், தமிழ்நாடு தொல்லியல் துறை அலுவலர் (ஓய்வு) திரு. ச. கிருஷ்ணமூர்த்தி, தென்னிந்தியச் சமூக வரலாற்று ஆய்வு நிறுவன நிறுவனர் திரு. அ. கணேசன், பொருளாளர் திரு. ஜெகதீசன், கல்வெட்டுத் தரவு விவரங்கள் தந்துதவிய நண்பர்கள் ஆகியோருக்கும் ஏனைய நண்பர்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் எம் அன்பு கலந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

நெல்லை நெடுமாறன்
ஆ. தசரதன்

ஆசிரியர் பற்றி...



தென்பாண்டி நாட்டுத் திருசெந்தூர்ப் பகுதித் தென்பொறையூர் நாடாள்வார் வமிசத்துப் பொன் நாடார் கூட்டத்தார் போன்ற நிலமைக்காரர்கள் வாழும் ஊர்களில் நாலுமாவடியில் பொன் திராவியம் நாடார், அண்ணாமலைக்கனி அம்மாள் தம்பதியரின் ஒரே புதல்வராக 1939ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 9ஆம் நாளில் பிறந்தவர் நெல்லை நெடுமாறன்.

இளவயது முதல் தாய்மொழியின் மீதும், தாய்நாட்டின் மீதும் பற்றுக் கொண்டதாலும், பகுத்தறிவுக் கண்ணோட்டத் துடன் திராவிட இயக்கத்தின் மீதும் ஏற்பட்ட பற்றுதல் காரணமாகவும் பெற்றோர் சூட்டிய நாராயணன் எனும் பெயரை விடுத்து, நெடுமாறன் என்ற பெயரை மாணவப் பருவத்திலேயே மாற்றிக் கொண்டார்.

உள்ளூரில் தொடக்கக் கல்வியை முடித்து, நாசரேத் புனித மர்காஸிஸ் உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்தில் பேச்சாற்றலில் ஆசிரியர்களுக்கு மிஞ்சியவராகவும், மாணவர் களுக்குத் தலைவராகவும் விளங்கியதிலிருந்து இவருடைய ஆளுமை வெளிப்பட்டு நிற்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புக்குப் பின்னர்த்தான் திராவிட இயக்கத்தின்மீது இளைஞர்களுக்குப் பற்றுதல் ஏற்பட்டது. இவருக்கும்தான்.

இவருடைய மேடைப் பேச்சுகளில் கொட்டும் அருவியெனத் தமிழ் பொழிந்தது; அதனால் தமிழகத்தின் பல்வேறு மேடைகளில் இவரது முழக்கம் கேட்டது. அது இளைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தமிழ்ப் பண்பாடு இவரது பேச்சில் மிளிர்ந்தது. தமிழ் வரலாறு படம்பிடித்துக் காட்டப் பெற்றது. தமிழும் திராவிடமும் தனி இடம்பெற்று இவருடைய மேடைப் பேச்சில் சிறந்தன.

தாய்மொழி மீது அளவற்ற பற்றுக் கொண்ட நெல்லை நெடுமாறன் தமிழ்மொழியைக் காக்கும் நோக்கில் சிறை சென்றவர். இந்தி எதிர்ப்பு இளைஞர்களிடையேயும் மாணவர்களிடையேயும் மேலோங்கியிருந்த நிலையில் நெல்லை நெடுமாறன் 1965ஆம் ஆண்டு, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாகக் கலந்துகொண்டார். அதனால் கைது செய்யப்பட்டு, திருவைகுண்டம் சிறையில் அடைக்கப்பட்டார்.

தமிழ்நாடு ஒன்றியத் துணைத் தலைவர் (Deputy Chairman of Tamil Nadu Unions) போன்ற பதவிகளை வகித்தார்.

மதுரைப் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராக 3 ஆண்டுகள் (1972-75), தமிழ்நாடு சாலைப் போக்குவரத்து ஆலோசனைக் குழு உறுப்பினர் போன்ற 21 பதவிகளிலும் அமைப்புகளிலும் இளம் வயதிலேயே பணியாற்றும் வாய்ப்புகளைப் பெற்றமைக்குப் பல்துறைகளிலும் இவர் பெற்றிருந்த நூலறிவும் பட்டறிவுமே காரணங்களாகும்.

1975ஆம் ஆண்டு நாட்டில் அவசரநிலை அறிவிக்கப் பட்டது. மிசா சட்டத்தில் நெல்லை நெடுமாறனும் கைது செய்யப் பட்டு ஓராண்டுக்கு மேல் சிறையிலிருந்தார். தமிழக வரலாற்று ஆய்வும் படிப்பும் இவரைத் தீவிர அரசியலிலிருந்து விலகச் செய்தன. இவரது அரசியல் துறவறம், தமிழக வரலாற்றாய்வுத் துறைக்குப் பெரும்பேறாக அமைந்து விட்டதெனில், அது மிகையாகாது.

அதனைத் தொடர்ந்து இவரது கவனம் கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், தொல்லியல் சான்றுகள், நாணயங்கள் என எல்லாத் திசைகளிலும் சென்றது. படிக்கப்பட்டிராத ஒரு கல்வெட்டோ, ஓலைச்சுவடியோ இருப்பதாகக் கேள்விப்பட்டால், அது எத்தனைத் தொலைவில் இருந்தாலும் காலத்தையும், பொருட்செலவையும் பொருட் படுத்தாது, உடனே சென்று பார்த்துவிடுவார். அதைப் போன்றே வரலாறு, தொல்லியல் தொடர்பான கருத்தரங்குகள், மாநாடுகள் நடைபெற்றால் அங்கெல்லாம் இவரைத் தவறாமல் பார்க்க முடியும்.

இவருடைய தொடக்ககால ஆய்வுகளில் சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடைய வேந்தர்களில் வமிசாவளியினர் தற்போது யாராக உள்ளனர் என்ற தேடுதலே விஞ்சியிருந்தது.

அதன் விளைவாகத் தொல்லியல் அறிஞர் எஸ். இராமச்சந்திரன் அவர்களின் தொடர்பு கிடைத்தது. இவருடைய தேடலுக்கு விடையும் கிடைக்கத் தொடங்கியது. அது முதல் இவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரைகள் பலப்பல சான்றோர் காடும் சான்றோர் நாடும், சான்றோர் காசு, நாட்டார் மாடை, முந்நூற்றுவர், எழுநூற்றுவர் போன்ற தொடக்கக் காலக் கட்டுரைகள் இவருடைய தனிப்பட்ட தேடுதல் முயற்சியால் எழுதப்பட்டன. தொல்லியல் துறை அறிஞர்கள் பலரின் தொடர்பும் கிடைத்த பின் இவரது கட்டுரைகள் பெருமளவில் வரவேற்பைப் பெற்று ஏடுகளிலும் இடம்பெற்று வருகின்றன.

Studies in South Indian Coins என்ற நூலின் நான்காம் தொகுதியில் Sanar Kasu எனும் தலைப்பில் நெல்லை நெடுமாறன் அவர்கள் சான்றார் காசு பற்றி மேற்கொண்ட ஆய்வு பற்றிக் குறிப்பிடப் பெற்றுள்ளது. திரு. நடன. காசிநாதன் தாம் எழுதிய "தமிழர் காசு இயல்" என்ற நூலில் A Note on Sanar Kasu எனும் கட்டுரை,. தமிழறிஞர் ம.பொ. சிவஞானம் பெயரில் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப் பெற்றுள்ள அறக்கட்டளையின் ஆறாம் சொற்பொழிவாக உரையாற்றியதன் அச்சு வடிவமாகும். இது 1995ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது.

நெல்லை நெடுமாறன் திரு. சீ. இராமச்சந்திரனுடன் இணைந்து எழுதிய வேளிர், வெள்ளை நாடார் போன்ற ஆங்கிலக் கட்டுரைகள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை.

இவர் எழுதிய பிற எழுத்துருக்களாவன :

உய்யக்கொண்டார்

அரையர்களான நாடாள்வார்

களப்பிரர் அன்றும் இன்றும்

போன்றவை வெளிவரும் நிலையில் உள்ளன.

நெல்லை நெடுமாறன் வரலாறு, கல்வெட்டு போன்ற ஆய்வுகளில் உண்மைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் காலக்கட்டத்தில் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி பண்பாட்டின் கீழ் உள்ள இந்து சமய அறநிலையத் துறையின் 'கல்வெட்டு உறுப்பினர்' எனும் பதவியை 1996 ஆம் ஆண்டு முதல் இவர் பெற்றார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "தமிழில் ஆவணங்கள்" என்ற தலைப்பில் ஒரு தேசியக் கருத்தரங்கம்

1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17, 18, 19 ஆகிய நாள்களில் நடந்தது. அதன் முத்தாய்ப்பாகத் தமிழ் ஆவணங்கள் மற்றும் கல்வெட்டு இயல்களில் பன்னெடுங்காலம் தொண்டாற்றிய அறிஞர்களுக்குப் பாராட்டுகள் நடந்தன. இந்நிகழ்ச்சிக்குத் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேனாள் இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி அவர்கள் தலைமையேற்றார். இந்நிகழ்ச்சியில் புலவர் கோவிந்தராசனார், திரு. நடன. காசிநாதன், திரு. நெல்லை நெடுமாறன் ஆகியோருக்குச் சிறப்புகள் செய்யப் பட்டன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நெல்லை நெடுமாறனுக்குத் "தொல்லியல் அறிஞர்" எனும் பட்டத்தை அளித்தது இவர் மேற்கொண்டு வரும் ஆய்வுக்குக் கிடைத்த அங்கீகாரங்கள் எனில் மிகையாகாது.

அண்மையில் இவர் எழுதிய கட்டுரைகளில் மிகச் சிறப்பாக அமைந்தவை:

மருமக்கள் தாயம்

பெருந்தனம் சிறுதனம்

என்பன. இதுவரை மருமக்கள் என்பார் பெண்வழிச் சமுதாயத்தினர் என அறிஞர் பலரும் தெரிவித்திருந்த நிலையில் இவர் "மருமக்கள் என்போர் ஒரு தலைவனின் காமக்கிழத்தியரின் புதல்வர்" என்று ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

அடுத்ததாக, பெருந்தனம் சிறுதனம் என்போர் இதுவரை அரசு அதிகாரிகள் எனத் தொல்லியல் துறையினர் அடையாளம் காட்டினர். அதை மறுத்து, அக்குழுவினர் கோயில் குடிகள் என்றும் தெய்வமகள் மரபிலே வந்தவர் என்றும் பல சான்றாதாரங்களின் மூலம் நிறுவியுள்ளார்.

முனைவர் ஆ. தசரதன் பற்றி. . .

முனைவர் ஆ. தசரதன் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், குறும்பலாப்பேரியில் தைப்பூசத்தன்று பிறந்தார். பாவூர்ச்சத்திரத்தில் பள்ளிப்படிப்பும் பாளையங் கோட்டை தூய யோவான் கல்லூரியில் பட்டப்படிப்பும், 1973இல் தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவிலில் எம்.ஏ. (தமிழ்) பட்டமும் பெற்றார்.

எம்.ஏ. முதலாண்டில் ஆபிரகாம் அருளப்பனார் பரிசையும், எம்.ஏ. இரண்டாம் ஆண்டில் முதல் வகுப்பில்

முதலாவதாகத் . தேறி, சாஸ்தாங்குட்டி பிள்ளை தங்கப் பதக்கத்திற்கான பரிசையும் பெற்றார்.

1974 முதல் 1977 வரை கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் டாக்டர் பட்டத்துக்காக ஆய்வு செய்தார், 1975இல் தெ.தி. இந்துக் கல்லூரியில் மொழியியலில் டிப்ளமோவையும் பெற்றார். 1978இல் திருவனந்தபுரத்திலிருக்கும் உலகத் திராவிட மொழியியல் நிறுவனம் இவரை ஜெர்மனியிலுள்ள கோலோன் பல்கலைக் கழக இந்தியவியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்ற அனுப்பியது. அங்குப் பணியாற்றியபின் அதே ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகத்தில், ஆப்பிரிக்கா மற்றும் கீழை நாட்டு ஆய்வு நிறுவனத்தில் டாக்டர் ஜான் மார் அவர்களின் பராமரிப்பில் மொழியியலும் பல்கலைக்கழகக் கல்லூரியில் Relational Grammarம் கற்றார்.

1979இல் தாயகம் திரும்பிய பின் இன்டர்நேஷனல் பிரிண்டர்ஸ் அண்ட் பப்ளிசர்ஸ் என்ற நிறவனத்தைத் தொடங்கினார்.

திராவிட மொழியியல் நிறுவனத்தில் 1980இல் இளநிலை ஆய்வாளராகச் சேர்ந்து பின் அதன் புதுதில்லி அலுவலகத்தில் பணியாற்றினார். 1981இல் புதுதில்லியிலுள்ள Asian Educational Services என்ற புத்தக வெளியீட்டகத்தின் பிரதிநிதியாகப் பணியாற்றினார். 1982இலிருந்து இண்டர்நேஷனல் பிரிண்டர்ஸ் என்ற நிறுவனத்தின் பதிப்பாளராகவும் வெளியீட்டாளராகவும் விளங்குகின்றார்.

கேரளப் பல்கலைக்கழகம் இவருக்கு Syntactical Structures of 20th Century Tamil Poems (இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளின் தொடரமைப்புகள்) என்ற தலைப்பிலான ஆய்வேட்டுக்கு டாக்டர் பட்டம் அளித்தது. தொடர்ந்து 1982-84 ஆண்டுகளில் திருவனந்தபுரம் திராவிட மொழியியல் நிறுவனத்தில் ஆராய்ச்சியாளராகப் பணிபுரிந்தார்.

இவர் 1984 முதல் 1994 வரை சென்னையிலுள்ள ஆசியவியல் நிறுவனத்தில் தமிழ்த் துணைப் பேராசிரியராகவும், ஓலைச் சுவடித் துறைத் தலைவராகவும் பணிசெய்து பல ஓலைச் சுவடிகளைப் பதிப்பித்தும், ஓலைச் சுவடிகள் அட்டவணைகளைத் தயாரித்தும் சாதனை புரிந்தார்.

1996-1997ஆம் ஆண்டுகளில் திருவனந்தபுரம் திராவிட மொழியியல் நிறுவனத்தின் முதுநிலை ஆராய்ச்சியாளராகச் சென்னையிலிருந்து பணியாற்றினார்.

1998 முதல் 2000 வரை சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிறப்பு நிலை ஆய்வாளராகவும், 2003 முதல் 2006 வரை திட்டக்கல்விப் பணியாளராகவும் பணியாற்றினார். 2006 முதல் இந்நிறுவனப் பதிப்புப்பணி மூலம் பல நூல்களைச் செம்மையாகப் பதிப்பித்து வருகிறார்.

இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதிப் பன்னாட்டு, உள்நாட்டு நிறவனக் கருத்தரங்குகளில் வழங்கியுள்ளார். இக்கட்டுரைகள் ஆய்விதழ்களிலும் நூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

25க்கும் மேற்பட்ட சுவடிப் பதிப்பு நூல்களையும் வேறு பல நூல்களையும் இவர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இவற்றில் பல கதைப்பாடல்களாகும்.

பொருளடக்கம்

முன்னுரை 1

புறநானூற்று மூவேந்தர்களில் பாண்டியர் 9

பழைய பாண்டிய அரசகுடியும்
சான்றோர் குடியும் 16

சான்றோர்குல மகளிரின்
தலையாய கற்பு ஒழுக்கங்கள் 35

எழுநூற்றுவர் சான்றோரும் நிழல் வாழ்நரும் 42

தொல்குடி வேளிரான சான்றோர் குடியினரும்

வேள்வியும் 78

மதுரைக்காஞ்சியில்
சான்றோர்குலத் தலைவர்கள் 107

தலையாலங்கானத்துச் செருவென்ற
பாண்டியன் நெடுஞ்செழியன் 181

முடிவுரை 231

துணை நூல்கள் 235

முன்னுரை

அரசகுலச் சான்றோரின் செவ்வியல் வரலாறு தொன்மை வாய்ந்தது; அறிவார்ந்தது; கலப்பில்லாதது; தொடர்ச்சியானது.

இவ்வரலாறு *தொல்காப்பியம்* தொடங்கி, சங்க இலக்கியப் பாக்களிலும் அவற்றின் பிற்காலத் தொடர்ச்சிகளிலும் பதிவாகியுள்ளது. தமிழ்க் கல்வெட்டுகளிலும் செப்புப் பட்டயங் களிலும் சுவடி ஆவணங்களிலும் வழக்கிலும் பரந்துள்ளது. இவற்றை ஒருங்கே திரட்டுவதென்பது இமாலய முயற்சி.

ஆதலால் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற சங்க இலக்கியம் பத்துப்பாட்டில் ஒன்றான *மதுரைக்காஞ்சியை* மையமாக வைத்து அரசகுலச் சான்றோரின் செவ்வியல் வரலாறு ஓரளவு இந்நூலில் ஒழுங்குபடுத்தப் பெற்றிருக்கிறது.

இப்பாண்டியன் தொடர்புடைய குறும், நெடும் பாடல்களும் எடுத்து ஆராயப்பெற்றுள்ளன. ஆயினும் இந்நூலில் சேரர், சோழர், வேளிர் தொடர்பான அரசகுலச் சான்றோர் வரலாறும் விரவி வந்துள்ளது.

சங்க இலக்கிய வரலாற்று நூல்களான *பதிற்றுப்பத்து, புறநானூறு, பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை* மற்றும் பல வரலாறமைந்த அகப்பாடல்களிலும் பிற்கால ஆவணங்களிலும் இலக்கண இலக்கிய நூல்களிலும் இடம்பெறும் சேரர், பாண்டியர், சோழர், வேளிர் தொடர்பான அரசகுலச் சான்றோரின் செவ்வியல் வரலாற்றைத் திரட்டுவது எங்கள் முதன்மை நோக்கம்

அது எவ்வாறு தற்காலம் வரை தொடர்கின்றது என்று ஆராய்ந்து எழுதுவது அடுத்த நோக்கம். அவை இரண்டும் இந்நூலில் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

இத்தகு மகத்தான சாதனை முழுமையாக நிறைவேறும் தருணமே தமிழக வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்தும் தருணம் என்பதில் ஐயமில்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பாண்டியர்களின் ஆட்சி - சில இடைவெளிவிட்டு

தமிழகத்தை ஈராயிரம் ஆண்டுகளாக - காலஇடைவெளிவிட்டு - ஆண்டு வந்த பாண்டிய அரசர்களை ஐந்து பிரிவுகளாக வகைப் படுத்தலாம்.

1. தொன்மைக்கால, வரலாற்றுக்கால, சங்க காலப் பாண்டியர்கள் ***முற்காலப் பாண்டியர்.***
2. களப்பிரர்க்குப் பின் வந்த கடுங்கோன் முதலான பாண்டியர்கள் ***முதலாம் பாண்டியப் பேரரசர்கள்.***
3. பிற்காலச் சோழராட்சியின் இறுதிக் காலக் கட்டத்திலிருந்து இசுலாமியர் மதுரையைப் பிடித்த காலக்கட்டம் வரை இருந்த பாண்டியர்கள் ***இரண்டாம் பாண்டியப் பேரரசர்கள்.***
4. மதுரை அல்லாது தென்பாண்டி நாட்டுப் பகுதிகளை ஆண்டவர்கள் ***பிற்காலப் பாண்டியர்கள்.***
5. அதற்கும் பிற்காலத்திருந்தவர்கள் ***மிகவும் பிற்காலப் பாண்டியர்.***

மிகவும் பிற்காலப் பாண்டியர்

முதல் நான்கு வகையினர் பற்றிப் பல ஆய்வுகள் வெளி வந்துள்ளன. பிற்காலப் பாண்டியர்களுக்கும் பின்னால் ஆட்சி செய்த சில பாண்டியர்களைப் பற்றி அறிவது இன்றியமையாதது. தென்காசிப் பகுதியை ஆண்ட மிகவும் பிற்காலப் பாண்டியர் பற்றிய சில செய்திகள் வருமாறு:

முதலில் அறியப்படுபவன் கி.பி.1613இல் இருந்த *வரகுணராம குலசேகர சோமாசியர்* என்ற பாண்டியன். அடுத்ததாக, கி.பி. 1748-54ஆம் ஆண்டுகளில் இருந்த *கோஜடில வர்மரான திரிபுவன சக்கரவர்த்தி கோனேர்மை கொண்டான் ஸ்ரீபெருமாள் அழகன் பெருமாள் இறந்த காலமெடுத்த சீவல வரகுணராம பாண்டிய குலசேகர தேவதீட்சிதர்* என்ற பாண்டியன் தென்காசியில் இறுதியாக ஆட்சி செய்தவன். இவர்கள் வெளியிட்ட பட்டயங்களால்[1] இப்புதிய செய்திகள் அறியப்படுகின்றன.

---

1. *Travancore Archaeological Series Vol.I, 'Inscriptions of Later Pandyas', pp. 221-225.*

இவற்றால் தொன்மை முதல் அண்மைக் காலம் வரை, இடையிடையே முக்கியமிழந்தும் மீண்டும் எழுச்சியடைந்து வந்து ஆண்ட பாண்டிய அரசர்களின் எச்சத்தினர் இக்காலத்திலும் வாழ்ந்து கொண்டிருப்பதை அறியமுடிகின்றது.

பாண்டியரின் சந்ததியினர் வாழுமிடம்

தமிழக வரலாற்றாசிரியர்களில் ஒருவரான சதாசிவ பண்டாரத்தார் இப் பாண்டியர்களைப் பற்றி,

> குறுநில மன்னராயிருந்த பாண்டியர் இறுதியில் ஜமீன்தார் நிலையை எய்தித் தென்பாண்டி நாட்டில் ஓர் ஊரில் இருந்துவருவாராயினர்[2]

எனப் *பாண்டியர் வரலாறு* என்ற நூலில் எழுதியுள்ளார். இம்முடிவை எய்திய பண்டாரத்தார் அப் பாண்டியர் தற்போது எக் குலத்தவராக அடையாளம் காணப்படுகின்றனர் எனக் குறிப்பிட வில்லை. வரலாற்றறிஞர் வேறு எவரும் அவ்வாறு குறிப்பிடவில்லை.

பாண்டியர் எக்குலத்தினர்?

''பாண்டிய மன்னர்களின் குலம்'' என்ற தலைப்பின்கீழ், தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவால் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்காகப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப் பெற்றுள்ள நூலில்[3] கீழ்க்காணுமாறு பதிப்பாசிரியர் குழுவால் ஓர் அடிக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

> திருக்குறளின் சிறந்த உரையாசிரியராகிய பரிமேலழகர் 'குடிமை' என்னும் அதிகாரத்தில் ஐந்தாவது திருக்குறளுக்குப் பொருள் கூறுமிடத்துப் 'பழங்குடி' என்னும் சொல்லிற்குச் 'சேர, சோழ, பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வருதல்' எனக் கூறியுள்ளார். ஆகையால் பாண்டியர் குலம் இன்ன காலத்தில் தோன்றியதென்று அறுதியிட்டுக் கூற இயலாது. தென்னிந்தியத் தலபுராணங்களில் பாண்டியர்கள் சந்திர குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப் பெறுகிறது. இக் கூற்றுகள் பாண்டிய மன்னர்களுடைய நீண்ட காலத்தொடர்பைக் குறிக்கின்றன. பாண்டிய மன்னர்களின் குலத்தைச் சார்ந்தவர்கள் தற்காலத்தில் தமிழ்நாட்டில் உள்ளனரா? என உறுதியாகக்கூறுவதற்கில்லை

---

2. சதாசிவ பண்டாரத்தார், *பாண்டியர் வரலாறு*, 1956, பக். 170.
3. பதிப்பாசிரியர் குழு, *தமிழ்நாட்டு வரலாறு - சங்ககாலம் - அரசியல்*, 1983, பக். 352.

வரலாற்று ஆசிரியர்களின் இக்குறிப்பால் எவ்விதப் பலனும் ஏற்படாது. கி.பி. 18ஆம் நூற்றாண்டின் மையக் காலத்தில் ஆட்சி அதிகாரம் பெற்ற பாண்டியனின் எச்சத்தினர் 'தமிழ்நாட்டில் உள்ளனரா?' என வினவுவது ஒரு நடுநிலையான ஆராய்ச்சி ஆகாது. இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் இருந்து வந்த ஓர் இனம் இருநூறு ஆண்டுகளில் அழிந்துவிடுமா என்ன?

தமிழ்நாட்டுப் போர்க்குடிகள்

தமிழ்நாட்டில் வாழ்ந்த போர்க்குடிகளின் தற்போதைய சந்ததியினரில் எவர் சந்திரகுலத்தினர் என்று தம்மைக் கூறிக் கொள்கிறார்களோ அவர்களே பாண்டியர்களின் எச்சத்தினர் ஆவர்.

வாணன் என்ற அசுரகுலத்தினர்
அக்கினிகுலச் சத்திரியர்
கங்கைக் குலத்தவர்
தேவேந்திரன் குலத்தவர்
யாதவ குலத்தினர்
சூரிய, சந்திர குலத்தவர்

பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழ்நாட்டில் சூரிய, சந்திர குலத்தவராகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் தற்போதைய தமிழ்க் குடியினரே பண்டைக் காலந்தொட்டுத் தம்மைச் சூரிய, சந்திர குலத்தினர் என்று கூறிக் கொண்ட மூவேந்தரின் பரம்பரையினர் எனத் தெளிந்து கொள்ளலாம்.

சூரிய, சந்திர குலத்திற்கு உரிமை கோரிச் செப்பேடுகளில், இலக்கியங்களில் தங்களைக் கூறிக் கொள்ளும் சமூகத்தினர் 'இன்றும் உள்ள நிலையில்' அம்மரபினர் தமிழ் நாட்டில் உள்ளனரா என்று ஐயப்பாடு கொள்வது நியாயமான ஆய்வாகாது.

ஐவர் பாண்டியர் - அன்று முதல் இன்று வரை

பாண்டியர்களின் ஈராயிரம் ஆண்டுகள் வரலாற்றில் அவர்களின் குலம், பண்பாடு, வீரம், தமிழ்வளர்ச்சி போன்றவற்றைப் பலரும் ஆராய்ந்து நூல்கள் எழுதியுள்ளனர். ஆனால் அவர்களின் ஆய்வுகளிலிருந்து பாண்டியர்களின் தொடர்ச்சியான வரலாற்றை அறிந்துகொள்ள இயலாது. அரசகுலச் சான்றோரின் ஆவணங்களிலிருந்தே அவ்வரலாற்றைத் தெரிந்துகொள்ள முடியும்.

புரவி ஐவர் பாண்டியரா? பாண்டவரா?

'பாண்டியர் ஐவர்' என்ற கருத்து மிகப் பழங்காலந் தொட்டு இக்காலம் வரையிலும் வழக்கிலிருக்கிறது. இத்தொடர்ச்சி குறித்து யாரும் விரிவாக இதுவரை ஆய்வு செய்யவில்லை.

புறநானூற்றின் இரண்டாம் பாடலில் 13ஆம் அடியில் ''அலங்குளைப் புரவி ஐவர்'' என வருகிறது.[4] இவர்கள் ஐவர் பாண்டியர்களே ஆவர். மாறாக ''அசைந்த தலையாட்ட மணிந்த குதிரையையுடைய பாண்டவர் ஐவர்'' எனப் *புறநானூற்றின்* பழைய உரையாசிரியர் குறிக்கின்றார். பின்வந்த இலக்கண நூல்களின் உரைகளில் இதனடிப்படையில் 'பாண்டவர்' என்றே குறிக்கின்றனர். (பார்க்க: *நன்னூல் விருத்தி* - 269, 360 ஆம் நூற்பா உரைகள்; *இலக்கண விளக்கம்* - நூற்பா 170 இன் உரை.) ஒரு பொய்யைப் பலரும் சொல்லி வந்தால் அது உண்மையாகிவிடாது.

நூற்றுவர் முதியரா? கௌரவரா?

பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைச் சார்ந்த முதியர் கூட்டத்தினர் நூற்றுவர் இறந்ததற்காகவே அவனும் அவனது சந்ததியாரும் பிண்டச் சோறு வழங்கியதையும் வெற்றி பெற்ற வீரருக்கும் பெருஞ்சோற்று விழா எனும் பெரிய விருந்து வைத்ததையும் அம் முதியர் கூட்டத்து இளைஞர்களை ஆதரித்ததையும் *அகநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு* மற்றும் *சிலப்பதிகாரத்தில்* வரும் சான்றுகளால் அறியலாம்.

முதியர் நூற்றுவரைக் கொன்றவர்களாகிய 'புரவி ஐவர்' என்போர் பஞ்சபாண்டியரே. ''நிலந்தலைக் கொண்ட பொலம்பூந்தும்பை ஈரைம்பதின்மர்'' என்போர் சேரனுக்கு உறவினரான முதியர் கூட்டத்தார் ஆவர். தும்பைப் பூவைச்சூடி, பாண்டியரை எதிர்த்தோர் இவர்களே. மாறாக ஐவர் பாண்டியரைப் பாண்டவராக்கி, இறந்த முதியர் நூற்றுவரைக் கௌரவராக்கி எழுதப்பெற்ற உரை தவறான முன்னுதாரணம் ஆகிவிட்டது. 'ஐவர் பாண்டியர்' எனும் வழக்கு தமிழில் தொடர்ச்சியாக வருகிறது.

பாண்டியனுக்குப் பஞ்சவன் என்ற பெயர் உண்டு

புறநானூறு 58ஆம் பாடலில் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத்

---

4. முரஞ்சியூர் முடிநாகராயர் இப்பாடலைப் பாடியுள்ளார். இவர் தலைச்சங்க காலத்தவர் என *இறையனார் அகப்பொருளுரை* கூறுகிறது. இதன் அடிப்படையில் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பாண்டவர் - கௌரவர்க்கு உணவு வழங்கினான் என்ற கதையைக் கூறிவருகின்றனர்.

துஞ்சிய பெருவழுதியும் முன்பு ஒருங்கே இருந்தபோது காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாண்டியனைப் "பஞ்சவர் ஏறே" என்கிறார் (*புறம்.* 58:8). இதற்குரிய உரையில், "மாட்சிமைப் பட்ட பாண்டியர் குடியுள் ஏறுபோல்வான்" என்கிறார் பழைய உரையாசிரியர். பாண்டியர் மிகப் பழங்காலத்தவர் என்பது இதனால் தெரிகிறது.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனுக்குப் பிறந்தவர்கள் பலர் என்பது இவனைப் பற்றிப் பாடப்பெற்ற *புறநானூற்றின்* 196, 198ஆம் பாடல்களிலிருந்து தெரியவருகின்றது. இதனால் பஞ்சவன் என்பது ஒரு பாண்டியனையும் பல பாண்டியர் களையும் குறிப்பது தெளிவாகிறது.

இவற்றின் தொடர்ச்சியாக *மதுரைக்காஞ்சியில்* (775) பாண்டியனின் உறவினர் 'பொலம்பூண்ஐவர்' எனப் பாடப்பட்டுள்ளனர்.[5] ''எல்லோராலும் புகழப்பட்ட பொன்னாற் செய்த பேரணிகலன் களையுடைய ஐம்பெருங்கேளிரும் உட்பட'' என நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார். 'கேளிர்' என்றால் உறவினர் ஆவர்.

பாண்டியநாடு ஐந்நிலங்களைக் கொண்டது

மதுரைக்காஞ்சியில் பாண்டியநாடு ஐந்நிலங்களும் உள்ள நாடாகக் காட்டப் பெறுகின்றது (326).[6] பஞ்சவன் என்பதற்குக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் பாண்டிநாட்டு ஐந்நிலங்களுக்கும் தலைவன் என்ற அடிப்படையில் பொருள் உரைக்கின்றனர்.

ஐவரும் நூற்றுவரும் மீண்டும் வருதல்

சிலப்பதிகாரம் - வாழ்த்துக்காதை 24 இல் ''ஓரைவர்'' என வருகின்றது. இதற்கும் முற்கூறிய ''பாண்டவர்'' என்ற பொருளே கூறப்படுகின்றது.

ஓரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்

---

5. *மதுரைக்காஞ்சியின்* இறுதியில், பாண்டிய அரசனுக்குத் தொட்டு முன்பு இவர்கள் கூறப்பெறுதலால், இவ் 'ஐவரும்' பாண்டிய அரச மரபினர் ஆதல் வேண்டும்.

6. 'ஐம்பாற் திணையும் கவினி' (*மதுரைக்காஞ்சி,* 326) என்ற பாடல் வரிக்கு நச்சினார்க்கினியர் "(பாண்டி) மண்டலத்தின் கண்ணே ஐந்து கூற்றினையுடைய நிலங்களும் அழகு பெற்று" என்கிறார்.

கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்

இச் செய்யுளில் குறிப்பிடப்பெறும் 'ஓரைவர்' என்போர் உதியன் சேரலாதனுக்காக உயிர்துறந்த முதியர் நூற்றுவரைக் கொன்ற பாண்டியரே எனக் கொள்ளவேண்டும்.

கல்வெட்டுகள் செப்பேடுகளில் பஞ்சவர்

முதலாம் பாண்டியப் பேரரசர்களான கடுங்கோன் தொடக்கம் ஆண்ட பாண்டியர்கள் வெளியிட்ட செப்பேடுகளில் "பஞ்சவன்" என்ற பெயர் ஐவர் பாண்டியரைக் குறிக்கும்.

மூன்றாம் இராச சிம்ம பாண்டியன் (கி.பி.900) வெளியிட்ட சின்னமனூர் செப்பேடுகளில் "பஞ்சவன் எனப் பெயர் நிறீஇ" எனவும் "பல்லவனையும் புறங்கண்ட பராங்குசன் பஞ்சவர் தோன்றல்" எனவும் வருகின்றன.

சீமாறன் சீவல்லபன் (கி.பி.835) என்ற பாண்டியன் பற்றிச் சித்தன்னவாயில் சமணர் குகைக் கல்வெட்டொன்று, "பார் முழுதாண்ட பஞ்சவர் குலமுதல்" என்கிறது (SII எண் 368, கி.பி.1904).

"ஐவர் மலை" என்ற மலை மதுரை மாவட்டத்தில் உள்ளது. அதில் கி.பி.870இல் பொறிக்கப் பெற்ற கல்வெட்டு சீமாறன் சீவல்லபனுடைய மூத்தமகன் பற்றியது. பாண்டியர் வீழ்ந்து சோழர் எழுச்சியடைந்த காலத்தில் சிதறிப்போன பாண்டியர் "பஞ்ச பாண்டியர்" என அழைக்கப் பெற்றனர்.

பிற ஆவணங்களில் ஐவர் பாண்டியர்

முதலாம் குலோத்துங்கன் இப் பஞ்ச பாண்டியரைக் கி.பி. 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்பகுதியில் முறியடித்து அவர்களிடமிருந்த பகுதிகளைக் கைப்பற்றினான் என முதலாம் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தியில், "தன்பெருஞ்சேனை ஏவிப் பஞ்சவர் ஐவரும் பொருதல்" என வருகிறது.

இதே கருத்து கலிங்கத்துப்பரணியில் "விட்டதண்டெழ மீனவர் ஐவரும் கெட்ட" (பாடல் 368) என வருகிறது.

விசயநகர ஆட்சியின்கீழ்த் தமிழகம் வரத்தொடங்கிய காலக் கட்டத்தில் ஐந்து பாண்டியர் இருந்ததாக ஸ்ரீரங்கம் கல்வெட்டு (79/ 1938-39) கூறுகிறது.

விசுவநாத நாயக்கன் கயற்றாற்றில் இப் பஞ்ச பாண்டியரை வென்றான் என்ற செய்தி பாளையப்பட்டு வம்சாவளிகளில் குறிப்பிடப் பெறுகின்றது.

வள்ளியூரைத் தலைநகராக ஆண்ட ஐவர் ராசா குலசேகர பாண்டியனைப் பற்றிய வரலாற்றுக் கதைப்பாடல்கள் பல பாடப் பெற்றுள்ளன. இவனை மலையாள வழக்கில் ''அஞ்சு தம்பிரான்'' என்பர்.

பாண்டி நாட்டில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்ட பிறகும் ''அஞ்சுபேர் ராசாக்கள்'' இருந்ததாகப் பாளையப்பட்டு வம்சாவளி நூல்களில் எழுதப் பெற்றுள்ளது.

பஞ்ச பாண்டியனூர் என்ற பெயரில் ஓர் ஊர் தென்காசிக்குக் கிழக்கே அமைந்திருப்பது மேற்குறிப்பிட்ட பஞ்ச பாண்டியர்க்கு உறுதி செய்வதாக அமைகிறது.

இவற்றால் வரலாற்றுக் காலமுதல் இக்காலம் வரை பஞ்ச பாண்டியர் எனும் வழக்கு இருந்து வந்ததை அறியமுடியும்.

பாண்டியர்களின் வரலாறு தொடர்ச்சியாக ஈராயிரம் ஆண்டுகளாக இருந்துவருவதைக் காட்டவே ஐவர் பாண்டியர் பற்றிக் கூறினோம். அவ்வாறான பாண்டியர்களின் குடியினரையும் அவர்களுடன் தெரியவரும் அவர்கள் குலத்தவரான சான்றோர் குடியினரையும் வரலாற்று ஆவணங்களால் கண்டறிந்து ஆராய்வதே இந்நூலின் நோக்கமாகும்.

புறநானூற்று மூவேந்தர்களில் பாண்டியர்

கடல்கோளால் கொள்ளப்பெற்றதாகக் கூறப்பெறும் பண்டைய பாண்டிய நாடு ஏழ்தெங்க நாடு, ஏழ்மதுரை நாடு, ஏழ்ஏழ் முன்பாலை, பின்பாலை நாடுகள், ஏழ்குன்ற நாடு, ஏழ்குணகாரைநாடு, ஏழ்குறும்பனை நாடு எனப் பெயர்கள் கொண்டிலங்கியது. இந்நாடுகளில் இருந்த பாண்டியர்களின் ஆட்சி வரலாற்றை அறியச் சான்றுகள் இல்லை. உரையாசிரியர் சிலரே இதுபோன்ற வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்துள்ளனர்.

சங்ககாலச் செய்யுள்களில் பாண்டியர்கள்

புறநானூறு திணை, துறை அடிப்படையிலும், மன்னர்களின் கால அடிப்படையிலும், பிறவாறும் தொகுக்கப்பெற்றுள்ளது.

பாடல்	திணை	துறை	பாடப்பெற்ற மன்னர்கள்
2.	பாடாண்	செவியறிவுறூஉ	சேரன்
3.	”	”	**பாண்டியன்**
4.	வஞ்சி	கொற்றவள்ளை	சோழன்
5.	பாடாண்	செவியறிவுறூஉ	சேரன்
6.	”	”	**பாண்டியன்**
7.	வஞ்சி	கொற்றவள்ளை	சோழன்
8.	பாடாண்	இயன்மொழி	சேரன்
9.	”	”	**பாண்டியன்**
10.	”	”	சோழன்
11.	பாடாண்	பரிசில்கடாநிலை	சேரன்
12.	”	இயன்மொழி	**பாண்டியன்**
13.	”	வாழ்த்தியல்	சோழன்
14.	பாடாண்	இயன்மொழி	சேரன்
15.	”	”	**பாண்டியன்**
16.	வஞ்சி	மழபுலவஞ்சி	சோழன்
17.	வாகை	அரசவாகை	சேரன்
18.	பொதுவியல்	முதுமொழிக்காஞ்சி	**பாண்டியன்**
19.	வாகை	அரசவாகை	**பாண்டியன்**
20.	”	”	சேரன்
21.	”	”	**பாண்டியன்**
22.	”	”	சேரன்
23-26.	வாகை, பொதுவியல்,	அரசவாகை பொருண்மொழிக்காஞ்சி	**பாண்டியன்**

மேற்சுட்டிய அட்டவணையில் ஐந்து பாண்டியர்கள் முதலில் கீழ்க்காணுமாறு புறநானூற்றில் இடம்பெறுகின்றனர்.

1. கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி (பாடல் 3)
2. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (பாடல்கள் 6,9,12)
3. நெடுஞ்செழியன் (பாடல்கள் 18,19)
4. கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி (21)
5. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் (பாடல்கள் 23,24,25,26)

புறநானூற்றில் இடம்பெறும் பாண்டியர்களின் இக் காலவரிசை வரலாற்றாசிரியர் சிலர்க்கு உடன்பாடன்று.[7] இவ்வரசர்களில் ஒரிருவருக்கு வரலாறு நன்கு அறியப்பட்டுள்ளது (பார்க்க: இந்நூலின் பிற்பகுதி).

பழங்கதைகளில் (Legends) சந்திரகுலப் பாண்டியர்கள்

சிலப்பதிகாரத்தில் சந்திரகுலத்தின் தொடர்ச்சியாக, இந்திரனின் ஆரத்தைப் பறித்த பாண்டியன் கூறப்பெறுகிறான்.

திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கண் ஆயிரத்தோன் திறல் விளங்கு ஆரம்
பொங்கொளி மார்பில் பூண்டோன்வாழி (சிலம்பு.11:23-25)

இவ்வடிகளுக்கு உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறுவதாவது:

திங்களாகிய செல்வனுடைய மரபு மேம்படுதற்கு இந்திரன்
பூட்டிய வலி விளங்கிய ஆரத்தை ஒளி பொங்கிய தனது
மார்பகத்தே பூண்ட பாண்டியன் வாழ்வானாக வென்க.

மேகம் சிறைகொண்ட பாண்டியன் அடுத்து இடம்பெறுகிறான்.

முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னிஎன்று
இடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழையா விளையுள் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன்வாழ்க எனத்
தீதுதீர் சிறப்பில் தென்னனை வாழ்த்தி (சிலம்பு. 11:26-30)

இதன் உரை வருமாறு:

இவன் நம்முடைய முதல்வனது சென்னி முடியிலே
வளையையுடைத்தோனென்று இடியையுடைய பருவ
மழை தனது நாட்டில் பெய்தல் தொழில் எய்தாது

---

7. பார்க்க: சதாசிவ பண்டாரத்தார் அமைக்கும் வரிசை - இந்நூல் பக்.13.

ஏகிற்றாகத் தப்பாத விளையுளாகிய மிக்க வளஞ் சுரக்கும்படி அதனை விலங்கிட்டாண்டவன் வாழ்வானாக.[8]

அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்

இவர்களுக்குப் பிறகுதான் அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன், இயற்பெயர் சுட்டப்பெறாமல், *சிலப்பதிகாரத்தில்* கூறப்பெறுகிறான். *சிலப்பதிகாரம்* கட்டுரை காதையின் இறுதியில் இடம்பெறும் 'கட்டுரை' என்ற பகுதியில் இவன் சுட்டப்படுகிறான்.

வடவாரியர் படைகடந்து
தென்தமிழ்நாடு ஒருங்கு காணப்
புரைதீர் கற்பிற் தேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன் ... (சிலம்பு. 23, கட்டுரை)

இவ்வடிகளில் வரும் "வடவாரியர்" என்பது பாண்டிய நாட்டின் வடக்கிலிருந்துகொண்டு தொல்லை தந்த "ஆரியர் சேனை" என்ற தனியொரு சேனைவீரர் கூட்டம் எனலாம். "தென்தமிழ்நாடு" என்பது பாண்டிய நாட்டைக் குறிக்கலாம். ஆரியப்படை கடந்த இப் பாண்டியனுக்கு அவனுடைய இறப்பிற்குப் பின்புதான் "அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்" என்ற அடையும் ஏற்பட்டது.

வெற்றிவேற்செழியன் எனும் இளஞ்செழியன்

இப்பாண்டியனுக்குபின் கொற்கையிலிருந்த வெற்றிவேல் செழியன் மதுரைக்கு வந்து ஆண்டதாகச் *சிலப்பதிகாரத்தின்* உரைபெறு கட்டுரை, அதன் அடியார்க்குநல்லார் உரை மற்றும் நீர்ப்படைக் காதை (127-131) அடிகளிலிருந்து தெரியவருகிறது.

இப்பாண்டியன் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்குத் தம்பி ஆவான் எனச் சிலர் கருதுகின்றனர்.

...கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியில் விழவொடு சாந்தி செய்ய நாடுமலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கின. (சிலம்பு. உரைபெறுகட்டுரை 1).

---

8. திருநெல்வேலி மாவட்டம், தென்காசிக்குக் கிழக்கே உள்ள மகிழ்வண்ணநாதர் புரத்தில் இப்பாண்டியன் 'மேகம் சிறைகொண்ட அய்யனார்' என்ற பெயரில் வழிபடப்பெறுகிறான். இப்பெயரில் வில்லுப்பாட்டும் பாடப்பெறுகிறது. இப்பாட்டின் பிரதி நெல்லை நெடுமாறனிடம் உள்ளது.

இதற்கு அடியார்க்குநல்லார் உரை வருமாறு:

> ... கொற்கைக் கண் இருந்த இளஞ்செழியன் நங்கைக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாற் சாந்திசெய்து விழவெடுத்தலானே அவன் நாடு மிகவும் மழைபெய்து முற்கூறிய வறுமை நோயும் நீங்கிற்று.

வெற்றிவேற்செழியன்[9] அடியார்க்குநல்லாரால் இளஞ்செழியன் எனப்படுகிறான். இவன் இளங்கோச் செழியன் எனவும் படுவான் என வேறொரு பாடம் கூறுகிறது. மேலும்,

> *கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன்*
> *பொற்றொழில் கொல்லர் ஈரைஞ் ஞூற்றுவர்*
> *ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு*
> *ஒருபக லெல்லை உயிர்ப்பலி யூட்டி*
> *உரைசெல வறுத்த மதுரை மூதூர்* (சிலம்பு.27:127-131)

இந்த வெற்றிவேற்செழியனே சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனும் ஆவான் என வரலாற்றாசிரியர்களில் சிலர் கருதுகின்றனர். இந்த நன்மாறனைப் பற்றிப் *புறநானூற்றில்* மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் பாடிய பாடல் (புறம்.59) ஒன்று இடம்பெற்றுள்ளது. இவன் அதில் வழுதி என விளிக்கப்பெற்றுள்ளான். இவனுடைய மகனே தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான் எனவும் சிலர் கருதுகின்றனர். ஆனால் இதற்குச் சான்றுகள் இல்லை. இதனால் சிலப்பதிகாரத்தில் கூறப் பெறும் பாண்டியர்கள் ஏட்டளவிலே அறியப்பெறும் அரசர்களாய் இருந்திருப்பரோ எனும் ஐயம் உள்ளது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனின் முன்னோர் யார் யார்?

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் பாடியதாக உள்ள *புறநானூற்றுப்* பாடலிலோ[10] அவனைப் பற்றிப் பாடப் பெற்றுள்ள *மதுரைக்காஞ்சியிலோ* மற்றும் *புறநானூற்றிலோ*[11]

---

9. வெற்றிவேற் செழியன் 'ஆயிரம்காவு அய்யனார்' என்ற பெயரில் திருச்செந்தூருக்கு அருகில் வழிபடப்பெற்று வருகிறான் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. நெல்லை நெடுமாறன் அவர்களே இக்கோயிலின் பரம்பரைத் தலைவர் ஆவார்.

10. *புறநானூறு* 72, "நகு தக்கனரே..." எனத் தொடங்கும் பாடல்.

11. *புறநானூறு* 18, 19. (குடபுலவியனார்), 23, 25 (கல்லாடனார்), 24, 26 (மாங்குடி கிழார்), 76, 77, 78, 79 (இடைக்குன்றூர் கிழார்).

வெற்றிவேற்செழியன் மற்றும் அவனுக்கு முன்பிருந்த ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகிய இருவரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டதாகத் தெரியவில்லை. முதலாம் பாண்டியப் பேரரசர்கள் வெளியிட்ட செப்பேடுகளிலும்[12] இவர்கள் பற்றிய குறிப்புகள் இல்லை. *சிலப்பதிகாரம்* மற்றும் சீத்தலைச்சாத்தனார்[13] தவிர வேறெவரும் இவர்களைக் குறிப்பிட வில்லை. இதனால், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனின் முன்னோர் பிற்காலச் செப்புப் பட்டயங்களில் கூறப்பெறுவதுபோல் பல்யாசசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் சந்ததியினராக இருத்தல் கூடும் எனக் கருதலாம்.

பண்டாரத்தார் அமைக்கும் முற்காலப் பாண்டியர்கள்

வரலாற்றாசிரியர்கள் முற்காலப் பாண்டியர்களை வரிசைப் படுத்தும்போது தம்முள் முரண்படுகின்றனர். *பாண்டியர் வரலாறு* (1956) எனும் நூலை எழுதிய சதாசிவ பண்டாரத்தார் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்துகின்றார்.

1. கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி
2. பாண்டியன் அறிவுடை நம்பி
3. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
4. ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்
5. பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்
6. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்
7. பாண்டியன் கானப்பேர்(எயில்)கடந்த உக்கிரப்பெருவழுதி
8. கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி

புறநானூற்றின் அடிப்படையில் அமையும் பண்டைப் பாண்டியர்கள்

சங்ககால மன்னர்களின் காலநிலை (2000) எனும் நூலை எழுதியவர்களான டாக்டர் பத்மஜா ரமேஷ், வி.பி.புருஷோத்தமன் என்போர் *புறநானூற்றின்* அடிப்படையில் சங்க காலத்தில் வாழ்ந்த பதினான்கு பாண்டியர்களைக் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்துகின்றனர்.[14]

---

12. பார்க்க: *பாண்டியர் செப்பேடுகள் பத்து*, மறுபதிப்பு - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1999.

13. இவர் *மணிமேகலை* என்ற காப்பியத்தை இயற்றினார்.

14. டாக்டர் பத்மஜா ரமேஷ் & வி.பி. புருஷோத்தமன், *சங்ககால மன்னர்களின் காலநிலை*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2000, பக். 63.

1. ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன்
2. நெடியோன்
3. பசும்பூண்பாண்டியன்
4. பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி
5. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி
6. கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி
7. பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்
8. பாண்டியன் அறிவுடை நம்பி
9. **பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்**
10. பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சியமாறன் வழுதி
11. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்
12. பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி
13. பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சியபெருவழுதி
14. பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்

இப்பட்டியல் முற்சுட்டிய பட்டியலினின்றும் வேறுபட்டு அமைகின்றது. கி.மு. நான்காம் நூற்றாண்டுத் தொடக்கம் கி.மு. முதல் நூற்றாண்டு வரை பாண்டியரின் காலம் என இவர்களின் நூலில் வரையறுக்கப்பெற்றுள்ளது.

முற்காலப் பாண்டியர்கள் அல்லது சங்ககாலப் பாண்டியர்களை வரிசைப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளதை இதுவரை கூறிய விளக்கத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். ஆதலால் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மையமாக வைத்தே பாண்டியரின் பழைய குடியைப் பற்றியும் அவர்களின் எச்சத்தினர் பற்றியும் இந்த நூலில் ஆராயலாம்.

மதுரைக்காஞ்சியின் தலைவனை மையப்படுத்தல் ஏன்?

சங்ககாலத் தமிழரசர்களில் சிறந்த வீரனும், மூவேந்தர்களின் வரலாற்றைக் கூறும் *புறநானூற்றில்* பாண்டியர்களுள் அதிகப் பாடல்களைப் பெற்றவனும், பாடல் ஒன்றைப் பாடியவனும், *பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சி* எனும் நெடும்பாடலின் (782 அடிகள்) பாட்டுடைத் தலைவனும், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனே ஆவான்.

நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு எனும் அகப்பொருள் பாடல்களின் பெயர் சுட்டப்பெறாத் தலைமகன் எனத் தெரிய வருபவனும் இவனே. ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்த யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் சமகாலத்தவனும், மாங்குடி மருதனாரைத் தமிழ் அவையின் தலைமைப் புலவனாகப் பெற்றவனும், தமிழ் அவையை மதுரையில் நடத்தியவனும், பத்துப்பாட்டைத் தொகுப்பித்தவனாகக் கருதப் பெறுபவனும் இன்னும் பல தமிழ்ச் சிறப்புள்ளவனும், பிற்காலப் பாண்டியர் செப்புப் பட்டயங்களில் சுட்டப்பெறுபவனுமான இப்பாண்டியனை மையப்படுத்தி வரலாறு எழுதுவதன் மூலம்,

செவ்வியல் முன்னோர் பாண்டியர்
செவ்வியல் தமிழின் சிறப்பு
செவ்வியல் தமிழ்ப்புலவர்களின் வரலாறு
செவ்வியல் தமிழ் அவை இருந்த வரலாறு
செவ்வியல் தமிழ் நூல்கள் பாடப்பெற்ற வரலாறு
செவ்வியல் தமிழகம் ஒருகுடைக்கீழ் இவனிடமிருந்த வரலாறு

போன்ற பல சிறப்பியல்புகள் வெளிப்படும்.

இவ்வாறான சிறப்புகளை இப்பாண்டியன் பெறுவதற்குத் துணை நின்றவர் அரசகுலச் சான்றோரும் ஆவர். பாண்டிய குலச் சிற்றரசர்களான பழையன் மாறன், ஐவர் கேளிர், வேளிர்கள், அரசகுலச் சான்றோர் படைத்தலைவர்கள், குறுநில மன்னர்கள், சுற்றத்தார், மண்டலத்தார், ஏனாதித் தலைவர்கள், நாடு காவலர், ஊர் காவலர், கோட்டைகளைக் காத்த வீரர்கள், பெரும்புகல், செருப்புகல் வீரத்தலைவர்கள் போன்றோரும் சான்றோர் குலத்தவரே.

இவ்வீரர்களின் வரலாறும், பீடும், பெருமையும், செவ்வியல் பண்புகளும், கொடை நலன்களும், அவர்களின் ஆன்றவிந் தடங்கிய கொள்கைகளும், அறப்போர் முறைகளும் பின்னிப் பிணைந்து இப்பாண்டியனுடன் காணப்பெறுதலால் இவனை மையமாக வைத்து அக்காலத் தமிழக வரலாற்றை வரையறுக்க முடியும் என்பதாலே இவ்வாறு இந்நூலில் அமைத்துக் கொள்ளப் பெற்றது.

பழைய பாண்டிய அரசகுடியும் சான்றோர் குடியும்

பழைய மரபினரான பாண்டியர்க்கு மாற்றாகப் பின்வந்த சிலர் தாங்கள் தாம் பாண்டியர்கள் எனக் கூறி வருகின்றனர். வரலாற்று ஆதாரமின்றி இவ்வாறு கூறி வருகிறவர்கள் தக்க ஆவணங்களைக் காட்டுவதில்லை. பழைய பாண்டியர் குடியும் அரசகுலச் சான்றோர் குடியும் தொன்றுதொட்டே ஒன்றாகவே இருந்து வந்துள்ளன.

அரசர்களின் குலங்கள்

தமிழ்நாட்டில் ஆட்சிசெய்த மன்னர்களின் குலத்தவரைச் சூரிய, சந்திர, இந்திர குலத்தவர் எனக் கி.பி.11ஆம் நூற்றாண்டு இலக்கண நூலான *பன்னிருபாட்டியல்*[15] சுட்டிக் காட்டுகிறது.

இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
துன்னரும் சிறப்பின் மன்னவர் சாதி

சேர, சோழ, பாண்டியர்கள் சூரிய, சந்திர குலத்தவர் என்றும் காட்டாட்சி புரிந்தோரை இந்திர குலத்தவர் என்றும் இந்நூல் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்திரன் இரவி சோமனிம் மூவர்
தந்த எழுத்தே அரசர் சாதி

எனப் பரணர் என்பவர் குறிப்பிடுகிறார்.[16]

இருகுலத்தார்

தமிழ் மன்னரான மூவேந்தர்கள் சூரிய, சந்திர குலம் என்னும் இருகுலத்திற்கும் உரிமை கோருகின்றனர்.

கலிங்கத்துப்பரணியில் "இருகுலத்து அரசர்" என்று வேந்தர் குடியைக் கூறியுள்ளார் அதன் ஆசிரியர்.

கி.பி.12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீவல்லப பாண்டியனைக் கோட்டையூர்க் (திருமயம்) கல்வெட்டு (புதுக்கோட்டைக் கல்வெட்டுத் தொகுதி, .243):

---

15. *பன்னிருபாட்டியல்*, வருணம், பாடல் 6.

16. இப்பரணர் இடைக்காலத்தைச் சேர்ந்த புலவர்.

ஸ்வஸ்திஸ்ரீ திருமடந்தையும் ஜெயமடந்தையும்
திருப்புயங்களினிதிருப்ப இருகுலமும் பெருமையெய்தி
எண்டிசையும் குடைநிழலிற் மன்னவர்

என்பதால் இருகுலப் பெருமையுடைய மன்னர் குடியையே குலவர்த்தனர் என்றும், குடிப்பெருமை உடையவர் என்றும், சூரிய சந்திர குலம் என்றும் கூறினர்.

நவநீதப்பாட்டியல்[17] "காலையன் சந்திரன் இந்திரன் கண்டன காவலர்க்கு" எனக் கூறுகிறது.

பிற்கால நூலான *இருங்கோவேள் பிள்ளைத்தமிழ்,*[18] "இரவி குலாதிபர் சந்திர வேந்தர்" என இருகுலத்தாரைப் புகழ்கிறது.

இவ்வாறு அரசர்களைக் குலமுறைப்படுத்துவதைக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இலக்கண நூல்களிலும் காணமுடிகிறது.

இவை அனைத்தும் தெரிவிக்கும் சந்திரகுல வேந்தர் மரபினர் பாண்டியர் ஆவர்.

பாண்டியர்குலம் சந்திரகுலம்

பிற்காலத்துத் தென்னிந்தியத் தலபுராணங்களில்தாம் 'பாண்டியர் சந்திரகுலத்தவர்' எனக் குறிப்பிட்டிருப்பதாகச் சில வரலாற்றறிஞர் உண்மைக்கு மாறாக எழுதி வருகின்றனர். ஆனால் சங்க இலக்கிய நூலான *மதுரைக்காஞ்சியில்* மாங்குடி மருதனார், தொல்குடி வேந்தரான பாண்டிய குலத்தவரை (193 - 194),

குடமுதற் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்

என்னும் அடிகளில் பாண்டியர் சந்திர குலத் தோன்றல் என்று அடையாளம் காட்டுகிறார். பத்துப்பாட்டுள் ஒன்றாகிய *மதுரைக் காஞ்சி* சங்ககாலத்து நூலாகும். அவரைத் தொடர்ந்து இளங்கோவடிகள் *சிலப்பதிகாரத்தில்,*

செருமாண் தென்னர் குலமுத லாகலின்
அந்திவானத்து வெண்பிறை தோன்றி (சிலம்பு. 4:22-23)

என்று கூறியுள்ளார்.

---

17. *நவநீதப்பாட்டியல்,* பாடல் 12.

18. *இருங்கோவேள் பிள்ளைத்தமிழ்,* கி.பி.18ஆம் நூற்றாண்டு.

மேலும் அவர்,

பன்மீன் தானையொடு பாற்கதிர் பரப்பித்
தென்னவன் குலமுதற் செல்வர் தோன்றி (சிலம்பு. 13:17-18)

என்றும் குறிப்பிடுகின்றார். இடைக்காலத்துப் பாடப்பெற்ற *பாண்டிக்கோவை* என்ற அகப்பொருள் நூல்,[19]

சேர்ந்தார்ப் புறங்கண்டு செந்நிலத் தன்றுதிண்டேர் மறித்துப்
பேர்ந்தான் தனது குலமுதலாய பிறைக் கொழுந்தே

எனப் பாண்டியனைக் குறிப்பிட்டுள்ளது.

மேலும் "*தண்கதிர்த் திங்கள்தன் தொல்குலம்*", "*தொல்குடி மாமதி*" என்றும் பாண்டியர் குலம் சந்திரகுலம் எனக் குறிக்கப்படுகிறது.

இவற்றில் இடம்பெற்றுள்ள பிறை, வெண்பிறை, பிறைக் கொழுந்து, மாமதி தண்கதிர்த் திங்கள் என்னும் சொற்கள் சந்திரனைக் குறிக்கும் சொற்கள் ஆகும். இந்நூல்கள் தலபுராணங்களுக்கும் முந்தியவை.

இவற்றால் தொன்றுதொட்டே பாண்டியர் சந்திர குலத்தவர் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

பாண்டியர் சந்திர குலத்தவர் என்று கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் மெய்க்கீர்த்திகளிலும் புராணங்களிலும் தொடர்ச்சியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

பாண்டிய அரச குலத்தவர் தங்களைக் கி.பி.18ஆம் நூற்றாண்டுவரை சந்திரகுலதீபன் என்று கூறிப்பெருமைப் பட்டனர் என்பதை முதல்லே காட்டியுள்ள குற்றாலம் செப்பேட்டைக் காண்க.[20]

சந்திரகுலம் - தொல்குலம் - உயர்ந்தகுலம்

பாண்டிய வேந்தர் தொன்றுதொட்டு ஆளும் உரிமை படைத்த குடியினர் என மாங்குடி மருதனார் *மதுரைக்காஞ்சியில்* குறிப்பிட்டுள்ளார்.

"*உலக மாண்ட உயர்ந்தோர் மருக*"

என்ற *மதுரைக்காஞ்சி*[21] அடிக்கு உரையாக நச்சினார்க்கினியர்

---

19. *பாண்டிக்கோவை*, பாடல் 304, ஸ்டார் பிரசுரம், சென்னை, 1957.

20. "- திரிபுவனேகவீர சந்திரகுலப் பிரதீப மதுரா மகேந்திர சேந்த மங்கலப் புரவராதீசுவர-"

21. *மதுரைக்காஞ்சி*, பாடல் அடி 23.

உலகத்தையாண்ட உயர்ச்சி பெற்றோர் குடியில் உள்ளவனே

என்று தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனை மையமாக வைத்துக் கூறுகிறார். இங்குக் கூறப்பெறும் உயர்ந்தோர் சான்றோர் குலத்தினரே.

உயர்ந்த மரபினரைப் பற்றி *இறையனார் அகப்பொருள்* உரையில் "ஒழுக்க, குற்ற, குறைபாடு நீங்கி, ஓங்கி வராநின்ற தொல்குலம்" என்றும், "ஒழுக்கத்தின் வழித்துத் தலைக்குலமாக லானும்" என்றும் நக்கீரர் தெரிவித்துள்ளார்.[22]

வேம்பற்றூர் நம்பியின் *திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்* "ஆதி மரபின் வரும் பெரிய அரசர் குலத்தில் அவதரித்த" என்று பாண்டிய குலத்தின் பழைமையைக் கூறுகிறது.

திருவிளையாடற் பயகரமாலை "மேற்குல வேந்தர்" என்று பாண்டிய குலத்தவரை மேம்படுத்திக் கூறுகிறது.

இவைபோன்று பாண்டிய அரசகுலத்தின் குலப் பெருமையைக் கூறி அதன் தொல்குடி நிலையைப் பல இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

சான்றோரும் தொல்குலத்தினர்

கி.பி. 905இல் அமைந்த செப்பேடுகளில் 'குடியெடுத்த குடைவேந்தன் திருக்குலத்துக் கோமன்னர்' என்று அரச குலத்தவர் கூறப்பட்டுள்ளனர்.[23]

கி.பி. 921இல் அமைந்த ஆவணம் அரச குலத்தவரை 'முடிசூடிய மன்னரைக் குலவர்த்தனர்' என்று குடிப்பெருமை யாகக் கூறுகின்றது.[24]

திருஞானசம்பந்தர் தேவாரம் (880, ii) ''முடியால் உலகாண்ட மூவேந்தர்'' என்று அரசகுடியின் சிறப்பையும் பெருமையையும் கூறுகின்றது.

---

22. களவியல் உரை, நக்கீரர், கற்பு.2.

23. பார்க்க: *பாண்டியர் செப்பேடுகள் பத்து*, மறுபதிப்பு - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மறுபதிப்பு, 1999.

24. குலவர்த்தனர் எனக் குறிக்கும் இந்த ஆவணமும் பாண்டியர் செப்பேடுகளில் ஒன்று (வீரபாண்டியன் காலத்தது).

தொல்குலத்தினரான அரசகுடியினர்,

> *உயர்பூரிம விழுத்தெருவில்*
> *பொய்யறியா வாய்மொழியாற்*
> *புகழ் நிறைந்த நன்மாந்தரொடு*
> *நல்ஊழி அடிப்படர*
> *பல்வெள்ளம் மீக்கூர*
> *உலகம் ஆண்ட உயர்ந்தோர். . .*
>
> (மதுரைக்காஞ்சி 18-23)

ஆவர். அதாவது, வரிசையாகக் கட்டப்பெற்ற வீடுகள் கொண்ட உயர்குலத்தோரான, உண்மை அன்றிப் பொய்யைக் கேட்டறியாத சுற்றத்தினரான சான்றோர் அமைச்சருடனே இருந்து நல்லாட்சி செய்தவர் பாண்டியர் என்கிறார் மாங்குடி மருதனார். அரசனின் அவையை அடுத்து, அவன் உறவினர்களான உயர்ந்தோர் குடியமர்ந்துள்ளனர். இதனை நச்சினார்க்கினியர் கூறுவதாவது:

> உயர்ந்த சிறகுகளையுமுடைய சீரிய தெரிவிலிருக்கும் மாந்தர், மெய்ம்மொழியே எக்காலமும் கூறுதலால் பெற்ற புகழ் நிறைந்த பொய்யைக் கேட்டு அறியாத நல்ல அமைச்சருடனே

இதிலிருந்து பாண்டியனின் அமைச்சராய்ச் சான்றோர் அமைந்திருந்தனர் என்பது நன்கு தெரிகிறது.

அகத்தியரும் பாண்டியரும்

அகத்தியர் தமிழோடும் பழந்தமிழகத்தோடும் தொடர்புடையவர். பாண்டிய நாட்டுப் பொதிகை மலைக்கு, வடபாலிலிருந்து குடியேறியவர்.

> துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையும் கொண்டு போந்து, காடுகெடுத்து நாடாக்கி பொதியின்கண்ணிருந்து இராவணனைக் கந்துருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி

என நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.[25]

தொல்காப்பியம் அகத்திணையியல் 32ஆம் நூற்பா உரையில் அவர்,

---

25. *தொல்காப்பியம்,* சிறப்புப் பாயிரம், நச்சினார்க்கினியர் உரை, கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007, பக்.11.

> இது மலையமாதவன் நிலங்கடந்த நெடுமுடி யண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன்றொழில் உரித்தென்கிறது.[26]

என்பதாக அகத்தியர் வரலாற்றைக் கூறுகிறார்.

அசுரர்கள் ஆட்சியை அகத்தியர் துணையுடன் பாண்டியர் விலக்கினர் என்பது இதனால் பெறப்படுகிறது. பாண்டியர் குடியில் தோன்றிய வேந்தருக்குத் தொடக்கக் காலத்தில் பொதிகையிலிருந்த அகத்தியர் குருவாக இருந்து வழிநடத்தினார்.

புலத்திய மகரிசி என்னும் அந்தணனின் புதல்வனாகிய இலங்கையை ஆண்ட இராவணன் தமிழ்நாட்டைக் கைப்பற்றித் தனது ஆட்சிக்கு உட்படுத்தாதபடி தடுத்தவர் அகத்திய முனிவர் என்று மாங்குடி மருதனார் *மதுரைக்காஞ்சியில்* குறிப்பிட்டுள்ளார்.

> *தென்னவன் பெயரிய துன்னருந் துப்பின்*
> *தொல்முது கடவுள் பின்னர் மேய... பொருந*
> (மதுரைக்காஞ்சி 40-42)

என்கிறார். இவ் அடிகளுக்கு நச்சினார்க்கினியர்,

> இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத்தியன் பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனாயிருத்தற்கு மேவின ஒப்பற்றவனே

என்று விளக்கம் தந்துள்ளார். *சிலப்பதிகாரம்* 12ஆம் காதை,

> *மறைமுது முதல்வன் பின்னர் வேய*
> *பொறையுயர் பொதியிற் பொருப்பன்*

என்கிறது. இதுவும் மதுரைக்காஞ்சியை அடியொற்றிக் கூறப்படும் சான்றாகும். உ.வே. சாமிநாதையர், *பத்துப்பாட்டுப்* பதிப்பில் அரும்பதஉரை முதலியவற்றின் அகராதியில் அகத்தியரைக் குறிப்பதாவது.

1. அகத்தியர் இசைபாடி இராவணனை வென்றது
2. அகத்தியர் இசையிலே வல்லுநர்
3. அகத்தியர் இராவணனை, இலங்கைக்குப் போக்கியது

---

26. *தொல்காப்பியம்,* மேற்சுட்டிய பதிப்பு நூல், *அகத்திணையியல்,* பக். 81.

4. அகத்தியர் இறைவனுக்குச் சீரோப்ப இருந்தமை
5. அகத்தியர் தென்திசை உயர்ந்த நொய்ம்மை போக இருந்தது
6. அகத்தியரைக் குருவாய்ப் பாண்டியர்கள் பெற்றதைப் பாண்டியர் செப்போடுகளும் குறிப்பிடுகின்றன.[27]

தொல்காப்பியரும் அந்தணரை முதலில்வைத்து அரசரை அடுத்து வைத்தும் கூறுவதிலிருந்து அந்தணர், அரசர் வரிசை தொல்காப்பியர் காலத்திலும் இருந்ததை அறிய முடிகிறது. அந்தணர்க்கு உரியவை, அரசர்க்கு உரியவை என்ற வரிசையில் *தொல்காப்பிய* மரபியல் நூற்பாக்கள் 71, 72 அமைவதைக் காணலாம். அந்தணர்களுக்குச் சிறப்பு இருந்ததாலேயே அவர் தம் வரிசையில் முதலிடம் பெற்றனர். அரசர்கள் அந்தணர்களைப் பணிந்து நடந்தனர். இதற்கான சான்றுகள் பழந்தமிழிலக்கியங் களில் உள்ளன.

அந்தணரும் அரசரும்

பதிற்றுப்பத்து (63) சேர வேந்தரைக் குறித்து, "பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே"[28] என்றுரைப்பதால் தொல்காப்பியர் செய்த இலக்கணப்படி அந்தணருக்கு அடுத்த இடத்தில் அரசர் அமைந்து சிறந்தனர் என அறியலாம்.

இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை யெதிரே

எனவரும் *புறநானூற்று* (6:19-20) அடிகளாலும்[29] அரசர் தமக்கு முன்இருந்து வாழ்த்தும் நான்மறை அந்தணரையே வணங்குவர் என்றும் தெரிகிறது.

---

27. *தளவாய்புரச் சாசனம்,* "அகத்தியனொடு தமிழாய்ந்தும்..." எனக் கூறுகிறது. பார்க்க: *பாண்டியர் செப்பேடுகள் பத்து* (35ஆம் அடி) *சின்னமனூர் பெரிய சாசனம்* "பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது" (7வது அடி) எனக் கூறுகிறது.

28. *பதிற்றுப்பத்து* ஏழாம்பத்தின் தலைவனான செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பத்துப்பாடல்களில் பாடியுள்ளார். இவனை இவர் *புறநானூற்றிலும்*பாடியுள்ளார்.

29. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் *புறநானூற்றில்* 6ஆம் பாடலில் பாடிய பாடலடிகளே இவை. *புறநானூற்றின்* பழைய உரையாசிரியர் இவற்றுக்குக் கூறும் உரையாவது: 'பெரும! நினது குடி, மிக்க நான்கு வேதத்தினை யுடைய அந்தணர் நின்னை நீடுவாழகவென் றெடுத்த கையின் முன்னே வணங்குக' என்பதாகும். அரசர் அந்தணர்களைக் குருவாக ஏற்றுப் பணிந்தொழுகுவர் என்பது இதனால் தெரிகிறது.

மதுரைக்காஞ்சியின் 40-42ஆம் பாடலடிகளுக்கு நச்சினார்க்கினியர் மேலே கூறிய உரையில் பாண்டியனைச் 'சான்றோன்' என்கிறார்.

'அகத்தியருக்குப் பின்னால் இருக்கும் மரபினர்' என்று குருவை முதலில் கூறி, அக்குருவிற்குப் பின் அமைந்த பாண்டியர் குடியைத் தலைமக்கள் என்ற பொருளில் சான்றோர் என்றார் அவர்.

தொல்காப்பியம் மரபியலில் கூறும் வரிசையான அந்தணர், அரசர் என்ற அமைப்பிலும் இது பொருந்துவதாக அமைந்துள்ளது எனலாம்.

அகத்தியர் பொதியமலையில் இருந்ததையும் பாண்டியர் பொதிய மலையிலே இருந்து மேம்பட்ட பழங்குடியினர் என்ற பண்புடைய குடியினர் எனவும் இலக்கியங்களில் காட்டப் பெற்றுள்ளது.

இராவணன் அசுர குணம் கொண்டவன் என அறியப் பட்டவன். அவன் புலத்திய மகரிசியின் புதல்வன் என்பதால் அவனைக் கம்பன் தன் கவிகளில் அந்தணர் மரபிலே வந்தவன் என்று சில பாட்டடிகளில் குறிப்பிட்டுள்ளான்.

அரசர்க்குரிய நாடாகப் பாண்டிய நாடு இருந்தது. அதனை அந்தண குலத்தவன் கைக்கொள்ளக் கருதியபோது அதனைத் தடுத்து அரச குலத்திற்கு அகத்தியர் உதவினார் என்கிறது *மதுரைக்காஞ்சி* (40-42).

அந்தணனான இராவணனைச் சந்துசெய்வித்து, அதாவது வென்று அரச குலத்திற்குரிய ஆட்சியைக் காத்து, அகத்திய முனிவர் பாண்டியருக்கு வழங்கினார் என இதனால் அறிந்து கொள்ளலாம்.

"அந்தணாளருக்கு அரசு வரைவின்றே" என்ற *தொல்காப்பிய* மரபியல் (75) நூற்பாவிற்கு இளம்பூரணர் வழங்கிய உரையில் "அந்தணர்க்கு அரசு மறுத்து அரசர்க்குரியது ஆட்சி" என்று வலியுறுத்துகிறார். இதனால், அரசரே நாடாள வேண்டும் என்பது அகத்தியர் காலத்திலிருந்து வந்த நடைமுறையாக இருந்துள்ளது.

முற்பட்டு இருந்த இந்த நடைமுறை வழக்கத்தையே *தொல்காப்பிய* இலக்கண நூல் இவ்வாறு வரையறுத்துள்ளது.

அரசரும் சுற்றத்தார் சான்றோரும் அவையிருத்தல்

இதுவரைஅகத்தியரும் பாண்டியரும் ஒருங்கிருந்து தமிழாராய்ந்த நிலை சுட்டப்பெற்றது. அவர்களுடன் அரசனின்

சுற்றத்தாரும் தமிழ் அவையிலும் இடம்பெற்றிருந்தது இனிச் சுட்டப்படுகிறது. திருக்குறளுக்கு[30] உரைசெய்த பரிமேலழகர் 'இறைமாட்சி' என்ற அதிகாரத்தில்,

> பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு
> செவ்வியுடையனாயிருத்தல்

என்று குறிப்பிட்டுள்ளார். அவையின் கண்ணிருந்த அந்தணரும் அரசரும் என்பது இதன் பொருளாகும்.

அகத்தியருடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழ் ஆராய்ந்த சிறப்பினைப் பலரும் ஆராய்ந்துள்ளனர். எனினும் தலைமகனின் பெயரால் சங்கத்திருந்த சான்றோர் நாற்பத்தொன்பதின்மர் என்கிறார் உரையாசிரியர் நச்சினார்க்கினியர்.[31]

அந்தணரும் அரசரும் தலைச்சங்கத்திலிருந்து தமிழ்மொழி வளர்த்துப் பெருமை பெற்றனர் என்பது இதனால் தெளிவுறுகிறது.

மலைபடுகடாம் "கல்லென் ஒக்கல் நல்வலத்து இரீஇ" என்னும் 549ஆம் அடிக்கு விளக்கம் தந்த உரையாசிரியர் நச்சினார்க்கினியர்,

> கல் என்னும் ஆரவாரத்தையுடைய சான்றோர் இருக்கின்ற
> நன்றாகிய சமயத்திருக்கு மண்டபத்தே இருந்து... இதனால்
> நல்லிதினியக்கும் அவன் சுற்றத் தொழுக்கமும் (80) அவன்
> நாண் மகிழிருக்கையும் (76) கூறினார்.

என்று குறிப்பிட்டுள்ளார். அவையில் வீற்றிருந்த சுற்றத்தாரின் பேரொழுக்கத்தைக் கூறுமிடத்து "நன்றாக நடத்தும் நன்னன்சேய் நன்னனுடைய சுற்றத்தாருடைய பேரொழுக்கம்"[32] என்று வேளிர் அவையிருந்ததை வலியுறுத்திக் கூறுகின்றார்.

சங்க இலக்கியங்கள் "சான்றோர் அவை" பற்றி எடுத்தோதுகின்றன.[33]

---

30. திருக்குறள், பரிமேழகர் உரை.

31. பாயிர உரை.

32.....அவன் நாண்மகிழிருக்கையும்
நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
.....நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்தொழுக்கமும் (மதுரைக்காஞ்சி 76-80)
எனும் பாடலடிகளுக்கான உரையையும் காண்க.

33. பார்க்க: நெல்லை நெடுமாறன், "சான்றோர் அவை - கட்டுரை ("Court of the Lords"; Epigraphical Society of India, Mysore)

மன்றினையாளும் ராஜர் குலத்திலும்
மலையரசன்மார் வங்கிசந் தன்னிலும் [34]

என்பதால் மன்றம் இருந்த அரச குலத்தவர் பற்றித் தெரிய வருகிறது. மன்றம் என்றால் ஆட்சி என்றும் பொருள்.

வேந்தனொடு பலரும் அவை இருந்தனர் எனினும் சான்றோர் அவை என்றே அது அழைக்கப்பட்டது. 'சான்றோர் இருந்த அவையத்து' என்ற புறப்பாட்டால் (266) இதனை அறியலாம்.[35] இப்பாடல் சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது ஆகும். இங்குக் குறிப்பிடப்பெற்ற சான்றோர் அரசனுடன் அவையிருந்தனர். எனினும் அவையின்கண் வந்து ஆரவாரஞ் செய்கிறவர்களின் துன்பங்களை விரைந்து தீர்த்து வைப்பவர்களாக இருந்தனர் என இப்பாடலடிகளுக்குப் பழைய உரையாசிரியர் விளக்கம் எழுதியுள்ளார். வேந்தர்களின் அவை 'சான்றோர் அவை' எனப்படும்.

வடபுலத்தில் அரசனுடைய உறவினர் அமைந்திருந்த அவை "சாந்தாஹாரம்" என்று பெயர் பெற்றிருந்தது. உருசிய அறிஞர் அந்தோனவா என்பார் இந்தியாவைக் குறித்து எழுதியுள்ள வரலாற்று நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். சான்றோர் இருந்த அவையே இவ்வாறு அழைக்கப்பெற்றுள்ளது.

"அவையிருந்த பெரும்பொதியில்" என்ற *மதுரைக்காஞ்சி* (161) அடிக்குச் "சான்றோர் இருந்த பெரிய அம்பலங்களிலே" என்று நச்சினார்க்கினியர் உரை வரைந்துள்ளார்.

சான்றோர் குடி இயல்பு

சான்றோர் என்பார் குடிப்பிறப்பு முதலிய எண்
குணங்களால் அமைந்தோர்

என்று *"எட்டுவகை நுதலிய அவையத்தானும்"* (தொல். புறத் திணையியல், நூ:21) என்ற நூற்பாவின் உரையில் நச்சினார்க்கினியர் எடுத்தாண்டுள்ளார்.[36] *"தோலா நாவின் மேலோர் பேரவை"* என்பதையும் அறியலாம்.

---

34. அரவமுத்து வீரன் கதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

35. *வான்றோய் நீள்குடை வயமான் சென்னி*
சான்றோர் இருந்த அவையத்து உற்றோன் (புறம். 266:7-8).

36. "சான்றோர்" என நச்சினார்க்கினியர் கூறியதற்கு விளக்கமாக மேலும் அவர் "அவை குடிப்பிறப்புக் கல்வி ஒழுக்கம் வாய்மை தூய்மை நடுவுநிலைமை அழுக்காறின்மை அவாவின்மை என விவையுடையராய் அவைக்கண் முந்தியிருப்போர் வெற்றியைக் கூறுதல்" என்றுகூறி *ஆசிரியமாலை* (புறத் திரட்டில் அவையறிதலின்கீழ் உள்ள) பாடலைமேற்கோள் காட்டியுள்ளார்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி

என்று வள்ளுவம் (118) கூறுகிறது. அரசனது செங்கோல் ஒருபால் கோடாது நேராக நிற்கும் சமன்கோலாகிய செங்கோலுக்குரியது. நேரான செங்கோலுக்குரிய முறைமையே சான்றோர்க்குச் சிறப்பைத் தரும். அரசன் ஆள்வோனே எனினும் படைத் தலைவனாகவும் அறங்கூறு அவைத்தலைவனாகவும், புலவர் தலைவனாகவும் இருந்த காலமும் உண்டு.

அதனால் அவன் 'சான்றோர்' என விளங்கினான். அவன் சமநிலை பேணினான் என்பது இதனால் கூறாமலே வெளிப்படும் என்று இளங்குமரன் *தகடூர் யாத்திரை* உரையில் குறித்துள்ளார்.[37]

மேலும் படைவீரனாகவும் இருந்தவன் "சான்றோன்" என்பதால் அவையிருந்த அவையத்தானாகிய சான்றோன் குடிப்பிறப்பையுடையவன் என்று கூறுகிறார்.

சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இம்மூன்றும்
வான்தோய் குடிப்பிறந் தார்க்கு

என ***நாலடியார்*** "மேன்மக்களில்" உணர்த்துகிறது.

புறப்பொருள் வெண்பாமாலை (185) "வான்றோயு மலையன்ன சான்றோர்தஞ் சால்புரைத்தன்று" என்பதால் அவை மாந்தரின் தலைவன் அரசன் என்றும் அவன் மரபினர் சான்றோர் என்பதும் பெறப்படும்.

...............அறம் நெறிகாட்டி
பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது (191-192)

என்னும் *மதுரைக்காஞ்சி* அடிகளுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்

நின் குலத்திற் பெரியோர் நடந்த அடிப்பாட்டின் வழியைத்
தப்பாமல் அறநெறியிருக்கும்படி இதுவென்று அவர்களுக்கு
விளக்கி

என்று குறிப்பிட்டுள்ளார். சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்ததைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்ற புலவர் பாடும் போது (புறம். 58: 24-25)

---

37. பார்க்க: இளங்குமரன் உரை.

நல்ல போலவும் நயவபோலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்

என்று அறிவுறுத்துகிறார். தொல்லோர் என்பதற்குப் *புறநானூற்றின்* பழைய உரையாசிரியர் "பழையோர் ஒழுகிய ஒழுக்கம் உடையன போலே இருக்கவும்" என்கிறார். இதனால் பெரியோர் என்போரும் சான்றோர் என்போரும் பழையோர் என்போரும் அவர்களின் சுற்றத்தாரே ஆவர்.

அந்தணர்களுடனும் அரசர்களுடனும் அவையிருந்த சான்றோர் எண்வகைச் சிறப்புடையவர் என்ற இலக்கிய இலக்கணச் சான்றுகளால் அறிந்தோம். இச்சான்றோரே உயர்ந்தோர் எனவும் இவற்றில் அழைக்கப்படுகின்றனர்.

சான்றோரே பெரியோர்

தொல்காப்பியக் கற்பியல் சூத்திரம் 9இல் 16ஆம் அடி "பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து" என்கிறது. ஒழுக்கம் நிறைந்த உயர் குடியினரைப் பெரியோர் என்று பண்டு அழைத்தனர். இதனை நச்சினார்க்கினியர் உரையில்,

நன்மக்கள் ஒழுகும் ஒழுக்கம் பெரிதாயிருக்கு மென்றுஞ்
சொல்லி[38]

என்கிறார். இலக்கியங்களில் பெரியோர் என்று உயர்ந்தோரையே குறித்தனர். *பழமொழி நானூறு* "பிறப்பின் சிறியார்" (பா.198) பற்றிக் கூறுகிறது. "குலத்திற் சிறியார்" (பா.300) என்றும் அது சுட்டிக்காட்டுகிறது.

எனவே உயர்ந்த குடியினர் தாழ்ந்த குடியினர் என்ற இனப் பாகுபாடு பண்டைய நாளிலிருந்தே வந்துள்ளது தெரிகிறது. *திருக்குறள்* 46வது அதிகாரத்தில் சிறிய இனம் பற்றிப் பரிமேலழகர் விளக்கியுள்ளார்.

சூடுற்ற சுடர்ப்பூவின்
பாடு புலர்ந்த நறுஞ்சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்றமாக (225-227)

என்னும் *மதுரைக்காஞ்சி* அடிகளுக்கு எழுதிய உரையில்

சூடுதலுற்ற விளக்கத்தை உடைத்தாகிய வஞ்சி யினையும்
பூசினபடியே புலர்ந்த நறிய சந்தனத்தை யுமுடைய சீரிய
படைத்தலைவரைத் தமக்குச் சுற்றத்தாராகக் கொண்டு

---

38. ஓரம்போகியார் எழுதிய *அகநானூற்றின்* 286ஆம் பாடலில் நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டுகிறார். அதில் வரும் "முன்னியது முடித்தல் பெரியோர் ஒழுக்கம்" என்ற 13ஆம் அடியைக் காட்டுகிறார்.

எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றால் பெரியோர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளோர் படைத்தலைவர் என்னும் தகுதிக்குக் குறையாதவர் என்பதையும் அவர்கள் பாண்டியனுக்குச் சுற்றத்தாராக விளங்கியிருக்கின்றனர் என்பதையும் அறியமுடிகிறது.

'பாண்டியனின் சுற்றத்தார் சான்றோர் குடியினரே என மேலே கண்டறிந்தோம். இக்குடியினரே பெரியோரும் ஆவர் எனத் தெரிந்து கொள்ளலாம். ஓரம்போகியாரின் அகப்பாடல் (286)

அனைய பெரியோர் ஒழுக்கம் அதனால்
அரிய பெரியோர்த் தெரியுங் காலை

என்கிறது. இவ் அடிகளால் உயர்குடியிலே தோன்றியவரைப் பெரியோர் என்றல் பண்டைய வழக்கு என அறிய முடிகிறது. இதனால் மாங்குடி மருதனாரும் தலையாங்கானத்துச் செருவென்ற பாண்டியனை

உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக (மதுரைக்காஞ்சி, 23)

என்கிறார்.

இடைத் தெரிந்து உணரும் பெரியோர் மாய்ந்தென

என்று *மலைபடுகடாம்* (542) உணர்த்துகிறது.

சான்றோரே சங்ககாலத் தலைமக்களும் ஆவர்

இறையனார் அகப்பொருள் கற்பியல் நூற்பா 16இன் உரையில்,

எம்பெருமான் நீர் பெரிதாய நாட்டிற் பெரிது மிக்க ஊரிற்
பெரிதுமிக்க குலத்திற் பிறந்த பேரொழுக்கத்தினீர்க்குத்
தக்கதே சிறியோமாகிய எந்திறத்துத் தலையளி[39]

எனத் தலைமகனின் சிறப்பைத் தலைவி கூறுகிறாள். நக்கீரர் உரை விளக்கத்தில், "கல்லாச் சிறியோர் இல்லம்", "சிறியவர் வாழ்பதி" என்னும் தொடர்கள் மேற்கோள் பாடல்களில் வருகின்றன. பெரியோர் ஒழுக்கமும் சிறியோர் பற்றியும் இதனால் தெரிந்து கொள்ளலாம். பெரியோர் என்போர் ஒழுக்கம் நிறைந்த குடியாக வலியுறுத்தப்பட்டுள்ளனர் என்பதற்கு மேலும் சான்றுகளைக் கூறுகிறார் வள்ளுவர்.

---

39. *இறையனாரகப்பொருள் உரையுடன்*, கழகம், 1976. பக். 185.

மனநலம் நன்குடையவர் ஆயினும் சான்றோர்க்
கினநலம் ஏமாப் புடைத்து (குறள் 458)

என்பதில், சான்றோர்க்கு இனநலம் பாதுகாப்பினைத் தரும் என்கிறார்.

நாலடியார் மேன்மக்கள் என்ற அதிகாரத்தின்கீழ் 'மேன்மக்கள்' என்னும் ஆட்சியாளரைச் 'சான்றோர்' என்று எடுத்தோதுகிறது. "சான்றவர் தொல்வழிக் கேண்மை"[40] என்று அதுமேலும் கூறுவதால் மேன்மக்கள் எனப்பட்ட சான்றோர் பழங்குடியினர் ஆவர் எனத் தெரியவருகின்றது.

பழமொழி நானூறு சான்றோர் செய்கை "சான்றோர் இயல்பு" என்ற தலைப்பில் அரசர்கள் (வேந்தர், வேளிர்) செயல்பாட்டினைக் கூறுகிறது.[41]

மேலும் "ஒப்புரவு ஆற்றும் மனைப்பிறந்த சான்றவன்" (*பழமொழி* 81) என்பதாலும் குடிச்சிறப்புடைய சான்றோர் பற்றி அறியக் கிடக்கின்றது.

கற்றோர் போற்றும் *கலித்தொகை,* "தகைமிகு தொகைவகை அறியும் சான்றவர் இனமாக,. . . வெற்பனும் வந்தனன்" எனத் தலைமகனின் சிறப்பைக் கூறுவதாக உள்ளது என்று குறிப்பிடுகின்றது.[42]

குறள் 446க்கு உரை செய்த காலிங்கர் 'சான்றோர் இனத்தவனாய்' எனக் கூறுவதிலிருந்து சான்றோர் இனத்தவர் என்ற சமூகம் தெரியவருகிறது.

---

40. செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையில் ... (நாலடியார் பா.154)

41. ஈட்டிய ஒண்பொருள் இன்றெனினும் ஒப்புரவு
ஆற்றும் மனைப் பிறந்த சான்றவன் (பழமொழி 81)
சான்றோர் கடங்கொண்டும் செய்வார் கடன் (பழமொழி 82)
சான்றவர் கையுண்டும் கூறுவர் மெய் (பழமொழி 83)
பரியப்படுபவர் பண்பிலாரேனும்
திரியப் பெறுபவோ சான்றோர் (பழமொழி 85)
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவாதுபாம்பு (பழமொழி 86)
.... பிறப்பினால்
சாலவுமிக்கவர் சார்ந்தடைந்து வாழ்பவே
தால அடைக்கலமே போன்று (பழமொழி 87)

42. கலித்தொகை, பாடல் 39, அடி. 46-50.

குடிப்பிறப்புடையோரே சான்றோர் என்று *மணிமேகலை*, "சான்றோர் தங்கண் எய்திய குற்றம்"[43] என்று குறித்ததற்கு உயர்குடித் தோன்றிய மேன்மக்கள் என்று உ.வே.சா. உரை வரைந்துள்ளதை இங்கே பொருத்திப் பார்த்தால் உயர்குடியினர் சான்றோர் என்பது தெளிவாகப் புரியும்.

பாண்டியன் நெடியோன் குலத்தினரும் சான்றோரே

மதுரைக்காஞ்சியின் (759-66) அடிகள் பாண்டிய குலத்தினர் என்போர் சான்றோர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

பல்சாலை முதுகுடுமியி
னல் வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பி
னிலந்தரு திருவி ***னெடியோன்*** *போல*
வியப்புஞ் சால்புஞ் செம்மை ***சான்றோர்***
பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி (759-766)

இதன் உரை,

எல்லா நிலங்களையும் தன்னிடத்தே காட்டின பெருஞ்செல்வத்தையுடைய மாயோனைப் போலவும்.... குற்றமற்ற சிறப்புகளையுடைய தலைமைகள் எல்லாம் அமைந்தோர் பலரும் தம்மிலிருந்து சொல்லப்பட்டு

என்பதால் பாண்டியரின் கொடிவழி என்னும் வம்சாவளிப் பட்டியலின் தொடர்ச்சியே சான்றோர் என்பதாம்.

வேள்வியைச் செய்து பெருமைப்பட்டுக் கொண்டவர் பாண்டியர் என்றும் இதன்மூலம் தோன்றுகிறது. *பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி* செய்த வேள்விகளால் அவன் பெயர் பெற்றான்.

"பொலந்தார் மார்பின் ***நெடியோன் உம்பல்***"[44]

என்ற *மதுரைக்காஞ்சி* (61) அடிக்குப்

பொன்னாற் செய்த தாரையணிந்த மார்பினை யுடைய வடிம்பலம்பநின்ற பாண்டியன் வழியிலே வந்தோனே[45]

---

43. மணிமேகலை, சக்கரவாளக்கோட்டம் உரைத்த காதை, பாடலடி 3.

44. பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியின் வரலாற்றை இந்நூலின் பிற்பகுதியில் விரிவாகக் காணலாம் (ப.176)

45. வடிம்பலம்பநின்ற பாண்டியனின் வரலாற்றை இந்நூலின் பிற்பகுதியில் காணலாம் (பக்.173).

என்று பொருள் உரைத்துள்ளார் நச்சினார்க்கினியர். மாயோனைப் போலவும் பல்யாகசாலை முதுகுடுமிப் போலவும் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் வழிவந்தவரும் சான்றோரே என்பது இவற்றால் தெரிய வருகின்றது.

போர் வினை இடை நின்று சந்து செய்விக்கும் சான்றோர்

தொல்காப்பியப் பாயிரத்தில்

"நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து"

என்ற பாடலடிக்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர்,

> மாற்றாரது நிலத்தினைத் தன்கீழ் வாழ்வீரர்க்குக் கொண்டு கொடுக்கும் போர்த்திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தியது அவைக் கண்ணே

என்று குறித்துள்ளார்.

மாகீர்த்தி என்ற பாண்டியனே நிலந்தரு திருவின் நெடியோன் என்று இந்த உரையாசிரியர் கருதுகிறார். மா கீர்த்தி என்ற பாண்டியன் என்பான் தேவ அசுரப் போரில் இருபாலரையும் சந்துசெய்வித்தான் என்று நக்கீரர் இறையனார் அகப்பொருள் உரையில் சுட்டிக்காட்டுகின்றார்.[46]

தேவ அசுரர்கள் போரில் சந்துசெய்வித்த பாண்டியர் உயர்ந்தோராகக் கருதப்பட்டனர். நக்கீரர் உரையில் "வேந்தர்க்குச் சந்துசெய்வித்தல் உரித்து" என்பதால் சந்து செய்வித்தல் வேந்தர்

---

46. இறையனார் அகப்பொருள், கற்பியல் நூற்பா 2இன் உரையில் நக்கீரர் கூறுவதாவது

> இருவர் அரசர் நாளைப் பொருதும் இன்று பொருதும் என்று முரண்கொண்டு இருந்த நிலைமைக்கண் தான் அவருக்கரசனாகலின் 'இம்மக்களும் இவ்விலங்கு களுமெல்லாம் பட இவ்விரண்டு குலத்திற்கும் ஏதம் நிகழும்; அதனால், இப்போ ரொழிக்கற்பாலேன்' என்று இருவரையும் இரந்து சந்து செய்வித்தலும் ஒன்று; அல்லதூஉம், தேவரும் அசுரரும் பொருதகாலத்துத் தேவரையும் அசுரரையும், 'ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல்யான்' பாண்டியன் மாகீர்த்தி சந்து செய்வித்தது போல', 'இருவரின் மிகைசெய்தீரை ஒறுப்பல்' என்று சந்து செய்வித்தலும் ஒன்று, இருவரையும் ஒறுக்குந் துணை ஆற்றலுடையனாகலான் என்பது.

குடியினர்க்குரியதாகவே பண்டு இருந்தது. உயர்குடியினரே சந்து செய்வித்தனர் என்றும் இலக்கியங்களால் உணரக்கிடக்கின்றது.

இரு அரசர்கள் போரிடும் நிலை ஏற்படும் பொழுது அவரைச் சந்துசெய்வித்த நிலை *குறிஞ்சிப்பாட்டில்* (27-28) சொல்லப்பட்டுள்ளது. "இருபெருவேந்தர் வினையிடை நின்ற சான்றோர் போல" என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[47]

> *"வான்தோய் தொல்குடிமரபு அவ்வழிச்*
> *சான்றீர் உமது வரவு நோக்கி"*

என்று பழம்பாடல் ஒன்று கூறுவதும், *தமிழ்நெறி விளக்க* மேற்கோள் பாடலடியில்

> *"குலம் மேம்பட்ட சான்றோர் மகனே"*

என்று உணர்த்தியிருப்பதும், கவியரசர் கம்பர் யுத்தகாண்டத்தில் (6613)

> *"மொழியின் பொய்த்த சான்றவன் குலம்"*

என்று குறித்திருப்பதும் பாண்டியன் குலவழியினர் சான்றோர் குலத்தவரே என உணர்த்தும்.

சான்றோர் தம்குலத்தினர் புகழை விரும்புவர்

தொல்காப்பிய உரை (தொல்.புறத்.சூ.36)[48] சூதர் பற்றிக் கூறும்விடத்து, சான்றோர் குலத்தினர் இருசுடர்க் குலத்தினர் என்கிறது.

> இருசுடர் தொடங்கி இன்றுகாறும் வருகின்ற தம் குலத்துள்ளோர் புகழை அரசர் கேட்டற்கு விரும்புவர் என்று கருதி விடியற்காலத்தே பாசறைக்கண் வந்து துயிலெடை பாடுவர் (சூதரே) 'அகவர்'.

என்று குறிப்பிடுகிறது.[49] பழம் பெருமைகளை, அவர் செய்த அறச் செயல்கள் மற்றும் போர்ச் செயல்களைப் பாடிக் கேட்பதில் பாண்டியர் ஆர்வம் காட்டினர்.

---

47. இகல்மீக் கடவும் இருபெருவேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல (குறிஞ்சிப்பாட்டு 27-28)

48. தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலலெடை நிலையும் (தொல்.புறத்.36, அடிகள் 1-2)

49. நச்சினார்க்கினியர் உரை, மதுரைக்காஞ்சி, 223-4.

மதுரைக்காஞ்சி 670-73ஆம் அடிகள் பாண்டியன் முதலிய அரசகுடியினரைச் சூதர் முதலியோர் வைகறையில் வாழ்த்துவர் என்கிறது.

சூதர் வாழ்த்த மாகதர் நுவல
வேதா ளிகரொடு நாழிகை இசைப்ப
இமிழ்முரசு இரங்க ஏறுமாறு சிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை இயம்ப

மேலே பாசறைக்கண் வந்து அரசகுடியினரைச் சூதர் வாழ்த்துவர் என்ற *தொல்காப்பிய* நூற்பா போன்று *மதுரைக் காஞ்சியிலும்* வைகறையில் மதுரை நகரில் சூதர் வாழ்த்துகளைப் பாடுவர் எனப் பாடப்பெற்றுள்ளது.

சூதரே இங்ஙனம் வீரத்தால் துயின்றாரைத் துயிலெழுப்பு ரென்பதூஉம்...

என நச்சினார்க்கினியர் தொல்காப்பிய நூற்பாவடிக்குப் பொருளுரைக்கிறார். இதனால் அரசரையும் அரசகுலச் சான்றோர் வீரர்களையும் அவர்களின் முன்னோர் வரலாற்றை வைகறையில் பாடி, துயிலெழுப்புதல் சூதர் கூட்டத்தினரின் கடமைகளில் ஒன்றாகும் எனத் தெரிகிறது. பாசறை இல்லாத காலத்து நகரில் வந்து, அரசகுலத்தார் குடியிருப்புகள் அருகே வந்து பாடினர் என *மதுரைக்காஞ்சி* மூலம் தெரியவருகிறது.

மதுரை நகரிலும், பாசறைக் கண்ணும் வந்து வைகறையில் அரசகுலத்தாரின் வீரப்பெருமைகளைப் பாடும் சூதர் கூட்டத்தினர் நிறைந்திருந்தனர். அவர்களுக்குப் பாண்டியன் தேரோடு குதிரைகளைப் பரிசிலாக அளித்தான். இதனை, *மதுரைக்காஞ்சி* (223-4)

நாளீண்டிய நல்லகவர்க்குத்
தேரோடு மாசிதறி

என்கிறது. அரசர்களின் வரலாறுகளைப் பாடும் கடமை கொண்ட இச்சூதராகிய அகவர்கள் அரசர்களால் விரும்பப் படுபவர்கள் ஆவர். இப்பாடலடிகளுக்கு நச்சினார்க்கினியர்

விடியற்காலத்தே வந்து திரண்ட, அரசர் விரும்பப் பட்ட, சூதர்க்குத் தேருடனே குதிரைகளையும் பலவாகக் கொடுத்து

என்கிறார். அரசர்களின் புகழைச் சூதர் முதலான அகவர் பாடுவதால் அவர்கள் அவ்வரசர்களால் விரும்பப்படுபவர்கள் ஆவர். பாணர்களில் சிலரும் சூதர்களின் கடமைகளை ஆற்றுபவர்களாகவும் தெரிகிறது. இவ்வாறான அகவுநர்கள் தம் கைகளில் நுண்கோல்களை வைத்து அகவி அகவிப் பாடுவதாக *அகநானூறு* (208) தெரிவிக்கிறது.

யாம இரவின் நெடுங்கடை நின்று
தேம்முதிர் சிமையக் குன்றம் பாடும்
நுண்கோல் அகவுநர்... (அகம். 208)

"பிழை பொறுத்தார் காவல்" என்பதைப் பாணரும் சூதரும் பாசறையில் பாடிக்காட்டி அரசர்தம் பழமையை, தொல்குலவழியை உணர்த்தினர். நச்சினார்க்கினியர் மேலும் "குலத்தோர் எல்லோரையும் அழைத்துப் புகழ்வர்" என்கிறார். குலத்தோர் என்போர் சுற்றத்தாராகிய சான்றோர் வீரர் ஆவர். அவர்கள் அப்பாசறையிலிருப்போரே.

சங்க இலக்கியங்களில் அரசனின் பாசறை வீரர்களாகச் சுட்டிக் காட்டப்படும் மரபினர் மன்னனின் குலத்தவர் என்று உணரப்படும். குலத்தோர் செய்தியைச் சொல்லிக் குலத்தோரை உணர்வுக்கு உட்படுத்தி உறுதியான உணர்வைப் பாணர் சூதர் ஊட்டினர்.

சீத்தலைச் சாத்தனார் *மணிமேகலையில்* தீப்பாய்தல் தலையாய கற்பு என்று வலியுறுத்துகிறார்.

இரண்டாம் நிலைக் கற்பு கணவன் மறைவுக்குப்பின் கைம்மை கொண்டு வெள்ளாடை உடுத்தி வாழ்தல்.

மூன்றாவது நிலை துறவறம் மேற்கொள்ளுதல் என்பதாம். இத்தகைய செயலைத் தமிழக மகளிர் பலர் உயர் பண்பாகக் கருதினர்.

சான்றோர்குல மகளிரின் தலையாய கற்பு ஒழுக்கங்கள்

சான்றோர் மகளிர் தீப்பாய்தலாகிய குல ஒழுக்கம்

பாசறையில் இருந்து போர்க்களம் சென்ற வேளிராகிய வீரர்கள் வீழ்ந்துபட்டபோது போர் வீரர் குடியைச் சார்ந்த வேளிர் மகளிர்கள் தாம் அணிந்திருந்த மலர் மாலைகளைத் தூக்கி எறிந்து அழுதனர் என்று அகநானூற்றுப் பாடல் (208) தெரிவிக்கிறது.[50]

> *அரசகுல மகள் தன் கணவர் போரிலோ வேறு காரணங்களுக்கோ இளமையில் இறந்துவிட்டால் அக்கணவனுடன் இறத்தல் அல்லது கைம்மை நோன்பு கொள்ளுதல் எனும் இருநிலைகள் சங்க காலத்தில் இருந்தன. உடன் இறத்தல் அல்லது தீப்பாய்தலே சங்ககால அரச மகளிரிடம் இருந்ததாகும். அரசனை எரியூட்டுதலை விடப் புதைத்தலே மிகுதியாக இருந்ததாகச் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றது. பள்ளிப் படை என்பது இதற்குப் பெயர். 'துஞ்சிய' எனச் சங்ககால அரசர்களுக்கு முன் வரும் குறிப்பால் இதைத் தெரிந்து கொள்ளலாம். உடன்கட்டை ஏறுதல் எனும் பழக்கம் பழந்தமிழ் அரசகுல மகளிரிடம் இல்லை. அது வடநாட்டு மரபு.*
>
> *கைம்மை நோன்பு அரசகுலப் பெண்களுக்கு அமையும் ஒரு கொடூரம் ஆகும். இதைத் தவிர்க்கவே அவர்கள் தீப்பாய்கின்றனர். தீப்பாய்ந்து மடியும் நிலையில் ஒரு கணத்துன்பம். கைம்மை நிலையில் பல காலம் துன்பம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் வென்ற ஏழு சிற்றரசர்களின் மனைவியர் கைம்மை நோன்புக்குச் சென்றனர் என்று அம்மன்னனின் வெற்றியைப் பாராட்டும் நிலையில் எதிரி அரசர்களின் மனைவியர் அடைந்த துன்பத்தையும் கல்லாடனார் பாடியுள்ளார் (புறம். 25). 'ஒண்ணுதல் மகளிர் கைம்மை கூற' (பாடலடி 12).*
>
> *இதற்கு மாறாகப் பூதபாண்டியன் எனும் பாண்டிய அரசன் இறந்தபோது அவன் மனைவி கைம்மை ஏற்காது தீப்பாய்ந்து இறந்தாள் என்ற செய்தியும் தெரியவருகின்றது.*

---

50. அகநானூறு, 208: "பெருவிதுப்புற்ற பல்வேள் மகளிர் குரூஉப்பூம் பைந்தார் அருக்கிய..."

பூதபாண்டியன் இளமையிலேயே இறந்துவிட்டான். அவ்வரசனின் உறவினரான சான்றோர் குலத்தினர் ஈமக் கடன்களைச் செய்து கூடி நின்றனர். பூதப்பாண்டியனின் மனைவியான தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வதாக முடிவெடுத்து அதில் உறுதியாய் நின்றாள். சான்றோராகிய உறவினர் தீப்பாயாது கைம்மை ஏற்று அரசகுலக் கடமைகளை நிறைவேற்றுமாறு கூறினர். அவற்றை அவள் மறுத்துவிட்டாள்.

என்னைத் தீயில் பாயாதவாறு தடுக்கும் கூட்டமாகக் கூடியுள்ள சான்றோர் குலத்தினரே! பாண்டிய மன்னனான என் கணவனுடன் இறக்கப் போ என்று கூறாது கைம்மை நோன்பிருக்கக் கூறுகின்றீர்களே! நீங்கள் பொல்லாதவர்கள். வெள்ளரிக்காய் கூட்டு, நெய்யில்லாத சோறு, எள், புளி கூட்டி அரைத்த துவையல் இவற்றுடனான உணவு உண்டு, பாயில் படுக்காது தரையில் படுக்கும் கொடுமையுள்ள கைம்மைப் பெண்டிர் போல் அல்ல நான். பொய்கையுள் பாய்வதுபோல் தான் எனக்குத் தீயுள் பாய்வதும். ஊர்ப் புறத்தே ஏற்படுத்தப்பட்ட பிணப்படுக்கையுள் புகுவது உங்களுக்கு வேண்டு மானால் அரிதாகலாம். எனக்கு அது பொய்கையுள் பாய்வது போலாகும் எனப்பாடி இறந்துள்ளாள்.

பல்சான்றீரே பல்சான்றீரே
செல்கெனச் சொல்லாது ஒழிக என விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சியாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கு அரிதாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே (புறம். 246)

இப்பெருங்கோப்பெண்டின் தோற்றத்தைக் கண்டு வருத்தத்தோடு மதுரைப் பேராலவாயனார் என்ற புலவர் ஒரு பாடல் பாடியுள்ளார் (புறம். 247). பூத பாண்டியன் மனைவி தீப்பாய்வதற்கான விறகுகளை யானை

கொண்டுவந்து இட்டுள்ளது. வேடர்கள் தீமூட்டி எரிய வைத்துள்ளனர். அவ்வெளிச்சம் பரந்து வீசியது. அவ்வெளிச்சத்தில் தேவியின் விரிந்த கூந்தல், தீயை நோக்கிப் பாயும் துன்பம் நிறைந்த கண்கள் காணப்பட்டன. அவள் சிறிது நேரம் கூட அரண்மனையில் தனித்திருந்தால் தன் உயிர் தளரும் எனத் தீப்பாய வந்துவிட்டாள் எனத் துயரத்துடன் பாடியுள்ளார்.[51]

அரசன் பூதப்பாண்டியன் மறைந்தபோது அவன் மனைவி கோப்பெரும்பெண்டு தீப்பாய்வாள் எனச் சொல்லியதாக உள்ள புறப்பாடலில் (246) அரசனின் தேவியைக் கைம்மை கொண்டு வெள்ளாடை உடுத்தி வாழ்வதற்குப் பணித்து, சான்றோர்கள் வேண்டினர் என்பதே இவரை வேந்தரின் குலத்தவர் என்று வலியுறுத்தும்.

மறைந்து விட்ட தன் மணாளனோடு மணவாழ்வு முடிகிறது என்று அவனோடு மறைந்துபோன கற்புநிறை மகளிர் தமிழ் பேசும் நல்லுலகில் இருந்தனர். எரிதணலில் தன்னை எரியூட்டிக் கொண்ட கோப்பெரும் பெண்டு போன்று பலர் இருந்தனர் என்பதற்குத் ***தகடூர் யாத்திரை*** சான்றாகிறது.

இதில் "கணவர் போர்க்களத்தில் புண்ணுற்று மடிந்த காலை மூதின்மகள் (வேளிர்) கைம்மை கொண்டு வாழாள்; தானும் உயிர் நீப்பாள் என்றார் (பா.39). பொன்முடியார், *தகடூர் யாத்திரையில்*, *"தீப்பாய் மகளிர் திகழ்நலம் பேர"* என்றும் குறித்தார்.

சங்ககால அரசகுலச் சான்றோர் மகளிரின் கற்பு

சங்ககால அரசகுலச் சான்றோர் மகளிர் போர்க்களம் புகுவதில்லை. ஆனால் புறநானூறு 62ஆம் பாடலில் சேரனும் சோழனும் போர்க்களத்தில் இறந்துகிடந்தபோது அவரவர்தம் பெண்டிர் அவர்கள் உடல்களைத் தழுவி மாய்ந்தனர் எனத் தெரிகிறது.

.... மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே

---

51. முனைவர் ஆ. தசரதன், "சங்ககால அரசகுல மகளிர்", தமிழியல், ஜூன் 2010, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பக். 69-71.

உரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடம்கெட வீண்டிய வியன்கட் பாசறை
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர
உடன்வீழந் தன்றா லமரே பெண்டிரும்
பாசடு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்க மைந்தனரே

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தாரைக் கழாத்தலையார் பாடிய இப்பாடலடிகளுக்குப் பழைய உரை வருமாறு:

> ... அறத்தான் அடர்த்துச் செய்த வலிய போரையுடைய அரசர் இருவரும் பட்டார்; அவர் கொற்றக்குடையும் தளர்ந்தன; புகழமைந்த தலைமையையுடைய முரசு வீழ்ந்தன; பல நூறாக அடுக்கப்பட்ட பதினெண் பாடை மாக்களாகிய படைத் தொகுதி இடமில்லையாம்படி தொக்க அகன்ற இடத்தையுடைய பாடிவீட்டின்கட் போர்க்களம் தமதாக்கிக் கொள்ளுதற்கு உரியோர் ஒருவரின்றிக் கண்டார்க்கு அச்சம் வர உடனே மடிந்தது பூசல். அவர் பெண்டிரும், பச்சையிலை தின்னாராய்க் குளிர்ந்த நீரின்கண் மூழ்காராய். அவர் மார்பகத்தைக் கூடி அக்களத்தின்கண்ணே உடன் கிடந்தார்.

போர்க்களத்தில், இருபுறத்தும் யாருமே இல்லாததால் பெண்டிர் அங்கே புகுந்தனர் போலும்.

'பெண்டிரும் மார்பகம் பொருந்தி அமைந்தனர்' எனப் பழைய உரையாசிரியர் கூற, பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர் அடிக்குறிப்பில்,

> இச்செய்யுளிற் கூறப்பெற்ற பெண்டிர் தலையாகு கற்பை யுடையா ராதலின் தம் கணவரோடு உயிர் துறந்தார்

என்கிறார். இதற்கு அரணாக அவர் சிலப்பதிகாரம் 25ஆம் காதையில் 80-86ஆம் அடிகளைக் காட்டுகின்றார்.

தயங்கிணர்க் கோதை தன்றுயர் பொறாஅன்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொறாஅள்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்

தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போற்
பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்
(சிலப். 25: 80-86)

சேரர், சோழர், பாண்டியராகிய மூவேந்தர் மானங்காக்க உயிர் நீத்தபோது அவர்தம் தேவியரும் உயிர் நீத்தல் ஓர் உயர்ந்த கற்பியல் நெறியாகக் கருதப்படுகிறது.

வேந்தரும் வேளிரும் மட்டுமின்றி வேறுபலரும் கற்பு நிலை மேம்படத் தீக்குளித்த நிகழ்வுகள் கல்வெட்டில் காணப் பெறுகின்றன.

அல்லூர் நக்கர் கோயில் கல்வெட்டு "வீர சோழ இளங்கோ வேளார் தேவியார் கங்கமாதேவியார் தீப் பாய்கிறார் கொடுத்தது" (S.II.Vol.viii,No.688) என்பதால் வேளிரிடம் முதலாம் கற்பு நிலைப் பண்பு நிலைத்திருந்தது என்று தோன்றுகிறது.

இது போன்று இராசராச சோழனின் தந்தை சுந்தரசோழன் மறைந்தபோது அவன் மனைவியும் இராசராச சோழனின் தாயுமான மலையமான் குல வானவன் தேவியுமானவள் தீப்பாய்ந்தாள் என்று திருக்கோவிலூர்க் கல்வெட்டு கூறுகிறது. *வீரசோழியம்* "காஞ்சியின்" வகைகளில் ஒன்றாகத் தீப்பாய்தலைக் குறிப்பிடுகிறது.

> தீப்பாய்தல் எனும் பழக்கம் அரசகுல மகளிரிடையே கி.பி. 15ஆம் நூற்றாண்டிலும் இருந்து வந்தது. கி.பி. 1482ஆம் ஆண்டில் விசயநகர வேந்தர்களுக்குத் தமிழ்ப் பாகத்தில் மகாமண்டலேசுவரனாக இருந்த அக்கல ராசசோழன் என்ற உறையூர்ச் சோழன் நார்த்தா மலைப் பகுதிகளில் கள்ளர்களை அடக்கிய போது சதிசெய்து கள்ளன் ஒருவனால் கொல்லப்பட்டான். அவனது ஏழுமனைவியரும் நார்த்தாமலை நொச்சிக் கண்மாய்ப் பகுதியில் தீப்பாய்ந்து இறந்தனர் என்பதைக் கல்வெட்டொன்று கூறுகின்றது. பிற்காலத்தில் 18ஆம் நூற்றாண்டில் அந்த அக்கலராசனுக்கு அவன் வமிசத்தில் வந்தவனால் அறக்கட்டளை நிறுவப்பட்டது என்றும் மற்றொரு கல்வெட்டால் தெரியவருகின்றது. (முனைவர் ஆ. தசரதன், "சங்ககால அரசகுல மகளிர்", தமிழியல், ஜூன் 2010, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பக். 69-71.)

புறப்பொருள் வெண்பா மாலை "தன் கணவனொடு எரியும் நெருப்பிலே வீழ்ந்த **மகளிரைச்** சிறந்தவர்" என்று கூறுகிறது.

காதற் கணவனொடு கனையெரி மூழ்கும்
மாதர்மெல் லியலின் மலிபுரைத் தன்று

என்பதாலும்

மன்னுயிர் நீத்த வேலின் மனையோள்
இன்னுயிர் நீப்பினு மத்துறை யாகும்

என்பதாலும் கணவனொடு உயிர் நீத்தல் செய்தவர் சிறப்பிக்கப் பட்டனர்.

சான்றோர் மகளிரின் சான்றாண்மை

உயர்குடியில் பிறந்த மகளைக் ***கலித்தொகை* "*அன்னையே மன்றத்துக் கண்டாயங்கே சான்றார் மகளிரை*"** என்பதும், ***பரிபாடல்*** மேம்பட்ட குலப் பெண்டிரைத் **"*தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்*"** மரபு மகளிர் என்று உரைத்திருப்பதும் எண்ணுதற்குரியதாகும்.

இத்தகைய குடிமகளிர்க்கு 'உயர்திணை மகளிர்' என்று பெயர் இருந்ததைப் ***பதிற்றுப்பத்து*** (73) குறிப்பிடுகிறது.

சான்றாண்மை, சாயல், ஒழுக்கம் இவை மூன்றும்
வான்தோய் குடிப்பிறந் தார்க்கு

என்று ***நாலடியார்*** உயர்குடியினரோடு சான்றாண்மை பற்றி உணர்த்தி, மேன்மக்கள் பட்டியலில் குறிப்பிடுவதும் தெரிய வருகிறது.

> சான்றோர் மகளிரென்போர் சிறியரன்றிப் பெரியராதல்
> வேண்டும். அத்தன்மையென்பது, தங்குல நோக்கித் தம்
> கற்புக் காத்து ஒழுகுதல் அதனின் மிக்கதில்லை

என்று வன்புறைக்கு வழங்கிய விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலே சொல்லப்பட்ட பார்வதி தேவியையும் சிவபெருமானையும் இணைத்துப் பார்க்கின்ற செயலை வேறு பல இலக்கியங்களும் செய்துள்ளன.

பார்வதி புத்திரரான சான்றோர்

பாண்டிய அரச மரபினன் என்று மலையத்துவசன் குறிப்பிடப்பட்டுள்ளது எண்ணுதற்குரியது.

அரச மரபினரில் சிலரும் 'பார்வதி புத்திரர்'என்றும் 'ஈசுவர மைந்தர்' என்றும் செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ளனர்.

கவியரசர் கம்பர் "சான்றோர் மாதைத் தக்க அரக்கன் சிறைதட்ட' என்று குறித்திருப்பதால் உயர்குலத்தவராகக் கருதப்பட்ட அரச மாதைக் கம்பன் சான்றோர் மாது என்று அடையாளமிட்டான்.

அரச குலத்தவனான இராமனைச் சுட்டிக்காட்டும் போது "சான்றவன்" என்று யுத்தகாண்டத்தில் (8521) குறிப்பிட்டுள்ளான். "அரசகுலத்தில் வந்தேன் யான்" என்று சுட்டிக்காட்ட இராமனைக் கம்பன் கவிகளில் சான்றவன் என்றான்.

கி.பி.1258இல் அமைந்த மூன்றாம் இராசேந்திர சோழனின் வேதாரண்யக் கல்வெட்டு, " பரம மாமுனி மடியிற் தோன்றிய பரமமாமுனி எழுநூற்றுவராம்" என்று குறிப்பிட்டுள்ளது. எழுநூற்றுவர் என்போர் சான்றோர் படையினர் ஆவர்.

எழுநூற்றுவர் சான்றோரும் நிழல் வாழ்நரும்

தமிழக வரலாற்றில் நூற்றுவர், இருநூற்றுவர், முந்நூற்றுவர், எழுநூற்றுவர் என அறியலாகும் அமைப்புகளில் சான்றோரே பல நிலைகளில் பணியாற்றியுள்ளனர்.

அவை இருந்த எழுநூற்றுவர் சான்றோர் மரபினர்

இவர்களில் எழுநூற்றுவர் பற்றிப் பார்ப்போம். கி.பி.10ஆம் நூற்றாண்டில் அமைந்த திருவிடைமருதூர் (கும்பகோணம்) கல்வெட்டு.[52]

> திரைமூர் ஸபையார் முந்நூற்றுவரும் நகரத்தார் நானூற்று
> வரும் எழுநூற்றுவன் என்று மாலைப் பேர் இட்டு

என்று கூறுவதால் எழுநூற்றுவர் சபையாராக, நகரத் தலைமை யாளராக இருந்த பிரபுக்கள் வர்க்கம் என்று புலனாகிறது.

நகரங்களில் நிர்வாக அமைப்பில் சோம சூரிய குலத்தவர் இருந்தார்கள் என்று ***நவநீதப்பாட்டியல்*** சுட்டிக் காட்டுகிறது.

"எழுநூற்றுவர் அம்பலம்"[53] என்று கல்வெட்டு கிடைப்பதால் இவர்கள் சங்க காலத்தில் அவையிருந்த மரபினர் என்றும் அறியக் கிடக்கின்றது.

52.S.I.I. Volume XXIII, No. 212.

53. ***எழுநூற்றம்பலம்:*** திருவீழிமிழலை கல்வெட்டுகள், பதிப்பு - தமிழ்நாட்டு அரசு தொல்லியல் துறை; ***எழுநூற்றுவ சதுர்வேதி மங்கலத்து சபையார்:*** கி.பி, 10ஆம் நூற்றாண்டு பார்த்திபேந்திர வர்மன் ஆட்சி 13, திருமால்புரம் ; ***எழுநூற்றுவர் வங்கிஷம்*** (அவல்பூந்துறை செப்பேடுகள்) திரு. நெல்லை நெடுமாறன் கண்டறிந்து சீ. இராமசந்திரன் அவர்களால் ஆராய்ந்து பதிப்பிக்கப்பெற்ற வலங்கை மாலையும் சான்றோர் சமூக செப்பேடுகளும் (பக்,. 103) என்ற நூலில் வருகிறது. பதிப்பு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை; ***மூவேந்தர் புகழ் எழுநூற்று மன்னன்*** (திருவிடைமருதூர் செப்பேடுகள்) திரு. நெல்லைநெடுமாறன் கண்டறிந்து சீ. இராம சந்திரன் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட மேற்படி நூல் (பக். 132) இச்செப்பேட்டில் மூவேந்தர் புகழ் எழுநூற்று மன்னர் பிரிவினர் "சோழ குலத்தரசர்" (மேற்படி நூல், பக்.131), "இலங்காபுரித் தலைவர்" (ஈழர்) (பக்.131) என்று உரிமை பாராட்டியுள்ளார்.

கி.பி.984 இல் அமைந்த கேரள மாநிலத் தமிழ்க் கல்வெட்டு எழுநூற்றுவர் என்ற பிரபுக்கள் மூத்த கூறுக்கு உடையவர் என்று குறிப்பிடுகிறது.[54]

மூப்புக்கூறு என்று முதன்மைப்படுத்தப்பட்ட எழுநூற்றுவர் உயர்குடியினராக அக் கல்வெட்டில் வரையப்பட்டுள்ளனர்.

மூன்றாம் இராசராச சோழனின் ஆட்சியாண்டு 16க்குரிய நீடூர்க் கல்வெட்டில்[55] "பெருங்குறி மகாசபையில் இடம்பெற்றிருந்த எழுநூற்றுவர் பெருங்குடி மக்கள்" என்று அழைக்கப்படுகின்றனர்.

இதில் "சபையார் பொருட்டு அருளிச் செய்தனர் எழுநூறு பெருமக்கள்" என்பதால் இவர் பெருமைமிக்க குடியைச் சார்ந்தவர் என்று தெளிவாகத் தெரியவருகிறது.

கேரள நாட்டுப் பனங்காடு - குறுபரா நாட்டுக்கோயில் நிர்வாகத்தில் எழுநூற்றுவரும் காராளரும் மூவாயிரத்தவரும் (அந்தணர்) இருந்து செயல்பட்ட தாகக் கல்வெட்டு கூறுகிறது.[56]

கி.பி. 1600க்கு முற்பட்டு எழுதப்பட்ட வலங்கை மாலை[57] என்ற நூலில் எழுநூற்றுவர் என்ற மரபினர் வலங்கைவேள் எனப்படும் வீரர் குடியினர் என்றும் வலங்கைப் பழம் படையினர் என்றும் உரிமைபாராட்டுகின்றனர்.

அண்மையில் கண்டறியப்பட்ட பூந்துறைச் செல்வரத்தினக் குருக்கள் செப்பேடுகள், "சந்திர, சூரிய குலத்திற்கு உரிமை பாராட்டும் சமூகத்தினரை எழுநூற்றுவர் வங்கிசத்தோர்" என்று எடுத்தோதுகின்றன.[58]

---

54. மூத்தகூற்றில் எழுநூற்றுவரும் பணியுடைய நாயனும் ஊரும் ஊருடை வகை வெள்ளாளரும், கி.பி. 984இல் அமைந்த இக்கல்வெட்டு மூத்தகூறு உடையவர் எழுநூற்றுவர் என்று தெளிவுபடுத்துகிறது. பணிசெய்கின்ற நாயரும் (அகம்படியர்) ஊரும் ஊரிலே வாழ்கின்ற வகை வெள்ளாளரும் குறிப்பிடப்படுகின்றனர். இவரில் மூத்த கூற்றுக்குரிய எழுநூற்றுவர் பிரபுக்களாவர்.

55. ARE NO.536/1921

56. SII. Vol. VII. No. 174.

57. முனைவர் ஆ. தசரதன் இந்நூலைப் பதிப்பித்து வருகிறார்.

58. சான்றோர் சமூகச் செப்பேடுகள், நெல்லை நெடுமாறன் தொகுத்தவை.

இதுபோன்று அறியப்பட்ட திருவிடைமருதூர் சான்றோர் குலச் செப்பேடுகள்[59] சோழர் குலத்திற்கு உரிமை பாராட்டும் இச் சமூகத்தினரை எழுநூற்றுவர் என்று ஆட்சிச் சமூகத்தை அடையாளமிட்டுத் தெளிவுறக் கூறுகின்றன.

மகாவம்சத்தில் எழுநூற்றுவர்

இலங்கையை வென்று ஆட்சி நிறுவிய விசயன் என்பான் எழுநூறு வீரர்களுடன் அவ்வாட்சியைப் பெற்றான் என்றும் ஈழவேந்தன் விசயன் பாண்டியன் மகளை மணந்தான் என்றும் எழுநூறு வீரர்களும் தமிழகப் பிரபுக்களின் மகளிரை மணந்தனர் என்றும் *மகாவம்சம்* சுட்டிக் காட்டுகிறது.

இவ்வாறு,

சபையினராக,
கோயில் நிர்வாகிகளாக,
மூப்புக்கூறு என்ற ஆட்சியாளராக,
பெருங்குடியினராக,
மூலபல எழுநூறு கொங்கவாளர் என்போராக,
பழம்படையினராக

இம் மரபினர் உணர்த்திக் காட்டப்பட்டுள்ளனர்.

சான்றோர் சான்றாண்மை

ஈசுவர மைந்தனான வேள் முருகனைச் சால்வ தலைவன் என்று *பரிபாடல்* கூறுவதும் குறிஞ்சித்தலைவன் சான்றாண்மைக் குரியன் என்பதாலே.

"......... மனு நூலுழக்குஞ்
சான்றாண்மையார் துதி நீதிக் குலோத்துங்கன்"

என்று குலோத்துங்க சோழன் கோவை குறிப்பிடுவதால் சான்றாண்மையாளர் அரச குலத்தவர் என அறிய முடிகிறது.

ஊரும் பேரும் நாடும் குலமும் உரைத்தவிடத்து அது இவரைப் "பெருங்குலத்திலே பிறந்தவர்" என்றும் பெருமைக் குரியவராகக் குறித்துக் கூறுகிறது.

---

59. சான்றோர் சமூகச் செப்பேடுகள், நெல்லை நெடுமாறன் தொகுத்தவை.

பானை, தேர்களில் ஏறும் தகுதிபடைத்த பெருங்குலச் சான்றோர் தலைமக்கள்

"தேர்தர வந்த சான்றோர்" என்று புறப்பாட்டில்[60] தேர்மன்னர்களாக அடையாளம் காட்டப்பட்ட தலைமக்கள் பெருங்குல மக்களே என்று இலக்கண இலக்கியங்கள் கூறுகின்றன.

யானைப்போரில் பங்குபெற்ற பெருவீரனைச் சான்றோன் என்று புறப்பாட்டும் ***தகடூர் யாத்திரையும்*** தெரிவித்துள்ளன.

"பகட்டினானும் மாவினானும்
துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்"

என்ற *தொல்காப்பிய* நூற்பாவில்[61] குறிப்பிடப்பட்ட சான்றோர் யானை, குதிரை போன்றவற்றைப் பேணிக்காத்து அவற்றில் ஏறிப் போரில் அவற்றைப் பயன்படுத்தியவர் என அறியமுடிகிறது.

வேந்தரின் வெற்றிக்குரிய முரசையும் போர்க் களிறு போன்றவைகளையும் பாதுகாக்கும் கடமையும் சான்றார் என்ற வீரர்க்குரியதாம்.

அமரி ளிட்ட வரு முள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான்றீரே
முரசு முழங்கு தானை நும்மரசு மோம்புமின்
ஒளிறேந்து மருப்பினுங் களிறும் போற்றுமின்

என்று புறப்பாட்டு(301) பாசறை அமைந்தோர் பற்றிக் கூறுதல் பற்றிக் காணலாம்.

வீரசோழியத்திற்குப் பெருந்தேவனார் எழுதிய உரையில் ''சான்றோர் பக்கமாவது'' என்று விளக்கி,

பகைவர்கண்ணும் தன்பாலார் கண்ணும் ஒப்புமையாகப்
பாசறையுள்ளார் சால்புடைமை கூறுதல்

என்றார்.

மேலும் ''அஞ்சாச் சிறப்பு என்பதும் அது, பிறவுமன்ன'' என்றார் *வீரசோழிய* உரையாசிரியர். அரசனும் அரசமரபினரும் பாசறையிருத்தலைக் கிபி12ஆம் நூற்றாண்டிலே கூட வலியுறுத்துகிறார்.

---

60. புறநானூறு 63, பரணர் பாடியது.

61. தொல்காப்பியம், புறத்திணையியல் நூற்பா 21, அடிகள் 13-14.

புறநானூற்றில்[62] யானைப் போரில் பயன்பட்ட வீரன் பொன்முடியாரால் அடையாளம் காட்டப்பெறுகிறான். "ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்று சுட்டிக் காட்டப்பட்ட வீரன் குலக் கல்வி உணர்ந்த சான்றோன் என்னும் வீரனுமாம். **தகடூர் யாத்திரை,**

காலாளாய்க் காலாள் எறியான் களிற்றெருத்தின்
மேலாள் எறியான் மிகநாணக் காளை
கருத்தினதே என்று களிறு எறியான் அம்ம
தருக்கினனே சான்றோர் மகன்

என்பதால் யானைப் போரில் பங்குபெற்றவன் சான்றோனாகிய வீரன் ஆவான்.

தகடூர் யாத்திரை இவ்வாறான வீரர்களை ஒளியுடைய வீரராகிய சான்றோர் என்றும் போரின்கண் உறுதிபூண்டு நிலை நின்றவர் என்றும் மூத்தார் எனப்பட்ட வீரர் என்றும் கூறுகிறது.

இம்மரபிலே தோன்றிய வீரர்கள் "பரிநிறை கொண்ட நாடாள்வான்" என்றும் "பஞ்சமாதேவியில் சேனை பரிபாலன நாடாள்வான் எழுத்து; கண்ணன் சம்பந்தப் பெருமாளான பரிபாலண நாடாள்வான் எழுத்து" என்றும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளனர். [63]

சான்றோர் மகன் வீரம் உடையவனாகத் தகடூர் யாத்திரையில் குறிப்பிடப்பட்டாலும் இவன் அறப்போருக்குரிய மற வீரன்.

அறிவுடைய வீரன் என்றும் செம்மை யுடையவன் என்றும் இலக்கியங்களில் குறித்துக்காட்டப்பட்டுள்ளான்.

உரையாசிரியர் இளம்பூரணர் தொல்காப்பியச் சொல்லதிகார (443) உரையில் "நல்லறிவுடையன் செவ்வியன் சான்றார் மகன்" எனவும் இலக்கணத்திற்கு மேற்கோள் காட்டுகிறார். இதனால் சான்றார் மகன் மிகத்தகுதி படைத்த பிறர் மதித்த அறிவுடைய வீரன் என்று அறிகின்றோம்.

---

62. புறநானூறு 312: 6-7

61. ARE Report - 1916; புதுக்கோட்டைக் கல்வெட்டு எண். 198. கி.பி. 1244 மூன்றாம் இராசராசன் காலம், கீரனூர்.

"வாழையடி வாழையெனச் சான்றோர் வழிவந்தவன் ஆகலின் சான்றோர் மகன் என்றார்" என்று அறிஞர் இளங்குமரன் *தகடூர் யாத்திரைப்* பாடல் அடிகளுக்கு உரைசெய்துள்ளார்.

வீரர் வழிவழியே வந்து மாண்புறுதலைப் புறப்பாட்டு (290) எடுத்தோதுகிறது. மாண்புடையோரே சான்றோர் என்று கூறிப் புறம் 277ஆம் பாடலும் 278ஆம் பாடலும் குறள் 69உம் உணர்ந்து கூறுகின்றன.

இதனால் தொன்று தொட்டுப் போர்க் குடியாக மிளிர்ந்தோர் சான்றோர் என்ற வீரக்குடி என்று தெளிவாகிறது.

பண்டைச் சான்றோர்

நச்சினார்க்கினியர் *தொல்காப்பிய* எழுத்ததிகாரம் சூத்திர உரையில் "பண்டைச் சான்றார்" (415), "பண்டைச் சான்றோர்"(159, 313) என்று மேற்கோள் காட்டுகிறார். நச்சினார்க்கினியர் காலத்தில் 'சான்றோர்' என்ற சொல்லாட்சி பொருள் மாற்றம் (Semantic Change) அடையத் தொடங்கியதால் அவர் இவ்வாறு 'பண்டை' என்ற அடையைச் சேர்த்தார்.

மேலும் மேற்கோளாக "எல்லாக் கொல்லரும் சான்றாரும் தச்சரும் பார்ப்பாரும்" என்று சான்றார் சாதியோடு சில சமூகங்களைச் சுட்டிக் காட்டுகின்றார் நச்சினார்க்கினியர்.

இச்சான்றோர் சாதியினர் தொல்குடிச் சான்றோர் என்ற வீரக்குடியினர். சான்றார் - சான்றோர் என்று சாதியப் பெயராகக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் உள்ளன.

புரையோர்

சான்றோர் என்ற சொல் போலவே 'புரையோர்' என்ற சொல்லும் பொருள் மாற்றம் அடையத் தொடங்கிற்று.

> *"வசைஇல் வான் திணை புரையோர் கடும்பொடு*
> *விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை"*

என்ற *குறிஞ்சிப்பாட்டு* அடிகளுக்கு (205-6)க் குற்றமில்லாத உயர்ந்த குலத்தில் பிறந்த உயர்ந்தோர் தமது சுற்றத்தோடே விருந்துண்டு மிக்க அடிசில் என்று நச்சினார்க்கினியர் உரை செய்தார். இவ் 'உயர்ந்தோர்' என்போர் சான்றோரே.

மதுரைக்காஞ்சியில் (737) வரும் புரையோர் என்போர் 'உயர்ந்தோர்' எனும் பொருளில் குறிக்கப்பட்டுள்ளனர்.

பாண்டியன் இப்புரையோர்க்குப் பொன்னாற் செய்த தும்பைப் பூக்களைச் சூட்டினான் என அதில் பாடப் பெற்றுள்ளது.

பொலம்பூந் தும்பையைச் சூடியவர் சேரரின் உறவினரான முதியர் நூற்றுவர் எனப் *புறநானூறு* 2ஆம் குறிக்கிறது. *புறநானூற்றின்* 22ஆம் பாடல் சேரனின் வீரர்கள் பொலம்பூந் தும்பையுடன் பனந்தோட்டையும் தலையில் செருகி வெறியாடுவர் என்கிறது.

உ.வே. சாமிநாதையர் கீழ்க்காணுமாறு *புறநானூற்றுப்* பாடல் 22க்குக் குறிப்புரை செய்துள்ளார்.

> அரசர் தமக்குரிய அடையாளப் பூவொடு புறத் திணைப் பூக்களையும் விரவித் தொடுப்பித்துத் தாம்சூடிக் கொள்ளுதலும், வீரர்க்குச் சூட்டுதலும் மரபு

என்கிறார். பொன்னால் செய்த தும்பையும் தும்பைப் பூவும் பிற புறத்திணைப் பூக்களும் உயர்ந்தோர் ஆகிய வீரர்கள் குடினர் என்பதற்குச் சான்றுகள் வருமாறு:

> *மன்றவேம்பின் மாச்சினை யொண்டளிர்*
> *நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து* (புறம். 76:4-5)

> *குடுமி களைந்த நுதல் வேம்பி னொண்டளிர்*
> *நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து* (புறம். 77:2-3)

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் வேம்புடன் உழிஞைப்பூவையும் சூடினான் என இடைக்குன்றூர் கிழார் இவ்வாறு பாடியுள்ளார்.

பதிற்றுப்பத்தில் சேர அரசர்களும் அவர்களின் சுற்றத்தாரான சான்றோர் குலத்தினரும் 'புரையோர்' என அழைக்கப் பெறுகின்றனர் (பதிற். 16).

சங்க காலத்தில் புரையோர் என்று உயர்ந்தோரைக் குறித்த இச்சொல் பிற்காலத்தில் மாறான பொருளில் வழங்கப்படுகிறது.

கி.பி.1487இல் அமைந்த மேலைப்பனையூர் (திருமெய்யம்) கல்வெட்டு[64] "மறவரில் கோநாட்டுப்புரையர் உள்ளிட்டாரும் கோனாட்டில் இவர்களுக்கு உண்டான பிள்ளைச் சுவந்திரத்திலே"

---

64. புதுக்கோட்டைக் கல்வெட்டுத் தொகுதி, எண் 828; கல்வெட்டின் காலம் கி.பி. 1484.

என்று கூறுவதால் இவருக்குரிய பாடிகாவல் உரிமையைக் குமாரவர்க்கமாகக் கரு உரிமை பாராட்டினர். புரையர் என்பது அகராதிகளில் கள்ளர் என்ற பொருளில் பிற்காலத்தில் வழங்கியுள்ளது.

எழுமுடிக்கு உரிய சான்றோரும் சேரரும் வேளிரும்

எழுமுடி தழுவிய சான்றோர் என்போர் சேரமன்னரின் மெய்புகும் கவசம் என்ற பொருளில் ***'சான்றோர் மெய்ம்மறை'*** என்றும் ஏழுமுடிகளை மார்பிலே அணிந்த அவரைப் ***பதிற்றுப்பத்து*** அரசர் என்றும் குறித்திருப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும்.

எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
(பதிற்றுப்பத்து, 14)

'.தடக்கை' .என்பது அரச அடையாளமாகக் கூறப்பெறும் முழந்தளைப் பொருத்துமாறு நீண்ட கை என்பது இதன் பொருள். அரச அடையாளம் பொருந்தியோர்க்கு இவ்வமைப்பு அமையும்.

தாள்தோய் தடக்கை வெல்போர் வழுதி (அகம். 312: 11)

என பாண்டியன் குறிப்பிடப்பெறுவது இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்துப்
புரையோர் (பதிற்றுப்பத்து, 16)

மேலே 'உயர்ந்தோர்' என்று கூறியது 'புரையோரையே'.

எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்துப்
பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
(பதிற்றுப்பத்து, 40)

எழுமுடி மார்பி னெய்திய சேரல் (பதிற்றுப்பத்து, 45)

எழுமுடி மார்ப நீஏந்திய திகிரி (சிலம்பு 28:169)

எழுமுடியாற் செய்த பொன்னாரத்திற்கு உரிய சேர வேந்தரையும் வேளிரையும் (நன்னன்) உயர்ந்தோரையும் (சான்றோரையும்) குறித்துக் கூறுதலால் எழுமுடிகளை மார்பிலே தாங்கிய சான்றோரும் சேரர்குடியினர் எனப் பெறப்படும்.

வேந்தர் குடியினரான சேரமானையும் வேளிர் குடியினரான நன்னனையும் உயர்ந்தோராகிய சான்றோரையும் எழுமுடிகளின் தொடர்பில் கூறுதலால் இவர்கள் உயர்குடி வீரமரபினர் என்று பெறப்படும்.

தானைச் சான்றோர், தடக்கைச் சான்றோர் போன்றவர்

இதுவரை குறிப்பிடப் பெற்ற எழுமுடிக்குரிய சான்றோர் களின் தொடர்ச்சியாகத் தானைச் சான்றோர் 'தடக்கைச் சான்றோர்' எனக் குறிக்கப்பெறுவோர் காலங்காலமாகச் சேர வேந்தர்களிடம் நன்றறியுள்ளத்துச் சான்றோராக அமைந்து அரசனையும் குடிகளையும் காத்து வந்துள்ளன என்பதைப் பதிற்றுப்பத்தில் *(72: 4-6)*

முன்றிணை முதல்வர்க் கோம்பின ருறைந்து
மன்பதை காப்ப வறிவு வலியுறுத்து
நன்றறி யுள்ளத்துச் சான்றோர் அன்னநின்
பண்பு

என அரிசில் கிழார் சான்றோருக்குப் பெருஞ்சேரல் இரும்பொறையை ஒப்பிடுவதிலிருந்து தெரியவருகின்றது.

'தடக்கைச் சான்றோர்' என்பதில் உள்ள சான்றோர்க்குப் பொருள் கூறிய *பதிற்றுப்பத்தின்* பழைய உரையாசிரியர் *(பக். 13),*

ஈண்டுச் சான்றோரென்பது போரில் அமைதியுடைய வீரரை

என்கிறார். அறப்போர் செய்யும் வீரரையே அவர் அவவாறு கூறுகின்றார். இதற்குக் குறிப்புரை எழுதிய உவே. சாமிநாதையர் *(பக். 13),*

> வீரர்களைச் சான்றோரென்று கூறும் மரபு "தானைச் சான்றோர்" (பதிற். 82: 13), "தேர்தர வந்த சான்றோர்", "பல்சான்றீரே பல்சான்றீரே" (புறம். 63: 5, 301:1) என்பவற்றாலும் உணரப்படும்.

என்கிறார்.

"தானைச் சான்றோர்" என ஒரே தொடராகச் சேர்த்து இவ்விடத்தில் உரை கூறிய உ.வே. சாமிநாதையர், இத்தொடர் வரும் 82ஆம் பாடல் இடத்தில் பொருள் கூறும்போது, தானையையும் சான்றோரையும் இருவராக்கி, "அறிவான் அமைந்தோர்" எனச் சான்றோர்க்குப் பொருள் கண்டிருக்கிறார்.

போரில் அமைதியுடைய வீரரே அறிவாக அமைந்தும் செயல்படக்கூடியவர்கள் ஆவர். ஆயினும் முன் பக்கத்தில் "நாளைச் சான்றோர்" எனச் சேர்த்துக் கூறிவிட்டுப் பின்னோர் இடத்தில் தானையைத் தனியாகவும் சான்றோரைத் தனியாகவும் உ.வே. சாமிநாதையர் பொருள் கண்டிருப்பது, வண்மை, செம்மை, சால்புமறன் எனும் நற்குணங்கள் தானைச் சான்றோர்க்கும் பொருந்தா; அரசனுக்கு மட்டுமே பொருந்துவதாகக் கருத இடம் ஏற்பட்டு விடுகிறது. அது மட்டுமன்று; 'சான்றோர்' என்போர் 'அறிவான் அமைந்தோர்' எனவும் 'தானையினர் வீரர்' எனவும் கொள்ளத்தக்கதாக ஆவதற்குக் காரணமாகவும் அவருடைய உரை அமைந்துவிடுகிறது.

அறிவும் வீரமும் தானைச் சான்றோர்க்கும் தடக்கைச் சான்றோர்க்கும், போரடுதானையினர்க்கும், சால்பெருந்தானை யினர்க்கும் உரித்தாவது போல் அரசனுக்கும் உரித்தாகும் இடங்கள் பல *பதிற்றுப்பத்திலும்* ஏனைய பாடல்களிலும் வருதல் காணலாம். மேலும், ஈகையும், கற்பும், எழிலும், குடிகாவலும், சுற்றத்தார்ப் பேணுதலும் சான்றோர்க்கும் வேந்தர்க்கும் ஒன்றாய் அமைந்து உள்ளதையும் விரிவாக ஆங்காங்கே நாம் ஆராயலாம்.

நன்றறியுள்ளத்துச் சான்றோர்

எனும் தொடருக்குப் பொருள் கூறிய *பதிற்றுப்பத்தின்* பழைய உரையாசிரியர்

ஈண்டுச் சான்றோரென்றது மந்திரிகளை

என்கிறார். 'சான்றோர்' என்போர் வீரராகவும், மந்திரிகளாகவும் இருந்தமை பழைய உரையாசிரியரின் கூற்றிலிருந்தே தெரிகிறது. இதற்குக் குறிப்புரை நல்கிய உ.வே. சாமிநாதையர்,

> நின் குடியில் நினக்கு முன்பு இருந்த அரசர் களுக்குப் பாதுகாவலைச் செய்தனராகி வாழ்ந்து, மக்களின் தொகுதியைக் காப்பதற்கு அறிவுரையை வற்புறுத்திக் கூறும், தருமத்தை அறிந்த உள்ளத்தையுடைய மந்திரிகளை

என்று கூறுவதில், அரசனுடைய குடியிலிருந்தவர்களுக்குப் பாதுகாப்பாகவும், மக்களைக் காத்தும் இருந்தவர்கள் அறிவும் வீரமும் பொருந்திய சான்றோராவர் எனத் தெரிகிறது. அவர்கள் தானையினராகவும் மந்திரிகளாகவும் இருந்திருக்கின்றனர். அரசராகவும் மந்திரிகளாகவும் அடுபோர் எனும் அறப்போர் செய்யும் நிதானமுடைய வீரராகவும் இருப்பவர்களையே

புலவர்கள் மேற்குறித்தவாறு ஒன்றாய்ப் பாடியுள்ளனர் எனலாம். அவர்களுக்கு அடையாளப் பூக்களும் வேறுசில பண்புகளும் உடல் அமைப்பும் ஒன்றாகவே அமைந்ததாகக் காண்கிறோம்.

சான்றோர் - விளக்கம்

பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்தின் தலைவனான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்ற பெண்பாற் புலவர் பாடும்போது, (பாடல் 55), 'ஆன்றோள் கணவ சான்றோர் புரவல' என விளித்துள்ளார். இதில் வரும் 'சான்றோர்' என்பதற்கு விளக்க உரை எழுதிய ஔவை சு. துரைசாமிப்பிள்ளை,

> சான்றோர் நற்குணங்களால் நிறைந்த பெரு மக்களும் வீரர்களுமாவர். இவ்விருதிறத்தோராலும் அரசர்க்குச் செங்கோன்மையும் வெற்றியும் உண்டாதலால், 'சான்றோர் புரவல' எனச் சிறப்பித்தார்.

என்கிறார். நற்குணங்களும் வீரமும் சான்றோர்க்கும் அரசர்க்கும் இருந்தமை இதனால் தெரிய வருகின்றது. மேலும்,

> சிறப்புடைய தலைமக்களையும் அரசரையும் பாடுமிடத்து அவர்தம் சிறப்புக்கு ஆக்கமும் கற்புடைய அவர் மனைவியையும் சார்த்திப் பாடுதல் பண்டையோர் மரபு

என 'ஆன்றோள் கணவ' என்பதற்கு விளக்க உரையை ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அமைத்துள்ளார். சான்றோர் சிறப்புடைய தலைமக்களாவர் என்பதும், அவரையும் அரசரையுமே சேர்த்துப் பாடுவது புலவர்களின் இயல்பாய் இருந்ததையும் சிலர் உரையிலிருந்து தெளியலாம்.

'சான்றோர்' என்பதற்கு விளக்கம் கூறும் ஔவை சு. துரைசாமிபிள்ளை,

> நோன்மை, வன்மை, அறப்போர் புரியும் ஆண்மையும், தறுகண்மையுமுடைய வீரனையும் சான்றோர் என்றல் தமிழ் மரபாதலின் அவர் கட்குத் தலைவனும் முன்னணி வீரனுமாதலின், 'சான்றோர் மெய்ம்மறை' யென்றார்.

என்கிறார். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை அழைக்கும் வானவரம்பன் எனும் பெயர் சான்றோர்க்கு வழங்கப்படுவதுண்டு என இவரே தம் உரையில் கூறுகின்றார்.

> சான்றோர் சேரர்கட்குப் பொதுவாயமைந்த இப்பெயர் தனக்குச் சிறப்பாக விளங்குமாறு இச்சேரமான் தன் திறல் விளங்கு செயலைச் செய்தானென்பது தோன்ற இப்பத்தின்

பதிகமும் வனவரம்பனெனப் பேரினிது விளக்கியென்பது காண்க

இதிலிருந்து சேர அரசர்க்கும் அவர்களுடைய சுற்றத்தாரான சான்றோர்க்கும் பெயரும், அடையாளப் பூவும், அங்க அமைப்பும், அகன்ற மார்பும், அறிவும், அமைதியும், நற்பண்புகளும் பொதுவாக இருப்பதை அறிந்துகொள்ளலாம். இந்த வானவரம்பன் "நாடு கிழவோன்" ஆவான் எனப் புலவர் கூறுவதால், சான்றோரும் "நாடுகிழவோர்" என்பதில் எவ்வித ஐயமுமில்லை. 'கிழவோன்' பற்றி விரிவாக வேறொரு இடத்தில் ஆராயப்படுகின்றது.

சேரர்க்குரிய வில் சான்றோர்க்கும் உரியதாகப் *பதிற்றுப் பத்து* ஆறாம்பத்து கூறுகின்றது. முன்பாக, வாட்படையினரே போரடுதானையினர் எனக் கண்டோம். கீழ்வரும் நச்செள்ளையார் பாடல் (58) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைத் தடக்கைச் சான்றோரின் கவசம் என்கிறது,

எயிலெறி வல்வில் ஏவிளங்கு தடக்கை
ஏந்தெழில் ஆகத்துச் சான்றோர் மெய்ம்மறை
வானவரம்பன் என்ப

இதற்குப் பொருள் கூறிய பழைய உரையாசிரியர்,

> எயிலெறி வல்வி லென்றது விற்படையினரை. ஏவிளங்கு தடக்கை யென்றது ஏத்தொழிலுக்குள்ள கூறுபாடெல்லாம் விளங்கிய தடக்கை யென்றவாறு

என்கிறார். இதற்குக் குறிப்புரை எழுதிய உ.வே. சாமிநாதயர், '

> மதில்களை எறிகின்ற வல்வில்லின் கண்ணே அம்புகளைத் தொடுத்தற்குரிய கூறுபாடு களெல்லாம் முற்றக்கற்று விளங்கிய பெரிய கையினையும், எயிலெறி வல்வில் என்றது, விற்படை யொன்றனையே துணையாகக் கொண்டு பகைவர் மதிலைக் கொள்ளுவ ரென்றபடி

என்கிறார். இங்குக் கூறப்பெறும் தடக்கையையும், ஏந்தெழில் ஆகமும் கொண்ட சான்றோர் வில்வீரரும் ஆவர். இதனாலேயே "வில்லோர் மெய்ம்மறை" என இச்சேரலாதனைக் குறித்துள்ளதாக அறியலாம்.

சான்றோர்குல வீரர் சூடும் பூக்கள்

வில்லோரான இத்தடக்கைச் சான்றோரை, உ.வே. சாமிநாதையர்

> அழகை எய்திய மார்பினையும் உடைய வீரர்

என்கிறார்.

முன்பு 'திரு அமர் மார்பு' என்று கூறப்பட்டது. 'நாரரி நறவின் ஆரமார்பினர்' எனவும் கூறப்பெற்றது. கபிலரோ, சான்றோர்களைச் "சாந்து எழில் மறைத்த யாக்கையர்", "முகத்தினர்", "கொன்றை வெண் தோட்டுக் கண்ணியர்", "அகன்ற மார்பினர்" என்றும் பாடியுள்ளார் (*பதிற்றுப்பத்து 67*).

நாடுடன் நடுங்கப் பல்செருக் கொன்று
நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணியர்
வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்
நெறிபடு மருப்பின் இருங்கண் மூரியொடு
வளைதலை மாத்த தாழ்கரும் பாசவர்
எஃகா டூனங்கடுப்ப மெய்சிதைந்து
சாந்தெழின் மறைத்த சான்றோர் பெருமகன்

எனச் சான்றோரும் செல்வக்கடுங்கோ வாழியாதனும் பாடப் பெற்றுள்ளனர். இதற்கு உரைகூறிய பழைய உரையாசிரியர்

> தொடுத்தற்குரிய பூவல்லாத . பனங்குருத்தினைத் தொடுக்கப்படும் கொன்றையொடு தொடுத்தது பற்றி, 'நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணி

என்கிறார். உ.வே. சாமிநாதையரோ இதற்குக் கீழ்க்காணுமாறு உரைகண்டுள்ளார்.

> மணம் கமழ்கின்ற பூங்கொத்துக்களையுடைய கொன்றையினது பூவைப்பனங் குருத்தின் கண் வைத்துத் தொடுத்த கண்ணியை உடையவராகிய, வாளின் வாய் உண்டாக்கிய மாட்சிமைப்பட்ட தழும்பைப் பெற்ற உடம்பினையுடைய வீரர்

என்கிறார். சான்றோர் கொன்றையும் பனம்பூவும் சூடுவர் என இதனால் தெரிகிறது. ஆனால் இந்தப் பாடல் அடிகளுக்கு விளக்க உரை யாத்த ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையோ,

> சேரர்க்குச் சிறப்பாக வுரித்தாகிய பனந்தோட்டுடன் உழிஞை, வாகை, தும்பை முதலிய போர்ப்பூவும் பிற பூக்களும் விரவித் தொடுத்தணிவது இயல்பாதலால், கொன்றை கலந்து தொடுத்த போந்தைக் கண்ணியை நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணி யென்றார்

என்கிறார். போர்ப்பூக்கள் எனவும் நறுமணக் கொன்றைப்பூவும் பனம்பூவுடன் சான்றோர் சூடுவர் என இதிலிருந்து தெரிகிறது.

சான்றோர்குல வீரரின் போர் வடுக்களும் சந்தனமும்

சான்றோரின் முகத்தையும், யாக்கையையும், ஆகத்தையும் கூறும்போது, "வாளால் வெட்டுண்டு வடுப்பட்டது வரிவரியாக

முதுகொழிய ஏனை முகத்தினும் மார்பினும்'' காணப்படுவதுபற்றி, ''வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர் என்றார்'' என இவ்வுரையாசிரியர் உரை செய்துள்ளதை அறியலாம். மேலும், "முகத்தின்கண் உண்டாகிய புண்வடு வீரர்க்கு அழகும் மாட்சிமையும் பயத்தலின்" எனவும் இவர் உரை கூறியுள்ளார்.

விலங்குகளின் ஊனைப் பாசவர் மரக்கட்டையின் மேல் வைத்து வெட்டும்போது அடிமணையாகிய அம் மரத்துண்டு வெட்டுண்டு சிதைந்திருப்பது போன்ற விழுப்புண்களை முகத்திலும், யாக்கையிலும் மார்பிலும் பெற்ற சான்றோர் வீரர், அவற்றை மறைக்க அரைத்த சந்தனத்தைப் பூசியிருப்பர். அவ்வாறிருந்தும் அவ்விழுப் புண்களை அச்சந்தனம் மறைக்கமாட்டாது விளங்கியது. இது அவ்வீரர்க்கு மேலும் பொலிவைத் தந்தது. அப்படிப்பட்ட வீரருள் செல்வக்கடுங்கோ வாழியாதன் பெருமகனாக விளங்கினான் என்கிறார் கபிலர்.

அரசனின் சுற்றத்தார் நறுஞ்சாந்து பூசிய தோற்றத்துடன் அரசனோடு அமர்ந்திருப்பர் (*நறுஞ்சாந்து நீவிய கேழ்கிளர் அகலத்து*) என்பதை *மதுரைக்காஞ்சி* (493) அடிகளால் அறிந்து கொள்ளலாம். பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின் விழுமிய பெரியோர் சுற்றம் சூழப் பாண்டியன் இருந்ததாக இந்நூல் கூறுகின்றது. சேரன் செங்குட்டுவனின் சான்றோர்படை பனம்பூவுடன் தும்பையைச் சூடித் தம்மோடொத்த வீரருடன் போரிட்டனர் என்பதும், அவர்கள் யாக்கையில் அம்பு பட்டுப் புண் ஏற்பட்டிருந்தது பற்றியும் பரணர் *பதிற்றுப்பத்தில்* கீழ்வருமாறு பாடியுள்ளார்.

இரும்பனம் புடைய லீகைவான் கழல்
மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
அம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
அன்னோர் பெரும நன்னுதல் கணவ
அண்ணல் யானை யடுபோர்க் குட்டுவ(ன்)

இப்பாடல் அடிகளில் சேரன் செங்குட்டுவனின் படை வீரர் பனம்பூவைச் சூடுவர் எனத் தெரிந்துகொள்ளலாம். அம்பால் துளைக்கப் பெற்ற மார்பில் ஊசியால் விழுப்புண்கள் தைக்கப்பெற்றுக் காணப்படும் வடுவை உடையவர் சான்றோர் வீரர் என அறியமுடிகிறது. போரின்போது பனம்பூவுடன் தும்பையைச் சான்றோர் வீரர் சூடுவர் என்றும் தெளியலாம்.

இதுவரை காட்டப் பெற்ற பாடல் அடிகளில் சான்றோர் வீரரின் விழுப்புண்களில் சாந்து பூசப் பெற்றது பற்றிப் பேசப் பெற்றது. அவ்வாறான வீரர்களின் சினமும், வெற்றியும், பெருக்கமும், வேறுபுலத்து அவர்கள் இருப்பதும் பல சான்றுகளால் தெரியவருகின்றன.

சேரரின் கடற்தானையில் சான்றோரின் வாள், வில், வேல், யானைப் படையினர்

சேரனின் கடல்தானை 'சின மிகுதானை' என்பதை மாறோக்கத்து நப்பசலையார் ***புறநானூற்றில்*** (126 : 14-15),

சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலம் செல்கலாது

என்பதால் அறியப்படும். இதைப் போன்றே, வேற்படையைக் கூறும்போது, அது கொங்கரின் நாட்டைக் கைப்பற்றிய 'வேல் கெழுதானை' என்கிறார் பாலைக் கௌதமனார். ***பதிற்றுப்பத்தில்*** (22 : 15-16) அவர், "ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த, வேல் கெழுதானை.........." எனப் பாடியுள்ளார். பல்யானைச் செல்கெழு குட்டுவனின் இவ்வேற் படை மிகப்பெரியது என்றும் அது போர்க்களத்தே தம் வேல்களை உயரத்தூக்கிப் பீடுகொள்ளும் என்றும் அவர் பாடியுள்ளார் (பாடல் 24:1-5).

நெடுவயி னொளிறு மின்னுப்பரந் தாங்குப்
புலியுறை கழித்த புலவுவா யெஃகம்
ஏவலாடவர் வலனுயர்த் தேந்தி
ஆரரண் கடந்த தாரருந் தகைப்பிற்
பீடுகொண் மாலைப் பெரும்படைத் தலைவ

யாராலும் அழிக்க முடியாத அரண்களை வேற்படை வென்றது இதிலிருந்து புலனாகிறது. அரண்களை வெல்வது அரிய செயல். அது தார்ப்படையால் இயலாதது. கடம்பரின் அரணை வயவர் எனும் வீரரால் வெல்ல முடியாத நிலையில் சான்றோரின் வாட்படையே வென்று முற்றிலும் அழித்தது. ***பதிற்றுப்பத்தின்*** விடுப்பட்ட பாடல்களாகக் காட்டப்பெற்றன வற்றுள் (***புறத்திரட்டு*** 8), சேரனின் கடற்படை பற்றிக் கூறப்படுகிறது.

எரிதிகழ்ந்தன்ன நிறையருஞ் சீற்றத்து
நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
நீர்துனைந் தன்ன செலவின்
நிலந்திரைப் பன்ன தானையோய் நினக்கே

என வருதல் காண்க. மேலும் கடல் கடந்தோ நிலம் கடந்தோ சேரனின் சேனை வேறுபுலத்தும் தங்கும் என்பதை (***புறத்திரட்டு*** 8)

வேறுபுலத் திறுத்த விறல்வெந் தானையொடு
மாறா மைந்தர் மாறுநிலை தேய
மைதுமலி யூக்கத்த கந்துகால் கீழ்ந்து
கடாவு யானை முழங்கும்
இடா வேணி நின்பாசறை யானே

என்றும் கூறப்பெற்றுள்ளது.

பெருஞ்சேரல் இரும்பொறையின் **தகடூர் யாத்திரையின்** போது படைச் செருக்கு மிக்கதாகச் சான்றோர் படைக்காட்டப் பெற்றுள்ளது. இதனைச் "சான்றோர் தம் தோற்றமும் தேசும்" என்பதால் அறியலாம்.

கூற்றுறழ் முன்பி னிறைதலை வைத்தபின்
ஆற்றியவனை யடுதல் அடாக்காலை
ஏற்றுக் களத்தே விளிதல் விளியாக்க
மாற்ற மளவுங் கொடுப்பவோ சான்றோர்தம்
தோற்றமும் தேசும் இழந்து

என்பது அப்பாடல் (25). இச்சான்றோரின் பீடும், மிடுக்கும் முன்னர்ப் **பதிற்றுப்பத்தின்** 24ஆம் பாடலில் சுட்டியது போல் இங்கும் சுட்டப்பட்டுள்ளதைக் காணலாம். கீழ்ச் சுட்டப்படும் **தகடூர் யாத்திரைப்** பாடலில் (பாடல் 76) சான்றோர் வீரன் தன்னைப் போன்ற தகுதியுடன் போரிடும் தேரினனிடமே போர் செய்தான் எனத் தெரிகிறது.

காலாளாய்க் காலாள் எறியான் களிற்றெருத்தின்
மேலாள் எறியான் மிகநாணிக் - காளை
கருத்தினதே என்ற களிறெறியான் அம்ம
தருக்கினனே சான்றோர் மகன்

என்பதில் சான்றோர் வீரனின் இத்தருக்கு **தேர் தரவந்த சான்றோர்க்கு** ஒப்பதாகும். தேர் வீரர் தேர் வீரருடனே பொருதும் இயல்புடையவர் என்பது "தேர் தரவந்த சான்றோர்" எனும் *புறநானூற்றுத்* (63) தொடரால் உறுதிப்படும்.

தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப ஒருங்கு மாய்ந்தனரே

மேலே, வாட்படை, விற்படை, வேற்படையினராகச் சான்றோர் வீரரைப் பார்த்தோம். இப்பாடலில் தேர்வீரராகவும் அவர்களைப் பார்க்கிறோம். கீழ்வரும் *புறநானூற்று* (301) அடிகளில், அச் சான்றோர் யானைப் படையினராகவும் இருந்தனர் எனத் தெளியலாம்.

கல்லென் பாசறைப் பல் சான்றீரே
முரசு முழங்கு தானைநும் அரசும் ஓம்புமின்
ஒளிறேந்து மருப்பின் நும்களிறும் போற்றுமின்

என்பதால் வாள், வேல், வில், தேர், யானைப் படையினர் சான்றோர் என அறியலாம். வேல்படை வீரன் ஒருவனின் செருக்கைக் கூறும்போது *தகடூர் யாத்திரை* அவன் அறப் போரினன் என்றும், பகைவரைப் பகற்போதிலேயே எதிர்கொள்வான் என்றும் மறைந்திருந்து தாக்கான் என்பதும்

பரவை வேல்தானைப் பகலஞ் சுவேனா
இரவே எறியென்றாய் என்னை - விரைவிரைந்து
வேந்த நீ ஆயினாய் அன்றிப் புகுவதோ
போழ்ந்தென்னைச் சொல்லிய நா

என்பதால் தெரிகிறது. 'வேற்படை சான்றோர்க்கு ஏற்றம் தரும்' எனத் **தொல்காப்பிய** உரையில் நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

இவ்வாறாகப் பழந்தமிழ்ப் புறப்பாடல்களில் சான்றோர் குல வீரரின் செயல்கள் விரிவாகக் காணப்பெறுகின்றன.

சான்றோராகிய 'நிழல் வாழ்நர்' - வீரர்

சேர வேந்தரின் புகழ்பாடும் பதிற்றுப்பத்து மிகப் பழமையான நூலாகும். இந்நூலில் 'நிழல் வாழ்நர்' என்ற சொல் இடம்பெற்றிருக்கின்றது. கல்வெட்டுக்களிலும் பிற பழந்தமிழ்ப் பாடல்களிலும் நிழல் என்ற சொல் இடம் பெற்றுள்ளது. நிழல் என்ற சொல் வீரரைக் குறிக்கிறது என அறிஞர்களால் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனைப் பதிற்றுப்பத்து,

மாயிரும் புடையன் மாக்கழல் புனைந்து
மன்னெயி லெறிந்து மறவர்த் தரீஇத்
தொன்னிலைச் சிறப்பி னின்னிழல் வாழ்நர்க்குக்
கோடற வைத்த கோடாக் கொள்கையும் (பதிற்: 37:8-11)

என்கிறது.

கரிய பெரிய பனந்தோட்டால் ஆகிய மாலையையும் பெரிய வீரக் கழலையும் அணிந்து பகை மன்னர்களின் நிலைபெற்ற மன்னெயில்களை எறிந்து அவற்றில் வாழும் மறவர்களைப் பிடித்துக் கொண்டு பழைதான நிலமைச் சிறப்பினையுடைய நின்னிழல் வாழும் வீரர்க்குக் கொடுமை அறும்படி வைத்த பிறழாக் கொள்கையும்

என்று கூறியிருப்பதில் நிழல் வாழுநர் என்று அழைக்கப்பட்ட சான்றோர் பற்றிச் சுட்டிக் காட்டப்படுகிறது. பனந்தோட்டு மாலை அணிந்த வீரர்குடியே சான்றோர் மரபினர் - ''நிழல் வாழ்நர்'' என்று தெளிவாகிறது. மன்னெயில் எறிந்து கொள்ளப்

பட்ட பகை மன்னருக்குரிய மறவருக்கும் "நின்நிழல் வாழ்நர்" என்ற பகைமை கொள்ளாத சேரரின் வீரருக்கும் வேறுபாடு இப் பாடலால் வெளிப்படுகிறது. இருப்பினும் சேரமான் நார்முடிச் சேரல் மறவர் வீரர்களைச் சிறப்பித்து வாழச் செய்துள்ளான்.

"நார்முடிச் சேரனின் போர்நிழற் புகன்றே" (பதிற். 39: 17) என்று *பதிற்றுப்பத்து* கூறுதலைப் பார்ப்போம். தலைமகன் போல அவன் போர்நிழல் வாழும் வீரரும் கொடையுள்ளத்தினர் என்று பழைய உரையாசிரியர் 'போர்நிழல்' என்று தெளிவுபடுத்தி உள்ளார். 'நின்போராகிய நிழலை என்றும் உளவாக உள்ள நிலைமக்கள்' என்றார்.

இவர்கள் கூலிப்படையில் அமைந்தவர் அல்லர். போரில் அமைதியுடைய வீரர் ஆவர். இவரும் தலைமக்களே. "போர்நிழல் புகன்ற சுற்றம்" என்பதற்குப் பழைய உரைகாரர் 'படைத்தலைவர்' என்றார். இத்தகைய படையை மூலப்படை என்றும் முடிவு கொண்டுள்ளனர். மேலும் பழைய உரைகாரர்,

> நாட்டினை அடிப்படுத்தும் காலத்து உண்டாய்ச் சென்ற
> போர்க்கொள்கையை மாற்றியென்ற வாறென்றும்
> சிறப்பானே இதற்கு நிழல்விடு கட்டி பெயராயிற்று

என்று நிழலாகிய வேந்தரும் நிழலாகிய வீரர் என்பதாலும் நிழல்விடு கட்டி என்றார். வேந்தனை விட்டு நீங்காத வீரர் நிழல் என்று தெரிகிறது. வேந்தனின் நிலைப்படையில் உறுதிகொண்டு இறுதியை ஏற்றுக் கொள்ளும் வீரர் "நிழல்" எனப்பட்டனர்.

மலையர்குல நிழல் வீரர்

பதிற்றுப்பத்து குறிப்பிட்டது போன்று **புறநானூறும்** நிழல் பற்றிய குறிப்புகளைத் தருகிறது. 'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர் கிழார் என்ற புலவர் பாடி உய்யக் கொண்டது' பற்றிய பாடலில் (புறம். 47) மலையமான் மக்களை,

> *இவரே, புலனுழு துண்மார் புன்க ணஞ்சித் தமது*
> *பகுத்து உண்ணும் தண்நிழல் வாழ்நர்*

என்று குறிப்பிட்டுள்ளார். இதன் பொருள் வள்ளன்மையுடைய குடியான வீரர் மரபில் மலையமான் குலத்தில் பிறந்தவர் இச்சிறார்கள் என்பதாம். *புறநானூற்றின்* பழையவுரை நிழல் வாழ்நர் மரபினர் இவர்கள் என்று அழுத்தம் திருத்தமாகக்

குறிப்பிடுகிறது. எனவே அரசகுடியின் கிளைகளை நிழல் வாழ்நர் என்று குறிப்பிட்டார்கள் என அறியலாம்.

மலையமான் மரபிலே உதித்துச் சோழனிடம் சேனாதிபதியாக அமைந்தவன் மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன். மாறோக்கத்து நப்பசலையார் அரச வாகையில் *புறநானூற்றில் (பாடல் 174)* இவனைப் பாடியுள்ளார்.

நான்கு வருணத்திற்கும் என வாகை இருந்ததை இலக்கண நூலான புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. பிற்காலச் சோழன் சுந்தரசோழனின் மனைவி அதாவது பேரரசன் முதலாம் இராசராசசோழனின் தாய் மலையமான் குலத்தவள் ஆவாள். சோழரின் கீழ் மலையர்குலம் நிழல் இருந்தனர்.

மலையரசனாகிய குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடிய பாடலில் (புறம். 161: 29-32).

நாள் முரசு இரங்கும் இடனுடை வரைப்பில் நின்
தாள் நிழல் வாழ்நர் நன்கலம் மிகுப்ப
வாள்அமர் உழந்த நின் தானையும்
சீர்மிகு செல்வமும் ஏத்துகம் பலவே

முரசு முழுங்கும் இடனுடைத்தாய எல்லையின் கண்
நினது தாள் நிழல்கண் வாழ்வார் நல்ல ஆபரணத்தை
மிகுப்ப வாளாற் செய்யும் போரின் கண்ணே

என்பதால் நிழல் வாழ்நர் ஆகச் சுட்டிக்காட்டப்படுவோர் வீரக்குடியினர் என்று புலனாகும்.

தாள்நிழல் என்பதற்கு ''வீரன் தாள் நிழல்'' என்று *சீவக சிந்தாமணி* குறித்திருப்பதை உ.வே.சா. எடுத்துச் சொல்லி யுள்ளார். எனவே இலக்கியத்தில் நிழல் என்ற சொல்லுக்கு வீரர் என்ற பொருள் உண்டு என்று அறியற்பாலதாம்.

ஐய்யனாரிதனாரின் *புறப்பொருள் வெண்பாமாலை*

அழலவிர் பைங்க ணரிமா னமளி
நிழல்வீரர் பூண் மன்னர்நின் றேத்தக் - கழல்புனை

என்பது சிங்கம் சுமந்த நிழல்வீரர்தனை ஆபரணமாகப் பெற்ற மன்னர் நின்று வாழ்த்த என்பதாம். சிங்கக்கொடிக்கு அரசகுலச் சான்றோர் உரிமை கோரியதும் எண்ணுதற்குரியது. *வலங்கை மாலை* எனும் அரசகுலமாலையில் இதனைக் காணலாம்.

இராமாயணக் காதையில் இராம பிரானின் ''நிழலாக அமைந்தோன்'' அவன் தம்பி இலக்குமணன் என்பது புராணப் பாடம். ''நிழல்'' என்ற வீரர்கள் வேந்தனோடு முரண்படாது, அவனோடு இன்ப துன்பங்களில் பங்குகொண்டவர்கள்.

தலைவன், தலைவி பற்றி ''நின்னை விட்டு நீங்காத நிழற்போல என்னைவிட்டு நீங்காமற் திரிகின்றவனே'' என்று நச்சினார்க்கினியர் *குறிஞ்சிக்கலியில்* . . . உரை செய்தார். உடன் இருத்தல், ஒன்றி இருத்தல், இணைந்து வாழ்தல் என்ற வாழ்க்கை முறைமையில் நிழல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அதாவது இன்ப, துன்பங்களில் உடனிருப்போர் ஆகிய வீரர் என்பதாம். அதாவது வேந்தனுக்கு மெய்யாகவே துணை நின்றோர்.

நமது இலக்கியங்களில் *பதிற்றுப்பத்து* சொல்லும் வீரர்களில் சான்றோர் என்ற வீரர் வேந்தனிடம் வேறுபட்டு நின்றதாக அந்நூல் சுட்டிக்காட்ட வில்லை. ஆனால் பிற வீரர்குடியைக் குறிக்கும் சொற்கள் வேந்தனின் பகைமை கருதிச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

வேல்நிழல் புலவோர்க்குக்
கொடைக்கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவு

என்ற *மலைபடுகடாம்* (88-89) பாடல் அடிக்கு நச்சினார்க்கினியர் தம் உரையில்,

வேற்போரின் விளக்கத்தையுடைய அறிவுடை யோர்க்குக்
கொடுத்தற்கரிய நாடும் ஊரும் முதலியவற்றைக் கொடுத்த
அவனுடைய குடியிலுள்ளோர் தோற்றரவும்

என்று குறிப்பிடுகின்றார்.

இத்தகைய வீரர்களை அறிவுடையோர் என்றும் தொல் லோர் என்றும் அறியமுடிகிறது. வேந்தனின் குடியிலுள்ளோர் நிழல்வீரர் என்ற அறிவுடையோர். இவர் நாடும் நகரமும் பெற்ற போர்க்குடி மரபினர். *கலித்தொகை நச்சினார்க்கினியர்* உரையில் அரசன் நிழல் எனப்படுகிறான். எனவே நிழலார் என்போர் குடிகாக்கும் தலைவரான ஒளியுடைய அரசர் எனப் பொருள் கொள்ளுதல் சரியானதாகும்.

சான்றோர் மெய்ம்மறை

பதிற்றுப்பத்து ''மெய்ம்மறை'' என்ற சொல்லை எடுத்து இயம்புகிறது. இதற்கு வேந்தருக்குக் கவசம் போன்றவர்கள் என்ற பொருளும் அறிஞர்களால் சொல்லப்பட்டுள்ளது. *பதிற்றுப்பத்து*

> *"சான்றோர் மெய்ம்மறை",*
>
> *"பூழியர் மெய்ம்மறை",*
>
> *"வில்லோர் மெய்ம்மறை",*
>
> *"மழவர் மெய்ம்மறை"*

என்று குறிப்பிடுகின்றது. சேரருக்கு வில்லவர், பூழியர் என்ற பட்டப் பெயர்கள் உள. மழவர் குடியோடு தொடர்பு ஏற்பட்டதால் சேரர் குடிக்கு மழவர் உரிமை கோரினர். சேரர் குடியோடு வீரர் குடியான மழவர் என்பார் இணைந்தனர். இதன்பொருட்டு அரச உரிமையும் கோரினர்.

இனி மெய்ம்மறை வீரர் பெயரில் "சான்றோர்" என்பதைப் பார்ப்போம். "நிழல் வாழ்நர்" என்று சொல்லப்பட்ட "சான்றோர் மெய்ம்மறை" என்பதை நோக்கின், இதுவே சேரரின் இனப்பெயர் என்று புலப்படும். நான்கு விதமாக மெய்ம்மறை சொல்லப் படுதலில் மூன்று பெயர்கள் சேரர்குடியின் பட்டப்பெயர்களாகவும் ஒன்று இனப்பெயராகவும் கொள்ளத்தக்கன.

> *எஃகா டூனங் கடுப்பமெய் சிதைந்து*
> *சாந்தெழின் மறைத்த சான்றோர் பெருமகன் (பதிற். 67)*

மார்பில் காயம் ஏற்பட்டு, மெய் சிதைந்து, அம் மார்பில் சாந்தினைப் பூசி மறைத்திருக்கும் சான்றோர் பெருமகன் என்பதால் செல்வக் கடுங்கோ என்ற சேரமான் சான்றோர் இன மரபினன் என்று அறியக்கிடக்கின்றது. இவ்வடிப்படையிலேயே ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும்

> *எயிலெறி வல்வில் ஏவிளங்கு தடக்கை*
> *ஏந்தெழில் ஆகத்துச் சான்றோர் மெய்ம்மறை (பதிற். 58)*

எனப்படுகிறான்.

சான்றோர் சுற்றத்தார் சேரனுடன் இருத்தல்

சான்றோர் இனத்தவர் அரசனுடன் எப்போதும் இருப்பர் என்பது 'மெய்யார்த்த சுற்றமொடு' எனும் தொடரால் வருவதை இனிக் காணலாம். உதியஞ்சேரலை, முரஞ்சியூர் முடிநாகனார்,

> *திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி*
> *நடுக்கின்றி நிலியரோ*

என (புறம் 2 : 19-20) வாழ்த்தியுள்ளார். திரியாச் சுற்றமென்பது விலகிச் செல்லாத சுற்றத்தினர். நெடுஞ்சேரலாதன் தம் சுற்றத்தாராகிய தானைச் சான்றோருடன் இருந்ததைக் குமட்டூர்க் கண்ணனார்,

.... *மெய்யார்த்த சுற்றமொடு*
நுகர்தற்கினிது நின் பெருமகிழ்வே (பதிற். 12)

என்பதால் தெரியலாம். அரசனின் சுற்றத்தார் என்ற உரிமையில் மட்டுமல்லாது அவ்அரசனை எக்காலத்திலும் எந்த இடத்திலும் பாதுகாப்பது அவர்தம் கடமை ஆதலால் இவ்வாறு கூறப்பட்டது.

இதற்கு உரையாத்த உ.வே. சாமிநாதையர், "உண்மையைத் தம்மிடைத்தே காட்டிய மந்திரி முதலிய சுற்றத்தார்" என்கிறார். மந்திரிகளும் சான்றோரே ஆவர் என்பது முன்னர்ச் சுட்டப்பட்டது. இதற்கு விளக்க உரை நல்கிய துரைசாமிப்பிள்ளை,

செல்வுழிச் செல்லும் மெய்ந்நிழல் போல அரசன்
மெய்யினைச் சூழ்வருதலின் மெய்யார்த்த சுற்றம்

என்கிறார். மெய்க்காப்பாளராகச் சுற்றத்தார் வீற்றிருப்பது இதனால் தெரிகிறது. 'சுற்றம்' என்பதற்கு இவ்வுரையாசிரியர் "அமைச்சர், தானைத் தலைவர்" என்கிறார்.

பத்துப்பாட்டுள் ஒன்றான **மலைபடுகடாமில்** வரும் "உரைசெல வெறுத்த வவனீங்காச் சுற்றமொடு" என்ற அடிக்குப் பொருள் கண்ட உரையாசிரியர் நச்சினார்க்கினியர் 'சுற்றம்' என்பதற்குப் "படைத் தலைவர்" எனப்பொருள் கண்டுள்ளார்.

சுற்றம் என்பது *மருங்கு* என்றும் கூறப்படும். 'ஆடுகழங் கழிமன் மருங்கு' எனும் அடிக்குப்பொருள் கண்ட ஔவை சு.துரைசாமிப்பிள்ளை,

பகைவரின் வெற்றி வாராமை கண்டு நிற்கும் எண்ணிறந்த
தானை வீரர் கூட்டம்; மருங்கு சுற்றம் ஈண்டுத் தானை
வீரர் மேற்று

என்கிறார்.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்

சேரனின் *சுற்றத்தார்* **ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரும்** ஆவர். **புறநானூறும்** (191:6) "ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்" எனக் கூறும். இதைப் **பதிற்றுப்பத்து** கூறுவதாவது (15:28-34),

செய்த மேவலமர்ந்த சுற்ற மோடு
ஒன்று மொழிந் தடங்கிய கொள்கை யென்றும்
பதிபிழைப் பறியாது துய்த்த லெய்தி
நிரைய மொரீஇய வேட்கைப் புரையோர்
மேயின ருறையும் பலர்புகழ் பண்பின்
நீபுறந் தருதலி னோயிகந் தொரீஇய
யாணர் நன் நாடு.......

இவ்வடிகளில் 'செய்த மேவலமர்ந்த சுற்ற மென்ற" என்ற தொடருக்குப் பழைய உரையாசிரியர்,

> *(சுற்றத்) தலைவர் செய்த காரியங்களைப்பின் சிதையாது தாம் அவற்றை மேவுதலையுடைய அத் தலைவரொடு மனம் பொருந்தின சுற்றமென்றவாறு*

என்கிறார்.

பூவாலும், புகழாலும், உருவாலும், சினத்தாலும், வீரத்தாலும் ஒருமைப்பட்டுள்ள சேரவேந்தரும் சான்றோரும் *மனத்தாலும்* ஒன்றுபட்டிருப்பது இங்குக் காட்டப்பெற்றுள்ளது. "சுற்றமொடு" என்பதற்கு "உறவினர்களோடு" எனப் பொருள் உரைத்த உ.வே. சாமிநாதையர், "ஒன்று மொழிந்து அடங்கிய கொள்கை" என்ற அடிக்குப் பொருளாக, (புறம் 191:6-7)

> *உண்மையையே சொல்லி, ஐம்புலன்களும் அடங்கிய கோட்பாட்டினையுடைய; இது புரையோருக்கு அடை*

எனச் சுட்டிக்காட்டி, புரையோர் என்போர் மேலோர் என அவர் பொருள் கூறியுள்ளார்.

> *இவனது செங்கோற் சிறப்பால் அவ்வூரை விட்டுச் செல்லாது தங்கித் தவத்தாலாய நுகர்ச்சியைப் பெற்று நரகத் துன்பத்தினின்றும் நீங்கிய, இவன் நாட்டிலேயே வாழவேண்டு மென்னும் விருப்பத்தையுடைய மேலோர்*

என்பது அவர் உரை.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பற்றி ஔவை சு. துரைசாமிப்பிள்ளை கூறும் கருத்தாவது:

> அடங்கிய கொள்கையுடையார்க்கு இவ்வுலக வின்பத்தில் வேட்கையின்மையின், உயர்நிலை யுலகத்து இன்ப வேட்கையும், அதற்குரிய தவவொழுக்கமும் அவர்பால் உளவாதல் கண்டு 'அடங்கிய கொள்கையும்' நிரையமொரீஇய வேட்கையும்" உடையோரெனச் சிறப்பித்தார்.

என்கிறார். *ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் இனத்தினர் வாழும் ஊரில் வாழ்வதாக பிசிராந்தையார் கூறுதலையும் இங்குச் சுட்டலாம்.*

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடும்போது அவனும் அவன் சுற்றமும் தானையும்,

போர் நிழற் புகன்ற சுற்றமொ டூர்முகத்
திறாஅ லியரோ பெருமநின் தானை

என்கிறார். இங்குச் சுற்றம் என்பது 'படைத் தலைவரை' எனப் பழைய உரையாசிரியர் குறித்துள்ளார். 'போர் நிழல்' என 39ஆம் பாடல் இறுதியிலும் அவர் குறிப்பிட்டிருப்பது காண்க. அதற்கு, "படை வீரருக்குப் போரே இன்பத்தைத் தருவதாதலின் அதனை நிழலென்றார்" என உ.வே.சா. குறிப்புத் தருதல் காண்க.

இச்சேரமன்னன் ஊர்ப்புறத்தே தன் தானையுடன் தங்காது எப்போதும் போர் செய்யுமிடத்தே தங்குவான் எனப் பாடல் பொருள்படுகின்றது. இதனால் அரசன் எங்கெங்கு இருக்கிறானோ அங்கங்கே சான்றோர் தானையினர் சூழ்ந்திருப்பர் என்பது தெரிகிறது.

இதன் காரணமாகவே சேரவேந்தர்கள் *வாளோடு வடக்கிருத்தல் என்ற வீரர் கொள்கையின் இனவழிப்பெயர் சான்றோர் என்பதாம். வாளொடு வடக்கிருத்தல் என்ற நிலையில் வேந்தனோடு உடன் இருந்து உயிர்விடுதல் சான்றோர் கொள்கையாகும். அரசனின் நிழல் எனவே உடன் இருந்தனர் எனக் கொள்க.*

பெருஞ்சேரலாதனுடன் சான்றோர் வடக்கிருத்தல்

இச் சேரலாதனைப் பற்றி அறியவரும் வரலாற்றுச் செய்தி *புறநானூற்றின்* 65ஆம் பாடலிலும், *அகநானூற்றின்* 55ஆம் பாடலிலும் பாடப்பெற்றுள்ளது. இச்சேரமான் சோழன் கரிகாலனுடன் வெண்ணிப் பறந்தலை எனும் ஊரில் போரிட்டான். சோழன் மூவேந்தரில் ஒருவன் எனப் போற்றப்பட்டவன். அவனுக்கு எவ்வகையிலும் தகுதி குறையாதவனாகச் சேரனும் குறிப்பிடப்படுவதால் இவனும் மூவேந்தர் குலத்தினன் என்றே தெரிகிறது.

தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண்ணாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கிருந்தன னீங்கு

எனப் *புறநானூறு* (65: 9-11) கூறுவதால் சோழன் கரிகாலன் காலத்தில் ஆண்ட முடியுடை வேந்தன் இவனும் ஆவான். சோழ நாட்டிற்கு வந்து வெண்ணிப் பறந்தலையில் போர் செய்ய வந்திருந்த இச்சேரன் கரிகாலனுக்கு எவ்வகையிலும் குறைந்த தகுதி கொண்டிருந்திருக்க மாட்டான். போர் சோழனுக்கும் சேரனுக்கும் நேர்நேராக நடந்ததென்றே தெரிகிறது. இப்போரில் தன்னைப் போன்ற வேந்தனாகிய சோழனின் வாளாலோ (வேலாலோ) புறப்புண் எய்திய இச் சேரமன்னன் மானம் கருதி வாள் நாட்டி, வடக்கிருந்தான் என மேற்சுட்டிய பாடலிருந்து தெரிகிறது. போரில் வெற்றி பெற்றது யார் என இப்

பாடலடிகளிலிருந்து தெரிய வில்லை. ஆனால் புறப்புண் பட்டதால் போரிடுவதை நிறுத்தி இச்சேரமான் வடக்கிருந்ததாகத் தெரிகிறது. புறப்புண்படும்படிப் போரிட்டதிலிருந்து கரிகாலனின் வலிமை ஒரு புறத்தில் தெரியவந்தாலும் தன்னைப் போன்ற அரசனுக்கு ஓர் இழிவைத் தேடித் தந்ததாகவே *அவ்வெற்றி இருந்துள்ளது*. சேரனுக்குப் புறப்புண் பட்டதால் சேரர் அனைவருக்கும் இழிவு. புறப்புண்படும் படியாகப் போரிட்டதால் சோழர் அனைவருக்கும் இழிவு. ஆதலால் வெண்ணிப் பறந்தலைப் போர் சோழனுக்கே வெற்றி என்றாலும், யாருக்கும் வெற்றி தோல்வி இன்றியே முடிந்திருக்கும் எனத் தோன்றுகிறது. கழாத்தலையார் பாடியதான மேற்சுட்டிய *புறநானூற்றுப்* பாடலின் பாடற் குறிப்பு (கொளு) கீழ்வருமாறு உள்ளது:

> சேரமான் பெருஞ்சேரலாதன் ((பி.ம்) பெருந் தோளாதன்)
> சோழன் கரிகாற்பெருவளத்தானோடு பொருது புறப்
> புண்ணாணி வடக்கிருந்தானைக் கழாத்தலையார் பாடியது.

இக்குறிப்பில் பெருஞ்சேரலாதனுக்குப் பெருந்தோளாதன் எனும் வேறு பெயர் இருந்திருக்கலாம் எனும் ஐயத்தை பிறபாடம் எழுப்புகிறது. ஆனால் பெருஞ்சேரலாதன் என்பதையே தவறாக (ஞ்=ந், சேர=தோ, ளா=லா) ஏட்டில் படிசெய்தோர் எழுதியிருக்கலாம் எனலாம்.

அகநானூற்றுப் பாடலில் (55) மாமூலனார் அழிகளத்தில் சேரன் வாள்வடக்கிருந்தபோது அவன் சுற்றத்தாராகிய சேர குலத்தினரான *சான்றோரும்* கூடவே வாள்வடக்கிருந்து உயிர் துறந்து சொர்க்கம் புகுந்தனர் என்கிறார். இதனை,

> *கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்*
> *பொருதுபுண் நாணிய சேரலாதன்*
> *அழிகள மருங்கின்வாள் வடக்கிருந்தென*
> *இன்னா இன்னுரைகேட்ட சான்றோர்*
> *அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்*

எனப் பாடியுள்ளார். சேரனுடன் வடக்கிருந்து உயிர் துறந்தவர் சான்றோர். ஆதலால் அச் சேரனுக்கு ஏற்பட்ட இழிவு தமக்கும் ஏற்பட்டதாகக் கருதிய அச் சான்றோர் வீரர் உடன் வடக்கிருந்து உயிர் துறந்தனர்.

வாள் வடக்கிருத்தல் என்பது தாம் விரும்பி உண்ணா நோன்பிருந்து உயிர்துறத்தலாகும். இதனைச் சேரலாதனைத் தவிர, கோப்பெருஞ்சோழனும் தொட்டடுத்த காலத்தில் மேற்கொண்டு உயிர் துறந்துள்ளான் எனப் புறப்பாடல்களால் தெரியவருகின்றது. கோப்பெருஞ்சோழனை நேரில் காணாமலே நட்புக் கொண்டிருந்த பிசிராந்தையாரும் அச்சோழன் இறந்தபின்பு அங்குச் சென்று

வடக்கிருந்ததாகப் பாடல்கள் கூறுகின்றன. உறையூரைச் சேர்ந்த பொத்தியார் என்பவர் சோழனுடன் வடக்கிருக்க வந்து, திரும்பிச் சென்று தனக்கு மகன் பிறந்த பிறகு மீண்டும் அங்கு வந்து வடக்கிருந்து உயிர் துறந்ததாகவும் புறப்பாடல்களில் பாடப் பெற்றுள்ளது. இச்சோழனைப் 'பொத்தி ஆண்ட பெருஞ்சோழன்' எனப் ***பதிற்றுப்பத்தின்*** ஒன்பதாம் பத்தின் பதிகம் கூறுகின்றது. இப்பத்தின் தலைவன் இளஞ்சேரல் இரும்பொறை ஆவான். 'பொத்தி ஆண்ட பெருஞ்சோழன்' என்பதால் கோப்பெருஞ் சோழன் அக்காலத்தில் 'பொத்தப்பி' எனும் பகுதியை ஆண்ட உறையூர் வமிசத்துச் சோழன் ஆவான். உறையூர்ச் சோழர்கள் பொத்தப்பியைக் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை ஆண்டதாகக் குறிப்புகள் கிடைக்கின்றன. உறையூரை அடுத்த பொத்தி என்ற ஊரையே பொத்தி எனச் சிலர் குறிக்கின்றனர். போத்தப்பி என்பது பொத்தப்பி எனத் திரியும் ஆதலால் பொத்தப்பி எனும் பொத்தி எனும் பொத்தி நாட்டை ஆண்ட உறையூர்ச் சோழனாக கோப்பெருஞ்சோழனைக் கருதுதல் வேண்டும். இச்சோழனின் உறவினரே பொத்தியார் ஆவர். அவர் பாடலியற்றும் வல்லமையும் பெற்றிருந்த சோழ குலத்தினர். ஆதலால், தம் உறவினனும், பொத்தப்பிச் சோழனுமான கோப்பெருஞ்சோழன் மானத்திற்காக வடக்கிருந்து உயிர் துறந்ததால் தானும் பின்னொரு நாளில் வடக்கிருந்து உயிர் துறந்தார். மேலே பெருஞ்சேரலாதனின் சுற்றத்தாரான சான்றோர் உயிர் துறந்ததுபோல் சோழனின் சுற்றத்தாரான பொத்தியாரும் உயிர்துறந்துள்ளார். பிசிராந்தை யாரும் எக்காரணத்திற்காக உயிர்துறந்தார் என்பதையும் ஆராய வேண்டும்.

வாள் வடக்கிருத்தல் எனும் அரசகுடியினரின் இச்செயல் அதற்கடுத்த காலகட்டத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர்விடும் சமணத் துறவியர்க்கு உரியதாக ஆயிற்று. ஆனால் அவர்கள் வாள் ஊன்றி வடக்கிருக்கவில்லை. அவர்கள் எத்திசை நோக்கியிருந்தனர் என்றும் தெரியவில்லை. சமணர்களின் உண்ணா நோன்பு இருந்து உயிர் விட்டதற்கு உரிய கல்வெட்டுச் சான்று கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு பறையம்பட்டு எனுமிடத்தில் உள்ளது. வட்டெழுத்துக் கல்வெட்டுக்களில் முந்தியதுமான இக்கல்வெட்டுச் செய்தியிலிருந்து பாணாட்டைச் சேர்ந்த வச்சிரநந்தி எனும் சமண சமயத் துறவியின் மாணவர் ஆராதனி என்பவர் நோற்று இறந்ததாகத் தெரிகிறது. இதனை அடுத்து, திருநாதர்குன்று எனும் இடத்தில் சமணத்துறவி 56 நாள்கள் வரையும் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்ட செய்தி வட்டெழுத்துக் கல்வெட்டாக உள்ளது. சமண முனிவர்கள் உண்ணா நோன்பிருந்து உயிர்துறப்பதற்கு முன்னோடியாகச் சான்றோர் வடக்கிருந்தது அமைகிறது.

தண்டநீதித் தலைவரான சான்றோர்

நாடு வாழ்நர்
வாழ்க்கை வாழ்நர்

என வரும் தொடர்கள் சான்றோரையே குறிக்கும். சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள நிழல் வீரர் பிற்காலத்துக் கல்வெட்டுகளிலும் குறிக்கப்பட்டுள்ளனர்.

கி.பி.988ஆம் ஆண்டுக் கல்வெட்டு தண்டநீதித் தலைவரான சான்றோர்க்கு

நாடு வாழுமவர்க்கு இருபத்துநாற் கழைஞ்சும்
வாழ்க்கை உடையவருக்கு பந்திரு கழைஞ்சும்

தண்டநீதியாகத் தரப்படல் வேண்டும் என்கிறது.[65]

வேம்பற்றூராரின் *திருவாலவாயுடையார் புராணம்,*

.... இறைநெறி முறைமை யோங்கச்
சாற்றரும் பெரிய தண்டம் செய்யுமின் சான்றோ ராயின்

என்கிறது. தண்டநீதி செய்யும் அரசவைக்கு மற்றொரு பெயர் சான்றோர் அவை என்பதாம். அரசனின் தொடர்ச்சியைப் பெறும் வீரன் தண்டநீதித் தலைவனாவான். கற்றோர் போற்றும் *கலித்தொகை* சான்றோர் அவையிருந்த நிலையைப் படம் பிடித்துக் காட்டும்.

நிழலும் மூத்த கூறும்

"நிழல்" என்ற சொல் கேரள நாட்டுக் கல்வெட்டுக்களில் பயிலுவதாக அறிஞர் எம்.ஜி.எஸ். நாராயணன் தன் ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்துள்ளார். "மூத்த கூற்றிற்கு அமைந்த நிழல்" என்பதை எடுத்துக்காட்டி ஆய்ந்து 'வீரர்' என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வீரர் குடி யார்? என்று அவர் உணர்ந்து அறியவில்லை.

முதலாம் ஆதித்த சோழனுக்குரிய கி.பி. 9ஆம் நூற்றாண்டு வெண்பாவில் அமைந்த கல்வெட்டுப் பாடல்[66] அண்மையில் புலவர் செ.இராசு, இரா.பூங்குன்றன் போன்ற அறிஞர்களால் கண்டறியப்பட்டது. கோவை மாவட்டம் பச்சைப்பாழியில்

---

65. T.A.S. V, p. 176; T.A.S. II, p. 33.
"நாடு வாழுமவர்க்கு பந்திரு கழைஞ்ஞே அஞ்சு காணமு வாழ்க்கை வாழுமவர்க்கு அறுகழைஞ்ஞே இரண்டரைக் காணமும்..."

66. கோவை மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி I.

(சுண்டக்காமுத்தூர்) கிடைத்த இக்கல்வெட்டு இந்தியாவிலே தொன்மை வாய்ந்த பெருவழி பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டாகும். இராசகேசரி பெருவழி கல்வெட்டுப் பாடலாவது:

திருநிழலு மன்ன யிருஞ்சிறந்த மைப்ப
ஒருநிழல் வெண்டிங்கள் போலோங்க - ஒருநிழல்போல்
வாழியர் கோச்சோழன் வளங்கா விரிநாடன்
கோழியர் கோக்கண்டன் குலம்

திருநிழல் ஆட்சி என்றும் படையமைப்பு பற்றியும் விளக்கி, நிழல் போல் வாழியர் என்று கூறுதல் சோழர் குடி வீரர் பற்றியதாகும். இக்கல்வெட்டில் சேரமன்னர், களப்பிரர்களின் பெயர்கள் இடம்பெற்று இருப்பதாகக் கருதி ஆய்வது தவறானதாகும். ஏனெனில் கோழியர் என்ற பெயர் உறையூரை ஆண்ட சோழற்குரியதாகும். கோக்கண்டன் என்ற குலம் அரசகுடியான சோழருடையதாகும். இவர்களின் நிழல் என்று அழைக்கப்பெற்றவர் வீரர் குடியினர் என்று உறுதியாகிறது.

அணுக்கத் தொண்டர் என்பார் பணிமக்களாகும். நிழல் என்ற வீரர்குடி, அரசனின் மரபுவழி வீரர் என்பவரேயாவர். மேலே சொல்லப்பட்ட கல்வெட்டு வைத்தவன் முதலாம் ஆதித்த சோழன் என்பதும் அவனது குல வீரர்கள் நிழல் என்று கூறப்பட்டார்கள் என்பதும் இதன்காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டின் இறுதியாகலாம் என்றும் அறியலாம்.

நிழல் வாழ்நரும் பணிமக்களும்

தண்டநீதித் தலைவர்கள் அரசனின் நிழல் என்பதாலேயே நிழல் வாழ்நர் என்றனர். நிழல் என்று கூறப்பட்ட இவர் நிழலோர் என்றும் அழைக்கப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்ட அரசகுலவீரர் என்பதில் ஐயமில்லை.

கி.பி.1000 ஆம் ஆண்டினைச் சார்ந்த கல்வெட்டு[67]

இராம வளநாடு வாண்ண பாலித்து கண்ணன்
கண்டன் பணியுடைவகளும் அறுநூற்றுவருந்
நிழலோரும் பாட்டாற் செய்த காரியமாவுது

இராம வளநாடு வாழுமவர் கண்ணன் கண்டன் மற்றும் இவனது பணி செய்மக்களும் அறுநூற்றுவரும் நிழலோர் என்ற வீரமரபும் சுட்டிக் காட்டப்பெறுகின்றனர். அறுநூற்றுவர் வீரர் என்று முடிவு கொண்டுள்ளனர். வீரர்குடியில் நிழலோர் அல்லது

67. S.I.I.V., 784.

நிழல் என்ற வீரருக்கும் அறுநூற்றுவருக்கும் மிகுந்த வேறுபாடு இருந்தது. அறுநூற்றுவர் பணி மக்கள் தொடர்பான வீரர் என்று கொள்ளத்தக்க சான்றுகள் கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றன.

'முதுகூறு' என்பது சேர அரசில் முக்கிய ஆட்சிப்பகுதி மூத்தகூறு என்றும் இது பொருள்படும். "புறை கிழாநாடு முதுகூறு வாழ்மவர் வந்து" என்று கி.பி.1008இல் அமைந்த கல்வெட்டு கூறுகின்றது. இதில், "*நிழலும் பணியும் கூடிய அட்டிக்*" என்று குறிப்பிடுவதால்[68] "நிழல்" என்ற வீரமரபும் "பணியும்" என்ற பணிமக்கள் பிரிவில் வந்தோரும் கூடி முடிவு கொண்டுள்ளனர் என்று புலனாகிறது. மேலும் "நிழல்" என்போர் பணிமக்கள் மரபினர் அன்று என்றும் தெளிவுறுகிறது. இருபாலரும் அரசனிடமே பணி புரிகின்றனர். இருப்பினும் வேறுபட்ட இனப் பிரிவினர் என்பதால் பணிமக்களைப் "பணியினர்" என்று வேறுபடுத்தினர் என்று கொள்க.

நிழல்வாழ்நரும் மூத்தகூறும்

கி.பி.1021 இல் அமைந்த கல்வெட்டு[69]

> *மூத்த கூற்றினுக்குக் கமைஞ்ச நிழலும்*
> *பணியும் ....*

மூத்தகூறுக்கு அமைந்தோர் 'நிழல்' என்போரும், பணிமக்களும் ஆவர். மூத்தகூறு என்பது மூப்புக்கூறு என்றும் மூப்பரு செய்வித்த அதிகாரமாகும். இத்தகைய அதிகாரம் பெரும்பாலும் நகரங்களில் நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது. முதுகூறு என்ற பொருளையும் மூத்தகூறு பெறும். "கிராமக்கூறு" என்ற அடிப்படையில் கூறுசெய்வார் என மணியக்காரர் அழைக்கப்பட்டார். அரசனின் அரண்மனையைச் சுற்றி இருக்கும் பகுதியில் மூப்புக்கூறு அரசகுலத்தவன் பெற்றதாக நாட்டுப்புறப் பாடல்கள் சான்றளிக்கின்றன. "மூத்தகூறு" என்பதற்கு டாக்டர் சுப்பராயலு "முதுகூறு" என்று குறிப்பிடுகின்றார். புறப்பாட்டு மூத்த அதிகாரம் என்ற மூத்தகூறு பற்றி மேலும் அறியலாம். மூத்த

---

68. Indian Antiquary XX, p. 290-91. தமிழ்க் கல்வெட்டுக் கலைச்சொல்லகராதி, தொகுதி II, பக், 506,

69. Epigraphica Indica, Vol. 26, p. 27. மூத்த என்ற சொல் மூத்தகுடி, முதியர், மூப்புறு தொடர்பானதாகும். "மூத்தசீரிய குடியின்கண் சிறந்த வாட் போராலே வாழும் குடி" என்பதாம்.

அதிகாரம் என்பதற்குத் "தலைமை அதிகாரம் என" மிகச் சரியான பதிலைக் கலாநிதி வேலுப்பிள்ளை **சாசனமும் தமிழும்** என்ற நூலில் தருகின்றார்.

> நன்றுழை நாடு வாழுந் திருக்கடித் தானத்து உத்திர
> கணத்தாரும் நிழலும் பணியும் கூடி வேணாடுடைய
> சிறிவல்லவன் கோதை வர்ம்மர் உத்திரவிழா

பற்றிக் குறிப்பிடுகிறது. பாஸ்கர ரவிவர்மனின் ஆட்சியில் பங்குனி உத்திரவிழா ஆண்டுதோறும் நடைபெற ஏற்பாடு செய்யப் பெற்றது. அந்தணருக்குத் தானம் செய்தும் கோயிலில் 10 கூத்து களும் ஆடிப்பாட ஏற்பாடு செய்துமுள்ளனர். ஏற்பாடு செய்தவர்கள் கோயில் கணத்தார், நிழல் என்ற வீரர் மரபினர் மற்றும் பணிமக்களும் கூடி முடிவு கொண்டுள்ளனர்.

> *நின்னொடு தொன்றுமூத்த உயிரினும் உயிரோடு*
> *நின்ற மூத்த யாக்கை அன்னநின்*
> *ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த*
> *வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த* (புறம். 24)

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடிக் கிழார் பாடியுள்ளார்.

மூத்தகூறுக்கு உரியோர்

கி.பி.1218 இல் அமைந்த கல்வெட்டு, "*ஓடநாட்டினின்று மூத்த அதிகாரம் செய்த*" என்று கூறுதலால்[70] மூத்த அதிகாரம் என்பது மூத்தகூறு அதிகாரம் என்றும் தலைமை அதிகாரம் என்றும் புலப்படும். இது மூத்தவர் எனப்பட்ட அரசகுடியினர் செய்த ஆட்சி முறைமை என்று அறியற்பாலதாம். வேந்தனின் படைப்பற்று பலவாகும். வன்னியர், குடிபடை வேளைக்காரர் என்பவர் போன்று "மூத்த பரிவாரம்" என்ற மிக வலுவான படைவீரர் இருந்தனர். இவர் "நிழல்" என்ற மரபினர். இதிலும் வேறுபாடான "இளைய நியாயத்தார்" என்ற வீரர் குழு இருந்துள்ளது. இவர்கள் வயதால் கணிக்கப்பட்ட வீரர் அல்லர், பெருங்குடிக்கும் சிறுகுடிக்கும் இருந்த வேறுபாட்டில் வாழ்வியலில் அமைந்த கதைகள் இவர்களைப் படம் பிடித்துக் காட்டும். கி.பி.992ஆம் ஆண்டுக் கல்வெட்டு, "*மூத்த பரிவாரத்தார்*"

---

70. T.A.S. Vol. I, pp. 289-91. தமிழ்க் கல்வெட்டுக் கலைச்சொல்லகராதி, தொகுதி II, பக். 513,

என்கிறது.[71] வயதிலே மூத்தவர் இருந்த படையென்று இதற்கு எவராவது உரை செய்வாரா?

வேந்தர்களைப் பாடிச் செய்யுள் இயற்றி, அச்செய்யுள் இலக்கணம் தவறி அமைந்தால் ஆண்டவனே அதனைச் செய்தாலும் ஒப்புக்கொள்ளாது அமைந்தோர் நம் வேந்தர் குடியினர் என்று நம்மிடம் புராணம் இருக்கிறது.

அரசின் இரு பெரும்பதவிகள் - ஒன்றில் பெருமுதியன்

"மூத்தோன்" என்ற சொல்லுக்குத் "தலைவன், சான்றோன், உரவோன், உயர்ந்தோன் என்பன அகராதிப் பொருள்கள். இச்சொற்கள் இலக்கியங்களில் அரசனை அல்லவா சிறப்பித்துக் கூறுகின்றன. இச்சிறப்புச் சொற்கள் நாளடைவில் சாதியாக மாறிவிட்டதைத் தேவநேயப் பாவாணர் விளக்கியுள்ளார்.

விவாஹ தளி னம்பியும் மூத்தவர்கள் இருவருங்
கண்டு செலுத்தக் கடவர்

இக்கல்வெட்டு கி.பி.932இல் அமைந்ததாகும்.[72] ஆட்சி அதிகாரத்தில் இருந்த தளிநம்பியும் மூத்தவர்கள் இருவரும் அரசின் பணியில் முதன்மை பெற்றவர்கள் என்பதால் இவர்களைக் கண்டு இறை செலுத்த வேண்டும்.

கி.பி.1010இல் அமைந்த மற்றொரு கல்வெட்டு.[73]

கால்க்கரை நாடு வாண்நாரே உள்பாடனும்
பெருமூத்தவனுங் கூடியிருந்து

என்பதிலிருந்து நாடுவாழுமவரான உள்பாடனும் பெருமூத்தவனும் கூடியிருந்து நாட்டில் செயல்பட்டதைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு கோவில் பணியோடு பொருத்திக்காட்டப்பட்ட உள்பாடனும் (அந்தணன்) கோவிலோடு இணைந்து அமைந்த ஊர் மூப்பனும் (பெருமுதிலன்) பற்றியதாகும். குறிப்பிட்ட இவ் அதிகாரிகள் பல அரசர் காலத்தேயும் வாழ்ந்து அரசின் பணியாளராக இருந்துள்ளார்.

கோவிந்த கோதைவர்மன், கோப்பாஸ்கர ரவிவர்மன், கேரளகேசரி பெருமாள் போன்ற மன்னர்கள் காலத்தில் சுட்டிக்

---

71. S.I.I xiii, p. 170

72. Ibid.

73. T.A.S. Vol. III, p. 43.

காட்டப்படும் பதவிகளாக இப்பதவிகள் தெரிகின்றன. இவர்கள் மூழிக்களக்கச்சம் என்ற அரசகுலக் கச்சத்தின்படி செயல்பட்டவராகக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றனர்.

பாஸ்கர ரவிவர்மனின் கி.பி.992 ஆம் ஆண்டுக் கல்வெட்டில்[74] **"பெருமுதியன் கோதை கண்ணன்"** என்பவன் கையெழுத்திட்டுள்ளான். **உள்பாடனுக்கு நான்கு நாழி நெல்லும் பெருமுதியன்மார்க்குப் பத்துக் காணம்** வழங்கப்பட்டதாகச் சொல்லப்படும் கல்வெட்டில் கோவில் பணிமக்களுக்குரிய நிவந்தங்கள் சொல்லப்பட்டுள்ளன.

உள்பாடனுங் பெருமுதியனுங் கையில் அளந்து கொடுக்கக் கடவன் நெய் அட்டிக் கொள்வோர் முழிக்கள கச்சம்

என்றும்

தேவநாராயனும் தம்பிமாரும் உள்பாடனும் பெருமுதியனும் கொள்ளப்பெறான்

என்றும் **"திருகால்கரை"** என்பதால் இவர்கள் அரசு உயர் அதிகாரிகள் என்றும் தெரியவருகிறது.[75]

மூத்தவரும் மூத்தகுடியும்

எனவே உயர்ந்தோர் என்போர் மூத்தோர் என்று அழைக்கப்பட்டனர் எனலாம். மூத்தோன் என்ற சொல் பெரியோர் என்று அழைக்கப்பட்டதால் வயதில் பெரியோர் என்று கொள்ள முடியாது. மூத்தவர்கள் அமைந்த மகாசபையினர் தம்மை "மூத்தவரு" என்ற பட்டத்தை அரசர்கள் குலத் தொடர்புக்காகச் சூடிக்கொண்டனர்.

"மூத்த நாயனார்" என்றும் தலைமை ஏற்ற மக்கள் அழைக்கப் பட்டனர். "மூத்த குடி" "முற்குடி" என்றும் கல்வெட்டுக்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவர்கள் முதுமக்கள் என்ற பழங்குடி மரபினர் ஆவர். முதுமக்கள் தாழியைக் கொங்கு நாட்டில் மூத்தோன் தாழி என்றனர். இதனைக் **கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள்** என்ற நூலில் டாக்டர் செ.இராசு அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்.

பழங்குடித் தலைவர்கள் தங்களை மூத்த அரையர் என்று கூறிக்கொண்டனர் என்பதும் அவர்கள், "விருத்த" என்ற

---

74. S.I.I xiii, p. 170

75. Ibid.

76. Ibid.

சொல்லால் அழைக்கப்பட்டனர் என்பதும் தெரிகின்றது. குறிப்பிட்ட சமுதாயங்களில் தலைவனை மூப்பர் என்பதும் ஊர் மூப்பர் என்பதும் இயல்பு.

மூத்துகூற்றில் எழுநூற்றுவர்

மூத்தகூறுக்கு உடையவரை எழுநூற்றுவர் என்று கி.பி.1021ஆம் ஆண்டுக் கல்வெட்டு சுட்டிக் காட்டுகிறது.[76] அக்கல்வெட்டு,

> மூத்த கூற்றில் எழுநூற்றுவரும் பணியுடைய நாயனும்
> ஊரு ஊரிடவகை வெள்ளாளரும்

என்பதால் மூத்தகூறு அமைந்த நாடுவாழுநராவோர் என்போராக எழுநூற்றுவரும் பணியுடைய நாயனும் அதாவது (பணிசெய் மக்கள் பட்டியலில் இடம்பெற்ற நாயர்), ஊரில் இருக்கின்ற வேளாளர்களும் சொல்லப்படுகின்றனர். அரசுமக்கள் (எழுநூற்றுவர்), அகம்படியரான நாயர் (பணியுடைய நாயன்) நாலாம் குலத்தவரான வேளாளர் ஆகிய மூன்று சமூகத்தார் ஆவர்.

மூத்தகூறில் கிராமணி

மூத்தகூறு என்பதற்குக் கிராமத்தார் ஆன கிராம ஆட்சி முறைமை என்பது பொருள். கிராம ஆட்சி முறைமையின் தலைவன் கிராமணி எனப்பட்டான். வேதங்களிலும் புராணங்களிலும் தலைவன் கிராமணி எனப்பட்டான். இதன் தொடர்பான எச்சம் தமிழகத்திலும், ஈழநாட்டிலுமே நமக்குக் கிடைப்பது எண்ணத்தகுந்தது.

மூத்தாரும் தலைமக்களே

கி.பி.1200ஆம் ஆண்டுக் கல்வெட்டு *"ஊராளர் பண்டு மூத்தார் கொள்ள"* என்பதாகும். இக்கல்வெட்டு[77] மூத்தார் என்ற அரசகுலத்தவர் என்கிறது.

மேலும் மூத்த என்பது பற்றி அறியக் கல்வெட்டுச் சான்றுகளைக் கொள்ளலாம். முதலாம் ஆதித்த சோழன் காலத்து, கி.பி.898ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[78] *"மூத்த தேவியார் (மனைவியார்) இளங்கோந் பிச்சி"* இவள் அரசனின் பட்டத்துத் தேவி ஆவார். இதுபோன்று அரசர்கள் மூத்த உடையர் எனப்பட்டனர். இவர் பட்டபெருமக்கள் எனப்பட்ட ஆட்சிக்குரிய மூத்தவர் ஆவர்.

---

77. S.I.I V, p. 775
78. S.I.I. XIII, p. 323.

ஊராளராக மூத்தார் என்ற தலைமக்கள் இருந்தனர் என்பதைக் கி.பி.1200 ஆம் ஆண்டுக் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது.[79] அது "ஊராளர் பண்டு மூத்தார் கொள்ள" என்பதால் அறியலாம். ஊராளர் கொள்ள என்பதைக் கி.பி.1021ஆம் கல்வெட்டோடு ஒப்பிட்டு நோக்குக.

இதற்கு மேற்கோளாக ஒன்றினைக் கொள்ளலாம். கி.பி.1000ஆம் ஆண்டுக் கல்வெட்டு[80] "*மன்றாடிகளும் குடியில் மூத்தான் பணி செய்வது*" என்று குறிப்பதைப் பார்ப்போம். குடியில் மூத்தவன் என்பது ஊர் நாட்டாமையைக் குறிப்பிடுமே அன்றிப் பெரியவர் என்று வயது முதிர்ந்தவரைக் குறிக்காது. மன்றாடிகள் என்போர் பல சமூகத்தைச் சார்ந்தவர்கள். அவரிலும் வேறுபட்ட மூத்தான் ஓர் குடியினன் என்பதாம். குடியில் மூத்தான் என்பவன் என்பது சமூகத்தில் மூத்தகுடியைச் சுட்டிக் காட்டும் என்பதில் ஐயமில்லை. எல்லாக் குடிகளிலும் நாட்டாண்மை என்ற அமைப்பு தோன்றிவிட்டது எண்ணத் தகுந்தது.

கி.பி.951ஆம் ஆண்டுக் கல்வெட்டு[81]

> *மூத்தோர் இருவரும் சிறைக்கரையில்*
> *மூத்தவனுங்கூடி*

என்கிறது. இதில் மூத்தவர் வம்சம் எனப்பட்ட தலைமக்கள் கூடியதைக் கூறுகிறதே அன்றி முதியோர் இல்லம் நடத்திய கூட்டமன்று. மூத்தோர் இருவரும் என்பது அந்தணரும் சான்றோரும் என்று உணரற்பாலதாம்.

பழமொழி நானூறும் இதனை உறுதிப்படுத்தும். முதுபெரும் சான்றோர் எனச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட வீரர் மரபினர்.

ஸ்ரீதரன், நாக. கணேசன் ஆகியோர் கண்டறிந்த கல்வெட்டு *ஆவணம்* இதழில் பதிவாகியுள்ளது.[82]

> *ஸ்வஸ்திஸ்ரீ கொற்றவன் கோ முந்நூற்றுவருக்கு மூத்தோரோம் மக்களோம் ஐம்பெருங் குழுவுக்கு. . . .*

என்ற நாகநல்லூர்க் கல்வெட்டில் மூத்தவர் மக்கள் பற்றியும் ஐம்பெருங்குழு பற்றியும் அறிகின்றோம். **உடையார், மூத்தவாள்**

---

*79.*S.I.I. XIII, p. 323.

*80.*Epigraphica Indica XXXIII, p. 33.

81. Ibid.

82.ஆவணம், இதழ்.12.

என்று அரசர்கள் அழைக்கப்பெற்றனர். இடங்கைப் படையின் நாயகரான கைக்கோளர், மூத்தவர் பெற்ற என்ற அடைமொழி யோடு அழைக்கப்பட்டு உள்ளனர். இளைய படையினர் கைக்கோளர் போன்றவரே.

மூத்த திருவடி மன்னர்

குமரிமாவட்டம் சுசீந்திரம் கல்வெட்டு[83] திருப்பாப்பூர் மன்னரை "மூத்த திருவடி" என்று கூறுகிறது. ஆதித்தவர்மரான செய்துங்க நாட்டு மூத்ததிருவடி திருக்குறுங்குடியில் செண்பக ராம சதுர்வேதி மங்கலத்தில் வாழ்ந்த அய்யன்குட்டி வீட்டில் தன் வீடாகக் கருதித் தங்கியுள்ளான்.

சேரமன்னர்குடியினர் சிறைவாய் மூத்தவர் என்று கூறப்பட்டுள்ளனர். கி.பி. 1469இல் திருக்குறுங்குடியில் காண்டாமணி செய்து வைத்தவன் சிறைவாய்மன் ஆதித்தன் ஆவான். இவன் செயதுங்க நாட்டினன் என்றும் அடைப்பெயர் கொண்டுள்ளான்.

ஒட்டக்கூத்தரின் ஈட்டி எழுபது "*மூத்த முதுகுன்ற குரிசில்*" என்று தலைமகனாகிய முருகவேள்தனைச் சிறப்பிக்கின்றது.

மூத்தவரும் நிழல்தாங்கல்களும்

மூத்தகூறுதனை மூப்புக் கூறு என்று பாண்டியர் பற்றிய இலக்கிய ஆவணங்கள் கூறுகின்றன. "மூத்தகூறு" "இளங்கூறு" என்ற இருவகையான அரசுப் பணிகள் இருந்தன. மூப்பர சாந்தரதொட்டி என்றால் அரண்மனை என்று ஆவணங்களால் அறிகின்றோம். மூப்பரு, மூத்தவரு, முதிராஜி என்ற சொற்கள் தலைமக்களைக் குறிக்கும். மூத்தவர் சாதி என்ற கேரளாவில் எச்சமுகத்தைக் குறிப்பிடுகின்றனர் என்று இனம் கண்டுகொள்க.

மூப்பர் என்ற சாதியினரில் வைணவராக அமைந்து இருப்போர் தங்கள் கோயில்களை "நிழல்தாங்கல்" என்று பெயரிட்டு அழைப்பது திருவிக்கிரமனாகிய மகாவிஷ்ணுவின் நிழல் என்ற சமூகத் தொடர்ச்சியாகும். குமரி மாவட்டத்திலும், தென்பாண்டி நாட்டிலும் நிழல் தாங்கல் என்பதற்கு அய்யாவழிப் பெருமக்கள் "சான்றோர் தாங்கல்" என்று அழைப்பதும் அறியற்பாலதாம்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் சூத்திரத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் சான்றோர்

---

83. இதன்காலம் கி.பி.1483 ஆகும்.

கோயில் என்று சுட்டிக்காட்டுகிறார். இராச ராசேச்சுவரம், வரகுண பாண்டீச்சுவரம் என்று அரசன் பெயரால் கோயில்கள் அழைக்கப்பட்டமையால் மேலே சொல்லப்பட்ட கோயில்களைச் சான்றோர் கோயில் என்றனர். நிழல்தாங்கல் என்பது வீரர் தொடர்பான சான்றோர் கோயில் என்பதாம்.

ஆநிரை கவர்தல் போரில், வெட்சிப் போரில் இறந்தவர் அமைந்த கல் வேடியப்பன் கல் என்றும், கரந்தைப் போரில் இறந்தவன் கல் சாணாரப்பர் கல் என்றும் கூறும் வழக்கு தகடூர் நாட்டில் (தர்மபுரி) இருப்பது அறியற்பாலதாம்.

பண்டைய சேரநாட்டு வரலாற்றில் முதியரின் பங்கு

இதுவரை எடுத்துக்காட்டப் பெற்ற சான்றுகளால், பண்டைக் காலத்திலிருந்த மூத்தவர், முதியர் போன்ற தலைமக்கள் சான்றோர் குடியினரே என்பது தெளிவாகத் தெரிகிறது.

சேரநாட்டில் பழங்காலமுதல் இருந்துவந்த முதியர் எனும் தலைமக்களைச் சேர அரசர்கள் தொடர்ச்சியாகப் புரந்தும், அவர்களுக்கு ஆட்சி அதிகாரங்களை நல்கியும் வந்திருந்தனர் என்பது பதிற்றுப்பத்திலும் புறநானூற்றிலும் பதிவாகியுள்ளது. உதியன் சேரலாதன் தொடக்கம் ஒன்பதாம் பத்தின் தலைவன் இளஞ்சேரலிரும்பொறை வரையிலும், பின்பு பிற்கால ஆவணங் களிலும் முதியர் எனும் தலைமக்கள் பற்றிய சான்றுகள் உள்ளன. சில கல்வெட்டுச் சான்றுகளால் உறுதிப்படுத்தப் பெற்றுள்ளன.

தொல்குடி வேளிரான சான்றோர் குடியினரும் வேள்வியும்

வேளிரும் வேந்தரும் சான்றோரும் தொல்குடியினர்

தொல்குடியினரான வேளிரும் வேந்தரும் சான்றோர் குடியினரே. இவர்களே பண்டைக் காலத்து ஆட்சிக் குடியினர் ஆவர். வேந்தர்க்கு வேளிரும் சான்றோரும் சுற்றத்தார் ஆவர். இதனாலேயே அகப்பாடல் (191) "வேந்து தொழில் அயரும் அருந்தலைச் சுற்றத்தார்" என்று குறிப்பிட்டுள்ளது. இதற்கு அரசனின் உரிமைச் சுற்றம் என்பது பொருளாகும். இவர்கள் தொல்குடி வேளிராதல் வேண்டும். இவர்களே சான்றோரும் ஆவர். இவர் வீரக்குடியினர்.

தொல்குடியினர் இவர்களே என்பதற்குச் சான்று ஈசுவர மைந்தர் இவர்கள் ஆதலே ஆகும்.

> வெண்போழ்க் கண்ணியுடன் கொன்றை மாலையையும் சூடிப் போர் செய்த சாந்தெழில் மறைத்த சான்றோராகிய வீரர்

எனப்படுவோர் பிற்காலத்தில் ஈசுவர மைந்தர் என்று சொல்லப்படுவதில் உண்மை உள்ளது எனலாம்.

கொன்றை மாலை சிவனுக்கும் அவன் மரபு வழி அரச குடிக்கும் உரியதாம். பாரதப் பாட்டும் இக்கருத்தினை வலியுறுத்துகிறது.

சான்றோர் வீரரும் அரசரும் கொன்றை மாலையைச் சூடும் வழக்கம் கொண்டிருந்தனர். "கடிமலர் கொன்றைக் காவலன் சூடிய" என்ற பாடலடியை நச்சினார்க்கினியர் தம் உரையில் தகடூர்யாத்திரைப் பாடலாகக் குறித்துள்ளார்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டு நூலான பெருந்தேவனார் பாரதம் "கொன்றைத் தொடை மாலை" "சங்கரன் தன்மாலை" அரசகுடிக்குரியது என்று கூறுகிறது.

வேந்தர்க்கு மணக்கொடை நல்கும் வேளிர்

தொல்காப்பியம் வேந்தரும் வேளிரும் மணவுறவு கொண்டிருந்ததை,

> *நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி*
> *மகட்பா டஞ்சிய மகட்பாற் காஞ்சி* (தொல்.பொருள் 77)

என்று குறிப்பிட்டுள்ளது. இச்சூத்திரத்திற்கு உரைசெய்த இளம்பூரணர்

> ஒத்து, மாறுபட்டுத் தன்மேல் வந்த வேந்தனொடு தன்தொல்குலத்து மகட்கொடை அஞ்சிய மகட்பாற் காஞ்சியும்

என்றார்.

வேந்தன்தன் தொல்குலத்து மகட்கொடை என்பதாலும் வேளிரே மகட்கொடைக்குரிய அரசகுடியினர் எனத் தெளிவுறும். *புறப்பொருள் வெண்பாமாலை (84)*

> ஆபரணத்தினை யுடையாளைத் தனக்குத் தருக வென்று சொல்லும் அரசனோடு மாறுபட்டு நின்றது

என மகட்பாற் காஞ்சி பற்றிக் குறித்துள்ளது.

நச்சினார்க்கினியர் மேற்சுட்டிய தொல்காப்பியச் சூத்திரத் திற்குப் புறப்பாட்டு 349ஐ மேற்கோள் காட்டுகின்றார். மூதின் முல்லைத் துறையில் அமைந்த பாடலாதலால் மகட்பாற் காஞ்சிக்கு உரியவராக வேளிர் அமைந்திருந்தனர் எனத் தெரிகிறது.

தொல்குடி வேந்தர் குறுநில வேந்தரிடம் மகள் பெற்றதைப் *புறநானூற்றின்* அடிகளும் பின்வருமாறு தெரிவிக்கின்றன.

> *தொல்குடி மன்னன் மகளே முன்னாட்*
> *கூறி வந்த மாமுது வேந்தர்க்கு* (புறம்: 353)

என்னும் அடிகளுக்குத்

> தொல்குடி மன்னன் (வேளிர்) மகளை முன்னாளில் மகட்கொடை வேண்டி வந்த பெரிய முதிய வேந்தராகிய சான்றோர்க்கு

என்று ஔவை துரைசாமிப் பிள்ளை உரை உள்ளது.

இந்தப் *புறநானூற்றுத்* தொடருக்கு இணையாக இளங்கோ வடிகளும் தமது *சிலப்பதிகாரத்தின்* காட்சிக் காதையில்,

முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை
மதிமுடிக் களித்த மகட்பாற் காஞ்சியும்

என்று குறிப்பிட்டுள்ளார்.

வேந்தரும் தொல்குடியினராதலால் தம்மைப் போன்ற தொல்குடி யினரானவர்க்குத் தம் மகள்களை நல்கியுள்ளனர். சான்றாக, தொன்று தொட்டு மூத்த குடியாக விளங்கும் பாண்டியர் குடியைச் சேர்ந்த பாண்டியன் தன் மகளைச் சொக்கனுக்கு மணமுடித்துக் கொடுத்திருப்பது விளங்கும்.

இதையே 'மகட்பாற் காஞ்சி' என்ற துறை விளக்கியுள்ளது எனலாம்.

பன்னிருபாட்டியல் மகட்பாற்காஞ்சி பற்றி மிகத் தெளிவாக விளக்குகிறது.

சேரவேந்தரும் வேளிரும்

மூவேந்தர்கள் அரசோச்சி வந்த காலத்தில் அவர்களுடன் மண உறவை வேளிர்கள் எனும் வேள் கூட்டத்தினர் பெற்றிருந்தனர். உதியஞ்சேரல் மற்றும் அவனுக்கு முன்பிருந்த சேர அரசர்கள் தம்மோடொத்த பாண்டியர் அல்லது சோழரிடம் பெண்ணெடுத்துப் பெண் கொடுத்ததாகச் சான்று எதுவும் கிடைக்கவில்லை. ஆதலால் மூவேந்தர்களுக்குள் கொள்வினை, கொடுப்பினை ஏற்படுவதற்கு முன்பாக வேளிர் எனும் குறுநில ஆட்சியாளர்களிடையே மூவேந்தர்கள் மண உறவுகளை ஏற்படுத்தியிருந்தனர். உதியஞ்சேரலாதனுக்கும் அவன் மகனாகக் கருதப்பெறும் நெடுஞ்சேரலாதனுக்கும் இது விலக்கு அன்று. அவர்களும் வேளிரொடு மணவுறவுகளை மேற் கொண்ருந்தனர்.

வேளிர்களின் பெயர்கள் பல பழங்கால ஆட்சிக்குழு மக்களின் பெயர்களைப் போல உள்ளன. வேளிர்கள் உதியஞ்சேரலாதனுக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சேரநாட்டிலும் எஞ்சிய தமிழகப் பகுதிகளிலும் இருந்திருக்க வேண்டும். கபிலர் பாடிய *புறநானூற்றுப்* பாடல் (201) 'வேளிருள் வேளே' என வேளிர் தலைவன் ஒருவனை 49 தலைமுறைக்கு முந்தியவனின் சந்ததியினன் என்கிறது.

வேளிர்களுள் 'வேந்தன்' என்பவன் உருவாதலையே கபிலரின் பாடல் அடிகள் தெரியப்படுத்துகின்றன. இவ்வேளிர்கள் வேந்தர்களிடம் மணவுறவு பெற்றவர்கள் என்பது பழந்தமிழ் இலக்கணம் மற்றும் அதன் உரைகள் போன்றவற்றாலும் உணரப்படும். மணவுறவுத் தகுதிக்கும் மகட்கொடைக்கும் வேறுபாடு உள்ளது. கீழே சுட்டப்படும் ஔவை

சு. துரைசாமிப்பிள்ளையின் பகுதியில் வரும் 'மகட்கொடை' என்பதை "மணவுறவுத் தகுதி' என்றே கொள்ளவேண்டும்.

> முடி வேந்தர்க்கு மகட்கொடை வழங்கும் முறைமை தமிழகத்தே வேளிர்பால் இருந்தமையின், அவ் வேளிர்களைத் தங்கள் நாட்டை அடுத்துள்ள பகுதிகளில் இருந்து வருமாறு செய்வது பண்டை வேந்தர் மரபு. பாண்டி நாட்டை அடுத்துள்ள பறம்பு நாட்டிலும், தொண்டை நாட்டை அடுத்துள்ள மலையமான் நாட்டிலும், பிற விடங்களிலும் வேளிர்கள் இருந்து வந்தமை சங்க இலக்கியம் பயில்வோர் நன்கறிந்தது".

அரசர்கள் தம் சுற்றத்தாருடன் அரசிருக்கை இருந்தனர் எனப் பழந்தமிழ்ப் பாடல்களில் அறியப்படுவதால், வேளிர்கள் மூவேந்தர்களின் நாட்டுள்ளும், வெளியிலும், உடனுறைந்தும் இருந்திருக்கலாம் என எண்ண இடம் உண்டு.

பதிற்றுப்பத்துச் சேரர்களும் வேளிர்களும்

உதியஞ்சேரலின் மனைவி நல்லினி ஆவாள். இவள் வேளிர் குலத்தவள்; வெளியன் என்ற வேளின் மகள். 'வேண்மகள்' எனும் தொடர் 'வேள் மகள்' எனப் பொருள்படும். வெளியன் ஆட்சி செய்த பகுதி எது என வரையறுக்க முடியவில்லை. இரண்டாம் வெளியன் என்பவனிடமிருந்து உறையூரைக் கைப்பற்றியவன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி எனும் சோழன் ஆதலால் (முதலாம்) வெளியனும் உறையூரினன் எனக் கொள்ளலாம். உறையூர் வேள் வெளியன் மகளையே உதியஞ்சேரலாதன் மணந்திருக்க வேண்டும்.

'அவன் வேணாட்டினன்' என ஔவை சு. துரைசாமிப் பிள்ளை கருதுகிறார். வேளிர் எல்லோரும் வேணாட்டினர் அல்லர் என்பது உண்மை. வேணாடு உதியஞ்சேரலாதனின் சேரநாட்டு எல்லைக்குத் தென்கீழ்ப் பகுதியில் இருந்ததால் வெளியன் என்ற வேள் "வேணாட்டினன்" எனச் சிலர் கருத இடமளித்துள்ளது.

வெளியன் எனும் பெயரிலிருந்து வேறெதுவும் தெரிந்துகொள்ள இயலவில்லை. இவன் முதல் வெளியனாக இருக்கலாம். இவனிடமிருந்து உறையூரை (முதலாம்) போரவைக் கோப்பெருநற்கிள்ளி எனும் சோழன் கைப்பற்றியிருக்க வேண்டும். வெளியன் மகள் வேண்மாளை மணந்து உதியஞ்சேரல் உறையூரை மீட்டுக்கொடுத்திருக்க வேண்டும். அதுவரை அவன் வேண்மாடத்தில் தங்கியிருந்திருக்க வேண்டும். வெளியன் இறந்தபின் இரண்டாம் வெளியன் உறையூரை ஆண்டிருந்த போதே

(இரண்டாம்) முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி உறையூரைக் கைப்பற்றினான் எனக் கொள்ளலாம்.

'நாடு கண் அகற்றிய உதியஞ்சேரல்' என *அகநானூற்றுப்* பாடல் அடிகளில் இவனை மாமூலனார் கூறுவதிலிருந்து இவன், கிழக்கிலும், வடமேற்கிலும் உள்ள நிலங்களை அம்மன்னர்களிடமிருந்து கொண்டதோடன்றிக் கடலிலும் தன் கலங்களைச் செலுத்தினான். உதியங்குளம்கரை எனும் ஊர் தென்சேர நாட்டின் தென் எல்லையில், பாறசாலை எனும் ஊருக்கு மேற்கே உள்ளது. இது இச்சேரவேந்தன் தன் நாட்டின் எல்லையைத் தென் கிழக்கே விரிவுபடுத்திய காலத்தில் ஏற்பட்ட ஊராக இருக்கலாம். உதியங்குளத்திற்குக் கிழக்கே உதயகிரிக் கோட்டை உள்ளது. இது பிற்காலத்தில் ஏற்பட்டது என்பர். ஆயினும் தக்கலை எனும் ஊரை உதியஞ்சேரலின் சேரநாட்டுத் தென்கீழ் எல்லையாகக் கருதும் போது அதனருகில் இருக்கும் மலை உதியன் சேரலின் நினைவாக உதியன்மலை எனப்பெயர் பெற்றுப்பின் உதியன்கிரி (உதயகிரி) என மாற்றம் பெற்றிருக்கலாம். உதியம் பேரூர், உதியஞ்சேரி எனும் வேறு இரு ஊர்களும் இச்சேரன் நினைவாக ஏற்பட்டதாகலாம். இவற்றைப் போன்றே உதியன் பட்டணம் எனும் ஊரும் தென்பகுதியில் உள்ளது.

உதியஞ்சேரலாதன் வேள் வெளியனின் மகள் வேண்மாள் நல்லினியை மணந்தான் என்பதையும் அவர்களுக்குப் பிறந்த ஒரு மகனே இமயவரம்பன் என்பதையும் *பதிற்றுப்பத்தின்* இரண்டாம்பத்தின் பதிகம் மூலம் அறியமுடிகிறது. அது,

"........................ உதியஞ்சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி யீன்றமகன்"

என்று கூறுகின்றது. 'வேண்மாள்' என்பதன் ஆண்பால் வேண்மான்(ர்) என்பதாகச் சிலர் பாடம் கொள்கின்றனர். *சிலப்பதிகார* அரும்பத உரையாசிரியர் 'நன்னன் வேண்மாள்', 'உதியன் வேண்மாள்' எனும் பெயர்களை எடுத்தாளுகின்றார். 'நன்னன் உதியன்' எனும் பெயர் *அகநானூறு* 258 ஆம் பாடலில் வருகின்றது. இப்பெயர் ஒருவனையே சுட்டிறது. உதியஞ்சேரலாதனின் முன்னோர் பின்னோர்க்கு 'உதியர்' எனும் பெயர் வழங்கிற்று எனலாம். வெளியன் வேண்மாள் நல்லினி உதியஞ்சேரலாதனை மணந்தபின் 'உதியன் வேண்மாள்' என அழைக்கப்பட்டிருக்கலாம். உதியஞ்சேரலாதனுக்கும் வேண்மாள் நல்லனிக்கும் பிறந்தவர்களே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் பல்யானைச் செல்கெழு குட்டுவனும் ஆவர்.

வஞ்சியின் அருகிலும், கருவூரின் அருகிலும் சேர அரசர்கள் மணவுறவு கொண்ட வேளிர் தலைவர்களுக்கு மாளிகைகள் இருந்தன. கருவூரின் அருகே 'வேண்மாடம்' ஒன்று இருந்தது. இது பற்றிய *புறநானூற்றின்* 13ஆம் பாடலின் பாடற்குறிப்பு (கொளு) வருமாறு:

> சோழன் முடிந்தலைக்கோப் பெருநற்கிள்ளி கருவூரிடஞ்
> செல்வானைக் கண்டு சேரமான் அந்து வஞ்சேரல்
> இரும்பொறையொடு வேண்மாடத்து மேலிருந்து உறையூர்
> ஏணிச்சேரி முடமோசியார் பாடியது

இக்குறிப்பிலிருந்து கருவூருக்குச் செல்வோர் வேண்மாடத்தைத் தாண்டியே செல்லவேண்டும் என அறியலாம். வேண்மாடம் என்பது வேள்மாளிகை ஆகும். வஞ்சியின் அருகிலும் 'வேளாவிக்கோ மாளிகை' ஒன்று இருந்ததாகச் *சிலப்பதிகாரம்* சுட்டுகிறது. (நடுகற்காதை 196-198)

> *பேரிசை வஞ்சிமூதூர்ப் புறத்துத்*
> *தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்*
> *வேளா விக்கோ மாளிகை காட்டி*

என வருவதில் ஆவினன் குடியைச் சேர்ந்த 'வேள்' சுட்டப்படுகின்றான். அவனுடைய மகள் வேளாவிக்கோமான் பதுமன்தேவி ஆவாள். இதனைப் *பதிற்றுப்பத்தின்* 4ஆம் பத்தின்பதிகம் "வேளாவிக் கோமான் பதுமன் தேவி" என்கிறது. வஞ்சி நகர்ப் புறத்தே இருந்த மாளிகையில் இவ்வேளாவிக் கோமான் இருந்ததால் அது 'வேளாவிக் கோ மாளிகை' எனச் சுட்டப்பெற்றது. இம் மாளிகை களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் மற்றும் சேரன் செங்குட்டுவன் காலத்திலும் இருந்துள்ளது. இவற்றால், வேண்மாடம் என்ற பெயரில் கருவூர் அருகிலும், வேள் மாளிகை என்ற பெயரில் வஞ்சி அருகிலும் வேள் அரசர்கள் தங்குவதற்கான அரண்மனைகள் இருந்தன எனத் தெளியலாம்.

உதியஞ்சேரலாதனின் மனைவியான வேண்மாள் நல்லினியின் தந்தையான வெளியன் வேள் கருவூர் அருகிலிருந்த வேண்மாடத்தில் தங்கியிருந்திருக்கலாம். வெளியனின் நாட்டுக்கும், உதியஞ்சேரலாதனின் சேர நாட்டுக்கும் தொடர்பு இருந்திருக்கலாம். உதியஞ் சேரலுக்கு வேண்மாள் நல்லினிக்கும் பிறந்த நெடுஞ்சேரலாதன் மாந்தை எனும் ஊரைத் தலைநகராக வைத்து ஆண்டான்.

வேளிர் எனும் குலத்தாரின் தோற்றம்

வேளிர் குலம் என்ற அரச மரபு இருந்தது என்பதை நம்மில் பலர் மறந்துவிட்டோம். பிற்காலத்தில் பலரும் வேளிருக்கு உரிமை பாராட்டத் தலைப்பட்டனர் எனினும் வேளிர் என்பார் ஓர்

தனித்த குல மரபுடையவர் என்பதை மறந்துவிடக் கூடாது. வேளிரை வேள்வி மறுக்கப்பட்ட மக்களில் ஒருவராகக் கருதி ஆய்வு செய்வது கேலிக்கூத்தாகும்.

புறநானூற்றில் (201) வேளிரின் பிறப்புப் பற்றிக் கூறிய கபிலர் "*வடபால் முனிவன் தடவினிற்தோன்றி*" என்பதால் மலையில் உள்ள நீர்நிறைந்த சிறிய சுனையில் பிறந்தவர் என்பதால் வேளிர் என்பார் மலையில் தோற்றம் பெற்றவர் என்பது உறுதிப்படும்.

நம் இலக்கியங்களில் "குன்ற நாடன் குடி நன்குடையவன்" என்று உணர்த்திக் கூறியிருப்பது உணரற்பாலதாம்.

"*ஐவகை மரபின் அரசர் பக்கமும்*" என்னும் தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் "ஐம்பெரும் வேளிர் குலம்"என்று உரைசெய்தார். அரசர் குலங்கள் ஐந்து என்பது பழங்காலத்தில் இருந்த அமைப்பாகும். இதையே,

> *ஆதிநாள் அரசர் தங்கள் அருங்குலம் ஐந்தும் ஆக்கி*
> *ஓதும் நீர் உலகின் மிக்க ஒழுக்கமும் தொழிலும் தோற்றி*"
> (தூது விடு சருக்கம், பா.535)

என்று *சூளாமணி* குறிப்பிடுகிறது.

குறிஞ்சிநிலத் தலைவர் வேளிர்

குறிஞ்சி நிலத்தின் தலைவராகப் பெரும்பாலும் வேளிர் குறிப்பிடப்பட்டுள்ளனர். பறம்பு மலை, பொதினி மலை முதலியவற்றை ஆண்ட தலைவர்கள் வேளிர் ஆவர். பாரி வேள் இதற்குச் சான்றாவான்.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி' எனச் சிறப்பிக்கப் பெறும் மூத்த தமிழ்க்குடியினரில் பழமையானவர் குறிஞ்சிக் குடியினராகிய முதுகுடி வேளிர் எனலாம்.

பரணர் பாடிய அகப்பாடல் (372) "வேள்முது மக்களைத் தொல்குடியினராகவே'' குறித்துள்ளது.

வேளிருடன் இசைக் கருவிகளும் சேர்த்துக் கூறப்பெறல்

மலைபடுகடாம் நூல் வேள் நன்னனைப் பற்றிக் கூறுகிறது. இவனது பெயரை இணைத்துக் கொண்ட கூத்தர் இருந்தனர். "மானவிறல் வேள் வயிரியம் என்பதற்கு நச்சினார்க்கினியர் "வேளிர் தலைவனின் கூத்தர்" என்று பொருள் கூறியுள்ளார்.

இதுபோன்று பெரும்பாணாற்றுப்படை "செவ்வரை நாடன் சென்னியம்" என்பதற்குச் செவ்வியமலை நாடுடைய வனுடைய பாணசாதியாம்" என்றார்.

வேளிரில் கலப்பு

பிற்காலத்தில் சில சாதியினர் பாண்டிய வேளாளர், சேர வேளாளர் என்று குறித்துக் கூறுவது வந்த வழிக் கண்டறிக.

வீரநாராயணனுக்குரிய கொங்கு நாட்டுச் சங்கிராம நல்லூர் (கி.பி.1146 - 1147) கல்வெட்டு சேர குல மாணிக்கம் தொடர்புடைய ஒருவரைக் குறிப்பிடுகிறது. இவர் சேரர்க்குரிய தேவ கன்னிகள் புதல்வர் என்று தோன்றுகிறது. பிற்காலத்தில் வேந்தர் குலத்தாரின் வீழ்ச்சி தொடங்கியபோது இவரும் வேளிர் என்று சொல்லத்தலைப்பட்டனர்.[84]

சான்றோர் அரசரும் அந்தணரும் வேள்வியும்

தொல்காப்பியம் கற்பியல் 5ஆம் நூற்பாவில் '*அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்*' என்று சுட்டிக்காட்டப்பட்ட சான்றோர் எனும் உயர் சமூகம் பற்றி வேளிருடனான தொடர்பு பற்றியும் இனி ஆராயலாம்.

சேனாவரையர் *தொல்காப்பியச்* சொல்லதிகார உரையில் "பார்ப்பினிக்கும் பார்ப்பார்க்கும் அல்லது பிற சாதியார்க்கும்" (161) என்றார். மேலும் "எல்லாப் பார்ப்பாரும் எல்லாச் சான்றாரும் எனப் படர்க்கைக் கண் வருதலாலும்" (187) என்று கூறுவதிலிருந்து அந்தணரும் சான்றாரும் உயர் மரபிலே தோன்றித் தொன்று தொட்டு இந்நாட்டிலே அமைந்தோர் என்று அறியக்கிடக்கின்றது.

தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பா (28) "*ஓதலும் காவலும் உயர்ந்தோர் மேன*" என்பதையும் இதனுடன் சுட்டலாம்.

களவியல் உரை கூறிய நக்கீரர், "அந்தணர்க்கும் அரசர்க்கும் உரிய" என்று பொருளுரைத்தார். இளம்பூரணரும், "ஓதலும் தூதும் உயர்ந்தோர்க்குரிய" என்னும் நூற்பாவிற்கு அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியது என்றார்.

தீயோடு விளங்கும்நாடன் சோழன்

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடிய புறப்பாட்டு (397)

---

84. S.I.I. Vol. 161, XXVI.

செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை
அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த
தீயொடு விளங்கு நாடன் வாய்வாள்
வலம்படு தீவிற் பொலம்பூண் வளவன்

என்கிறது. அரசர் பொருட்டு அந்தணர் வேள்வி செய்தனர். இதனால் 'தீயோடு விளங்கு நாடன்' என்பது வேள்வித் தீயுடைய சோழவேந்தன் என்பதாம். சோழன் அந்தணரை வைத்து வேள்வி செய்தான் என்பது இதன்மூலம் பெறப்படும்.

சான்றோர் வீரரின் போர்க்கள வேள்வி

கி.பி. 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலாகக் கருதப்படும் *தஞ்சைவாணன் கோவை,*

" நான்மறைக் கேள்வியர் வேள்வியர் சான்றவர் தம்"

என்பதால் வேள்வி தொடர்புடையவர் சான்றவர் (சான்றோர்) என்றும் அறிந்து கொள்ளலாம்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டு நூலான *குலோத்துங்க சோழன் கோவை,*

"மேலாய சான்றவர் வெய்யோனு நம் பெருவேந்தனுமே"

என்பதால் சான்றவர் என்ற சொல் அரசகுலத்தவரைக் குறிக்கும் சொல் எனலாம். சான்றவரையும் அரசனையும் ஒருசேரக் குறிக்கிறது இப்பாடல் அடி.

சேரமான் குலசேகர ஆழ்வாரின் செய்யுளில்,

"தொல்முறை சான்றவ ரொடுபுவி புரக்க சாற்றியே"

என்பதால் தொல்குடி மரபிலே வந்த சான்றவர் ஆட்சிக்குடியினர் என்று அறியக்கிடக்கின்றது.

அந்தணரும் சான்றோரும் அருங்கலன் பெறுவோர் என்று இலக்கண இலக்கிய உரைகளில் காணப்பெறுகிறது.

"அருங்கலம் மிக்க அரசர்க்கே உரிய" என்று சூளாமணி உரைப்பதும் இங்கே உணர்ந்து நோக்கத்தக்கது.

இதனால் போர்க்களத்தில் பகைவரைக் கொன்றும் வென்றும் வேள்வி செய்தனர் வேந்தர் என்பது பெறப்படும்.

பதிற்றுப்பத்து (74) களவேள்வி பற்றிக் கூறியவிடத்து, சேர அரசனை, ''வேள்வி வேட்டனன் என்று கூறுகிறது. அதன் 70ஆம்

பாடல், சேரவேந்தனின் "தொலையாக் கொள்கை சுற்றம் சுற்ற வேள்வியிற் கடவுள் அருத்திணை" என்கிறது. இதற்குச் சான்றோராகிய வீரர் என்று கூறிப் போர்க்களத்தே பகைவரை வென்று களவேள்வி செய்து வெற்றியைத் தந்த கடவுளுக்குப் பலியூட்டி மகிழ்ந்தனர் என்று பொருள் ஆகும்.

முடியும் முரசும் வேந்தர் வேளிர்க்கு உரியன

வேந்தர்களின் தகுதிகளில் பல வேளிர்க்கும் இருந்துள்ளன. படையும், முரசும், குடையும் வேளிர்களிடமும் இருந்துள்ளன.

அரசுபட அமர் உழக்கி முரசுகொண்டு களம் வேட்ட

என்னும் *மதுரைக்காஞ்சி* (128-9) அடிகளுக்கு நச்சினார்க்கினியர்,

> நெடுநில மன்னர் இருவரும் (சேரன், செம்பியன்) குறுநில மன்னர் (திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேளிர்மான், பொருநன்) ஐவரும் படும்படி போரிலே வென்று அவர் முரசைக் கைக்கொண்டு களவேள்வி வேட்ட

என்று விளக்கம் அளித்துள்ளார். இதனால் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனிடம் பொருத வேளிர்க்கும் முரசு உண்டு என்பது அறியத் தக்கதாகும்.

பதிற்றுப்பத்து (30) "பணைகெழு வேந்தரும் வேளிரும்" என்பதற்கான பழைய உரை "முரசினை உடைய முடியுடைய மூவேந்தரும் வேளிரும்" என்கிறது. இதனாலும் முடியினையும் முரசினையும் உடையவர் வேந்தரும் வேளிரும் என்று பெறப்படும்.

அதியமான் நெடுமான் அஞ்சியைப் பற்றி ஔவையார் பாடிய புறப்பாட்டில் (99) "முரசின் எழுவரொடு முரணி" என்பதால் அவ்வெழுவர் வேளிரும் முரசினையுடையவர் என்று பெறப்படும்.

தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரம் (32) "வேந்தன் தொழில் வேளிர்க்கும் உரித்து" என்றும் "வேளிர்க்குப் பொருள்வயிற் பிரிதலும் உரித்து" என்றும் குறிப்பிடுவதால் வேந்தன் தொழிலான அரசத் தொழில் வேளிர்க்கும் தலைமக்களான சான்றோர்க்கும் உரியது என்பதாம்.

இத் தொழில் வேளிர்க்கும் உரித்து என்பதாலே குறுநில மன்னர் வேளிர் ஆவர். பொருள்வயிற் பிரிதல் தலைமக்களுக்கு

என்பதால் மிகத் தெளிவாக வேளிரும் தலைமக்களும் அரசகுடியினர் என்பது தெளிவாகிறது.

குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் "இருக்குவேதம் கூறும் முதற்குலம் சாளுக்கியரின் குலம்" (93) என்று குறித்திருப்பது வேளிர் குலத்தவர் வேள்வி தொடர்புடைய மரபினர் என்பதாம். "வேள்புல சாளுக்கியர்" வேளிர் குலத்தவர் வேந்தரொடு மணவுறவு கொண்டிருந்த மரபினர்.

பதினெண்குடி வேளிர்

நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் பாயிரம் மற்றும் அகத்திணை நூற்பா 32 இன் உரையில்,

> அகத்தியர், துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண் மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும்...
>
> மலைய மாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்'' என்பார்க்கும் வேந்தன் தொழில் உரித்''தென்றார்.

திருக்குறள் உரையில் "பதினெட்டுப் பேர் அரசனின் உறவினர்" என்றார் உரையாசிரியர் பரிமேலழகர். இவர்கள் அரசரும் அரச குடியினரும் என்று பெறப்படும்.

வேளிரில் ஒரு பிரிவினர்

> சீய மங்கலம் வந்தவாசி கல்வெட்டு
>
> இந்நாயனார்க்கு ராஜாக்கள் விட்டும் இராஜ முதலிகள் (அரச குலத்தவர்) பொன்னிட்டுக் கொண்டு தேவதானமாக விட்ட நிலமாவது

என்பதால் பல்வேறு முதலிகளில் ராஜமுதலிகள் வேளிராவர். வேளாள முதலிகள் வேறானவர் என்பதை நாம் உணர்ந்திட வேண்டும்.

வேளிரும் களவேள்விக்கு உரியோர்

மேலும் ஐவகை நிலத்து மக்களும் பிறவும் அந்நிலத்து வேந்தரும் வேளிரும் என்பதாலும் மக்களிலும் வேறுபட்ட அரச குடியினர் என்றும் வேளிரும் வேந்தரும் அறியப்படுகின்றனர்.

மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில் "இருபெரு வேந்தரொடு வேளிர் சாய" (55) எனக் குறிப்பிட்டுள்ளதால் போரின்கண் நின்று நிலைத்த வீரர்கள் களவேள்வி செய்யும் தகுதியுடைய வீரர்களே என அறிந்துகொள்ள முடிகிறது.

வேம்பற்றூர் நம்பி "களவேள்வி போர்புரிந்த காட்டிலே நிகழ்ந்தது" என்று கூறுகிறார். அவர் " பெருங்கள வேள்வி செய்த பீடுடைக் காட்டுநாட்டு" என்பதால் போரின் வெற்றி வேள்வியாக மிளிர்ந்தது எனலாம்.

"களவழி நாடாள்வார்" என்ற அரச மரபினர் எண்ணற்ற கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர்.[85]

பாண்டிய வேந்தர் குடியின் உறவினராக இவர்கள் குறிக்கப் படுவதுடன் "நாடாள்வான்" என்ற உரிமைப் பட்டம் உடையோராகவும் சொல்லப்படுவது உணர்ந்து நோக்கத்தக்கது ஆகும்.

பெருங்கதை வேள்விச் சாலையைத் "தீவேள் சாலை மூட்டி" என்கிறது.

சிலப்பதிகாரம் வேள்விக் கிழத்தியாகச் சேர வேந்தன் செங்குட்டுவனின் தேவி வேண்மாள்தனைக் குறித்து இருப்பதும் சிந்திக்கத்தக்கதாகும். இந்த வேண்மாள் வேள்குலத்தைச் சேர்ந்தவள்.

'வேள்வி சாந்தி' (வஞ்சிக் காண்டம்: நடுகற்காதை :194) இருவகையாக வேள்வி செய்தல், சாந்தி செய்தல் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இருக்கங்குடி கல்வெட்டில் வேளிர் தலைவன் 'பெருஞ்சாந்தி குல மன்னன்' என்று அழைக்கப்படுகின்றான்.[86]

அரச குடியினரே நிலைமை வீரரான நிலைமைக்காரர்

"அடியொதுங்கிப் பிற்பெயராப் படையோர்" என்பவரை வேள்விக்குரிய வீரர் என்று நச்சினார்க்கினியர் குறித்திருப்பதால் இவர் போரின்கண் நிலைநின்ற 'நிலையமக்கள்' என்று பெறப்படும்.

தகடூர் யாத்திரை இவ்வீரரை "நிலையமை நெடுந்திணை" என்று குறிப்பிடுகிறது. இவரே நிலைமையுடைய உயர் பழங்குடி

---

85. S.I.I. Vol. 161, XXVI.
86. S.I.I. Vol. XIV. No. 44,

மரபு வழி வீரராகிய தொல்படையாகும். உயர்திணைப் பிறந்த வீரர் என்றலுமாம்.

மற்றோர் இடத்தில் "வாள்மிகு மறமைந்தர் தோள்வீறு முறையான் முற்றவும்" என்பதிலிருந்து 'மறமைந்தர்' என்பார் இலக்கியச் சான்றுகள்படி உயர்நிலை வீரர் என்று தெரிகிறது.

ஔவையார் பாடிய புறப்பாட்டு (290) வீரக்குடியின் குடிநிலையை உரைக்கிறது. "மறப்புகழ் நிறைந்த மைந்தன்" பற்றி வீரத்தால் கீர்த்தியுடையகுடி யென்று வீரக்குடியின் பெருமையை விளக்கியுள்ளார்.

பதிற்றுப்பத்திலும் (12:8) 'மறம்வீங்கு பல்புகழ்' என்பதற்குப் பழைய உரை. "அரசர்க்குச் சிறந்த மறப்புகழ் மற்றைப் புகழினும் மிக்க பல் புகழ்" என்கிறது.

புறப்பொருள் வெண்பாமாலை செய்யுள் (81) மற மைந்தர் என்பாரை மறவர் என்ற சொல்லிலும் மாறான மூதின்மகளிரின் மகனாக விடலை என்றும் அவர்க்கு இருந்த மதிப்பையும் மரியாதையையும் எடுத்துக் கூறுகிறது.

வீரக்குடியிலே பிறந்த முதுகுடிப் பாண்டியரைக் குறித்து,

இலங்கு அருவிய வரை நீந்திச்
சுரம் போழ்ந்த விகலாற்ற
உயர்ந்த ஓங்கிய விழுச்சிறப்பின்

என்ற மதுரைக்காஞ்சி (57-59) அடிகளுக்கு

உயர்ந்து விளங்குகின்ற அருவிகளை உடைய மலையிற் குறிஞ்சி நில மன்னரை எல்லாம் வென்று உயர்ந்த சீரிய தலைமையினாலே

என்று மலையரசர்களை வென்று வேந்தனானவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் என்கிறார்.

பொதிய மலையில் தோன்றிய குடியாகவே சுட்டிக் காட்டப்பட்ட பழங்குடி பாண்டியர் குடி என்று உரைத்தனர்.

'மலைநாடன்' என்ற பெயர் சேரர்க்கும் உரியது. குறிஞ்சித் தலைவனைக் 'கானகநாடன்' என்று இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

மலையும் மருதமும் வேந்தர்க்கும் வேளிர்க்கும்

வேளிரில் மேம்பட்டு வேந்தராக உயர்ந்தவரே மூவேந்தர் எனப்பட்டனர். அம்மூவேந்தரில் பழமையானவரான பாண்டியர் பற்றிக் குறித்திருப்பது உயர்குடியின் தொடர்பை உணர்த்துவது ஆகும்.

மலை நிலத்தினை ஆண்ட மன்னரை மலைநாடன் என்பது போன்று *திருக்கோவையார்* "தொல்வரை நாடர்" என்று தலைமகனாக இறைமகனை உணர்த்துகிறது.

பொன் நாடனைத் தாளும் புத்தோட் புனிதனை
தொல்நாடனை நாம் தொழ வாரீர்

என்று பொன்னி நாட்டினை ஆண்ட சோழர் குலத்தவனைச் *சங்கர சோழன்உலா* (கண்ணி 113) குறிப்பிடுகிறது.

எனவே மலைகளின் ஆட்சித்தலைமை வேந்தர் குடிக்கும் வேளிர்க்கும் உரித்தது. வேந்தர் குடியினர் தொல்மரபிலே தோன்றியவர்கள். புதிதாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த கூற்றுவ நாயனார்க்கு நெடுமுடி சூட்டமாட்டோம் என்று தில்லைவாழ் அந்தணர்கள் மறுத்துரைத்ததைச் சேக்கிழார் எடுத்தோதுகிறார்.

.... செம்பியர் தம்
தொல்லை நீடும் குலமுதலோர்க்கு
அன்றி சூட்டோம் முடிஎன்று

தில்லை மூவாயிரத்தவரான பூர்வ அந்தணர் கூற்றுவ நாயனார்க்கு முடிசூட்டிட மறுத்துவிட்டனர் என்று அறியப்படுகிறது.

உலகின் தோற்றத்தில் மன்னர் குலத்தவர் மலைகளின் மன்னராகவே இருந்து, மருத நிலம் உருவாக்கி வாழ்ந்தவர்.

அரசனுக்கும் சான்றோருக்குமே இருநிலம் சொந்தம்

மேலே சொல்லப்பட்ட அரச குடியினரே நில உடைமையாளர் ஆவர். *மதுரைக்காஞ்சியில்* (60) *'நிலம் தந்த பேருதவி'* என்பதற்கு *'நாட்டிலிருக்கின்ற அரசர் நிலங்களை எல்லாம் கொண்ட பெரிய உதவியும்'* என்று இந்தப் பெரிய நிலப்பரப்பு முழுமையும் அரசர்க்கு உரியது என்கிறார் நச்சினார்க்கினியர்.

இருநிலம் என்பது சான்றவர்க்குரியது என்பது வள்ளுவரின் வாக்காகும்.

புறப்பொருள் வெண்பாமாலை அரச முல்லை (171) செய்யுள் "இருநிலங்காவலன்" என்று அரசனின் தன்மையைக் கூறுகிறது.

காவன் முல்லை (178) பாடல் வெண்குடைக் காவலன் குடிப்பிறப்புடைய சான்றோர் என்று உறுதிப்படுத்துகிறது.

இருநிலம் அரசர்க்குரியது என்பதால் இரண்டாம் இராசேந்திர சோழன் மெய்க்கீர்த்தி "இருநிலக் கிழத்தியைப் புணர்ந்து" என்று வேந்தர்கள் தம் கல்வெட்டுகளில் குறித்தனர்.[87]

சோழர் குலத்தவர் சிலர் தம்மை "இருநிலம் ஆளவந்த பெருமாள்" என்று கல்வெட்டில் அழைத்துக் கொண்டனர். [88]

வேறுபல இலக்கியங்களிலும் இருநிலம் அரசர்க்குரியதாக அறியப்படுகிறது.

இருநிலம் காப்பா யாகுமதி கடனென
மாபெருந் தானை மன்னர் ஏறே

என்று யாப்பருங்கல விருத்திச் செய்யுளியல் மேற்கோள் பாடல் கூறுவதால் இருநிலத் தொடர்பு மன்னர்க்குரியது ஆகும்.

கல்லாடம்,

இருநிலம் காத்தலின் மதியுடை வேந்தும்
பலஉயிர் தழைக்க ஒருகுடை நிழற்றும் இருநில வேந்தர்..

என்னும் அடிகள் வாயிலாக இருநிலம் என்பது அரசரொடு தொடர்புடையது என்று வெளிப்படுத்துகிறது.

பிற்காலத்தில் பாடப்பட்ட ஆத்திகுடிப்புராணம் இருநிலம் காப்போர் சிலம்பம் கரடியும் வித்தையும் உடைய குரிசில் என்பதால் வீரக்குடியினராகிய வேந்தரே இருநிலத்திற்குரியார் என்று அறியலாம். அவரைச் சான்றவர் என்று குறித்துள்ளார்.

இரு நிலமும் இராசகுலவர் காணிப்பற்றும்

கல்வெட்டுகளில் இராசகுலவர்க்குரிய காணிப்பற்று "இராச குலவர் காணி" என்றும் அடையாளப்படுத்தப் பட்டிருப்பது முழுமையாக அறியப்பட்டால் மட்டுமே இருநிலம்பற்றித் தெரியவரும்.

---

87. S.I.I. Vol. XIV. No. 44,
88. Ibid. வெளியீடு 1980 (மேற்படி துறை))

இரண்டாம் இராச ராச சோழனின் கி.பி.1150-1151இல் அமைந்த திருக்கடையூர் கல்வெட்டு, [89]

இராஜகுலவர் காணி கொள்வாரும் இருவேலி
நிலத்துக்கு மேல் குடிமக்கள் காணி கொள்வாரும்

என்று குறிப்பிடுவதால் தமிழக நிலவுடைமையில் இராசகுலவர் காணி என்று நிலவுடைமை இருந்ததும் அவர்கள் குடிமக்களிலும் வேறானவராகக் கருதப் பெற்றனர் என்பதும் தெரியவரும்.

முதலாம் குலோத்துங்கன் ஆட்சி ஆண்டு 49க்குரிய கி.பி.1118-1119 இல் அமைந்த கள்ளப் பெரம்பூர் கல்வெட்டு "இராச குலம் பண்ணி வர்ணஞ் செய்வாரும்" என்பதாலும்[90] அரசகுலம் என்ற வர்ணம் இருந்தது என்று கல்வெட்டுகளாலும் இலக்கியங் களாலும் உரையாசிரியரின் குறிப்புகளாலும் தெரியவருகிறது.

மேற்கோளாக, செயிற்றியம் "அறம் பொருள் இன்பம் அரசர் சாதி" என்று கூறுகிறது.

பரிமேலழகர் "அரசன் என்பதோர் சாதியும் சேரமான் என்பதோர் குடியும்" என்று சேர வேந்தர்குடியைக் குறித்து திருக்குறள், உரையில் குறித்துள்ளார்.

---

89. S.I.I. Vol. XXII.

1. "திரைலோக்கி கல்வெட்டு" இரண்டாம் இராசராசனுக்குரியதாகும் (கி.பி. 1150-1151). (தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தொடர் எண் 129/1979 கும்பகோணம் கல்வெட்டுகள் - பதிப்பாசிரியர் நா. மார்க்சீய காந்தி வெளியீடு 1980 (மேற்படி துறை), இக்கல்வெட்டு கி.பி. 1998இல் திரைலோக்கி (கும்பகோணம்) கல்வெட்டு, திரு. சீ. இராமச்சந்திரனால் நேரில் சென்று மறுவாசிப்பு செய்யப்பட்டது. திரு. நெல்லை நெடுமாறன் உடன் சென்றார். கல்வெட்டு வாசிப்பில் சில குறைகள் கண்டறியப் பட்டன. **வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்** என்ற நூலில் சீ. இராமச்சந்திரன் கல்வெட்டு விவரங்களைக் குறித்துள்ளார்.

2. இராசகுலவர் காணிப்பற்று ARE 257, 259/1926 பழவூர். அரசகுலத்தவரிடமிருந்து இராசகுலவர் காணி பறிக்கப்பட்டது எனத் தெரிகிறது (இராசாதிராசன் காலம் கி.பி. 1163-1178). **வரலாற்றுப் போக்கில் தென்னக சமூகம்**, பக். 233-234இல் இக்கல்வெட்டு வாசகங்களை ஆசிரியர் நொபொருகராஷிமா குறித்துள்ளார். மொழிபெயர்ப்பு முனைவர் சு. இராசகோபால் முதலியோர், தொல்லியல் கழகப் பதிப்பு (1995) சிறந்த அறிஞரான முனைவர் நொபொருகராஷிமா இக்கல்வெட்டு தொடர்பான விவரங்களை ஆராய்ந்து கூறாமல் இராஜகுலவர் என்று சிலர் சொல்லிக் கொண்டார்கள் என்று பிழை செய்து கருத்துகளைக் கூறியுள்ளார்.

பதிற்றுப்பத்து (75:4) "வேந்தரும் வேளிரும் பிறரும்" என்பதிலிருந்து இராச குலவர் அல்லாத மக்களைப் பிறர் என்று கூறிக் குடிமக்கள் என்று கூறினார்.

முனைவர் வி.வேதாசலம் கண்டறிந்த (அருப்புக் கோட்டையில்) கல்லுமடைக் கல்வெட்டில், "பிரம்மதேயக் கிழவர் பார்ப்பார சான்றார்'' என்ற இருபிரிவினரைப் பார்குடிகள் என்ற குடிமக்கள் பட்டியலில் உள்ளடக்கிக் குறிப்பிடவில்லை.[91] எனவே அரச குலவர் என்பார் குடிமக்களிலும் வேறான தகுதிகளோடு வாழ்ந்துள்ளனர் எனலாம்.

குடிமக்களில் காணி நிலம் பெற்றோர் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் கோவில்களில் காணி பெற்றோராக இருந்தனர்.

மேலே கண்டவற்றால் அரசர் மரபு வழியினர் மலையிலே தோன்றி, நிலத்தை ஆண்டனர். இலக்கியங்களில் புலவர்கள் அரசரைச் சிறப்பித்த இடத்து வீரக்குடியினராகவே குறித்தனர். இவரே தமிழ்நாட்டின் நில உடைமையாளர் என்பது கல்வெட்டுகளில் சொல்லப்பட்ட பாடமாகும்.

அரசுரிமை பெறுவோரின் அண்ணல்

மதுரைக்காஞ்சியில் "அடுபோர் அண்ணல்" (207) என்ற பாடல் அடிக்கு நச்சினார்க்கினியர் "போர்த் தொழில் வல்ல தலைவனே" என்பதால் வல்ல மக்கள் குடித் தலைவனே அரசன் என உணரப்படும்.

இவ்வாறே அதன் 130ஆம் அடி, ''அருதிறல் உயர் புகழ் வேந்தே'' எனப் பாண்டியனை விளிக்கின்றது.

கி.பி.19 ஆம் நூற்றாண்டு நூலான *அகிலத் திரட்டு அம்மானை*, வல்ல மக்களைப் போர்க்குடியாகக் குறிப்பிடுகிறது.

முதுகுடி வீரரான சான்றோர் மறவர்

கி.பி. 9ஆம் நூற்றாண்டினரான ஐயனாரிதனார் பழைய மறக்குடி பற்றி எடுத்தோதுகின்றார்.

முதுகுடி மறவர் முன்னுறச் சூழ
கொதியழல் வேலோன் குடை சென்றன்று

---

90. S.I.I. Vol. XVII. No. 627.

91. இக்கல்வெட்டு அந்தணர், பிரம்மசத்திரியர் மற்றும் பார்குடிகள் எனப் பல்வேறு சமூகங்களையும் விவரிக்கிறது.

என்னும் அடிகளில் வேந்தனின் கொற்றக்குடையைப் பாதுகாக்கும் போரில் நீங்காத வீரர் முதுகுடி மறவர் என்று குறிப்பிடுகின்றார்.

முதுகுல மன்னர் முடி வணங்க வந்த
விதுகுல நாயகி சேயென்பார்

என்று *குலோத்துங்க சோழனுலா* (111-112) காட்டுவதால் மூத்த குலத்தவரே முதுகுலம் என்னும் அரசகுலத்தினர் ஆவர். முதுகுல மன்னரும், முதுகுடி மறவரும் பழமை மிகுந்த ஒரே குடியின்கண் தோன்றிய வீரமரபினராம்.

புறப்பொருள் வெண்பாமாலை (64) "முத்து விளங்கும் ஆபரணத்தையுடைய மன்னன் தம்மில் இன மொத்தவருக்கு ஆயுதத்தைக் கொடுத்தது" என்கிறது. பழைய மறவர் குடி என்பது இந்நூல் சொல்லும் பாடமாகும்.

படை வழக்கு என்பது படையாளரைக் குறிக்கும். சேரர் தம்மில் ஒத்த குடியினரான முதியரைப் பேணினர். *பதிற்றுப்பத்தின்* மூன்றாம் பத்துப் பதிகம் "மதியுறழ் மரபின் முதியர்" என்பது முதியவீரராகிய அரசகுடியை என்பதாம். இந்த முதியரைப் பற்றி வேறிடத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

மேலும் 'முதியம்' என்ற சொல்லுக்குப் 'பழையோம்' என்று பொருளுரைத்துள்ளனர். வள்ளுவம் "பழைமை" என்ற அதிகாரத்தின் கீழ்க் குறிப்பிடப்படுவோர் அறியப்பட வேண்டும் என்கிறது.

கொற்றக்குடை பன்மரான மூலப்படைச் சான்றோர்

அறக்குடியிலே பிறந்து வீரம் காட்டிநின்று அரசனின் படையில் நிலைநின்று அரசனின் கொற்றக் குடையைக் காத்த வீரர்கள் பிற்காலக் கல்வெட்டுகளில் *"கொற்றக் குடை பன்மர்"*[92] என்று அடையாளம் காட்டப்படுகின்றனர்.

கி.பி.1050இல் அமைந்த கல்வெட்டு,[92]

கொற்றக் குடை பன்மர் முந்நூற்றுவரும் கொங்கவாள்
எழுநூறும் அங்கக் காறனும் ஆவணக் காறனும் உலகனும்
உழ் பசும்மைக் காறனும்

என்பதால் வணிகச்சாத்துக்கு அரசனின் படைவீரர் பேருதவியாக இருந்தனர் எனத் தெரிவிக்கிறது. முதலாம் இராசாதிராசனின்

---

92. ARE/714/1905

திருக்கருகாவூர்[93] கல்வெட்டு சோழ வேந்தன் குலத்தவருக்கு நாடுகள் வழங்கியதைக் குறிக்கின்றது.

தாதை முன் வந்த போதலர் தெரியல்
விக்கிரம நாராயணன் தன்னை
சக்கர மடிப்படுத்தருளிற் கவனவதரித்த
ஒன்பதாம் நாளில் பொன்னணி,
மௌலி வாழியர் பூவேந்திய சோழ னெனப்
புனைந்து

என்பதால் சோழரின் தொடர்புள்ள முற்குலத்தவன் பூவேந்திய சோழன் மரபினர் என்று புலனாகிறது.

விக்கிரம சோழனின் ஆட்சியாண்டு ஐந்துக்குரிய கி.பி.1123இல் அமைந்த சாட்டியக்குடிக்(நாகை) கல்வெட்டு[94]

கொற்றங்குடை ஸ்ரீ கோ(மகன்) பூவேந்திய சோழனும்

என்று சுட்டிக்காட்டுவதால் பூவேந்திய சோழன் பட்டம் சான்றார்க்குரியது ஆகும்.

இதனால் கொற்றக் குடை பன்மர் என்பார் போர்மரபு வழிச்சான்றார் என்று உணரக்கிடக்கின்றது. இவர் மூலப் படையினர் என்று கி.பி. 1000இல் அமைந்த பழநிக் கல்வெட்டு[95] கூறுகிறது. அது வருமாறு:

ஸ்வஸ்திஸ்ரீ கோவீர நாராயண வீரகேரளர்க்குச்
செல்லாநின்றயாண்டு இருபத்தொன்பதாமாண்டு மூல பல
எழுநூறு கொற்றவாளருமிருந்து

என்பதால் மூலப்படையினர் என்ற உயர் மரபு வீரர் இருந்தது தெரியவருகிறது.

மூலப் படையின் தலைவராக மிளிர்ந்த சோழ மன்னர்களைச் "சோழர்கள் மூலப்ருத்தியர் ஸ்ரீபராந்தக தேவரான ஸ்ரீ வீர சோழ பெருமானடிகள்" என்று அடையாளமிடப் படுகின்றனர்.[96]

---

93. இச் சாட்டியக்குடி கீழ்வேளூர் அருகில் உள்ளது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு, நாகப்பட்டினம் மாவட்டக் கல்வெட்டுகள், பக். 41-42.

94. மேற்படி.

95. ARE 714/1905

96. ARE 182/1905-6

முதலாம் இராசராச சோழன் (கி.பி.1014) ஆட்சிக் காலத்தில் "மூலபரிவார விட்டேரான ஜனநாதத் தெரிந்த பரிவாரத்தார்" என்ற படைப்பிரிவினர் இருந்தனர் என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது.[97]

வள்ளுவம் "தொல்படையை மூலப்படை" என்கிறது தொல்படையினர் அரசனின் முன்னோர் என்று பரிமேலழகர் உரைசெய்துள்ளார். மேலும் படைப் பிரிவுகள் பற்றி

1. மூலப்படை
2. கூலிப்படை
3. நாட்டுப்படை
4. காட்டுப்படை
5. துணைப்படை
6. பகைப்படை

என்று அறுவகையாகப் பகுத்துக் கூறினார். அறுவகைப் படையுள் சிறப்புடையதும் முதலாவதும் மூலப்படையாகலின் அதனை "அரசன் வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்டையும் கொல்களிறும் மாவுங் கொடுத்தளிக்க" என்று குறித்துக் காட்டினார்.

வடநூலார் தொல்படையாகிய அரசனின் முன்னோர் அமைந்த படையை மௌலம் என்றார். மூலப்படைக்கு மட்டும் தனிச்சிறப்பு அளிக்கப்பட்டிருந்ததைப் பரிமேலழகர் வலியுறுத்துகின்றார்.

இவரை "வேல் நிழல்" என்று மலைபடுகடாம் (88) வலியுறுத்தும். கல்வெட்டுகளில் வீரர்கள் நிழல் என்று அழைக்கப் பட்டிருப்பதும் எண்ணுதற்குரியது. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் அவரை "அறிவுடையோர்" என்ற வீரர் என்றார். அது வருமாறு:

மிகுந்தன வாயினும் தெவ்வர் தோம்
நுகம்படக் கடந்து நூழிலாட்டிப்
புரைத்தோல் வரைப்பின் வேல் நிழல் புலவோர்....

இதற்கு நச்சினார்க்கினியர்,

> பகைவர் தேயம் சேணிகந்தன வாயினும் ஆண்டுச் சென்று தூசிப் படையைக் கொன்று குவித்து வலியுண்டாகவென்று பின்னர் உயர்ச்சியையுடைய யானை அணிந்து நிற்கின்ற

---

97. S.I.I. Vol. II, No. 64. p. 95

> அணியிலே சென்று பொருத வேற்றோரின் விளக்கத்தையுடைய அறிவுடையோர்

என்கிறார். இந்த நிழல் வீரரைப் பற்றி முற்பகுதியில் குறிப்பிடப் பட்டிருந்ததைக் காண்க. இவ்வாறான வீரர்களையே *மதுரைக் காஞ்சியும்* குறிப்பிடுகிறது.

மதுரைக்காஞ்சியில் முதுகுடி வீரரின் வீரத்தை "மறம் கலங்கத் தலைச்சென்று" (221)என்று மாங்குடி மருதனார் குறிப்பிட்டுள்ளார்.

"வாள் உழந்து அதன்தாள் வாழ்த்தி"(222) என்னும் அதன் மற்றொரு அடியினை விளக்கிய நச்சினார்க்கினியர்

> அவர்க்கு வாட்போரிலே வருந்தினபடியாலே அவ்வருத்தத்தினாற் பின்பும் அதன்கட் பிறக்கின்ற முயற்சியை வாழ்த்தி என்றது வாட்போரின்கட் பெற்ற இனிமையைப் பின்னும் விரும்பி அதிலே முயல்கின்றாரென வீரச் சிறப்புக் கூறிற்றாம்

என்று குறிப்பிட்டுள்ளார். இந்த விளக்கத்தின் வாயிலாகச் சான்றோர் என்னும் தொல்குடியாம் வீரக்குடியினரின் வீரம் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. வீரம் மிகுந்து வெளிப்படும் அறப்போர் செய்தல் கருதிப் பாசறைப் பாண்டியவேந்தன் தன் முன்னோராகிய தன்குலத்துள்ளோர் புகழைக் கேட்டற்கு விரும்புவன் என்று கருதி விடியற்காலத்தே பாசறைக்கண் பாணர், அகவர் போன்றோர் வந்து பாடி மகிழ்வித்தனர் என முன்பே பார்த்தோம். இதனை உணர்த்தும் *மதுரைக்காஞ்சி* (223-224) அடிகள் வருமாறு:

> *நாள் ஈண்டிய நல் அகவர்க்குத்*
> *தேரோடு மா சிதறி*

என்பதற்கு உரையாக நச்சினார்க்கினியர்,

> விடியற்காலத்தே வந்து திரண்ட அரசர் விரும்பப் பட்ட சூதர்க்குத் தேருடனே குதிரைகளையும் பலவாகக் கொடுத்து

என்கிறார்.

வேள்வியும் வேந்தரும்

மதுரைக்காஞ்சியில் பாண்டியரின் படைவீரர்கள் களவேள்வி செய்யும் நிலையுடைய உயர்மரபினராகக்

குறிக்கப்பட்டுள்ளனர். களவேள்வியைப் பற்றி வேறு நூல்களில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. *மதுரைக்காஞ்சி* (37-39)

அடியொதுங்கிப் பிற்பெயரா
பன' -யோர்க்கு முருகயர
அம/ கடக்கும் வியல்தானை

என்னும் அடிகளுக்கு விளக்கம் எழுதிய நச்சினார்க்கினியர்

இட்ட அடிவாங்கிப் பின்போகாத வீரர்க்கு வேள்வி செய்யும்படி போரை வெல்லும் அகலத்தை யுடைய படையினையுடையவர் பாண்டியர்

என்கிறார். வேள்விகளில்,

1. களவேள்வி
2. இராச சூய வேள்வி
3. துரங்க வேள்வி

போன்றவை அரசர்க்குரியவை. புறப்பாட்டு இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி பற்றிக் குறிப்பிடுகிறது.

பதிற்றுப்பத்தில் வரும் பல்யானைச் செல்கெழு குட்டுவன் தன்னைப் பாடிய பாலைக்கௌதமனார்க்காகப் பத்துப் பெருவேள்விகள் செய்தவன்.

களவேள்வியை இரு கூறாகக் கூறுவர். அவை:

1. அறக்கள வேள்வி
2. மறக்கள வேள்வி

மதுரைக்காஞ்சியில் (494-95) தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் களவேள்வி செய்தான் என்று மாங்குடிமருதனார் கூறியுள்ளார். இம் மன்னன் அறக்களவேள்வி வேட்டான் என்று புறப்பாட்டும் (29) கூறுகிறது.

ஆவுதி மண்ணி அவிர் துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல்

என்று மாங்குடி மருதனார் குறிப்பிடுவதால் வேள்விகள் செய்து மேல் உலகமாகிய சொர்க்கத்துக்குச் செல்லலாம் என வேந்தர் குடியினர் கருதினர் எனலாம்.

மறக்கள வேள்வி செய்த பாண்டியன் முதுகுடுமிப்பெருவழுதி

குடுமி, முதுகுடுமி எனப் புறப்பாடல்களில் குறிப்பிடப் பெற்ற இப்பாண்டியன் *மதுரைக்காஞ்சி* உரையில் ''பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி'' என நச்சினார்க்கினியரால் அழைக்கப் படுகிறான். *தொல்காப்பியச்* சொல்லதிகாரம் கிளைவியாக்கம் நூற்பா-26இன் உரையில் உரையாசிரியர் சேனாவரையர் இவனைப் ''பெருந்தோள் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி'' எனக் குறிப்பிடுகின்றார்.

முதுகுடுமி செய்த வேள்விகள்

இப்பாண்டியன் ஒவ்வொரு போரின் இறுதியிலும் வெற்றியின் அடையாளமாக வேள்வி செய்து, வெற்றித்தூண் நாட்டி, அவ்வேள்வி சார்ந்த பகுதியைத் தானம் செய்வதை வழக்கமாய்க் கொண்டிருந்தான்.

அப்படி அவன் தானம் செய்த வேள்விக்குடி என்ற ஒரு பதியைப் பாண்டிய நாட்டைப் பிற்காலத்தில் கைப்பற்றிய களப்பிரர் தானம் பெற்றவன் சந்ததியினரிடமிருந்து பறித்துக் கொண்டனர்.

களப்பிரரை வென்று பாண்டிய நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்த முதுகுடுமிப் பாண்டியனின் வமிசத்தோனான கடுங்கோன் (கி.பி.575) என்பவன் அவ்வேள்விக்குடிப் பகுதியை மீட்டு மீண்டும் அச்சந்ததியில் வந்தவர்க்கு நல்கினான். இவ்வரலாற்றைப் பாண்டியன் நெடுஞ்சடையன் (கி.பி.8ஆம் நூற்றாண்டு) வெளியிட்ட வேள்விக்குடி செப்பேடுகளின் அடிகளிலிருந்து அறியலாம்.

கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாந்தவிர்த்த
பல்யாகமுதுகுடுமிப் பெருவழுதி யெனும்பாண்டியாதி ராசனால்
நாகமா மலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்
பாகனூர்க் கூற்றமென்னும் பழனக் கிடக்கை நீர்நாட்டுச்
சொற்கணாளர் சொலப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத
கொற்கை கிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்க
கேள்வி வந்தணாளன் முன்பு கேட்கவென்று எடுத்துரைத்து
வேள்விச்சாலை முன்புநின்று வேள்விக்குடி யென்றப் பதியைச்
சீரோடு திருவளரச் செய்தோர் வேந்தன் அப்பொழுதே
நீரோடட்டிக் கொடுத்தமையான் நீடுபுக்கி துய்த்தபின்
அளவரிய அதிராசரை அகலநீக்கி யகலிடத்தைக்
களப்பரனெனுங் கலியரைசன் கைக்கொண்டதனை யிறக்கியபின்
படுகடன் முளைத்த பருதிபோல் பாண்டியாதிராசன் வெளிப்பட்டு

விடுகதி ரவிரொளி விலக வீற்றிருந்து
வேலை சூழ்ந்த வியலிடத்துக்
கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கிச்
செங்கோல் ஓச்சி வெண்குடை நீழல்
தங்கொளி நிறைந்த தரணி மங்கையைப்
பிறர்பால் உரிமை திறவிதி னீக்கித்
தன்பால் உரிமை நன்கனம் அமைந்த
மானம் போர்த்த தானை வேந்தன்
ஒடுங்கா மன்னர் ஒளிநகர் அழித்த
கடுங்கோன் என்னும் கதிர்வேல் தென்னன்

முதுகுடுமிப் பெருவழுதியைப் போல் நெடுஞ்சடையன் எனப் பெயரடை பெற்ற, இச்செப்பேட்டை வெளியிட்ட, இப் பாண்டியன் வாழ்ந்த காலக்கட்டம் வரை, ஏறத்தாழ 1000 ஆண்டு களுக்கு மேலாக இம் முதுகுடுமி நினைவுகூரப்பெற்றுள்ளான்.

பாண்டியர் வெளியிட்ட காசுகள்

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் *புறநானூற்றில்* அவனுக்கு முன் பாடப்பெற்றுள்ள (புறம்.3) கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதியும் **வழுதி** எனும் கிளைப்பெயர் கொண்டவர்கள். இவர்கள் காலத்தியதாகச் சில செப்புக் காசுகளைக் கண்டறிந்து இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் *பாண்டியர் பெருவழுதி நாணயங்கள்* (1987) என்ற தலைப்பில் நூலொன்று வெளியிட்டுள்ளார். இந் நாணயங்களில் பெருவழுதி என்ற பெயர் தமிழ்-பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது என்கிறார். கூடவே அதன்கீழ்க் குதிரையின் வடிவம் உள்ளது. பின்புறத்தில் கயல் இடம்பெறுகின்றது. சில நாணயங்களில் யூபம் என்ற யூபத் தூண் அல்லது வேள்வித்தூண் மேடை மீது இடம் பெற்றிருக்கும். மரமும் வேள்வி இடமும் காட்டப்பெற்றிருக்கும். இந்நாணயங்களில் வேள்வித்தூணை நோக்கிக் குதிரை நின்று கொண்டிருப்பதும் அதனைப் பிணைக்கக் கயிறும் கயிறு இல்லாமலும் காணப்படுகின்றன. இவற்றை வைத்து, இக்குதிரை இப்பாண்டியனின் அசுவமேதயாகக் குதிரை என்றும் அதைக் கட்டி வைக்கவே தூண் இடம்பெற்றுள்ளது என்றும் கூறப்பெற்றுள்ளது.

இப்பாண்டியன் அசுவமேதயாகம் செய்தான் என்ற கருத்து இங்குப் பொருந்துவதாகத் தெரியவில்லை.

புறநானூற்றில் காரிகிழார் மற்றும் நெட்டிமையார் பாடிய பாடல்களில் (6 மற்றும் 9,12) இப்பாண்டியன் செய்த யாகம் பற்றிக்

குறிப்பில்லை. நெட்டிமையாரின் 15 ஆம் பாடலில் மட்டும் வேள்வி முடித்துத் தூண் நடப்பட்ட அகன்ற களம் காட்டப் படுகின்றது.

சோழன் கரிகால் பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடிய புறப்பாடலில் (புறம்.224:7-7)

பருதி யுருவில் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழின் முடித் ததூஉம்

வட்டவடிமாகிய வேள்விக் களன், பருந்து மற்றும் நெடிது உயர்ந்த வேள்வித்தூண் இவற்றைச் சுற்றி மதிலும் இருந்ததாக இப்பாடலில் சுட்டப்பெறுகின்றது.

சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடிய புறப் பாடலில் (புறம்.400:19) "கேள்வி மலிந்த வேள்வித் தூண்" எனவும் வருகின்றது. இவற்றால், அசுவமேதயாகக் குதிரையோ அது கட்டப் பெற்ற தூணோ இப்பாடல்களில் காணப்பெறவில்லை. பெருவழுதி நாணயங்களில் உள்ள குதிரை பாண்டியர்க்குரிய குறியீடு என்றும், வேள்வித்தூண் என்பது அப்பாண்டியன் வென்ற போரின் இறுதியில் கொண்டாடிய வெற்றியின் அடையாளமான வெற்றித்தூண் என்றும் கொள்ள வேண்டும்.

முன்பு 'புரவி ஐவர்' (புறம்2) எனக்குறிப்பிட்டது பாண்டியரைக் குறிக்கவே என இங்கும் உறுதிப்படுகின்றது. இப்படியான அகன்ற வேள்விக் களன் ஒன்றையே முதுகுடுமி தானம் செய்ததாக வேள்விக்குடி செப்பேடுகளால் அறிகிறோம். வேள்விக் களன் ஓர் ஊர் அளவினதாகும்

இனி, தொல்காப்பியம் புறத்திணையியல் நூற்பா 36இல் வரும் 'மன் எயில் அழித்த மண்ணு மங்கலமும்' என்ற அடிக்கு உரை கூறும்போது நச்சினார்க்கினியர் *புறநானூற்றின்* 15ஆம் பாடலடிகளை மேற்கோள்காட்டி, முதுகுடுமிப் பெருவழுதி பிற மன்னர்களின் எயில்களை அழித்ததைக் கூறி, வேள்வி முடித்துத் தூண் நாட்டி, "ஒருவாற்றான் மண்ணியவாறுங் கூறியவாறு காண்க" என்பதால் மங்கலமாக நீராடுதலையும் செய்தான் என்கிறார்.

இவற்றால் பெருவழுதி நாணயங்களில் இடம்பெற்றிருக்கும் அசுவமேதயாகக் குதிரை, மரம், தூண் போன்றவற்றுக்கும் புறப்பாடல்களில் குறிப்பிடப்பெற்றிருக்கும் வேள்விக் களன்களுக்கும் தொடர்பில்லாததாகவே தெரிகின்றது.

சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து

என்னும் *மதுரைக்காஞ்சி* (468-69) அடிகளாலும் இவ்வடிகளுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியரின் கூற்றாலும் தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பா (20) உரையாலும் பாண்டியர் மேற்கூறிய மூவகை வேள்விகள் செய்தது உறுதியாகிறது.

அந்தணரும் அரசரும் வேள்வியும்

சங்க இலக்கியத்தில் மட்டுமின்றி வேறு இலக்கியங் களிலும் அரசர் செய்த வேள்விக்கு அந்தணர் உதவி நின்றனர் என அறிய முடிகின்றது. கல்வெட்டிலும் வேள்வி செய்த அந்தணர் வேள்வியின் பயனை உணர்ந்த வேந்தர் பற்றியும் அறிகின்றோம்.

மூவேந்தர் குடியினரும் வேள்வி செய்தல்

மன்னர் குலத்தவர் வேள்விசெய்து வந்துள்ளனர் என்று புறப்பாட்டிலும் சொல்லப்பட்டுள்ளது. அசுவமேத யாகம் செய்த சோழவேந்தன் முதலாம் இராசாதிராசன் பற்றிக் கல்வெட்டுகளில் பாடங்கள் உள்ளன. அதன் தொடர்ச்சி பிற்காலத்திலும் இருந்ததைக் ***குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்*** வலியுறுத்துகின்றது.

உரிய நால்பெரு வேதா சாரா (பா.24)

சுருதி நூல் தொடை மாலா காரா!
மேனாள் கார் தொடரின் வீக்கிய வீரா (பா. 23)

என்பதால் நான்கு வேதங்களைக் கற்று வேதத்துவழி ஒழுகுபவர் என்றும் வேதத்தையே மாலையாகத் தொடுப்பவன், மேகத்தைப் பிணித்த மரபில் வந்த பாண்டிய வீரன் என்றும் கூறுகிறது. 'சுருதிநூல் தொடை மாலா காரா' என்பது பாண்டிய குலத்தில் வந்த, *திருவாய்மொழி* அருளிய நம்மாழ்வாரைக் குறிப்பிடக்கூடும்.

படைவீரர்களில் மேல்நிலையில் உள்ளவர்களும் வேள்விக் குரியவர்களே. சேரவேந்தர் குடியில் தோற்றம் பெற்றிருந்த வீரர்களை "வேள்விக்குரியவர்" என இயம்புகிறது *பதிற்றுப்பத்து*.

"உயர்ந்தோர் உவப்ப" என்ற தொடருக்குத் தரப்பட்ட பழைய உரையில் வேள்வி செய்யும் உரிமையுடைய அந்தணர், சான்றோர் உவப்பச் செய்தனர் என்பதால் வேள்விபுரிந்த வீரர்கள் இருந்தனர் என்பது உறுதியாகிறது.

தொல்காப்பியம் புறத்திணையியல் நூற்பா(75)க்கு உரைசெய்த நச்சினார்க்கினியர் 'ஓதல்' என்பதை விளக்கி

முறையோதி னன்றி முளரி னல்லன்
மறையோதி னானிதுவே வாய்மை யறிமினோ
ஈன்றாள் வயிற்றிருந்தே யெம்மறையு மோதினான்
சான்றான் மகனொருவன் தான்

என்ற இப்பாட்டினை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

அர்ச்சுனன் மகன் அபிமன்யு தன் தாயின் வயிற்றிலே இருந்து கருவிலேயே தனுர் வேதம் போன்றவற்றையும் பிறவற்றையும் இயல்பாகவே கற்றான். தன் தாய் சுபத்திரைக்குத் தன்மாமன் கண்ணன் சொல்வதிலிருந்து அபிமன்யு உணர்ந்தான்.

அபிமன்யுவைச் 'சான்றான் மகன்' என்று பாரதப் பாட்டு கூறுவது எண்ணுதற்குரியது.

கி.பி.18ஆம் நூற்றாண்டு நூலான *ஆத்திசூடிப்புராணம்*

ஓதுவ தொழியா னெயின னூரோன்
உண்மைச் சாணானு மேனாதி

என்பதால் ஓதுதல் என்ற போர்க்கலையைப் பயிற்றுவித்த ஏனாதி நாதரை "ஓதுதல்" என்று வீரக்குடியாக அடையாளம் காட்டுகிறார்.

சுக்கிரநீதி போன்ற நூல்களில் தனுர்வேதம் (வில்வித்தை) கற்றல் வேந்தர்க்குரியது என்று கூறியுள்ளனர்.

வீர நாராயண விசயம் என்ற கி.பி. 14 அல்லது 15ஆம் நூற்றாண்டு நூல் சோழர் குலத்தைக் குறித்து

மனுநீதி தொடக்கத்தும் எள்துணையும் நெறி
மாறா வழியில் தோன்றும் தனுர் வேத குலமன்னர்

என்று கூறுகிறது.

கி.பி.16ஆம் நூற்றாண்டு, கமலை ஞானப்பிரகாசரின் சாதி நூல்

.... தநூர் வேதந் தனையியற்றல்
அரசர்தம் குலத்துக்கேற்ற வறுதொழி லாகுமன்றே

என்கிறது.

---

98. S.I.I. VII, No. 863

'தனுர்வேதம் அரசர்க்குரியது' என்று இது சுட்டிக் காட்டுகிறது.

கி.பி. 1012இல் அமைந்த முதலாம் இராசராச சோழன் கல்வெட்டு[98] (SII-VII No.863)

கூத்தொழில் கேளாதே தொழில் முனைந்த உரவோன்

என்று தனுர்வேத குலத்தின் உரிமையுடைய அரச குலத்தவன் என்று கூறுவதுடன் கூத்து நடத்தாத குலத்திலே வந்தவன் என்று பெருமைப்படுத்தப்படுகின்றான்.

வள்ளியூர்க் கல்வெட்டில் தனுர்வேதம் கற்ற படையாளர் "தரணி வித்தியாதர தனுஸ்தம்பர்" என்று சுட்டிக்காட்டப் படுகின்றனர்.[99]

தனுர்வேதம் தொடர்புடைய வீரரை யாப்பருங்கல விருத்தி ஒழிபியலின் மேற்கோள் பாடல்,

அரவ ணங்குவில் ஆண்டகை சான்றவன்

என்று கூறுவதால் சான்றோர் வில்லின் தொடர்புடைய வீரக்குடி எனவும் பெறப்படுவர்.

வில்லின் தொடர்பு வேடருக்கும் உண்டு. ஆனால் அவர்கள் தனுர்வேதம் என்ற வில்வித்தையை முறையாகப் பயிலாதவராவர். தனுர்வேதம் மூத்தார்க்குரியது என்று *திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்* கூறும். அதர்வண வேத காலத்தில்,

> படை என்பது அரசரின் இனத்தவரையே கொண்டு அமைந்திருந்தது. அரசன் எப்போதும் போர் புரியத் தயாராக இருந்த 64 வீரர்களால் சூழப்பட்டிருந்தான். அறுபத்து நான்கு பேரும் அரசனுடைய மகன்களும் பேரன்களுமே (அதர்வண வேதம் பிரமாணம் III-48)

---

99. சீ. இராமச்சந்திரன் (கொற்கைக் காப்பாட்சியர்) அவர்கள் நேரில் சென்று கி.பி. 1995இல் இக்கல்வெட்டைப் படித்தார். வள்ளியூர் ஆறுமுகம் பிள்ளை கல்வெட்டு விவரம் தனை இந்நூலாசிரியர் என்னிடம் நேரில் வந்து தெரிவித்தார். தரணி வித்யாதரர் என்ற சிறப்பு அடைமொழி வித்யாதரர் குழந்தைகளான சான்றார்க்குரியதாம்.

என்று கூறுவதால் தனுர் வேத குலத்தவர் என்று அடையாளம் காட்டப்பட்ட வீரக்குடி அரசகுடியாகும்.

மேலே சொல்லப்படும் வீரர் கிராமணிகள் என்று சொல்லப்பட்டவீரர் - வேள்விக்குரியவர் என்பதும் நூல்களால் வெளிப்படுகிறது. *திருவாய்மொழி* 2ஆம் பத்தின் வியாக்கியானம் ஈடுபேருரையில்

> *யாகமும் செய்து, பவித்திரமும் முடித்து, தார்மீகர் யெனத் திரிவார்களே சில கிராமணிகள்*

என்று கூறியிருப்பதால் வேள்வி வீரரான கிராமணிகள் உயர்குல வீரர் என்று புலனாகும்.

மதுரைக்காஞ்சியில் சான்றோர்குலத் தலைவர்கள்

விழுமியோர் அரசகுடியினரே

மதுரைக்காஞ்சி (226-227) படைவீரர்களின் தலைமை யுடைய படைத்தலைவர் பற்றிக் குறித்த இடத்து

சூடுற்ற சுடர்ப்பூவின் பாடுபுலர்ந்த நறுஞ் சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்றம் ஆக

என்று சீரிய படைத்தலைவர் பற்றிக் குறிப்பிடுகிறது. இதன் உரை வருமாறு:

> சூடுதலுற்ற விளக்கத்தையுடைத்தாக்கிய வஞ்சி யினையும் பூசினபடியே புலர்ந்த நறிய சந்தனத் தினையுமுடைய சீரிய படைத்தலைவரைத் தமக்குச் சுற்றத்தாராகக் கொண்டு

என்பதாகும். இதை மெய்சிதைந்த சாந்தெழில் மறைத்த சான்றோர் பெருமகன் என்ற *பதிற்றுப்பத்தின் (67:17-18)* அடிகளோடு ஒப்பிடலாம்.

நின்னொடு தொன்று மூத்த உயிரினும் உயிரொடு
நின்றுமூத்த யாக்கை யன்னநின்
ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர். . . (புறம்.24:26-29)

என்ற பாடலடிகளைப் பாடிய மாங்குடிகிழார் என்பாரின் பாடலடிகளுக்கான பழைய உரை வருமாறு :

> நின்னொடு பழையதாய் முதிர்ந்த உயிரினும் உயிருடனே நின்று முதிர்ந்த உடம்பு போன்ற நினது வெற்றிக் குடியோடு மூத்த சீரிய குடியின்கட் சிறந்த வாட்போராலே வாழ்வார்

என்பதால் விழுமிய பெரியோரின் இயல்பைத் தெரிந்து கொள்ளலாம்.

விழுமிய பெரியோர் என்பார் *"வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்தோர்"* என்பது புறப்பாடல் (புறம்.159) சொல்லும் மற்றொரு பாடமாகும்.

சோழன் நலங்கிள்ளியின் பாடலடி (புறம் 75: 7). "விழுமியோன் பெறுகுவனாயின்" என்று கூறுவதற்கு அரசுரிமை என்று பழையவுரை கூறுகிறது. சிறியோர் (தாழ்வான குடியிற் தோற்றம் பெற்றோர்) அரசுரிமையைப் பெறுவது சிறப்பினைத் தராது என்கிறார்.

அரசகுடியில் அதாவது மூத்த குடியின் மூத்தோர் உயிர் துறந்தனர் என்பதை வலியுறுத்தி மூத்தோரிலிருந்து அரசு தோற்றம் பெற்றதாக நலங்கிள்ளியும் பழைய உரையாசிரியரும் உணர்த்திக்காட்டுகிறார்.

பண்டைய காலத்தில் விழுமியோர் எனப்பட்டோர் அரச மரபினராகிய தலைமக்கள் என்று நலங்கிள்ளியின் இப்புறப் பாடலால் தெரிய வருகிறது.

கி.பி.7ஆம் நூற்றாண்டு நூலான பெருங்கதை, "விழுப்பமொடு பிறந்த வீறுயர் தொல்குடி" (உஞ்சைக் காண்டம்-64) என்கிறது. அது வருமாறு:

சங்கினும் பாலினுஞ் சலமில் வாய்மை
விழுத்திணைப் பிறந்த வொழுக்குடை மரபினர்

தொல்குடிப் பிறந்த விழுத்திணை மக்கள் தம்மைத் தூய்மையான வெள்ளை நிறத்தோடு ஒழுக்கம் நிறைந்த குடியாகக் குறித்துக் கொண்டனர்.

மயிலைநாதர் நன்னூல் சூத்திர உரையில் வெள்ளொக்கல் என்பதற்குத் தூய்மையான மரபினர் என்றார்.

விழுத்திணைப் பிறந்துதம் மொழுக்கங் குன்றாப்
போரடு மன்னர்

என்னும் அடிகளில் உயர்குடிப் பிறந்தோரையே ஒழுக்கம் குன்றா விழுத்திணை மக்கள் என்கிறது.

மதுரைக்காஞ்சியில் (524-525) விழுமியோர் பற்றி மாங்குடி மருதனார் குறிப்பிட்டுள்ளார்.

குளிர்ந்த கடல்சேர்ந்த நாட்டையுடையவனாகிய ஒள்ளிய
பனந்தாரையுடைய சேரனுடைய நாளோலக்க இருப்பு

என நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதற்கான பாடலடிகள் வருமாறு:

தண்கடல் நாடன் ஒள்பூக் கோதை
பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ

இதில் சேர அரச மரபினரின் நாளோலக்கம் என்ற அவையிலிருந்த விழுமியோரான சான்றோர் குறிக்கப்பட்டுள்ளனர்.

சேரன் செங்குட்டுவனைப் பரணர் பாடுவதாவது:

விழுமியோர் துவன்றிய அகன்கண் நாட்பின்
எழுமுடி மார்பி னெய்திய சேரல் (பதிற்றுப்பத்து 45)

என்கிறார்.

வேலீண்டு தானை விழுமியோர் தொலைய (புறம். 41)

எனப் புறப்பாட்டு குறிப்பதால் விழுமியோர் சான்றோர் தானை வீரர் எனவும் புலப்படுகிறது.

விழுமியோர் அரசகுடியில் தோன்றிய வீரர்; மூத்த குடி வீரர்; தொன்முதிர் வேளிர் எனப்பட்ட மரபினர்; விழுத்திணைக் குடியில் பிறந்த வீரர்; குலம் மேம்பட்ட உயர்நிலை வீரர். அதாவது குலம்மேம்பட்ட சான்றோர்.

விழுமியோரான வேளிர் ஐவர் கேளிர்

மதுரைக்காஞ்சி விழுமியோரான தொன்முதிர் வேளிரை அரசராகவே அடையாளமிடுகிறது.

பொலம்பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில மன்னர் (775-76)

என்று சுட்டிக்காட்டப்பட்ட ஐவர் வேளிரை நச்சினார்க்கினியர் "ஐம்பெருங்கேளிர்" என்று வேந்தரின் உற்றார் உறவினர் என்று உணர்த்துகிறார். அரசனுக்கு மிக அணுக்கத்தாராக இவர்களும் அதன் முன்னர்ப் பழையன் மாறனும் சுற்றத்தாராக வரிசைப் படுத்தப்படுகின்றனர்.

எல்லாரும் புகழப்பட்ட பொன்னாற் செய்த
பேரணிகலன்களையுடைய ஐம்பெருங்கேளிரும் உட்பட

என நச்சினார்க்கினியர் உரை யாத்திருக்கிறார். இந்த ஐவரின் முன்னோரே உதியன் சேரலதானின் உறவினரான முதியர் நூற்றுவரைக் கொன்றவர் ஆகலாம். குறுநிலமன்னர் என்பதற்கு

மறமிக்க நிலமையினை யுடைய குறுநில மன்னர்

என்றும் நச்சினார்க்கினியர் உரைசெய்து அரசகுலம் அல்லாமல் பிறரும் இருந்ததையும் வலியுறுத்துகிறார்.

பட்டினப்பாலையில் (282) வரும் "இருங்கோவேள் மருங்கு சாய" என்னும் தொடருக்கு

"ஐம்பெரும் வேளிர் குலம் முழுதுங் குறைய"

என்பதால் ஐம்பெரும் கேளிர் என்பார் ஐம்பெரும் வேளிர் என்றும் பெறப்படுவர்.

பழைய மாறன் என்ற தலைவன் பாண்டியனது குடியிற் தோன்றிய குறுநில மன்னன் என்று அரசகுடியின் தொடர்பை உணர்ந்து சுட்டிக் காட்டுகின்றார்.

மேலே சொல்லப்பட்ட குறுநிலத் தலைவர்கள் பாண்டியனுக்கு அடங்கி அவன் வாய்மொழி கேட்டு வாழ்ந்தனர் என்கிறது *மதுரைக்காஞ்சி.*

மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை... (அகம்.233)

மாமூலனார் என்ற பெரும் புலவர் இங்குக் குறித்துள்ள முதியர் என்போர் அரசகுடியில் வந்தோர் ஆவர். இவர்கள், ஐவர் வேளிரானவர்க்கும் பாண்டியருக்கும் பகைவர்; சேரருக்கு நண்பர். *புறநானூற்றின்* முதல் பாடலைப் பாடிய முரஞ்சியூர் முடிநாகராயர் இதனைப் பின்வருமாறு பாடியுள்ளார்.

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம் பூந்தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
(புறம். 2:13-16)

என்பன பாடலடிகள் சேரரின் *பதிற்றுப்பத்து* இவரை முதியர் என உரைக்கும்.

இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்
(பதிற்றுப்பத்து 70:21-22)

இப்பாடலடிகள் அடிகள், சேர வேந்தர்கள் தம் குடி தொடர்புடைய முதியரைப் பேணித் தொல்கடன் இறுத்தனர்; சேரர் வீரமரபினரான தொல்குடி முதியரைப் பாதுகாத்ததைச் சுட்டிக்காட்டுகின்றன.

முதியர் முதுகூறு பெற்ற மூத்தகுடி வீரர்கள்

பெருங்கதை, "கோப்பெரு முதியரும் வாயின் மறவரும்" என்பதால் அரசகுடியில் வந்த முதியரும், வாயிற்காவலர்க்கு உரிமை பாராட்டிய வாண குலத்தவரான வாயில் மறவரும் வேறுவேறானவர் ஆவார்.

ஆளும் வேந்தர்கள் முதியர் எனப்பட்ட மூத்தகுடி வீரர்களுக்கு முது கூறு வழங்கினர். கி.பி.1008இல் அமைந்த கல்வெட்டு "புறைகிழா நாடு முதுகூறு வாழுமவர் வந்து" என்பதால் முதியர் குடி மரபினருக்கு முதுகூறு வழங்கப் பட்டிருந்தது முன்பும் கூறப்பட்டது.

முதுகூறு என்பது மூத்தகூறு என்றும் வழக்கில் வந்தது. அரச குடியில் தோன்றிய இவரே வாளின் வாழ்நர் என்ற வேள்விக்குரிய வீரர் என்பதாம். அரசர்கள் இம் முதுகுடி வீரர்களைப் புரந்தனர்.

வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி இம்முதுகுடியினரைப் பேணிய செய்தி கீழ்வருமாறு காரிக்கண்ணனாரால் பாடப்பெற்றுள்ளது.

முழுமுதற் தொலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ

என்னும் புறப்பாடல் (58:2-5) அடிகள் முதுகுடியினரைப் பாண்டியன் பாதுகாத்த தன்மையைக் குறிப்பிட்டுள்ளன. "நல்ல புகழையுடைய பழைய குடி" எனப் பழையவுரை இம்முதுகுடி வீரரைக் குறிக்கிறது. முல்லைப் பாட்டில்

துகில் முடித்துப் போர்த்த தூங்கில் ஓங்கு நடை
பெருமூதாளர் ஏமம் சூழ (53-54)

என்று சொல்லப்பட்ட வீரர்கள் இலக்கியச் சான்றுகள்படி மூதின் மகளிர் என்பாரின் மகன்கள் என்றும் தெரியவருகிறது. இதற்கு உரையாக நச்சினார்க்கினியர்,

மயிர்க் கட்டுக் கட்டிச் சட்டையிட்ட அனந்தரினையும்
பெரிய ஒழுக்கத்தினையும் உடைய மெய்க்காப்பாளர்
சூழ்ந்து திரிய

என்றார். இவர் அரசரின் மெய்க்காவல் படையினர் ஆதல் வேண்டும்.

பீடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய
மூதி லாள ருள்ளுங் காதலின் (புறம். 289:4-5)

என்ற புறப்பாட்டடிகளுக்கு முதுகுடிச் சான்றோர் என்றும் சான்றோராகிய மறவர் என்றும் அவ்வை துரைசாமியார் உரைசெய்தார்.

பெருமை பெற்ற பழைமையான குடியில் பிறந்தாரிடத்து வழிவழிவரும் நற்பண்புகள் அனை த்தையும் சோர்வுபடாது காத்துவரும் முதுகுடி வீரர் என்றார்.

காட்டுக்குடியாக இருந்து அரசன் படையில் சேர்ந்த மறவர் அல்லர் முதுகுடி மறவர். தொல்குடிப்பாடு குலத்திற்குப் பொருந்திய பழைய வழக்கம் சான்றோர் வீரர்க்குரியதாம்.

பெருங்கதை (1.34) *"பெருமூதாள னேர்ந்ததை யெல்லா நெடுந்தகைக் குரைப்ப"* என்பதாலும் *"பெருமூதாளரும் பெருங்கிளைச் சுற்றமும்"* என்று கூறுதலாலும் பெருமூதாளர் என்போர் முதுகுடியில் தோன்றியவர் என்று புலனாகிறது.

முல்லைப்பாட்டு உரை கூறுவதுபோல ''ஓங்கல் நடை'' பெருமூதாளர் அரசன் உடனிருப்போராகிய ஒழுக்கம் நிறைந்த வீரர். கி.பி.1300இல் அமைந்த கோட்டையம் கல்வெட்டில் மூழிக்களத்து 'ஒழுக்கவிச் சான்றார்' என்பார். ஒழுக்கம் நிறைந்த நீதி காக்கும் வீரர் என வருகிறது.

மூழிக்களத்துக் கச்சம் தொடர்புடையவர் அனைவரும் அரச குலத்தவர் என்று கேரள தேச ஆவணங்களில் சுட்டிக்காட்டப் படுகின்றது.

பெருங்கதை "ஒழுக்கஞ் சான்றோர் பிழைப்பில ரோம்ப" என்பதாலும் பழைய ஒழுக்கம் பல நிறைந்த முதுகுடிச் சான்றோர் என்பதாம்.

''சான்றோனுக்கு நல்நடை நல்கல் வேந்தன் கடமை'' எனப் *புறநானூறு* (312) குறிப்பிடுவதுபோல இம்முதுகுடி வீரருக்கு ஓங்கல் நடை குறிப்பிடப்படுகிறது.

சேரநாட்டின் இராசநீதி கி.பி.951இல் அமைந்த கல்வெட்டு ஆவணப்படி[100] *"மூழிக்களத் தொழுக்கப்படி கச்சம் பிழைச்சாராவது"* என்பதால் ஒழுக்கம் இருந்த ஆட்சியில் நடைமுறை மூழிக்களத் தொழுக்கம் எனப்பட்டது. ஒழுக்கம் நிறைந்த மரபினரையே உயர்குடி என்றனர் போலும். "ஒழுக்கம் விழுப்பம் தருதலால்" என்ற வள்ளுவன் வாய்மொழியும் அறிதற்பாலதாம்.

மூத்தகுடி வீரரால் பெருந்திணை மக்கள் உருவாதல்

தஞ்சைவாணன் கோவையின் ஆசிரியர் மேற்கோள் பகுதியில் பெருந்திணை பற்றி விளக்கக் கீழ்வரும் நூற்பாவை எடுத்தாண்டுள்ளார்.

ஒப்பில் கூட்டமு மூத்தோர் முயக்கமும்
செப்பிய வகைப் பொருட் சிதைவும் பெருந்திணை

இது பெருந்திணைபாற்படும். ஒப்பிலாத (தகுதியில்லாத) அதாவது தம்மைவிட இழிவானவருடன் மூத்தார் (மூத்தகுடி) தொடர்பு கொண்டு உறவுகலந்ததால் பெருந்திணைமக்கள் உருவானார்கள் என்று இலக்கணப்படுத்துகிறது இந்நூற்பா.

விறலியர் மரபிலே வந்தவர்கள் "நாட்டியத்தான் பெருந்திணை" என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகின்றனர் என்று முனைவர் சாந்தலிங்கம் *பண்பாட்டுப் பதிவுகளில்* குறித்துள்ளார்.

இராசகேசரிவர்மனின் ஆட்சிக்காலக் கல்வெட்டு[101]

இவ்வூர் வெள்ளாளனான மாறன் காளியான பிரம்ம
பெருந்திணை"

என வேளாளரில் ஒரு கிளையை அழைக்கிறது.

யாப்பருங்கல விருத்தியின் மேற்கோள் பாடல் முன்பு கூறிய விழுமியோரின் நெறிபிறழ்ந்த நிலையை எடுத்துக் காட்டுகிறது.

பெறலரிய விழுத்தாயம்
விறலியர்க்கும் மகிழ்ந்துவசினை

---

100. TAS-I 288-89, TAS VOL V pp.6-7

101. முனைவர் சொ. சாந்தலிங்கம் எழுதிய *தமிழர் பண்பாட்டுப் பதிவுகள்*, பக். 211-215, அருள் பதிப்பகம், 2006. "நாட்டிய பெருந்திணை" திருபாதாட்டபெருந்திணை, "தம்பி திணையான்", "திணையாள் மாயிலாட்டி", "மறவர்கோன் பெருந்திணை" (பழவூர்) என்கிறது.

என்பதால் விழுக்குடித் தாயத்தில் பிறந்த உயர்ந்தோர் தம் தாயத்தின் அருமை கருதாது விறலியர்களிடம் கொண்ட உறவால் விழுமியோர் பட்டம் விறலியர்கள் குழந்தைகளுக்கும் சென்றடைந்து விட்டது.

நச்சினார்க்கினியர் கலித்தொகை உரையில்

உலகில் கெட்ட மயக்கம் போலக் கள்ளினை அருந்திய
நன்மக்கள் ஆற்றுகின்ற காமம் உலகில் தப்பி வேறோர்
பகுதியில் விட்டதோ

என்று விரித்துரைக்கின்றார்.

இதனால் நன்மக்களின் விழுத்தாய உரிமை அவர்கள் தொடர்புடைய குடிகளுக்கும் சென்றடைந்தது என்று தெளிவாகத் தெரிய வருகிறது.

பிற்காலக் கல்வெட்டுகளில்[102] விறலியர் தொடர்புடைய மக்கள் விழுப்பரையன் என்று பட்டமிட்டு வாழ்வதைக் காண முடிகிறது. உயர்குடியினரான சான்றோர் விறலியர்களைக் கொண்டமையால் விறலிச் சாணார் என்ற பிரிவு அம்மரபிலே தோன்றியதாகவும், இவரிடம் இயல்பான சாணார் மணவுறவு கொள்ள மாட்டார் என்றும் திவான் நாகமையா திருவாங்கூர் ஸ்டேட் மான்வலில் சிறப்பான விளக்கம் தருகின்றார்.

கல்வெட்டுகள் பெருந்திணை மக்களாகச் சில பிரிவினரை அடையாளம் காட்டுகின்றன.[103]

ஒழுக்கம் நிறைந்த குடிமரபிலே தோன்றிய தலைமக்களின் சிறுகுடிச் செலவால் பலகுடிமக்கள் தோற்றம் பெற்றனர் என்பது சங்க இலக்கியம் காட்டும் பாடமாகும்.

உயர்திணை மக்கள் மூத்தார் எனப்பட்டனர். மூத்த குடிமக்களே மூத்தவர் மூதாளர் மூதின் மகளிர் ஆதல் வேண்டும். பெருந்திணை மக்களோடு மூதின் மகளிரைப் பொருத்திப் பார்த்துக் கணித்துக் கூறுவது விழுத்திணை மக்களை இழிவு படுத்தும் செயலாகும்.

---

102. TAS-I 288-89, TAS VOL V pp.6-7

103. 1. பெருந்திணை (கி.பி. 500) நல்லங்கிழான் எலிங்கு மானும் (பூலாங்குறிச்சி கல்வெட்டு ஆவணம் 1, பக். 67-69.

2. குன்றநாட்டு கண்ட பெருந்திணையார் திருவாலந்துறை மகாதேவர்கசு (சிறுபழவூர் கல்வெட்டு)

உயர்திணை - பெருந்திணை மறவ வீரர்கள்

சங்க இலக்கியத்தில் உயர்திணை மறவர், பெருந்திணை மறவர் (சிறுகுடி) என்ற இருவேறு பிரிவுகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

உயர்திணைப் பிரிவினர் நற்குல மக்களாகக் கருதப்பட்டனர். விழுக்குடித் தாயத்தினராகக் கருதப்பட்டனர்.

இறையனார் அகப்பொருளுக்கு உரைசெய்த நக்கீரர் "ஒழுக்கத்தின் வழித்து தலைக்குலமாகலானும்" என்பதால் விழுக்குடியானது ஒழுக்கம் நிறைந்த தலைக்குலமாகப் பண்டு கருதப்பட்டது.

கொற்கையில் இருந்த பாண்டியர் நற்குலத்தோரைப் பேணிக் காத்தனர் என்பதை *மதுரைக்காஞ்சியில் (138)*

"நற் கொற்கையோர் நசைப் பொருநன்"

என்று தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனை மாங்குடிமருதனார் குறிப்பிடுகின்றார். நல்ல குலம் என்பது இதனால் விளங்கும்.

தொல்குடிச் சான்றோரின் சால்புடைமை

கி.பி.10 ஆம் நூற்றாண்டு இலக்கண நூலான *தமிழ் நெறி விளக்கத்தின்* மேற்கோள் பாடல் தொல்குடி பற்றி விவரிக்கிறது.

வான்தோய் தொல்குடி மரபு அவ்வழி
சான்றீர் உமது வரவு நோக்கி

என்னும் அடிகள் தொல்குடியினரின் மரபுவழியினராகச் சான்றோரைக் குறிப்பிடுகின்றன.

தொல்குடி என்பதற்குப் பழங்குடி என்று பெயர். படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டகுடியே தொல்குடி. இத்தகையகுடி எது என்று பார்ப்போம். *தொல்காப்பியக்* களவியல் 102 சூத்திரம், நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோள் பாடலான

தேரோன் தெறுகதிர் மழுங்கினுந் திங்கள்
தீரா வெம்மையொடு திசைநடுக்கு உறுப்பினும்
பெயராப் பெற்றியில் திரியா சீர்சால்
குலத்தில் திரியாக் கொள்கையுங் கொள்கையொடு
நலத்தில் திரியா நாட்டமும் உடையோய்

என்றுரைப்பதால் சூரிய சந்திரர் மாற்றம் பெற்றாலும் தம் கொள்கையில் மாற்றம் பெறாத சிறந்த சால்புடைய குலத்தில் (சான்றோர் குலத்தில்) அதாவது உயர்குடிப் பிறப்புடைய நீ கொள்கை குன்றாதவன் என்று தலைமகனைக் கூறுதல் சால்புடையோர் குலம் பற்றியதாகும்.

இதனாலேயே *நாலடி நானூறு* "திங்கள் மாசுறும் சான்றோர் மாசுறார்" என்றது. தாம் கொண்ட வாழ்வியலில் கொள்கைக் கோட்பாட்டோடு வாழ்ந்தவரே தொல்குடியினர்.

அறக்குல மறவரும் மறக்குல மறவரும்

குடிமை என்ற சொல்லுக்கு இலக்கிய இலக்கணச் சான்றுகளின்படி ஒழுக்கம் என்று நச்சினார்க்கினியர் *கலித்தொகை* உரையில் குறிப்பிடுகின்றார். முற்பட்ட உரையாசிரியர்களும் உணர்த்தியுள்ளனர். *பாண்டிக்கோவை* (211)

சான்றோர் வரவும் விடுத்தவர் தந்தக வும்நுமது
வான்றோய் குடிமையும் நோக்கின்

என்கிறது. *இறையனார் அகப்பொருள்* நக்கீரர் உரை (பக்.138)

சான்றோர் வருந்திய விருத்தமும் நுமது
வான்றோய் வன்ன குடிமையும் நோக்கி

என்கிறது. *தொல்காப்பியக்* களவியலுக்கான நச்சினார்க்கினியர் உரையின் மேற்கோள் பாடல்

நெடுவரை மருங்கிற் குடிமை சான்றோர் (தொல்.களவு. 23)

என்பதால் சான்றோர் என்பார் ஒழுக்கம் நிறைந்த மரபினராகப் பண்டைய காலத்தில் இருந்தனர் என்று தெரியவருகிறது. இவ்வாறான ஒழுக்கம் கல்வெட்டிலும் இலக்கியத்திலும் ஒழுக்கவிச் சான்றார் என்றும் "சான்றோர் ஒழுக்கமும்" என்றும் முன்பே கூறப்பட்டிருந்தமை காண்க.

தொல்காப்பிய உரையாசிரியர் பலரும் தங்கள் விளக்கங்களை வழங்குமிடத்தில் 'தொல்குடிச் சான்றார்', 'பண்டைச் சான்றோர்' (பண்டைச் சான்றார்) என்றெல்லாம் எடுத்தோதியுள்ளனர்.

தொன்றுதொட்டு வழிவழி வரும் வீரக்குடி சான்றோர் என்பார் பூர்வ மறக்குடி என்று அறிஞர் இளங்குமரன் *தகடூர் யாத்திரை* உரையில் அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

மூதில்குடி, விழுத்திணைக்குடி, தொல்குடி, பழங்குடி (குறள் 955) இவையெல்லாம் சால்பும் பழைமையும் மறமும் நிறைந்த குடி ஆவர். பழங்குடி என்பது மூவேந்தர் குடி என்று பரிமேலழகர் உரை செய்தார்.

கி.பி.1654இல் எழுதப்பட்ட *சான்றோர் புராணம்* "முதுகுடிப் பிறந்த சான்றோர்" என்று வீரமறவராகிய சான்றோரைக் குறிப்பிடுகிறது.

இலக்கியங்களில் 'மறவர்' எனக்குறிப்பிட்டிருப்பதை வீரர் என்ற பொருளிலேயே உரையாசிரியர்கள் எடுத்துக் கொண்டுள்ளனர்.

பெரியாழ்வார், "வேடர் மறக்குலம் போலே" என்பதால் மறக்குலம் என்ற சொல் வேடர், எயினர், புளிஞர் போன்ற மக்களைக் குறிக்கத் தொடங்கிவிட்டது என்று நம்பலாம்.

அறக்குலத்து வீரர் என்ற நாணுடைமறவர் என்பார் மறவர் என்ற பெயரை இழந்துவிட்டனர். பிற்கால நூலான *காஞ்சி புராணம்* (பா.1000) "மறவர் வர்க்கம்" என்ற தொடருக்கு வேடர் என்று பொருள் கூறியுள்ளனர்.

இக்கால அளவில் மறவர் என்ற சொல் மறவர் மக்களுக்கு உரியதாக்கப்பட்டுவிட்டதாகத் தோன்றுகிறது. ஆனால் இலக்கண நூலாசிரியர்கள் மறவன் என்ற சொல்லினை வீரன் என்ற பொருளிலேயே உணர்த்தியுள்ளனர்.

எல்லாவிதக் குணங்களும் நிறைந்த அடக்கமுடையார் என்ற ஒருவகை வீரரை அவர்கள் பலநாட்டினராக இருந்தும் அவரைச் சான்றோர் என்று அழைத்தனர். இதுபோன்று படை வீரர்களாகப் பல மரபினரும் அமைந்து மறப்படையில் இடம்பெற்றனர். அவர்களும் மறவர் எனக் குறிப்பிடப் பட்டனர்.

சேக்கிழார் *திருத்தொண்டர் புராணத்தில்* ஏனாதி நாதரின் உரிமையுடைய உறவினரை 'மறப்படை வாட் சுற்றத்தார்' என்று சுட்டிக்காட்டியுள்ளார். ஈழச் சான்றார் மரபிலே தோற்றம் பெற்றிருந்த ஏனாதி நாதரின் உறவினரை மறப்படையின் மரபினர் என்கிறார்.

சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் கூற்றாக "மறத்தகை நெடுவாள் எம்குடிப் பிறந்தோர்க்கு" என்று கூறியிருப்பதால் வீரம் நிறைந்த நெடுவாள் உடையவர் சேரர் குடியினர் என்பதாம்.

மறவன் என்பதற்குப் பல பொருள்கள் உள்ளன. இளங்கோவடிகள் 'கருணை மறவன்' என்று கருணை வீரத்தின் அடிப்படையில் கோவலனை அழைத்துள்ளார்.

கொங்குவேளிர் தமது பெருங்கதையில் அந்தணனான வயந்தகன் என்பானை 'வாட்படை மறவன்' என்று கூறியுள்ளார். பிரசோதனன் என்பானையும் கொடுமையாளன் என்ற பொருளில் அவனை மறவன் என்று கொங்கு வேளிர் அழைக்கிறார்.

இவரைப் போன்று கம்பன் தன் கவிகளால் அந்தணனான அரக்கன் இராவணனை மறவன் என்று அழைக்கின்றார்.

முதலாம் ஆதித்த சோழன் ஆட்சியாண்டு 25க்குரிய திருப்பழனம் (தஞ்சை) கல்வெட்டு,[104]

> பரிவண்டந்துறை புரிசைக் கிழானாகிய செம்பியன்
> ஆற்காட்டு வேளானாயின மறவ னக்கன்

பற்றிக் குறிப்பிடுகிறது. மறவ நக்கன் கோயில் குடியாக இருந்து அரசனால் வேளான் பட்டம் பெற்றுப் புரிசைக் கிழான் எனப்பட்டான்.

சில கல்வெட்டுகளில் வேளத்திலிருந்த ஆயர்கள் சிலர் மறவர் என்று குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் வீரத்தின் பொருட்டும் கொடுமையாளர் என்பதாலும் மறவர் எனக் குறிக்கப்பட்டுள்ளனர்.[105]

கி.பி.1103இல் வீரசோழியத்திற்கு உரை செய்த பெருந் தேவனார் - வீரர் என்ற சொல்லையே போர் வீரருக்குப் பயன்படுத்துகின்றார்.

பழைய மறக்குடியும் புதிய மறக்குடியும்

தொல்குடி மறவர் பற்றிக் குறிப்பிட்டுள்ள உரையாசிரியர் பலரும் பழைய மறக்குடி என்று உரையில் குறிப்பிட்டுள்ளதால் புதிய மறக்குடி என்று ஒன்று இருப்பது போன்ற தோற்றத்தை நமக்கு வழங்குகின்றனர் எனலாம்.

பழைய மறக்குடி என்று கூறுவதிலிருந்து தொல்படை வீரராகிய பழைய மறவர் என்போர் அரசனின் படையாளர் என்று உணரப்படும்.

---

105. No. 161. XXVI

பிற்கால மறவர் என்பாரில் ஒருகிளை கல்வெட்டுகளில் மறச் சாமந்தர் என்று அழைக்கப்பட்டனர்.[106]

மறச்சாமந்தர்கள் என்று பலரும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர்.

இவரில் செங்குந்த மறவரும் மருத்துவரும் வேறுபலரும் அடங்குவர். *சிலப்பதிகாரம்* வேளான் சாமந்தர் பற்றி எடுத்தோதுகிறது. சாமந்த ராசாக்கள் என்ற பிரிவினர் பற்றிக் கல்வெட்டுகளில் அறியக் கிடக்கிறது.

வீரசோழியம் மேற்கோள் பாடல் (சூத்திரம் 99)

யானைதேர் பாய்மா வெனவேந்த ருள்ளிட்டீர்
சேனை யுடையீர் சிலரல்லீர்

என்பதால் வேந்தர் குலத்தவர் மற்றும் அவர் அல்லாத பல இனத்தவரும் சேனையில் இடம் பெற்றிருந்தனர்.

பழைய மறக்குடியினரின் நாடுகாவலும் புதிய மறக்குடியினரின் பாடிகாவலும்

பழைய மறக்குடிக்கும் புதிய மறக்குடிக்கும் வேறுபாடு இருந்தது தெரியவருகிறது. நாடு, காடு என்ற இருவகைக் கூறுபாடுடைய நாடுகாவல், பாடிகாவல் முறைமை பற்றியும் தெரியவருகிறது.

ஒல்லையூர் தந்த பூதபாண்டியன் என்ற பாண்டிய மன்னன் தனது சூளுரையில் (புறம். 71)

மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப் பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே

என்று பாடியுள்ளான். இந்தப் பாடலில் தென்புலம் என்பது நாட்டையும் வன்புலம் என்பது காட்டையும் குறிக்கின்றன. இந்தப் பாடலில் நாட்டை ஆளும் பாண்டியர் குடிக்கும் வன்புலத்துக் காட்டுக்குடிகளுக்கும் உள்ள வேறுபாடு உணர்த்தப்பட்டுள்ளது.

---

106. ஏழகத்தாரிலும் மற்ற சாமந்தரிலும் இரண்டாம் இராசாதிராசன் காலத்துத் திருவாலங்காட்டுக் கல்வெட்டு.

குறிப்பு: கல்வெட்டினை வாசித்த சிலர் மற்ற சாமந்தர் என்பதை மற சாமந்தர் என்று படித்துள்ளனர். வேறு கல்வெட்டுகளில் ஏழகப் படையும் மறப்படையும் என்று இருவேறாகப் படையினரைக் கூறுகிறது.

இளங்கோவடிகள் "மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்" என்று அரசகுடியை உணர்த்துகிறார்.

நாணுடை மறவரும் பழியஞ்சா மறவரும்

தகடூர் யாத்திரை இவ்விருவகை வீரர்களையும் காட்டுகிறது. இரவிலே சென்று போர் செய்து தீயிட்டுக் கொள்ளை செய்வது, ஆநிரை கவர்தல் போன்ற இரவு நேரப் போர்ச் செயலுக்கு மாறான நாணுடைப் போர் வீரன் ஒருவனைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

பரவைவேல் தானை பகலஞ்சு வேனா
இரவே எறியென்றாய் என்னை - விரைவிரைந்து
வேந்தனீ ஆயினாய் அன்றிப் புகுவதோ
போந்தென்னைச் சொல்லிய நா (புறத்திரட்டு 1319)

கடல்போல் விரிந்த வேற்படையைக் கண்டு பகற்பொழுதில் அழித்தற்கு அஞ்சுவேனாகக் கருதி இரவுப்பொழுதில் மிக விரைந்து போய் அழிக்க என்று எனக்குக் கட்டளை இட்டனை; இவ்வாறு கட்டளை இட்ட நீ வேந்தன் ஆயினை. அல்லேல் இவ்வாறு கட்டளை இட்ட நின் நா வாயின் உள்ளே புகுந்திருக்கவும் கூடுமோ? அறுத்திருப்பேன் என்றவாறு பொருளுரைக்கிறார் இளங்குமரன்.

பகைவர் அறியாமல் இரவில் போய் அவரை அழித்துவருவது வீரர்க்கு இழிவு என்பது உலக வழக்கு. மேலே சொல்லப்பட்ட படைத்தலைவன் இரவிலே போர் செய்ய மறுக்கும் வீரக்குடியினன்.

இரவிலே சென்று வெட்சிப் போர் நடத்தும் மறவருக்கும் பகலிலேதான் போர் செய்வேன் என்ற வீரனுக்கும் இருந்த வேறுபாடுகளிலிருந்தே பழிக்கு அஞ்சும் வீரர் நாணுடை மறவர் என்றும் பழி அஞ்சா மறவர் காட்டகத்துத் தோன்றிய எயினர் பிரிவினர் என்றும் தெளிவாகத் தெளிவுறும்.

வேந்தன் ஆணையையும் மீறும் பண்புடை வீரர் முறையான போர்க்குரியவர் என்பதோடு போரில் உயிர் விடுவதைப் பற்றிக் கவலை கொள்ளாத மானவீரர் என்றும் புலனாகிறது.

சிறப்புடைய குடியினரைக் கி.பி.905 இல் அமைந்த பாண்டியர் செப்பேடுகள் "முதுக்குறுச்சி முற்குடிப்பினோர்" என்று கூறுகின்றன.[107]

---

107. பாண்டியர் செப்பேடுகள், பக். 95-115.

தொன்றுதொட்டுத் தொல்படை வீரராகிய தொல்குடி மறவர் எனப்படுவோர் ' நாணுள்ள மறவர்' ஆவர். பழி பாவங்களுக்கு அஞ்சிப் போரின் கண் நிலைத்து நின்று போரிட்டு நடுகல்லான மறவனுக்கும் போரில் புறமுதுகிட்டு நீங்கிச் சென்ற மறவனுக்கும் உள்ள வேறுபாட்டினைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆறலைத்து உண்போராக, சூறை கொள்பவராக, வீரராக, ஊரினை எரியூட்டுகிறவராக, நிரைகளைக் கைக்கொள்கிறவராகக் குறிப்பிடப்படுவோர் நாணுடை வீரர்கள் அல்லர். மாறாக வெட்சித் தாயத்து உரிமை பாராட்டிய காட்டகத்து மறவராவர்.

நாணுடை வீரரைச் "சான்றோர்" என்று *குறுந்தொகை* வலியுறுத்துகிறது. பிழைபொறுத்தார் காவலுக்குரிய வீரர் என்பார் நாணுடை மறவர் என்பவராம்.

தொல்காப்பியம் புறத்திணையியல் (21) "பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்" என்பதற்கு உரைசெய்த நச்சினார்க்கினியர் "பரிவதூஉஞ் சான்றோர் கடன்" என்ற ஈற்றடி கொண்ட *நாலடியார்* பாடலை (58) மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார்.

புறப்பொருள் வெண்பாமாலை காவன் முல்லையில் எட்டுயியல் சான்றோர் என்கிறது.

வீரசோழியம் பிழைப்பொறுத்தாரைத் தாங்குதலே காவல் என்கிறது.

மூதில்மறம் வேளிர்குலப் பெண்டிற்குரியது

பழைமையான வீரர்குடியில் பிறந்த ஆடவர்க்கே அன்றி அக்குடியில் பிறந்த மகளிர்க்கும் வீரமுண்டாதலைச் சிறப்பித்துக் கூறுவது மூதில் மறம் என்னும் துறையாகும்.

"அடல்வேல் ஆடவர்க்கன்றியும், மடவரல் மகளிர்க்கு மற மிகுத்தன்று" என்று *புறப்பொருள் வெண்பாமாலை* (175) இலக்கணம் கூறுவதாலும் 'மூதின் மடவாள்' என்பதாலும் வீரக்குல மகளிர்க்கு வீரமுண்டாதலைக் குறிப்பிட்டாரே அன்றிப் போரில் ஈடுபட்டவர் மூதின் மகளிர் அன்று.

மூதின் மகளிர் கணவனோ மகனோ களத்தில் உயிர்விட்ட விடத்து அவனைப் போர்க்களத்தில் போய்ப் பார்த்து விழுப்புண் ஏற்று வீழ்ந்தவனைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தனர்.

இவ்வாறான மூதின் மகளிர் தந்தை, தமையன், கணவன் என்போர் போரில் அடுத்தடுத்து இறந்துபட்டாலும் தன் ஒரே மகனை அடுத்த நாள் போருக்கு அனுப்பும் துணிவு உள்ளவர்கள் என ஒக்கூர் மாசாத்தியார் (புறம். 279) கூறுகின்றார்.

கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின்மகளிர் ஆதல் தகுமே. . . . .

இம் மகளிர் குல மகளிர் என்றும் குழந்தை பிறந்தால் ஈன்ற பொழுது பெரிதும் மகிழ்வு கொண்டவராகவும் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றார்கள்.

கொங்குவேள் மாக்கதை காட்டில் வாழ்ந்த பெண்கள் படையில் பயன்படுத்தப்பட்டதைக் குறிப்பிடுகின்றது. (உஞ்சைக் காண்டம் : ஊர் தீயிட்டது) "கட்டணி கூந்தற் கள்ள மங்கையர்" வெட்சிப் போரில் பயன்படுத்தப்பட்டு ஊரைத் தீயிட்டனர். கள்ள மங்கையர் என்பார் கிராதக வம்சத்தவர் ஆவர். வேடர் குலப் பெண்களே போரில் பயன்பட்டுள்ளனர்.

மூதில் மகளிர் போரில் பயன்பட்டவர் அல்லர்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்

என்று வள்ளுவர் வாய்மொழி மூதின் மகளிராகிய பழைய மறக்குடி மகளிரையே குறிக்கிறது. மூதின் மகளிர் மூத்தகுடி, மூத்தார், மூதாளர் தொடர்புடைய குடியினர்.

முதியோள் 'மூதின் முல்லை' என்ற துறைப் பாடல்களை எல்லாம் உணர்ந்து நோக்கினால் பழைமையான வீரர் குடியினர் அரசர் படையில் அமர்ந்து அரசனுக்காக உயிர் துறக்கத் துணிந்த வீரர் பற்றியும் படை மாறாமல் பணிபுரிந்து வீழ்ந்தது பற்றியுமாக அமையும்.

மார்பிலே விழுப்புண் பெற்றமை அறிந்து தாய் பெருமைப் படுவது என்பது சங்க இலக்கியக் கருத்து. வென்வேல் விடலை என்பான் தலைமகன் என்பதை நினைவுகூர்ந்து ஆய்வுசெய்தால் உண்மை தெரியவரும்.

மூத்தாரும் இளையாரும்

சொல்லதிகாரத்திற்கு உரைசெய்த ஆத்திரேயர் "மூத்தார் எனில் தலைமை என்றும் இளையார் எனில் பன்மை" என்றும் உணர்த்துகிறார்.

இளம்பூரணர் சொல்லதிகாரம் சூத்திரம் (49)க்கு மேற்கோளாக - பார்ப்பன சேரி என்பது இஃது உயர்திணைக் கண் தலைமைபற்றி வந்தது; அத்திணைக்கண் பன்மைபற்றி வருமாறு எயின நாடு குற்றிளை நாடு என வரும் என்றார். பலர்வாழும் இடமாக இருந்தாலும் தலைமை பற்றிப் பார்ப்பனசேரி என்றார்.

இதிலிருந்து எயினர் என்பார் இளையார் என்று தெரிய வருகிறது. இவரிலும் வேறானவர் மூத்தார்.

மூத்தார், மூத்தகுடி, மூதின்மகளிர் என்பார் வேளிர் என்று உறுதியாகத் தெரியவருகிறது. புறப்புண் நாணி வேந்தன் வடக்கிருந்ததை வாளொடு வடக்கிருத்தல் என்றும் அவர் சான்றோர் என்றும் முன்பே அறிந்துள்ளோம்.

சிறுபஞ்சமூலம் "மூத்தார் வடக்கிருந்தார்" என்று எடுத்தோதுகிறது.

"அவைக்குப்பாழ் மூத்தாரை இன்மை" என்று *நான்மணிக் கடிகை* கூறுவது சான்றோர் அவையிருத்தலே. எனவே மூத்தார் என்போர் சான்றோர் என்றும் மூத்தகுடி என்றும் பெறப்படும். அவையிருந்த நரைமூதாளர் பற்றி அகம் (377) குறித்திருக்கிறது.

சங்கஇலக்கியத்தில் குறுந்தொகை "தொன்று முதிர் வேளிர்க் குணாது" என்றும் *புறநானூறு* (24) "பொன்னணி யானைத் தொன்முதிர்வேளிர்" *நற்றிணை* (280) "தொன்று முதிர் வேளிர் குன்றூர்" என்றும் குறிப்பிட்டு இருப்பதை உணர்ந்தால் மூதின் மகளிர் வேளிர் குலப் பெண்கள் என்று உறுதிப்படும். வேளிர் இனத்தவரில் அடங்கிய குடியே பழைய வீரக்குடியாம்.

சங்க கால நாணுடை மறவர் என்போர் மூதின் மகளிரின் குழந்தைகளே. முதியோள் சிறுவன் என்போரும் இவரே.

சீவகசிந்தாமணி விமலையாரிலம்பகம்(1892) "முதுமகளிர்" என்பதற்கு மூப்பிமார் என்று பொருள் கூறுகிறது.

ஐவர் ராசாக்கள் கதை போன்ற நூல்களிலும் மூப்பிமார் அரசிகளின் தோழிகளாகத் தனித்துச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றனர்.

செப்பேடுகளில் தெளிவாக மூப்பர் என்ற தலைமக்களின் துணைவியார் மூப்பிமார் என்பதில் ஐயமில்லை. இவரே அரசன் கோயில் அறப்பரிசாரமகளிர். *சிலப்பதிகாரம்* மூதின்மகளிர் என்றும் உணர்த்துகிறது.

மூதின் மகளிரும் தேவ கன்னியரும்

மதுரைக்காஞ்சி (446) "பூந்தொடி மகளிர்" பற்றிச் சுட்டுகிறது. நச்சினார்க்கினியர் "இவர் நாயன்மார் கோயில்களில் சேவிக்கும் மகளிர்" என்கிறார்.

நாயன்மார் கோயில்களில் சேவிக்கும் மகளிர் தேவகன்னியர் எனப்பட்ட தேவர் கோயில்களில் பணிபுரியும் மகளிர் ஆவர்.

ஆனால் அரசன் கோயில் பெண்டிர் மூதின் மகளிராகிய அரசிகளின் தோழிகளாவர்.

மூதிற்பெண்டிர் களம் சென்று வீழ்ந்த தம் மைந்தர்க்காகக் கண்ணீர் மல்கினர். வீரச் சாவு பெற்றான் என்பதால் மகிழ்ந்தனர். தலையாலங்கானத்துப் போர்க்களத்தில் ''மூதிற் பெண்டிர் கசிந்தழ'' (புறம்.19:15) என்பதற்கு ''முதிய மறக்குடியிற் பிறந்த பெண்டிர் இன்புற்று உவகையால் அழ'' என்று பழைய உரைகாரரும் விளக்கினார். இதுவே மூத்தகுடி (பு.வெ. 35) என்று உ.வே.சாமிநாதையரும் ''கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு முற்றோன்றி மூத்த குடி'' என்ற மேற்கோளை எடுத்தாண்டு விளக்கினார். போரில் உயிர் துறந்த இவரே பழந்தமிழ் வீரக்குடி என்றும் தமிழப்படை என்றும் குடபுலவியனார் கூறுகின்றார்.

இதற்குத் ''தலைப்பெருஞ் சேனைத் தமிழச்சேரி'' (பெருங்கதை 3.4.:10-11) என்ற விளக்கத்தையும் தருகின்றனர். வேளிர் மகளிரே மூதின் மகளிர் என்றும் முதிய மறக்குடி மகளிர் என்றும் தெரிகிறது.

"மூதின் முல்லை" என்ற துறையின் பெயரிலேயே இப்பெண்டிரின் பீடும் பெருமையும் கற்பும் பாசறை செல்லா மகளிர் இவர் என்றும் உணரப்படும்.

மூதில் மறம் இவர்தம் குடிப்பெருமை பேசும். "எறிந்து களம் படுத்த வேந்துவாள் வலத்தர்" அரசகுடி வீரர் (வேளிர், வேந்தர்) என்றும் புலனாகிறது.

மூதிற் பெண்டிர்

*மூதிற் பெண்டிராகிய **முதிய மறக்குடிப் பெண்டிர்** தமிழ்ச் சேரி என்று பெருமைபடக் கூறினார்.*

சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையில் "மூதிற் பெண்டிர்" பற்றிய செய்தி இடம் பெறுகிறது. உரையாசிரியர்

அடியார்க்கு நல்லார் மறக்குடி மகளிர் என்று இம் மூதிற் பெண்டிரைக் குறிப்பிடுகிறார். இவர்கள் பழைய மறக்குடி என்ற வீரர் குடியினர் என்று தெளிவுபடுத்து கின்றார். இவரை "அரசன் கோயிற் அகப்பரிசார மகளிர்" என்று குறிப்பிடுகின்றார்.

ஐவர் ராசாக்கள் கதை அரசன் கோயில் பணிப் பெண்களை "மூப்பியர்" என்று அடையாளமிடுகிறது. இது மூப்பர் என்ற சொல்லின் தொடர்புடையதாகும். அரசனின் அந்தப்புரங்களில் அமைந்த பெருங்குடி மகளிர் மூதிற் பெண்டிராதல் வேண்டும்.

மூதிற் பெண்டிர் பற்றிக் குறித்த இளங்கோவடிகள் தொடர்ச்சியாக வீரர்குடியினரையே பட்டியலிடுகின்றார்.

மூதின் மகளிர்

ஒக்கூர் மாசாத்தியார் என்ற புலவர் பாடிய புறப்பாடல் (புறம். 279) பழந்தமிழ் வீரக்குடியின் புகழ்மிக்க செயலைப் புகழ்ந்துரைக்கின்றது. என்று முன்னர்ப் பார்த்தோம். முதிய மறக்குடியில் பிறந்த மூதின் மகளாகிய இவளது தந்தை முன்னாள் உண்டாகிய போரின் கண் யானையை எறிந்து கொன்று வீழ்ந்து மாண்டான். இவள் கணவனோ பெருங்கூட்டமாக வெட்சி வீரரால் கொள்ளப்பட்ட நிரைகளைக் கவர்ந்து செல்லவிடாமல் பகைவரை எதிர்த்து நின்று மாண்டு போனான். இன்றோ உரிய படைவீரரை அழைக்கும் அரசனின் போர்ப்பறையொலிகேட்டு மூதின் மகளும் அரசனுக்காகப் போர் செய்தல் கடமையெனத் தன் ஒரே மகனைக் கையில் வீரம் பொருந்திய வேலினைக் கொடுத்துத் தூய்மையான வெள்ளாடையை எடுத்து விரித்து அவனுக்கு அணிவித்து, அவனது குடுமியில் எண்ணெய் தடவிச் சீவி, தன் மகன் இல்லாது போனாலும் போகட்டும் என்று போர்க்களம் செல்க வென அனுப்பினாள் என்கிறது.

முறையாகப் பறை ஒலி எழுப்பப்படும் போர் அறப்போர் ஆகும். அரசனின் ஆட்சியைக் காத்தல் அவர் தொடர்புடைய படைவீரரின் கடமையாகும். குடுமிவைத்த வீரன் மூதின் மகளிரின் புதல்வன் என்பதும் போருக்குப் பறை ஒலி எழுப்பினால் உடனே தம் புதல்வர்களையோ கணவரையோ அரசன் பொருட்டு அனுப்புதல் வேளிர் குடியின் பெருங்கடமையாகும்.

இவரை அரசனின் உறவினரான பதினெட்டுப் பேர் என்று உரையாசிரியர் குறித்துள்ளனர். நச்சினார்க்கினியரும் பதினெட்டுப்

பேரான வேளிர் என்று அடையாளம் காட்டுகின்றார். மூதின் மகளிர் என்பார் தொல்குடி மரபினர். தந்தை கணவன், மகன் என்று போருக்கு அனுப்பும் தொன்மைமிக்க போரில் புறமுதுகிடாத வீரம் நிறைந்த பழைய வீரக்குடியில் பிறந்தவர் என்று புலனாகும்.

மூதின் மகளிர் குடி வீரர்கள் அல்லாத பிறர் போரில் நீங்கி ஓடிவிடுதல் எண்ணற்ற பாடல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

புறப்பாடல் 312இல் மூதின் மகளிர் பெற்ற பிள்ளை

தன் குலத்திற்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி அதற்குரிய அறிவு அதற்குரிய செய்கைகள் ஆகிய இவற்றால் நிறைந்தவனாகச் செய்தல் தகப்பனுக்குக் கடமையாம்

என உரையாசிரியர் கூறி யிருப்பது உணர்தற்குரியதாம். மேலே சொல்லப்பட்ட வீரனும் வேந்தர்க்காகப் போர்க்களம் செல்பவனாகக் குறிப்பிடப்படுகின்றான்.

ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

யானையை எறிதல் என்ற நிலையில் சொல்லப்பட்ட காளை என்ற வீரன் பொன்முடியாரால் அடையாளம் காட்டப் பெற்ற சான்றோன் வீரன் என்பதாம். மூதின் முல்லைப் பாடல்கள் பலவும் பழைய வீரர்குடி பற்றியன.

பெரும்புகல் மறவரான வலங்கை மகாசேனை

பதிற்றுப்பத்து 'ஆய்ந்து தெரிந்த புகல் மறவர்' (69) என்று கூறுகிறது. அரசனால் தேர்வு செய்யப்பட்ட, முறையாகப் பயிற்சியும் பண்புடைமையும் பெற்ற வீரர் இவராவர்.

''வாளோடும் வேளோடும் மாவோடும்'' புகுகின்ற வீரர் எனப் பழைய உரையாசிரியர் குறிப்பிடுகின்றார். அரசன் இம்முப்படை வீரர்களைத் தன் தொல்குடியிலிருந்து ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அனுப்புவான்.

சேக்கிழார் பெருமான் *பெரியபுராணத்தில்* ஈழச்சான்றார் மரபினரைக் குறித்தவிடத்து, "தள்ளாத் தொழில் உரிமைத் தாயத்தார்" என்று விவரிக்கிறார். போர்த் தொழிலில் உரிமை படைத்த சமூகம் சான்றார் இனத்தவர் என்பது சேக்கிழார் முடிவு.

கல்வெட்டில் இவரே "வலங்கைப் பழம்படையிலார்" என்றும் "வலங்கை மகாசேனை" என்றும் அழைக்கப்பட்ட வீரர் ஆவர்.[108]

முதலாம் பராந்தக சோழன் காலத்தில் ''ஆதித்த சோழர் தெரிந்த கைக்கோளர்'' போன்ற படைப்பிரிவினர் அரசர்களின் பெயரை முன்னொட்டாகக் கொண்டு சோழ அரசர்கள் பெயரால் அழைக்கப்படுகின்றனர். இப்படையினர் ஆதித்த சோழன் ஆராய்ந்து தேர்ந்தெடுத்த படையினராகலாம். முதலாம் இராசராசசோழன் காலத்தில்

இராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்
சாத்திரிய சிகாகமணி தெரிந்த வலங்கை வேளைக்காரர்
இரணமுகபீமத் தெரிஞ்ச வேளைக்காரர்

போன்று அழைக்கப்பட்டார்கள். கைக்கோளர் என்ற மரபுவழிப் பலராதல் வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட வேளைக்காரப் படையினர் அரசினரால் தேர்ந்து தெரிந்து எடுக்கப்பட்டவர் ஆகலாம்.

ஆனால் பழம்படையிலார் என்ற தொல்படை வீரர்கள், சேக்கிழார் கருத்தின்படி, போர்த் தொழிலில் நீக்கம் செய்ய முடியாத பாரம்பரியம் மிக்க வீரராவர். ஆய்ந்து தெரிந்த புகல் மறவர் நிலை மேலும் ஆராயப்படவேண்டும்.

நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்

என்று அகப்பாட்டு (67) காட்டியிருக்கும் நாணுடை மறவர் நல்ல போரினைச்செய்தவர். பிழை பொறுத்தாற் காவலுக்குரியவர். காவலாவது பிழைத்தோரைத் தாங்குதல் என்று *வீரசோழிய* உரையில் பெருந்தேவனார் சுட்டியுள்ளார்.

"பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்" என்று *நாலடி நானூறு*(457) குறிப்பிட்டிருப்பது நாணுடை மறவரையாம்.

வில்லோர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுள் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்து (அகம் 35)

---

108. மேற்படி.

என்று சுட்டிக்காட்டிய விழுத்தொடை மறவர் காட்டு வாழ்க்கைக்கு வேறுபட்ட கரந்தை மறவராவார். இளையர் எனப்பட்ட வீரரிலும் மாறானவர்.

சான்றோர் பழிவருபவற்றைச் செய்யாமையைப் "பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்" (புறம்.182) என்றது புறப்பாடல்.

சான்றோர் புகழு முன்னர் நாணுப
பழியாங் கொல்பவோ காணுங் காலே குறுந்தொகை (252)

என்பதால் தொல்குடி வீரரின் இயல்பு அறியக் கிடக்கின்றது.

வள்ளுவர் "குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வான்" என்று குடிப்பிறந்தவனே உலகத்தார் சொல்லும் பழிக்கு அஞ்சுவான் என்றார்.

பழி அஞ்சி வாழ்ந்தோரே பிழை பொறுத்தார் ஆவர். போரின் கண் புறப்புண் பட்டு உயிர்விடும் நிலை பெற்ற வீரர்கள் உண்ணா நோன்பு கொண்டு உயிர்விட்டனர். நாணி உயிர்விட்ட வீரத்தலைவனோடு வாளால் வடக்கிருந்து உயிர் துறந்தோரைச் 'சான்றோர்' என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

புறநானூறு (65:10-11) பெருஞ்சேரலாதனை

புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள்வடக்கிருந்தனன்.......

என்கிறது. *அகநானூறு (55)* அச்சேரலாதனுடன் சான்றோர் வீரர்கள் வடக்கிருந்து உயிர் விட்டதை

.... வாள் வடக்கிருந்த
இன்னா இன்னுரை கேட்ட
அரும்பெறல் உலகத்து சான்றோர் அவனொடு செலீ இயர்

என்கிறது. கோப்பெருஞ்சோழனும் வடக்கிருந்து உயிர் விட்டான். பொத்தியார் எனும் சோழ குலப் புலவரும் உயிர் விட்டார். பழி நாணி உயிர்விட்ட வீரக்குடியே பழியஞ்சி வாழ்ந்த குடியாம்.

சான்றோர் என்ற வீரர் மூத்தகுடி மரபினர் என்பது இலக்கியங்கள் காட்டும் பாடமாகும்.

கயமனார் என்ற புலவர் பாடிய புறப்பாட்டு (254) போர் முடிந்தவுடன் இளையாரும் முதியரும் அவரவர் வாழுமிடங்களுக்குச் சென்றனர் என்ற பொருளில் "இளையரு முதியரும்

வேறுபுலம்படர" என்று குறித்திருப்பதால் இருவகை வீரர்கள் இருந்தனர் என்று தெரியவருகிறது.

முதுகுடி வீரரும் இளையகுடி வீரரும்

அரசனுக்காகத் தம் உயிரினைத் துறந்தோரைச் சான்றோர் என்று அகப்பாடல் (55) தெரிவிப்பதைக் கண்டோம். "வீரன் - மூத்தோர்'' எனச் *சிலப்பதிகார உரை* கூறுகிறது (பக்.278 உவே.சா. பதிப்பு).

பிற்கால நூலான *ஐவர் ராசாக்கள்கதை* மூத்த நயினார் என்று போர்க்கலைக் கல்வியைப் போதிக்கும் ஆசானைக் குறிப்பிடுகிறது (வரி.305).

தகடூர் யாத்திரை அரசனுக்காக உயிரினை விடும் வீரரை மூத்தார் என்று அழைக்கிறது.

> *பிறந்த பொழுதேயும் பெய்தண்டார் மன்னர்க்*
> *குடம்பு கொடுத்தாரே மூத்தார் - உடம்பொடு*
> *முற்றுழிக் கண்ணும் இளையரே தம்கோமாற்*
> *குற்றுழிச் சாவா தவர்* (புறத்திரட்டு 1318)

வேந்தர்க்காகத் தம் உயிரைக் கொடுப்பவர் மூத்தார் (வீரர்) என்பவராவர். தம்மைப் புரந்த தலைவர்க்குப் பொழுதில் உதவியாம் தம் உயிரைத் தம் அரசர்க்காகத் தராதவர் இளையர் என்பார்.

மூத்தகுடி மக்கள், மூத்தவர் என்று அழைக்கப்பட்ட வீரர்கள் போரின்கண் நிலைத்து நின்று வேந்தனுக்காக உயிர்விடும் நிலை பெற்ற வீரர். இளையர் என்பார் நம்பிக்கை யில்லாத போரில் நிலைத்து நிற்காமல் ஓடி விடுவர் - இவரைக் "கல்லா இளையர் நீங்கி, கல்லா மறவர் நீங்கி" என்று புறப்பாட்டு கூறுகிறது.

ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் பாடிய புறப்பாட்டில் (புறம்.178) பாசறை இருந்த பாண்டியன் கீரன் சாத்தனுடன் சூளுரை செய்து கொண்ட சான்றோர் வீரரும், மதுவின் மயக்கத்திலே போருக்கு முன்பு வீர சபதம் செய்தும், அந்த நெடுமொழியை மறந்த சிறுபேராளர் எனும் இளையோர் பகைவர் கண்டு அஞ்சி நீங்குங் காலை அதாவது போர்க்களத் தினின்றும் புறமுதுகிட்டு ஓடும் காலத்து அவர்க்கு அரணாகத் தானும் சூளுரைசெய்த சான்றோருடன் முந்துற்று நிற்பான் கீரன் சாத்தன் என்று பாடியுள்ளார்.

சிறிய பேராண்மையையுடையோர் என உரையாசிரியர் கூறும் சிறுபேராளர் என்போர் இளையராகிய வேடராகலாம். எயினராகிய வேடரை நம்பிக்கையுடைய வீரராக வீரயுகம் கருதவில்லை. அவரை மறமாக்கள் என்று உலகம் கருதியது. இவரைக் கண்டு "எவ்வுயிரும் அஞ்சும்" என்பதிலே இருக்கும் உண்மையை உணர்க. விலங்கும், பறவைகளும், மனிதர்களும் அஞ்சுவர். பிறர் அஞ்ச வாழ்ந்த இவரை மாகுலவர் என்று இலக்கியங்களும், கல்வெட்டுகளும் உணர்த்திச் செல்கின்றன. மாகுலவர் என்பதன் பொருள் தெரிந்தால் மட்டுமே வரலாறு தெளிவுறும்.

கி.பி.1022 இல் அமைந்த முதலாம் இராசேந்திர சோழன் காலத்திய கல்வெட்டு[109] "மாகுலவர்" என்று வேடர் குல மறவரை அழைக்கிறது.

"நெடுவேள் வில் விழா" என்று கூறுதலால் அரசர்களின் (வேளிர்) வில் விழா என்று பெறப்படும். பங்குனித் திங்களில் நிகழ்கிற விழாவாகச் சொல்லப்படுவதால் பங்குனி உத்திரம் என்ற திருநாள் போலும்.

மழவர் என்ற காட்டகத்து வீரரும் வில்விழா கண்டனர் என்று மாமூலர் கூறுகிறார்.

வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன (அகம்.187)

என்பதால் அரசரைப் போன்று மழவரும் விற்றொழிலிலே மேம்பட்டு வில்விழா எடுத்து மகிழ்ந்தனர்.

அரசர்களைப் போன்று உரிமை பாராட்டி அரசராகவே கருதப்பட்டவர் மழவர். வேடராகிய கானவரும் வில் விழா எடுத்தனர் என்று கி.பி.12ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் *பெரியபுராணத்தில்* குறித்தார்.

வேடர்களைக் கானவர் குலத்தவர் என்று *திருக்கண்ணப்ப தேவர் திருமறம்* குறித்துள்ளது.

கி.பி.10ஆம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பி 'குலத்தில் கிராதகர்' என்று சொல்லியிருப்பதைச் சேக்கிழார் மறந்து மலைகளின் தலைவராக வேடர் கண்ணப்பனைச் சுட்டினார்

---

109. காட்டு மன்னார் கோயில் கல்வெட்டு.

என்பது வேங்கட மலைத் தலைவனாகப் புல்லி இருந்தான் என்பது கருதியாம். புல்லி பற்றிய செய்திகள் சங்கப் பாடல்களில் உள்ளன.

'கல்லா இளையர்', 'கல்லா மழவர்' என்று அழைக்கப்பட்ட காட்டகத்து மறவர், முதியர் குடி வீரர் இல்லை என்பது இலக்கியம் காட்டும் பாடமாகும்.

மலையின் அடுக்கத்தில் அமைந்த பகுதிகளைச் சங்ககாலம் ஆண்ட நளிமலை நாடன் 'வல்வில் இளையர் பெருமகன் நள்ளி' என்று பரணரால்(அகம்152) அழைக்கப்படுகின்றான்.

இளையர் பெருமகன் இளையர் மரபிலே தோற்றம் பெற்றவன் என்பது தெளிவாகத் தெரியும் உண்மையாகும்.

மருத இளநாகனார் (அகம்.245) "செல்சாத்து எறியும் பண்பில் வாழ்க்கை வல்வில் இளையர் தலைவர் எல்லுற" என்பதால் வழிச்சென்ற வணிகரை மறித்து அவர்தம் உடைமையைப் பறித்து அவ்வணிகரைக் கொல்லும் கொடிய செயலுக் குரியோரைப் பண்பு இல்லாத வாழ்க்கையுடைய கொடிய வில்லினையுடைய இளையர் என்றார்.

இளையர் என்ற இனக்குழுவிலிருந்து தோற்றம் பெற்றவர் மூத்த மறக்குடியினர் அல்லர் என்று உணரப்படும்.

தொன்னெறி மரபின் வாட்குடி தோன்றிய
முன்னவன் நிலைபுகல் முதுமொழி வஞ்சியும்

என்று இலக்கணவிளக்கம் கூறுவது முதுகுடியில் பிறந்த வீரர்க்காம். இவர் அறிவுடையோர் எனப்படும் வீரராவர். நெறியுடைய வாழ்க்கையுடையவரே வாட்குடியினர் என்பது, பழி அஞ்சி வாழ்பவரையே உணர்த்தும். பழி அஞ்சாமல் பழிசெய்தவரை எதுவும் உணர்த்தாது.

ஊரை எரியூட்டிய உழபுல வஞ்சியும் பகைவர் மீது கொள்ளைச் சாற்றுதலான மழபுல வஞ்சியும் இளையோர் மரபிற்குரியதாகும்.

மழபுலத்தைச் சுவாமிநாதம் கொள்ளைப் புலம் என்றே கூறுகிறது. மலையரசர் என்பார் முதுகுடி வீரர். இளையர் என்பார் பாலைநிலத்தில் தோன்றிய வேடராகிய குலத்தவர். மலையின்கண் சங்ககாலம் வேடர் குலத்தவரில் சிலரும் ஆட்சி செய்தனர் என்பதற்குக் கள்வர் கோமான் புல்லி எச்சமாகும். இவர் முதுகுடி மரபினர் அல்லர். மாறாக இளமக்களில் தோற்றம் பெற்றிருந்த இளையர் மரபினர்.

நாடுகாவலுக்கு முதுகுடியினரும் மறப்பாடி காவலுக்கு இளையரும் உரிமை கோரினர். இதன் தொடர்ச்சி பிற்காலம் வரை நிகழ்ந்தது. இளையர் என்ற சமூகப்பிரிவினர் தங்களை இளமக்கள் என்றும் இளமையார் என்றும் மேலும் மேம்பட்டுப் பேரிளமையார் என்றும் அழைத்துக் கொண்டனர்.

மறவன் என்ற சொல்லை வீரர் என்ற பொருளில் அகராதிகள் குறித்தாலும் மறவன் என்ற பெயர் இன்றைய மறவரிடம் வந்துவிட்டதும் தெரியவருகிறது.

பிற்கால இலக்கியங்களில் மறவன் என்ற சொல்லுக்குப் பதிலாக வீரன் என்று பயன்படுத்தியுள்ளனர்.

மேற்கோளாகக் கரபுரநாதர்புராணம் என்ற நூலில் "வளவன் வீரர்" என்றே படைவீரர் குறிப்பிடப்படுகின்றனர். காட்டுக்குடி வீரரை வேடர் என்றே குறிக்கின்றனர். பின்னர்ப் படைவீரரைக் காலாள் என்றனர். இதனால், காலாட்படை என்ற வழக்கும் ஏற்பட்டது.

ஆங்கிலேயர்கால ஆவணங்களில் இளையது மார் சாதி என்று அழைத்துக் கொண்டனர்.

பழங்குடி மறவராக இருந்து ஆட்சி முறைமை செய்த இருவரை இவண் காண்போம்.

பிட்டன் (முதுகுடி மறவவீரன்)

சேரநாட்டுக் குதிரை மலையினை ஆண்ட பிட்டங் கொற்றன் என்பானைக் கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார் என்ற புலவர் அரசவாகைத் துறையில் புறப்பாட்டில்

> '. . . குதிரைக் கிழவ! கூற்வேல்
> நறை நார்த்தொடுத்த வேங்கையங்கண்ணி
> வடிநவி லம்பின் வில்லோர் பெரும'

என்று குறித்துள்ளார் (புறம். 168). அவனை அகப்பாடல்

> வசையில் வெம்போர் வானவன் மறவ
> நசையின் வாழ்நர்க்கு நன்கலஞ் சுரக்கும்
> பொய்யா வாய்வாட் புனைகழற் பிட்டன்
> மைதவ முயற்சிமைக் குதிரைக் கவாஅன் (அகம்.143)

என்று குறிப்பிடுகிறது. மேலும் நான்கு புறப்பாடல்கள் (புறம்.169, 170, 171, 172) அவன் பற்றியவை.

சேரமன்னர்களின் படைத்தலைவன் ஆதலால் 'குதிரை மலைக் கிழவன்' என்று அடையாளமிடப்பட்ட பிட்டங் கொற்றனை 'வானவன் மறவன்' என்று அழைத்தனர்.

வானவன் மறவன் வணங்குவிற் தடக்கை
ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன் (அகம்.77)

என்றும் அகப்பாடல் ஒன்று கூறுவதால் இவன் சேரமன்னனின் பெருவீரன் என்று பெறப்படும்.

வேறொரு அகப்பாடல்(172) 'குன்ற நாடன்' என்றும் இவனைக் கூறுவதால் அவன் மலைகளின் தலைவன் என்பதாம்.

இவ்வீரனை 'வல்லாண் முல்லைத்துறை'யில் உறையூர் மருத்துவன் தாமோதரனார் 'மலைகெழு நாடன் கூர்வேற் பிட்டன்' (புறம்.170) என்று கூறுகிறார்.

இவன் குதிரை மலைத் தலைவன் என்பதால் (புறம்.172) வடம வண்ணக்கன் என்ற புலவர், 'வன்புல நாடன் வயமான் பிட்டன்' என்று குறித்தார்.

சேரரின் வீரனான அவன் குதிரை மலையில் அமர்த்தப்பட்ட காளை(விடலை) ஆவான். இவன் முதிய மறக்குடித் தலைவன். நாடன் பட்டமிட்ட தலைவன்; சேரர் மரபினன்.

மேலும் மூவேந்தர்கள் போல் அரச வாகையில் பாடப்பட்ட பிட்டங் கொற்றன், மலையை ஆண்டவன்.

வன்புலம் என்பது முல்லையில் இருந்த புன்புலம் ஆகும். மலையும் மலை சார்ந்த நிலங்களுக்கும் முல்லைக்குத் தலைவனான பிட்டங் கொற்றன் பழைய மறவர் குடியினன். அக்காலத்திலேயே காட்டுக்குடியாக இருந்த வேடர் குடியில் தோற்றம் பெற்றிருந்த மறவர் அல்லன். தனுர்வேதம் கற்றோர்க்குரிய

வில்லிற்கு விழா எடுத்தவன்

என்பதாலும்

மலைகளின் தலைவன்

என்பதாலும்

அரச வாகையில் பாடப் பட்டமையாலும்

இவன் முதியர் குடியில் தோன்றிய வீரன் என்பதாம்.

மலையரசனாகச் சொல்லப்படும் பிட்டங் கொற்றன் பரம்பரைப் போர் வீரன். பண்டைய காலம் முறையான போர்ப்பயிற்சியும் உயர்வான நம்பிக்கையும் பண்பும் உடைய வீரனே படைத்தலைமை ஏற்க முடியும்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் (புறம்.169) பாடிய பாடலின் பழையவுரை,

> (பகைவர்) படை அடர்த்து வருங்காலத்து நும்படையினது
> அணியைத் தாங்க வேண்டி அகன்ற ஆற்றின் கண் குறுக்கே
> தடுத்துக் கிடக்கின்ற மலையையொப்ப அதனைத் தடுத்து
> நின்றாயாதலானும் பெரும

என்று கூறுவதிலிருந்து சேரர் பொருட்டுப் புரிந்த போரில் அம்மன்னனின் பகைவர் படையைத் தடுத்துத் தம்படையைக் காத்தான் என்று பிட்டங் கொற்றனைப் புலவர் பெருமைப் படுத்துகின்றார்.

நாஞ்சில் வள்ளுவன் (முதுகுடி மறவ வீரன்)

கேரள நாட்டில் வள்ளுவ நாடு என்ற பகுதியின் ஆட்சியாளராக இருந்தவர்கள் முற்காலத்தில் குமரிக்கடலின் பகுதியில் கடல்சார்ந்த மலைப்பகுதியை ஆண்டனர். நாஞ்சில் வள்ளுவன் என்ற தலைவன் நெய்தல், மருதம், குறிஞ்சி நிலங்களை ஒரு சேர ஆண்டவன். அவனை ஒருசிறைப் பெரியனார் என்ற புலவர்

> *மணியன்ன நீர் கடற்படரும்*
> *செவ்வரைப் படப்பை நாஞ்சில் பொருந*
> *சிறுவெள்ளருவிப் பெருங் கனாடனை*
> *நீவா ழியர்நின் தந்தை*
> *தாய்வா ழியர் - நிற் பயந்திசினோரே* (புறம்.137)

நாஞ்சில் மலையரசன் என்றும் குறுநில மன்னன் என்றும் பெருமைப்படுத்துகிறார்.

> *உயர்சிமைய அழாஅ நாஞ்சிற் பொருந!*

மற்றொரு புறப்பாடல் (139:7/8) நாஞ்சில் வள்ளுவ நாடனை 'ஓடாப் பூட்கை உரவோர் மருக' என்பதற்குப் "புறக் கொடாத மேற்கோளையுடைய வலியோர் மரபிலுள்ளானே" (வல்ல மக்கள்) என்று உரையாசிரியர் குறித்துள்ளார்.

'உரவோர்' என்ற சொல்லால் வேந்தர்களும் அவர் மரபினருமே அழைக்கப்பட்டனர். "உயர்சிமைய வுழாஅ நாஞ்சிற் பொருந" (புறம்.139:8) என்பதால் பொருநன் என்ற சொல்லும் அரசரைக் குறிக்கும். சேர அரசர்களைப் 'பொருந' என விளித்துள்ளதைக் காண்க

யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந (புறம். 2: 11).

பாண்டிய வேந்தனைப் 'பொருப்பிற் பொருந' என்றும் *(மதுரைக்காஞ்சி 42),* 'போர்மிகு பொருந' என்று நெடுவேள் முருகனையும் (திருமுரு.), கரிகாற் பெருளத்தானை, "வேறுபுல முன்னிய விரகறி பொருந" (பொருந. .3) என்றும் கூறுதல் அறிக.

இதனால் 'வேந்தன்'என்றும் நாஞ்சில் வள்ளுவன் மருதனிள நாகனாரால் (புறம்.139:11) அழைக்கப்படுகிறான்.

மேலும் அவ்வையார் என்ற புலவர் இம்மன்னனைப் "பரிசிலர்க்கு யானை வழங்கிய பெரியோன்" என்று குறிப்பிடுகிறார் (புறம்.140:8). உயர்ந்த குலத்தில் பிறந்தவரை மட்டுமே அக்காலம் பெரியோர் என்றனர்.

மேலே சொல்லப்பட்ட பொருநன், வேந்தன், உரவோர், பெரியோர் என்ற சொற்கள் நிகண்டுகளில் உயர்ந்தோராகிய வீரக்குடியையே - முதுகுடி வீரரையே குறிக்கின்றன.

மலையரசர் குடியாகச் சுட்டிக்காட்டப்பட்ட நாஞ்சில் வள்ளுவனைத் 'தென்னவர் வயமறவன்' என்று புறப்பாட்டு (380) கூறுதலால் நாஞ்சில் வள்ளுவன் பாண்டியர்களின் படைத் தலைமை ஏற்று இருந்தான் என்று தெரியவருகிறது.

அகப்பாடலிலும் (அகம்.13:6) வள்ளுவன் முதிய மறக்குடியில் தோன்றியவன் என்பதால் 'திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்' என்றுசுட்டிக்காட்டினார் புலவர்.

இம்மரபினர்களின் தொடர்ச்சி பிற்காலக் கல்வெட்டுகளில் 'வள்ளுவ நாடாள்வான்' என்று காணப்பெறுகிறது.

'பெருங்கல் நாடன்' என்று பண்டுரைத்த இவ்வீரக் குடியினர் பற்றிச் சேரர் நாட்டுக் கல்வெட்டுகளில்[110] 'நாடாள்வான்' என்று பதிவாகியுள்ளது.

---

110. காரித்துறைக் கேரள னாதிச்சவன்மனாயின இராயாதராய வள்ளுவ நாடாள்வான், பார்த்திவ புரம் - குமரி மாவட்டம்
TAS Vol. II and III Pg. 50.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளுவ நாடாள்வானைப் பாண்டிய மன்னன் சடையவர்மன் குலசேகரன் 'என்அம்மான்' என்று அழைக்கின்றான்.[111] அம்மான் என்றால் தாய்மாமன் என்று பொருள்.

சேரர் நாட்டில் அரசின் தலைமை ஏற்று ஆட்சி நடத்து வதற்கு நடத்தப்பட்ட வீரப்போட்டிகளின் செயல்பாடுகளுக்கு (மூழக்களக் கச்சம்) வள்ளுவ நாடாள்வான் தலைவனாக மிளிர்ந்தான் என்று ஆவணங்கள் கூறுகின்றன. [112]

கேரள நாட்டுப் பொன்னானிப் பகுதியிலுள்ள சுகபுரத்துக் கல்வெட்டு

> சொகிரத்துப் பருடையாரும் இராய சேகராயின
> வள்ளுவரும் கூடிச் செய்த கச்சமாவது

என்பதால் வள்ளுவ நாடாள்வார்கள் அரசமரபினர்[113] என்று அறியக் கிடக்கின்றது. இராயசேகரர் மரபு வள்ளுவ நாடாள்வான் ஒருவன் ஆதிசங்கரர் காலத்தவன்; அவர்க்குத் தற்காப்புக் கலையான வர்மக் கலையைப் பயிற்றுவித்தவன்.

திருச்செந்தூர் அருகிலுள்ள கி.பி. 14ஆம் நூற்றாண்டு மணத்தி கல்வெட்டு 'வள்ளுவ நாடாள்வார் தேசம்' பற்றிக் குறிப்பிடுகிறது.[114]

குமரிநாட்டு அகத்தீசுவரம் கருப்புக்கோட்டைக் கல்வெட்டு 'வள்ளுவ நாடாள்வான் வளவு' கி.பி. 1438 ஆம் ஆண்டில் இருந்ததைத் தெரிவிக்கிறது.[115]

இவன் பழங்குடி மறவர் மரபிலே வந்தவன் என்றும் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. சேரர் குடி மரபின் தொடர்புடைய முதியர் குடி வீரர்கள் பெயரால் இன்றும் வல்ல

---

111. பத்தமடைக் கல்வெட்டு

112. பார்க்க : சீ. இராமச்சந்திரன், 2004, மேற்படி நூல்.

113. மேற்படி

114. மணத்தி கல்வெட்டு (ஆழ்வார் திருநகரி). சீ. இராமச்சந்திரன் கண்டறிந்தது. கி.பி.1245இல் அமைந்தது. "வள்ளுவ நாடாள்வான் தேச மாகிய." தோள் சிலைக்கலகம் தெரிந்த பொய்கள் தெரியாத உண்மைகள், பக். 60. ஆசிரியர்கள்: சீ. இராமச்சந்திரன், அ. கணேசன், தென்னிந்தியச் சமூக வரலாற்று ஆய்வு நிறுவனம், 2010, சென்னை 600 044.

115. மேற்படி

மக்கள் வாழ்கின்ற மறவன் குடியிருப்பு (நாகர் கோவில்), வீரன் குடியிருப்பு (ஏர்வாடி), பெரும்பற்று (நாங்குநேரி), மறவன் குடியிருப்பு (வள்ளியூர்), மறவன் மடம்(தூத்துக்குடி), மறவன் குளம் (மூலக்கரைப்பட்டி), மறவன் குளம்(மதுரை - திருமங்கலம்) எச்சங்களாகத் தெரிகின்றன.

களப்பிரர் காலத்தில் காட்டு மறவர்

பிற்காலத்தில் தோன்றிய மறவரின் கதைப்பாடல்களில் தனுர் வேதம் கற்ற மலை அரசரை விட, மன்றுகளை ஆளும் அரசரை விடப் பிற்கால மறவர்கள் எட்டு நாளிலே போர்க் கலையைப் பயிலும் திறமையுடையவர் என்று குறித்து இருப்பதால் மலையரசர் மற்றும் மன்றினை ஆளும் அரச குலத்தவர் என்பார் இன்றைய மறக்குடித் தலைவர் அல்லர் என்று தோன்றுகிறது.

மலையரசர் மக்கள் என்று அழைக்கப்பட்ட மக்களிலும் பிற்கால மறவர்கள் உயர்நிலை பெறத் தொடங்கியதைப் பிற்காலச் சிற்றிலக்கியங்கள் காட்டுகின்றன.

முற்காலங்களில் காட்டகத்து வாழ்ந்த மறவரின் வாழ்க்கை நிகழ்வுகள் இன்றும் கதைப் பாடல்களாக அமைந்து அவரை அடையாளம் காட்டுகின்றன.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் அமைந்த செப்பேடுகள்[116] தேர்மாறன் என்ற பாண்டிய மன்னன் காலத்தியன ஆகும். அந்தணர்களுக்கு வழங்கப்பட்ட தான பூமியைப் பாண்டியரிடம் பகைமை பாராட்டி அந்நிலத்தை ஆசி நாட்டுக் கம்பலை என்ற மறவன் கைக்கொண்டதை மீண்டும் அம் மறவனை வென்று விரட்டிக் கோநிலமாகக் (அரசன் நிலம்) கொண்டான். அதில் காட்டு நிலத்தை இளையான்புத்தூர் என்று பெயரிட்டு வ்ழங்கப்பட்டது தெரியவருகிறது.

இந்நிலத்தை மீண்டும் தானமாக அந்தணர்க்குப் பாண்டிய அரசன் வழங்கியுள்ளான். இந்நிலம் களப்பிரர் காலத்தில் மறவர்களால் அந்தணர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

> அவள்காணி கோப்பற்றாய்க் காடு கொண்டு கிடந்ததனை
> இளையான்புத்தூர் என்று பெயரிட்டு

என்பதால் மறவருக்குக் காணி வழங்கியவன் களப்பிர மன்னன் என்று தெளிவாகத் தெரியவருகிறது. இதுபோன்றே, வேள்விக்குடி

---

116. மேற்படி.

பறிபோனதையும் மீண்டும் கடுங்கோன் அதை மீட்டுக் கொடுத்ததையும் கூறுகிறது.

தொல்முதுகுடி மூவேந்தர்கள் ஆட்சியை யாரிடம் இழந்து ஓடி ஒளிந்தனர் என்று *கமலாலயச் சிறப்பு* என்ற *திருவாரூர்ப் புராணம்* விவரிக்கிறது.

பழித்து வைதிகத்து நீதி பாஞ்ச ராத்திர முஞ் சேர்வார்
ஒழித்தலால் வைதிகத்து உணர்வறம் இரண்டுங்குன்றி
இழப்பராம் இருந்த தேசம் புளிஞர் வந்தெதிர்ந்தபோது
வழக்கறியாத அந்த மறவருக்கு ஒளிப்பர் மற்றென்

என்பதால் வேடராகிய (புளிஞர்) மறவருக்குப் பயந்து வேந்தர்கள் ஓடி ஒளிந்தனர் என்றார். காட்டு நாட்டு முறைமை உடைய அவரை வழக்கறியாத மறவர் என்றார்.

நச்சினார்க்கினியரோ இவரை, 'காட்டகத்து வாழும் மறவர்' என்று *தொல்காப்பியச்* செய்யுளியல் உரையில் குறித்துள்ளார்.

மேலும் அவர் காட்டகத்து மறவரை விளக்கியபோது *பெரும்பாணாற்றுப்படை* 370-371 அடிகளை எடுத்தாண்டு

வாடாவள்ளியின் வளம்பலதரூஉம்
நாடு பல கழிந்த பின்றை. . .

என்பதில் 'வாடாவள்ளி' என்பது வள்ளிக் கூத்து எனவும் இது இழிந்தோர் காணும் கூத்து என்றும் அவர்கள் புறநாடுகளில் இருந்தனர் என்றும் "மண்டம ரட்ட மறவர் குழாத்திடை" என்று மேற்கோள் பாடலைக் (தொல். புறத்சூ5) குறிப்பிட்டு விளக்கியுள்ளார்.

எனவே மூவேந்தரின் ஆட்சியைக் கவர்ந்த பிற்கால மறவர் வேடரில் தோற்றம் பெற்றிருந்தவர் என்று புலனாகிறது.

இராஜநாத திண்டிமர் (கி.பி.1530-1542) எழுதிய *அச்சுதராயாப்யுதம்* (1:32) "பாண்டியர்களை விரட்டி மதுரையைக் கைப்பற்றிய மறவரிடமிருந்து (வேடர்) விசய நகரத்தார் மதுரையைக் கைப்பற்றிக் கொண்டனர்"என்று கூறுகிறது. இது இரண்டாவது முறையாக மறவர் நாடு கொண்டது ஆகும்.

எனவே 'நாணுடை மறவர்', 'செருப்புகல் மறவர்' என்பார் புளிஞரிலும் வேறானவர் என்பதை இலக்கியங்கள் எடுத்தோதுகின்றன.

இருவகை அரையர் என்று கல்வெட்டுகளில் குறிப்புகள் உள்ளன. இதுபோன்று இருவகை மறவர் இருந்தனர். செங்கோல்

தொடர்புடைய அறக்குடி மறவர்; மற்றொருவர் கொடுங்கோல் மறவர்.

மேலே சொல்லப்பட்ட அறக்குடி மறவரை முதிய மறவர் என்று அழைத்து அவர்களில் தலைமைபெற்றோர் குறுநில மன்னராக மலைகளை ஆண்டனர்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியல் 6ஆம் நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் 'ஆர் அமர் ஓட்டலும்' - என்பதற்குக்

> குறுநில மன்னரும் காட்டகத்து வாழும் மறவரும்
> போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங்காண்டலும்

என்று பொருள் கூறியுள்ளார். வேந்தரிலும் குறுநில மன்னரிலும் மாறானவர் காட்டகத்து மறவர் என்று புலனாதல் காண்க. *அகப்பாடல் (75)*

> *கான வாழ்க்கை அடுபுலி முன்பின்*
> *தொடுகழல் மறவர் தொன்று இயல் சிறுகு*

என்பதால் இம்மறவர் அரசனின் படையில் பின்பு பணிபுரியத் தலைப்பட்டனர் என்று தோன்றுகிறது. *சிலப்பதிகாரம்,*

> *கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன*
> *வல்வி லெயினர் மன்று பாழ் பட்டன*
> *மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவா*
> *தறக்குடி போலவிந் தடங்கின ரெயினரும்*

என்பதால் பழைய வாழ்க்கையிலிருந்து எயினராகிய மறவர் மாறுதலைப் பெற்று அறக்குடி (அறத்தை மறமாகக் கொண்ட குடி) போலப் பாலைநிலம் நீங்கி ஊர்களில் வந்து சிலர் அரசனுக்கு அடங்கிய குடிகளாக வாழத் தொடங்கினர் என்று தெரியவருகிறது.

ஆனால் பாலைநிலம் தங்கிய மறவர் காட்டகத்திலே ஆட்சிகொண்டு வேட ராசர் எனப்பட்டனர் என்று வடுகுல ராசாக்கள் என்ற அவர் பட்டம் வலியுறுத்துகிறது. **பதிற்றுப்பத்து,**

> *மன்னெயில் எறிந்து மறவர்த் தரீஇத்*
> *தொன்னிலைச் சிறப்பின் நின்னிழல் வாழ்நர்க்கு*
> *(பதிற்.37:10-11)*

என்பதற்குப்

> பகைமன்னர்க்குரிய மறவரைக் கொணர்ந்து நின் நிழலில்
> வாழும் நிலையான வீரராகிய சான்றோராகிய மறவர்க்குக்

கொடுமை செய்தற்கேதுவாகிய பகைமை அவர் நெஞ்சில் நிகழாத வண்ணம் போக்கினை

என்றார். இதனைக் "கோடற வைத்த கோடாக் கொள்கை" என்று புலவர் பாடுகின்றார். 'பிறழாக் கொள்கையை உடையவர் இவ்வீரர்கள் ஆவர்' என்பது இதன் பொருள்.

போரில் கொள்கையின் பொருட்டுப் பயன்படுத்தப் பட்ட மறவரைக் கொண்டி மறவர் என்று *தகடூர் யாத்திரை* கூறுகிறது.

கொண்டி மறவர் மறலிக் குயிர் நேர்ந்தார்
மன்னர்க் குறவிலர் கண்ணொடர் ஓர்ந்து (புறத்திரட்டு 1258)

என்பதால் கொள்ளையிடுதல், ஊர் தீயிடுதல் போன்ற போரில் ஈடுபடுத்தப்பட்ட காட்டுமறவர் அரசனின் உறவினர் அல்லாதவர் என்பதாம்.

போரில் கொள்ளையிடுதல் பொருட்டுப் பயன்படுத்தப் பட்ட வீரரைக் கொண்டி மறவர் என்று மேலே அறிந்தோம்.

மாங்குடி மருதனார் *கண்டோர் நெஞ்சு நடுக்கு உறூஉக் கொண்டி மகளிர்* என்பதற்குத் *(மதுரைக்காஞ்சி 582-583)*

தம்மைக் கண்டோருடைய நெஞ்சை வருத்த முறுவித்துப்
பொருள் வாங்குதலையுடைய பரத்தையர்

என்று நச்சினார்க்கினியர் உரைசெய்தார்.

முதிய வீரர் குடிச் சான்றோர் என்பது *பதிற்றுப்பத்து* சொல்லும் பாடமாகும். இவரே

ஓடாப் பூட்கை மறவர் மிடறப
இரும்பனம் புடையலொடு வான் கழல் சிவப்ப
குருதி பனிற்றும் புலவுக் (பதிற்று. 57)

எனப் போரில் தோற்று ஓடாத மூலப்படையினர் களத்திலே அரசனுடன் உள்ளதாகப் பாடப்பெற்றுள்ளது. இவர்கள் ''புறம்கொடுத்து ஓடாத கோட்பாட்டை'' உடையவர்கள் எனப் *பதிற்றுப்பத்தின்* (பதிற்.34:2) பாடலடிக்குப் பழைய உரையாசிரியர் உரை செய்துள்ளார்.

பனந்தோட்டாலான மாலைக்குரியவர் முதிய மறவராகிய சான்றோராம். இவரையே வள்ளுவர் 'தொல்படை' என்றார். ஒரு கல்வெட்டு "மதுராந்தகனைத் தொல்படைச் சோழ வல்லப னென்றும்" குறிப்பிடுகிறது.[117] அரசனும் தொல்படையினர் இவர்களும் அரச மரபினரென்று அக்கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது.

மாவலி வமிசத்தார்க்கு மாற்றான பெரும்புகல் மறவர்

கணம்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓணம் நல்நாள்
கோணந்தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறு பொரு செருவில்
மாறா துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்புஆர் கண்ணிப் பெரும்புகல் மறவர்
கடுங்களிறு ஓட்டலின் காணுநர் இட்ட
நெடுங்கரைக் காழகம் நிலம்பரல் உறுப்ப
கடுங்கள் தேறல் மகிழ்சிறந்து திரிந்த *(590-599)*

என்ற *மதுரைக்காஞ்சியின்* பாடலடிகளுக்குத்

திரட்சியைக் கொண்ட அவுணரை(அசுரர்) வென்ற பொன்னாற் செய்த மாலையினையுடைய மானம் (கருமை)யையுடையோன் மாயோன் பிறந்த ஓணமாகிய நன்னாளில் ஊரில் எடுத்த விழாவில் வீரர்கள் மகிழ்ச்சியுடன் போரிட்டுத் தம் வீர ஆற்றலைக் காட்டுவர்

என்னும் பொருள் தோன்றுமாறு நச்சினார்க்கினியர் உரை படைத்துள்ளார்.

அதாவது மாயோன் பிறந்த திருவோணத் திருநாளில் ஊரெல்லாம் திரண்டு விழா எடுத்து மகிழ்ச்சியைத் தெரிவித்தன. அத்திருநாளில் யானை விளையாட்டும் நிகழ்ந்தது என்பது இதன் மூலம் பெறப்படும் கருத்து.

மாயோன் என்பவன் சுரர்களின் தலைவனாக இருந்து அசுர இனத்தவரை அழித்து, சுரர் மரபினரைக் காத்தவன். மகாபலி வமிசத்துச் சக்கரவர்த்தியிடம் வஞ்சனையால் மண்பெற்று அவனைக் கொன்றவன்.

மாவலி வமிசத்தினர் முற்காலத்தில் காட்டாட்சி முறைமை பெற்று மேம்பட்ட ஆட்சியாளராகவும் மாறியிருந்தனர் என்பது புராணம் தெரிவிக்கும் செய்தியாகும். வேதங்களில் குறிக்கப்படும் வாணர்களும் அசுரர்களின் தலைவர் ஆவர்.

அசுரர் பலரைப் பலவகையான போர்களில் வென்ற மாயோன் (கண்ணன்) பிறந்த நாளில் மகிழ்வுடன் பங்குபெற்ற

---

117. பார்க்க : நெல்லை நெடுமாறன் ஆய்வுகள்.

வீரர் சுரர் மரபினைச் சேர்ந்த சான்றோர் வீரராக இருந்திருக்க வேண்டும்.

ஓணம் பண்டிகையின்போது வீரர்களாகிய மறவர் போர்த்திறம் காட்டி மகிழ்ந்தனர். மறங்கொள் சேரியில் அதாவது வீரர்கள் குடியிருப்பில் வாழ்ந்த வீரர் மரபினர் பற்றி மாங்குடி மருதனார் இவ்வாறு குறித்திருக்கிறார்.

முகத்திலே, மார்பிலே வடுவைப் பெற்றிருந்த பழங்குடி வீரர்கள் பரம்பரையாகப் போர்த்தொழிலில் ஈடுபட்டு வருவதால், போர்க்கருவிகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் அவர்களது வலிமையான கைகளில் காய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதனை, 'சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை' என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாவலர் சரிதை "சாணர் போர்த்தழும்புள்ள வீரர்" என்று உணர்த்திக் காட்டுகிறது.

திருஞானசம்பந்தர் *தேவாரம்*, 'கூர்தரு வேல்வல்லார் கொற்றங் கொள்சேரி' பற்றி விவரிக்கிறது. இவற்றிலிருந்து சிறந்த விழாக் காலங்களில் போர்வீரர்கள் தங்கள் போர்த்திறனை வெளிப்படுத்தியுள்ளனர் என அறிய முடிகிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் என்பார் சேரநாட்டில் அரசகுடியினர் போரிட்டுத் தம்மில் ஒருவரைத் தலைவராக்கிக் கொண்டனர் என்று ஆவணங்களை ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளார்.[118] எனவே போரின்கண் நிலைத்துநின்று அடிமாறாது அமைந்த பழமையான மறவர் சுரர் மரபினர் ஆவர்.

மறங்கொள் சேரி என்பது அரசனின் படைவீரர் அமைந்த சேரி என்பதும் மாயோன் விழாக் கொண்டாடிய சேரி என்றும் அறிய முடிகிறது. இந்தச் சேரியில் விழாக் கொண்டாடியோர் பழமை வாய்ந்த வீரர் என்பது புலனாகும். அவ்வீரர்கள் சுரும்புகள் நிறைந்த போர்ப்பூவினைச் சூடியிருந்தனர். அதாவது அவர்கள் அரசனின் முதன்மைப் படை வீரர்கள். யானைப் போரில் ஈடுபடும் மறவர் ஆவர். அவர்கள் இயல்பான வீரர் என்றும் யானைப் போர் முறை அவர்களுக்கே உரியது என்றும் தெளிவாகத் தெரிகிறது.

பத்துப்பாட்டு - *மதுரைக்காஞ்சிக்கு* உரை செய்துள்ள ச.வே.சுப்பிரமணியன் (கோவிலூர் மடாலயம் பதிப்பு: 2003) கீழ்காணுமாறு இப்பாடலடிகளின் பொருளைக் கூறுகின்றார்:

---

118. சீ. இராமச்சந்திரன், 2004, மேற்படி நூல்,

> அசுரர் கூட்டத்தை வென்ற, பொன்னால் செய்த மாலையை அணிந்த திருமால் திருவோணமாகிய நல்ல நாளில் பிறந்தான். அந்நாளில் வண்டுகள் ஒலிக்கும் மாலையையுடைய, போரில் விருப்பமுள்ள மறவர் யானைப் போர் காணவிரும்பி, களிறுகளை மோதவிட்டு மகிழ்ந்தனர். அவ்யானையை அங்குசத் தால் ஆழ்ந்த தழும்பு கொண்ட முகத்தையும், வடுப்பட்ட நெற்றியையும் உடையவை. மறவர் போரைத் தாங்கும் பெரிய கையையுடையவர். மறவர் வாழும் சேரிகளில் இது நடைபெறுகிறது. யானைப்போர் காண்போரைப் பாதுகாக்கக் கரை அமைத்திருந்தனர். அக்கரையில் நின்று பார்ப்போர் கால்களைப் பரல்கற்கள் உறுத்தின. அவ்வுறுத்தலைப் போக்கக்கூடிய கள்ளை உண்டு களித்துத் திரிந்தனர் அவ்வீரர்.

பொன்முடியாரின் *தகடூர் யாத்திரை* "புகழ் சால் மறவர்" என்று சால்புடைய வீரர் என்று எடுத்தோதுகிறது.

வீரசோழியத்திற்கு உரை எழுதிய பெருந்தேவனார் "வீரர் களிறேற வெல்வேந்தர் தேரேற" என்றும் "வேலிளைஞர் மாவேற" என்றும் குறித்திருக்கிறார். களிறேறும் வீரரும் தேர் வேந்தரும் அரசகுடி வீரர். குதிரையேறிய இளையர் இளமக்களில் தோற்றம் பெற்றவர்.

> *தொல்காப்பியம்* புறத்திணையியல் சூத்திரம் (60)
>
> வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்று
> இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்

என்பதற்குத்

> தன்மேல் வரும் கொடிப்படையினைத் தானே தாங்குதல் வாட்தொழிலில் பொய்த்தலின்றி மாற்றாரைக் கொன்று தானும் வீழ்தலென இரண்டு கூறுபட்ட போரில் சென்றறியாத மறமக்கள் தாமே செய்யும் தறுகணாண்மையும்

என்றார். இதனால் உறுதியான போர்க்குரியவர் மறமக்கள் அல்லர் என நச்சினார்க்கினியர் வலியுறுத்துகிறார்.

பகைவரைக் கொன்று களத்திலே வீழ்ந்த வீரனுக்கே நடுகல் எடுப்பது நம் பண்டையோர் வழக்கு. போரில் உறுதிப் பாடுடன் நிலை நிற்காத மறமக்கள் பற்றித் தெரிந்து கொண்டாலே அறத்தை மறமாகக் கொண்டு போரில் உறுதிப்பாட்டுடன் நிற்கும் போர் வீரர் பற்றித் தெரியவரும்.

போரில் இருகூறு எதுவெனில் எதிரியைக் கொல்லுதல்; இன்றேல் தான் வீழ்தல் என்ற வீரம் விலை போகாத போர். இது காட்டகத்து மறவரிடம் இல்லையென்று சங்க இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுவதையே நச்சினார்க்கினியர் உணர்ந்து கூறியுள்ளார்.

தகடூர் யாத்திரையில் பொன்முடியார் மூத்தார், உறுதிப்பாடுடைய வீரர் என்றும் அரசனுக்காக உயிர் விடுகின்றவர் என்றும்* கூறி, இளையர் என்பார் உறுதியில்லாத வீரர் என்றார்.

வாட்தொழில் உரிமை பாராட்டிய வீரக்குடி என்பது போரில் விலகாமையாகும். இதனாலேயே வள்ளுவர் போரின்கண் நிலைத்து நிற்கும் வீரரை நிலைமக்கள் என்று அழுத்துகிறார்.

போரின் கொள்கைகளை உணர்ந்து போரிடும் வீரர்களைப் பற்றி இலக்கியங்கள் பேசுகின்றன. போரின் இலக்கணங்களை வகைப் படுத்தியும் கூறியுள்ளனர். இதுபோன்று போரின்கண் நீங்கியவர்களைக் கூலிப்படையினராகவே கருதயிடமுண்டு. நிலைநின்ற நிலைப்படையில் தம் முயற்சியால் மேம்பட்ட சிலரும் இடம்பிடித்திருக்கலாம்.

போர் வீரர்களுக்குப் படைக்கலப் பயிற்சி மிக முக்கியமான தாகும். இதுவே ஓதுதல் என்று வீரர்க்கும் அரசர்க்கும் கூறினர்.

படைக்கலம் பயிற்றல் என்ற தொழில் இலக்கியங்களில் எந்த மரபினர்க்குச் சொல்லப்பட்டதோ அவர்களே போர்க்குடி என்பதோடு அவரே படைக்கலம் பிடிக்க உரிமையுடையவராவர். சான்று: ஏனாதிநாதர்.

படைத் தொழிலுக்குப் பிற்காலத்தில் பலரும் வந்தனர். அவர்களில் காட்டுக்குடிகளும் அடங்குவர். வெட்சிப்போர் முறைமை காட்டுக்குடிகளுக்கு இருந்தது. போரின் தொடக்கத்திற்கு முற்பட்ட ஆநிரை கவர்தல், ஊர் தீயிடுதல், ஊர் கொள்ளை யிடுதல் போன்றவை வெட்சிக்குடிகளாலேயே நிகழ்ந்தன. இவர் ஒருவகை வீரர். கரந்தைப்போர் என்ற ஆநிரை மீட்டல் ஒருவகை வீரரிடம் தரப்பட்டிருந்தது.

நடுகல் எடுக்கப்பட்ட வீரன் அல்லது மறவர் வருதார் தாங்கியவன். போரில் புறமுதுகிடாதவன். வெட்சிப் படையில் அமர்ந்தவனும் கரந்தைப் போர்க்குப் பயன்பட்டிருக்கலாம். கரந்தை வீரர் என்ற உரிமை காட்டகத்து வாழ் எயினர் குடிக்கு இல்லை.

நெல்லை மாவட்டத்தில் கரந்தா நேரி என்ற ஊர் கரந்தை வீரரின் எச்சமாகத்திகழ்கிறது. போரில் இளையர் என்பாரும்

பங்குபெற்று வந்துள்ளனர். வீரராகவும் காணப்பெறுகின்றனர். அவர் தகுதியுடைய வீரர் இல்லை என்று இலக்கியங்கள் பேசுகின்றன.

பெருங்கதை (3:24:12) "ஒருகால் இளையர்" என்று பணிமக்களில் தோன்றிய மரபில் வந்த ஏவல் இளையரைத் தூதுக்கும் பிற்காலத்தில் பயன்படுத்தினர் என்று தெரிகிறது. "ஒருகால்" என்ற சொல் காலால் நடந்து ஓலை கொண்டு சென்றவனையும் உறுதிப்பாடு இல்லாத வீரரையும் குறித்திடக்கூடும்.

கி.பி.14ஆம் நூற்றாண்டு நூலான நம்பியகப் பொருள் - இளையர் மரபினர் பெற்றமாற்றத்தால் அரசனுக்குக் கவசம் போன்றவர் இளையர் என்று சிறப்பிக்கிறது. முற்கால நிலைமையிலிருந்து வேறானவராகவே இளையர் நம்பியகப் பொருள் நூலில் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

தொல்காப்பியச் சூத்திரம் நச்சினார்க்கினியர் உரையில்

போர்க்களிறு காணா இளமையார் கண்டிவனோ
நின்றிலனேன்

என்று எடுத்துக்கூறி இளையர் என்ற வீரரைத் தாழ்வானவராகக் கருதுகிறார். மேலும்,

வேந்தன் குடிப்பிறந்தாரும்(அரசகுலத்தவர்) அவன்
படைத்தலைவராகிய இளையர் செய்யினும்
தன்னுறு தொழிலாதலால் கரந்தையாம்

என்றார். இதனால் அரச குலத்தவரிலும் வேறானவர் இளையர் என்று அறியக் கிடக்கின்றது.

தொல்காப்பியம் புறத்திணையியல் சூத்திரம் 58க்கு உரைசெய்த நச்சினார்க்கினியர் மேற்கோளாக எடுத்துக் காட்டிய பாடல் "கரந்தை வீரனை மூத்தோன்" என்று குறிப்பிடுகிறது.

மூத்தார் என்ற உயர்குடி வீரர்கள்பற்றி இலக்கியங்களில் சான்றுகள் உள. இவர்கள் போரின்கண் நீங்காத வீரர்கள் ஆவர்.

'ஆறலை இளையர்' என்று கொங்குவேளிரும், அவர்கள் 'மறப்படை இளையர்' என்று அரசரின் படையில் இடம்பெறத் தொடங்கியிருந்ததையும் அறியமுடிகிறது

இளம்பூரணர் உரையில் இளையோர்க்குரிய கிளவி பற்றி விளக்கியவிடத்து "உழைக்குறுந்தொழிலும் காப்பும் உயர்ந்தோர், நடக்கை யெல்லா மவர்கட் படுமே" (சூத்திரம் 169-பொருளதி காரம்) இதுவும் இளையோர்க்குரிய திறன் உணர்த்திற்று.

இடத்தினின்று குற்றேவல் செய்தலும் மெய் காத்தலும் பிறவும் உயர்ந்தோர்க்குரியதாகிய நடை யெல்லாம் இளையோர்கட்படும் என்றவாறு

என்கிறார். மேலும் உதாரணம் வந்தவழி காண்க எனவும் கூறுகிறார். இதுவே மூத்த குடியினரின் சிறுகுடி செலவாதல் வேண்டும்.

மாங்குடி மருதனாரும் நானிலத்தைக் குறிப்பிடுகின்றாரே ஒழிய, பாலை நிலத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

நச்சினார்க்கினியர் காட்டகத்து மறவர் வாணர் மரபினர் ஆவர் என்கிறார். பிற்காலக் கல்வெட்டுகளில் கூடக் காட்டகத்து மறவரான வாணாதிராயர் தாம் உயர்வு பெற்றபோது தமக்கு அரசு நிலைத்த பகுதியில் தானவர் நாடு என்று அழைத்துக் கொண்டனர். இவர் ‘அரச குலம் என்ற பாம்பிற்குத் தாம் கருடன்’ என்று கூறியும் ‘கருடக் கொடியோன்’ என்று உரிமை பாராட்டுவதும் அறியத்தக்கவையாகும்.

மாவலி வமிசத்திற்கு உரிமை கோரிய வீரர்கள் விழா நிகழ்ச்சிக்கு உறுதுணை அளித்து வீரத்தன்மை காட்டியதாக மாங்குடி மருதனார் குறித்துக்காட்டியிருக்க மாட்டார் என்று உறுதியாக நாம் நம்பலாம்.

மாவலி வமிசவீரர்கள் பலரும் பிரகலாதனைப் போன்று மாற்றம் பெற்றுவிட்டனர் என்ற கருத்துக்கு இடமில்லை. மாயோன் பிறந்தமையாலே தமது அரசுக்கு முடிவுகட்டப்பட்டது என்பதை உணர்ந்த மாவலி வாணர்கள் வடமதுரையிலிருந்து துரத்தப்பட்ட வமிசத்தவர்கள் ஆவர்.

திருப்பாலப் பந்தல் (கடலூர்) கல்வெட்டு[119]

முடியு முரசுந் தமக்குரிய
பாருமுடன் பெறுபவர் பார்வேந்தர்
வீரப் பெருமாள் மகதேசன்
பேரெழுதித் தத்தந்
திருமார்பில் ஆளோலை செய்தவன்
மதுரை விட்டோடகடலான
மால்வழுதி தென்மதுரை விட்டின்று
தென்கடலான் நன்நூதலாங் மல்லார்

---

119. ARE 157/1904. SII 17 No 177

தோள் மாகதர் கோமான் முனிந்தால்
மன்னவருக் கெல்லாங் கடலோ விடம்

என்று கூறுகிறது.

மதுரையை ஆண்ட பாண்டிய குலத்தவரைத் தெற்கே துரத்தி மதுரை மகா நாயகன், இராஜகுல சர்ப்ப கருடன், பாண்டிய குலாந்தகன், அரச ராவுண இராமன், கங்கா குலோத்தமன் என்ற பட்டங்களை வாணகுல தீபர்கள் புனைந்தனர் எனக் கி.பி.1483இல் அமைந்த நெக்கோணம் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[120]

பாண்டிய குலத்தையே அழித்து மதுரைக்குத் தெற்கே துரத்தியவர் வாணகுலத்தவர். "வாணகுலதீபன் தனியாண்மை வடதிக்கில்" என்று கல்வெட்டுப் பாடம் உள்ளதால்[121] வடபகுதியில் பாணாசுர மன்னர் ஆண்டனர் என்று தெரிய வருகிறது. இவரைப் புலவர்கள் "கரும் புறத்தாருக்கெல்லாம் அரசர்" என்றுதான் அழைத்துள்ளனர்.

காளமேகப் புலவரின் பாடல்

சொக்கன் மதுரையினில் தொண்டர்க்கு முன்னம் வீழ்ந்த
பொய்க்குதிரை சந்தைக்குப் போகுமதோ - மிக்க
கரசரணா வந்தக் கரும்புறத்தார்க் கெல்லாம்
அரசரணா மாவலிவா ணா

என்பதால் கரும்புறத்தார்க்குரிய ஆட்சியாளர் என்பதால் காட்டாட்சிக்குரியவர் என்று தெளிவாகிறது.

மாவலி வாணர் என்ற மறவர் தலைவனை இராமச்சந்திர கவிராயர் என்ற புலவர்

கல்லாத ஒருவனை நான் கற்றா யென்றேன்
காடெறியும் மறவனைநா டாள்வா யென்றேன்

என்று உணர்த்திக் காட்டியிருப்பது எண்ணுதற்குரியது.

பரிபாடல் இருதிறத்தார் என்று சுரர், அசுரர் பற்றிக் குறிப்பிடு கிறது. இருவகை மரபினரில் வாணாசூரர் அசுரகுலத்தினர். தமது பெயரால் தானவர் நாடு என்று அழைத்துக் கொண்டனர்.

---

120. புதுக்கோட்டை எண்:672.

121, மேற்படி.

அசுரர் வமிசத்தார் முற்பட்ட காலத்தில் காட்டாட்சி முறைமையுடையவர் என்று எண்ணற்ற இலக்கியங்களில் வெளிப் படுகிறது. காட்டில் ஆட்சி செய்தவராகவும் வாழ்ந்தவராகவும் எயினர், வேடர், மறவர், வடுகர் என்று அழைக்கப்பட்ட மக்கள் இருந்தனர். இவரைப் பழமொழி நானூறு (121)

காடுஉறை வாழ்க்கை கடுவினை மாக்களை
நாடுஉறைய நல்கினும் நன்கு ஒழுகார்

என்று சுட்டிக்காட்டியிருப்பதும் அறியற்பாலதாம். கடுவினை மாக்கள் என்போர் கொடுங்கோலாட்சிக்குரிய வேடர்கள் என்றுமாம்.

மதுரைக்காஞ்சியில் (202-203) மாங்குடி மருதனார் வாணன் பற்றிய செய்தியைத் தருகின்றார்.

தென் புலம் மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்

என்று குறித்துள்ளார்.

தென்திசை நிலத்தின் மலைகளெல்லாம் நிறையும்படி வாணன் எனும் சூரன் சீரிய பொருள்களை வைத்திருந்தான்.

பிற்காலப் பாண்டியர்கள் "விந்தைப் போர் கடந்த அண்ணல்" என்று பெருமைப் பட்டனர். இதனால் விண்டு என்ற மலை விந்திய மலை என்று எஸ். இராமச்சந்திரன் கருதுகிறார். வாணன் இப்பகுதி மலைகளிலே பொருள்களை மறைத்து வைத்திருந்தான் எனலாம்.

மாவலி வமிசத்தாருக்கு மாற்றான செருபுகல் மறவர்

வருபுனல் கல்சிறை கடுப்ப இடையறுத்து
ஒன்னார் ஓட்டிய செருப்புகல் மறவர் (மதுரை. 725-726)

என்னும் மதுரைக் காஞ்சி அடிகளுக்கு

மிக்க வருகின்ற யாற்று நீரிடத்துக் கல்லணை நின்று தாங்கினாற் போலத் தம் படையைக் கெடுத்து மிக்கு வருகின்ற பகைவர் படையை நடுவே தவிர்த்து அவரைக் கெடுத்த போரை விரும்பும் படைத்தலைவர்

என்று நச்சினார்க்கினியர் உரை வரைந்துள்ளார். இவ்வீரர்களின் பெருமையை,

வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும் (தொல். புறத்.8)

என்னும் தொல்காப்பியப் புறத்திணையியலின் நூற்பாவில் தொல்காப்பியர் தெரிவித்துள்ளார். இவ்வீரரைப் பற்றி வள்ளுவம் (989)

ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்

என்று கூறுவதால் போரின்கண் நிலை நின்ற வீரர் பீடும் பெருமையும் உடையவர், உறுதிப்பாடுடைய குடிப் பெருமை உடையவர் என அறியலாம்.

வஞ்சித் துறையில் இடம்பெற்றுள்ள இந்நூற்பாவின் உரையில் 'மாராயம் பெற்றவர்களே இப்போரினைச் செய்வரென்பது ஆண்டுப் பெற்றாமாகலின் ஏனாதிப் பட்டம் முதலிய சிறப்புப் பெற்ற படைத்தலைவர் என்பது பெற்றாம்' என்றார். ஏனாதிப் பட்டத்திற்கு உரிமையுடையவர் யார்? அறிதல் வேண்டும்.

போரினை விரும்பும் படைத்தலைவரை மாங்குடி மருதனார் 'செருப்புகல் மறவர்' என்றார். படைத்தலைவர் என்ற சொல் அக்காலத்தில் படைத்தலைவனையும் குறித்து வழங்கிற்று என்பது 'தென்னவன் மறவன்', 'பாண்டியன் மறவன்', 'சோழன் மறவன்' என்னும் இலக்கியத் தொடர்களின் வாயிலாகத் தெரியவருகிறது.

இதனை அறிந்த நச்சினார்க்கினியர் பழமையான வீரனை ஏனாதிப் பட்டம் பெற்றவன் என்று அடையாளம் காட்டுகிறார்.

சங்க இலக்கியத்தில் ஏனாதிப் பட்டம் பெற்ற தலைமகன் மலையமான் ஏனாதி திருக்கிள்ளி என்பவன் அரச வாகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளான். ஏனாதிகள் பற்றிய குறிப்புகள் பல நூல்களிலும் காணக்கிடக்கின்றன.

தமிழகத்தில் கிடைத்த நடுகற்களில் முற்பட்ட வீரராக வேளிரின் பெயர்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதுபோன்று கி.பி.550இல் அமைந்த நடுகல்லில்[122] "விசையமங்கல மாண்ட விண்ணப்பேரேனாதி" என்று அறியப்பட்டுள்ளதால் ஏனாதிப் பட்டம் பெற்றிருந்த பழந்தமிழ் வீரக்குடியினர் வேளிர் ஆவர்.

122. Damilica, Bullettin of TSAD, 1970, pp. 92-93.

123. பார்க்க: நெல்லை நெடுமாறன் கட்டுரை :"ஏனாதி".

கல்வெட்டுகளில் ஏனாதி மகன், ஏனாதி என்று அழைக்கப்பட்ட குறிப்பு காணப்படுகிறது.[123] ஏனாதி குலத்தவர் என்று சான்றோர் குல மரபினர் மட்டுமே இலக்கியங்களில் உரிமைபாராட்டிக் குறிக்கப்பட்டுள்ளனர்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டு நூலான நம்பியாண்டார் நம்பி அருளிய *திருத்தொண்டர் திருவந்தாதி* ஏனாதி நாதரை "நின்றருளும் நித்தனை ஈழகுல தீபன் என்பர் இந்நீள் நிலத்தே" என்று பெருமையுடன் கூறுகிறது. உறுதி செய்யப்பட்ட போரில் வஞ்சனையாக வீழ்ந்துபட்ட ஏனாதி நாதரை நம்பியாண்டார் நம்பி 'நின்று அருளும் இறைவன்' என்று குறித்துக் காட்டுவதால் அஞ்சாச் சிறப்புடைய மாவீரனை நடுகல்லாக வணங்கினர் என்று கருத இடமுண்டு.

நாகைக் கனகசபை நாதன் உலா, ஏனாதி நாதரை 'ஏனாதி காவலர்' என்றும் 'ஐவாட் பயிற்றி' வாழ்ந்தவர் என்றும் உயர்ந்தோர் மரபினராகவே சுட்டிக்காட்டுகிறது.

"ஐவாட் பயிற்றுதல்" செய்து வந்தவரே பழைய போர்வீரர்குடி என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். போர்த் தொழிலின் தனித்த தன்மையுடைய குடியே தொல்குடிவீரர். போர்க்கலையைத் தொன்று தொட்டுப் பயிற்றுவிக்கும் தொழில் அரசருடையது.

அந்தணர்களும் அக்கலையைப் பயின்று ஆசானாகத் திகழ்ந்தனர் எனப் பாரதக் கதைக் கூறும்.

கி.பி.16ஆம் நூற்றாண்டுச் செப்பேடுகளான கருமாபுரம் அந்தணர்கள் செப்பேடு "சங்கராச்சாரியார்க்கும் போர்க் கலையைப் பயிற்றுவித்தவர் சான்றோர் குலத்தவர்" என்று கூறுவது பழங்குடிப் பெருமைமிக்க செயலாகும்.[124]

திருச்சோற்றுத் துறை தலபுராணம் "படைக்கல வினைத் தொழில்கள் கற்கும் மன்னவர்கள் வீதிபல" என்று

---

124. ஏனாதி வம்சவரான பூவேந்திய சோழனென்றும் பேர் பெற்றவரான மதுராபுரியில் பாண்டியனிடத்தில் வாளது பயிற்றி மதுரை மண்டலீகர் சோழ மண்டலமும் திராவிட தேசமும் கம்பை மாந்தியும் காஞ்சிபுரமும் கல்யாணிபுரியும் காணி பெற்றவரான.

- கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள், பக். 230-231. பதிப்பாசிரியர் புலவர் செ. இராசு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.

சான்றோர் சமூகச் செப்பேடுகள் - தொகுத்தவர் : நெல்லை நெடுமாறன், தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை 115.

குறித்துக்காட்டுவதால் திருச்சோற்றுத்துறை போன்ற ஊர்களில் கூடப் போர்க்கலையைப் பயிலும், பயிற்றுவிக்கும் அரச சாதியினர் வாழும் தெருக்கள் இருந்தமை தெரிய வருகிறது.

பெரியபுராணத்தில் சேக்கிழார் ஏனாதி நாதர் என்பவரை 'ஈழகுலச் சான்றார்' என்கிறார்.

ஈழச்சான்றார், ஈழச்சான்றோர் என்று அறியப்பட்ட கல்வெட்டுகளில் கி.பி.1249இல் அமைந்த மூன்றாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டு ஈழச்சான்றான் ராஜனடியான் பற்றிக் குறிப்பிடுவதுடன் அவனை நாட்டுக்காமிண்டன் பட்டமுடைய வனாகவும் காணிக்கும் பூமிக்குமாகப் போராடியவன் என்றும் கூறுகிறது.

கி.பி. 9ஆம் நூற்றாண்டுத் திருக்கண்ணபுரம் கல்வெட்டில்[125] "இவ்வூர் ஈழச் சான்றான் முன்னூற்றுவப் பெருமானாகிய சோழவேள் ஏனாதிக்கு" என்று குறிக்கப்பட்டுள்ளான்.

தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையர் உரையில் சூத்திரத்திற்கு மேற்கோளாக "மாந்த கொங்க ஏனாதி" என்ற எடுத்துக்காட்டப்பெற்றுள்ளது.

கி.பி.17ஆம் நூற்றாண்டு திருமுருகன் பூண்டி செப்பேடுகள் "வேளிர் மரபுவழி கொங்கர் ஏனாதி பட்டமுடையவர்" என்று வலியுறுத்துகின்றன.[126]

---

125. நெல்லைநெடுமாறன் எழுதிய ஏனாதி வம்சத்தவர் கட்டுரையில் "இவ்வூராள்கின்ற ஈழச் சான்றான் முன்னூற்றுவ பெருமானாகிய சோழவேள் ஏனாதி" பற்றிக் குறிப்பிடுகிறார். SII. Vol. XIII.

திருக்கண்ணபுரம் ஏனாதிக்குக் கோயில் திருக்குளத்திலிருந்து தீர்பாயத் திருக்கண்ணபுரம் சபையார் வழிவகை செய்துள்ளனர். ஈழகுலச் சான்றார் ஏனாதி நாதரைப் போன்று கி.பி. 9ஆம் நூற்றாண்டில் சோழவேள் ஏனாதி என்பவன் ஈழச் சான்றான் குலத்தவன் என்று அடையாளப்படுத்தப்படுகின்றான்.

126. மேருகிரிக்கும் வடபால் ஸயமசாரணியத்தில் ஆதிசேஷன் நஞ்சிலுதித்த கன்னிகளைப் பரமசிவன் அக்கினி ரூபமாயிப் பிரவேசிக்கவும் அந்த 7 கன்னிகள் வயத்தில் செனித்து வனமாளப்பட்ட பத்திரகாளி கிருபையால் வளர்ந்து அடக்க,முடையராகிய கோனாடன் சங்கனி *கொங்கன்* யிவர்களுக்குத் தலைவனாகிய யேனாதியென்றும் யிந்தப் படிக்கு 7 பேருக்கும் பேர் கொடுத்து, சகல வித்தையும் கற்பித்து வேண்டிய வரங்களும் பெற்றுக் கொண்டிருக்க - திருமுருகன்பூண்டிச் செப்பேடு. - கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள், மேற்படி.

கி.பி.16ஆம் நூற்றாண்டுச் செப்பேடுகள் "ஏனாதி குலத்தவர்" என்று பெருமைப்படுகின்றன. ஏனாதி நாத நாயனாரைச் சேக்கிழார் கூறுவதைப் பார்ப்போம்.

மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றுந்
தன்மைத் தொழில்விஞ்சை யிற்றலைமை சார்ந்துள்ளார் (610)

தங்கள் குலத்தாயத்தின் ஆனாத செய்தொழிலா
மாசிரிய தன்மை
வாளின் படை பயிற்றி வந்த வளமெல்லா (611)

தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயம்
கொற்றவாட் படைத் தொழில்கள்
வாள் கொண்ட தாயம் வலி யோரே கொள்வர்
புண்ணிய போர் வீரர் (64)

தோட்டார் பூந் தாரார்
அரும்பெரும் வீரர் வாள் உரவோன் கண்டர்

என்ற சொற்கள் ஏனாதி குலத்தவரைப் பெருமைப்படுத்தும்.

இதுபோன்று வேறு எவரைச் சிறப்பித்துச் சேக்கிழார் உரைத்தார்? ஆத்தி மாலை சூடும் மரபிலே வந்த ஏனாதிநாதரின் குலத்தொழில் போர்த் தொழில் என்றால் அவர் அறப்போர் வீரர் என்பதாலே.

நச்சினார்க்கினியர் உரையில் *(சீவகசிந்தாமணி)* "புண்ணியர் என்பார் பார்ப்பாரும் சான்றோரும்" என்றார். சிலர் இவரைக் கள்ளிறக்கும் மரபினர் என்று குறித்துள்ளனர். போர்த் தொழிலுக்கு உரிமைகோரும் ஈழச் சான்றாரை இழிவாக எழுதுவது ஏன்? இம்மரபிலே வந்த சிலர் பிற்காலத்தில் கள்ளிறக்கும் தொழில் செய்திருக்கலாம்.

இவரைக் குறித்துக் குமரகுருபர சுவாமிகள் மதுரைக் கலம்பகத்தில் "குற்றமற்ற தொரு சான்றாண்மை பயின்றார் தினமுயன்றால்" என்பதற்குக் கழக உரை "குற்றமற்றதொரு சான்றாண்மையென்னு சாதியின் தன்மையைப் பொருந்திய சான்றார்" என்கிறது. நம் அறிஞர்கள் சான்றாண்மை என்றால் கள்ளிறக்கும் தொழில் என்று வரலாற்றைத் திரித்தனர்.

ஏனாதிநாத நாயனரைச் சேக்கிழார் திருத்தொழில் (போர்த் தொழில்) செய்பவர் என்றே குறித்தார்.

பெரியபுராணத்திற்கு உரைசெய்த சி.கே. சுப்பிரமணிய முதலியார் - சான்றார் என்பவரைச் சான்றவர் என்று குறிப்பிடுகின்றார். பிற்காலத்தில் வேளாளர்களான கொங்க வேளாளக் கவுண்டர்கள் புகழ்பாடும் *வேளாள புராணம்* சான்றவர் என்பவர் சான்றோரே என்று கூறுகிறது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சான்றோர் குல சங்க அமைப்புகள் நாட்டில் இருப்பதை உணர்த்தியவிடத்து "நல்ல சங்கங்கள் எங்கணும் நிறுவுவர் சான்றவர்" என்று பெருமைப்படக் குறிப்பிடுகின்றார்.

கி.பி.1691இல் பாடப்பட்ட *அரிச்சந்திரன் அம்மானை,*

வித்யாதர முனிவன் மேவிதங் கொண்டவன் நான்
சத்த கன்னி மார் வயித்தில் தரணியில் வந்துதித்தோன்
ஆதி பத்திரகாளி கனவரதப் புத்திரன் காண்
நீதியுத்த ஏனாதி நீளும் கனகுலத்தோன்
நண்ணுங் குலத்துதித்த

என்று குறிப்பிடுவதால் ஏழுமகளிரின் குழந்தை என்ற தொடர்பும் வித்யாதர முனிவனின் பிள்ளைகள் என்றும் இதன்பொருட்டு ஆதி பத்திரகாளியின் புதல்வர்கள் என்றும் அறம் தவறாத போர் மரபினைக் கொண்ட வீரர்கள் என்றும் மேம்பட்ட குலத்தினர் என்றும் அந்தக் குலத்திலே உதித்தவன்தான் நான் என்று இந்நூலைப் பாடிய பாடலாசிரியர் ராக்கன் என்ற சான்றோர் குலத்தவர் குறிப்பிடுகிறார்.

இதைப் போன்று ***ஆமையர் அம்மானை*** பாடிய இம்மரபிலே தோன்றியவரும் தான் பேரரசர் மரபிலே தோன்றிய வீரர் குடியைச் சேர்ந்த ஏனாதி குலத்தவன் என்று குறிப்பிட்டுள்ளார்.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையில்

மன்னவன்காதற் தோழர்கட்கு உலகில் வேறு சிலர்க்கு
இல்லாத பழைய அரசையும் ஏனாதி மோதிரத்தையும்
செம்பொன்னாற் செய்த பட்டத்தையும் கண்ணியையும்
நிதியையும் அருளி (பா.269, 267)

என்று கூறுவதால் பூர்வ அரசகுடியினரே ஏனாதி எனப்பட்டனர் என்று தோன்றுகிறது. கல்வெட்டுகளில் காதற் தோழர் என்ற சொல் பேரரசனின் உறவினர்களைக் குறிக்கிறது.

மன்னுபுகழ் சக்கரவர்த்தி மரபுதனில் வந்துதித்தோன்
ஏனாதி என்னும் பத்தன் ஏறும் பரியுடையோன்
(ஆமையர் அம்மானை)

என்றும்

நீள்சிலம்பத் தொழில் பயித்தும் ஏனாதி குலத்தோன்
நிறைத் திவலை துளித்தருளும் சந்தனத் தார் மார்பன்
(அழகம்பெருமாள் கதை)

என்றும் ஏனாதிநாதரின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது.

இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் படைத்துள்ள உரையில் தொன்றுதொட்டு ஏனாதிகளுக்குச் சிறப்புச் செய்து ஏனாதி மோதிரம் வழங்கப்பட்டதைக் குறித்துள்ளார்.

பன்னிரு பாட்டியல் உயர்பட்டமாகிய ஏனாதிப் பட்டத்தைக் குறித்து "வேந்தனின் முற்குலத்தோர்க்குரியது" என்று சிறப்பு உணர்ந்து தெரிவிக்கிறது.

முடியுடை மூவேந்தர் முற்குலத்தோர்க் கல்லது
பட்டமும் பூவும் பூணும் ஆழியும்
நட்டமில் நலமலி சிறப்புப் பெயரும்
கொடாஅனென மொழிப குலமொழி புலவர்

என்கின்றது.

வேந்தரின் முற்குலத்தோர் மூத்த குடி எனப்பட்ட முதியராம். இவரே ஏனாதிப் பட்டம் பெற்ற மரபினர். படைத் தலைமைப் பட்டமாக வீரர் என்று அழைக்கப்பட்டனர்.

பன்னிரு பாட்டியல், ஏனாதி மரபினர் தொடர்புடைய வேறு சிலருக்கும் ஏனாதிப் பட்டம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது. இது 'வினை செயல் மருங்கின் மிக்கோரும் பெறுப' என்பதால் இனிதே விளங்கும். இருப்பினும் எவருக்கு எந்தப் பட்டத்தைத் தரவேண்டும் என்பதை அரசனே முடிவு செய்தான்.

சிறப்புப் பெயரே தெரியுங் காலைச்
சிறப்புடை வேந்தன் கொடுக்கும் பெயரே (நூ.81)

சாதியில் உள்ளோர் தமக்குத் தாமே
நீதிகொள் சிறப்பியற் பெயர்கொளற் குரியர் (நூ.82)

என்னும் நூற்பாக்கள் வாயிலாக அரசன் வழங்குவதே சிறப்புப் பெயர் எனினும் எந்தச் சாதிக்கு எந்தப் பட்டம் என்று அறிந்தே

பட்டங்களை அரசன் அடையாளமிட்டான் என்பன இலக்கண நூல்கள்.

அரசனின் பட்டத்தை அரசகுடியினர் பெற்றனர். எனினும் அரசகுடியின் தொடர்பினைப் பெற்றோரும் அப் பட்டத்தைப் பெறத் தொடங்கினர் என்று அகராதிகளாலும் கல்வெட்டுகளாலும் தெரியவருகிறது.

ஏனாதிப் பட்டம் தரித்தவன் அரசனின் குடி என்பதையும் உணர்ந்து அவன் பழங்குடி மறவன் என்பதால் படைத்தலைவனை மறவன் என்று அழைத்தனர் போலும்.

வீரனை மறவன் என்று கூறுதல் நம் பண்டையோர் மரபு. அரசன் படையாளரும் மறவன் என்றே அழைக்கப்பட்டனர்.

எனினும் சங்க இலக்கியத்தில் காட்டகத்து வாழும் வேடராகிய மறவர் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. சங்க நூல்களில் காட்டுக்குடியினரான மறவர் கொடுமையாளராகவே வருணனை செய்யப்பட்டுள்ளனர்.

பிற்காலத்தில் எழுதப்பட்ட மறவர் கதைப்பாடல்களில் சங்ககால நாணுடைமறவருக்கு உரிமை கோரியோ வேந்தர் குடிக்கு உரிமை பாராட்டியோ எந்த நூலும் கிடைக்கவில்லை.

பிற்காலத்தில் இம்மறவர் ஆவணங்களும் காட்டு வாழ்க்கை தொடர்பையே வலியுறுத்துகின்றன.

அரசினர் கீழ்த்திசை நூலகத்திலுள்ள மெக்கன்சி ஆவணங்களில் கி.பி.17ஆம் நூற்றாண்டில் சேது நாட்டின் பாடி காவல் உரிமை பெற்று, சில பல ஆண்டுகளில் உயர்வு பெற்ற சேது மன்னர்கள் தங்களை வேடராகிய குகனுடைய மரபினர் என்றே பெருமைப்படுகின்றனர்.

சேது மன்னர்களின் செப்பேடுகளில் 'வலியச் சருவி வழியில் கால்நீட்டி' என்ற சொற்றொடர் அவரைக் காட்டகத்து மறவராகவே அடையாளம் காட்டுகிறது.[127] மேலும்,

குன்றி னுயர் மேருவைக்
குன்றா விளைகுணில் பொறித்தவன்

என்பது இமயத்தில் வளைதடியை மறவர் பதித்தவர் என்கின்றது.

---

127. Nellai Nedumaran, "Ancient Tamil Monarchy and Sethupathi kings", Epigraphical Society, Mysore.

"கோபால வங்கிஷம் சூரிய வங்கிஷம் ஏவல் செய்வித்திருந் தருளினோான்" என்று குமார முத்துவிசைய ரகுநாத சேதுபதிகள் வழங்கிய 7.8.1755 இல் அமைந்த சாருவூரனேந்தல் செப்பேடுகள்[128] கூறுகின்றன.

சேதுபதிகளைச் செம்பியர் என்று கூறுவது "செங்காவிக் குடை" என்றும் செம்பிய நாட்டு மறவர் என்றும் குறிக்கின்றனர். வெண்கொற்றக் குடைக்கு உரிமை பாராட்டிய மூவேந்தரும் வேளிரும் வாழ்ந்த நாட்டில் செங்காவிக்குடை மன்னர் சேதுபதிகளாக மிளர்ந்துள்ளனர்.

மறவர் நாட்டில் வெள்ளைக் குடை வைத்திருந்த சான்றார்களுக்கு வரிவிதித்தனர். மூவேந்தர்கள் இமயத்தில் வில், புலி, கயல் என்ற குலச் சின்னங்களைப் பதித்தனர் என்பதற்கும் வளைதடியைப் பதித்த மறவருக்கும் வேறுபாடு இருப்பதை உணரலாம். அறவேந்தராக அங்கீகாரம் பெற்றிருந்த மூவேந்தர் (மனுநீதிச் சோழன், சிபி என்ற செம்பியன், பொற்கைப் பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்) குடிக்கும் மறமன்னர் குடிக்கும் இருக்கும் வேறுபாடுகள் ஏராளம். கல்வெட்டுகளில் அறம் தாங்கியார்களும் மறம் தாங்கியார்களும் பகைமை பாராட்டிச் சண்டையிட்டுக் கொண்ட நிலை கண்டதேவி கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அறநீதிக்கு மாறான கொடுங்கோலரின் காட்டு வாழ்க்கை படம் பிடித்துக்காட்டப்படுகிறது.

அகப்பாட்டு 109இல் "அறனில் வேந்தனாளும் விறனுறு குன்றம் பலவிலங்கினவே" எனக் காட்டுத் தலைவனை நாட்டுத் தலைவன் பெயரால் கூறினார். காட்டாட்சி முறைமையுடையவரை அறம் இல்லாத வேந்தர் என்றார். பிற்காலத்தில் இவர்கள் தங்களின் முக்கிய ஆயுதமாக வளைதடியையே கூறி உரிமை பாராட்டியுள்ளனர். மிக அதிகமான செப்பேடுகளில் வளைதடியை இமயத்தில் பதித்ததாக மறவர் பெருமைப்படுகின்றனர்.

ஆனால் வேளிர், வேந்தர் குடி வீரர்கள் தங்களை வாட்குடி என்று பதிவு செய்துள்ளனர். "வாளால் வழி திறந்த பெரியோர்" என்று கருமாபுரம் செப்பேடுகளில் குறித்துள்ளனர்.

---

128. Nellai Nedumaran, "Ancient Tamil Monarchy and Sethupathi kings", Epigraphical Society, Mysore.

எறுழ்தோள் மறவர்

மதுரைக்காஞ்சி படைவீரர்குடியை மிகவும் சிறப்பித்துக் கூறுகிறது.

வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங் கெறுழ்த்தோண் மறவர்த் தம்மின்
கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கி
னல்லெயி லுழந்த செல்வர்த் தம்மின் (மதுரைக். 728-31)

படைத்தலைவனை 'மறவர்' என்று மேலே கூறிய மாங்குடி மருதனார் இப்பாடலடிகளில் 'எறுழ் தோள் மறவர்' என்னும் வீரரையும் குறிப்பிடுகிறார். மேலும் 'எயில் உழந்த செல்வர்' என்பதற்கு வீரச் செல்வத்தை உடையார் என்றும் குறிப்பிடுகின்றார். இவர் படைவீரரில் உயர்வு பெற்றோர் ஆவர். வாட்குடிதாயத்திற்கு உரிமை பாராட்டாத எவரையும் முற்குடி போர் மரபினராகக் கருத முடியாது.

கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரச மோவிய கறங்க
பொருநல் யானொடு போர்க்களத் தொழிய
விழுமிய வீழ்ந்த குருசிலர்த் தம்மின் (மதுரைக். 732-736)

என்பது மாங்குடி மருதனாரின் பாடல்.

ஊர் காப்பாளர்

ஊரினைப் பாதுகாக்கும் வீரர்களைப் பாண்டியர் நியமித்து இருந்தனர். பாண்டிய அரசரே தம் மக்களைக் காத்தற் பொருட்டு மாறுவேடத்தில் ஊர் காப்பாளராகச் சென்றதை அறிய முடிகிறது. தூங்காமல் ஊர் காப்பதால் பாண்டியனுக்குத் தூங்காத கிழவன் எனப் பெயர் ஏற்பட்டது.

கீரந்தை என்னும் அந்தணன் கதையும் பாண்டியன் செயலும் பாண்டியன் கை பொற்கையானதும் அறிந்தவைதாம்.

இவ்வரிசையில், ஊரே துஞ்சினாலும் துஞ்சார். அவரைத் துஞ்சாக் கண்ணர் என்று மதுரைக்காஞ்சி அழைக்கிறது.

கண்மா றாடவர் ஒடுக்கம் ஒற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த

நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
ஊர் காப்பாளர் (மதுரை. 642-647)

என்னும் அடிகளுக்கு நச்சினார்க்கினியர்,

> விழித்தகண் இமைக்கும் அளவிலே மறைகின்ற கள்வர் ஒதுங்கியிருக்கின்ற (பதுங்கி வாழ்கின்ற) இடத்தைவேய்த்து (பிறர் தெரிந்து கொள்ளாதபடி தெரிந்து) வலிய களிற்றை இரையாகப் பார்க்கும் வலிய புலியைப் போல வேய்க் கையினாலே துயில் கொள்ளாத கண்ணையுடையராய், பேய் முதலிய வற்றிற்கு அஞ்சாத கோட்பாட்டை யுடையவராய்க் களவிற் றொழிலை அறிந்தவர்களாலே புகழப்பட்ட களவிற் றொழிலை ஆளும் தன்மை யுடையராய் நுண்மை செறிந்த நூலின் வழியைத் தப்பாத நுண்ணிய ஆராய்ச்சியையுடைய ஊரைக் காத்தற் றொழிலை ஆளுதலையுடையராய்க் களவு காண்டற்கும் காத்தற்கும் கூறிய நூல்கள் போவாரென்றார். நூல்வழிப் பிழையா ஊரெனக் கூட்டி நூலிற்சொன்னபடி சமைந்த ஊர் என்றுமாம்

என்று குறித்துள்ளார்.

அறிஞர் உ.வே.சா. "இந்நூல் தந்திரகரணம்" என்று விளக்கம் தருகின்றார். ஊர்காப்பாளர், தந்திரகரணம் என்னும் நூலினை அறிந்தவர்களாக இருந்தனர் என அறியமுடிகிறது.

தந்திரகரணம் என்ற நூலினை எழுதியவர் கர்ணீஸுதர் என்பார். களவு காண்டல், களவினைக் கண்டறிந்து காத்தல் பற்றிக் கூறியிருப்பதால் இவரும் கொள்ளை மாந்தரிலிருந்து உருவாகிய வீரர் அல்லர். வேந்தரால் நியமனம் பெற்ற ஊர் காப்பாளர்; ஊரில் கொள்ளை செய்வாரைக் கண்டறிந்து தண்டஞ் செய்யும் தண்ட நீதிக்குரிய மரபினராதல் வேண்டும்.

இறையனார் அகப்பொருள் உரையில் நக்கீரர் "ஊர் காத்தல், இடங்காத்தல்" என்று மேற்கோள் காட்டுகிறார்.

காவலாளர் ஏமம்சூழ்ந்து கைவிளக்கி னொடு
திரிதருவாரன்றே

என்பதால் ஊர் காப்பாளர் ஆகிய காவலாளர் மக்களுக்கு இரவு நேரத்தில் கையில் விளக்குகளோடு ஊர் காப்பார்கள் என்று தெரிகிறது.

ஊர்காத்தல் என்றும் இடங்காத்தல் என்றும் சொல்லுவதால் இடங்காத்தல் என்பது விளை நிலங்களைக் காத்தல் என்று தோன்றுகிறது. மதுரை ஊர்களைக் காப்பவராகிய இவ்வீரர்கள்

கையில் வில், அம்புகள் இருக்கும். தப்பக் கருதிய கள்ளர் இவ்வம்பு களுக்குத் தப்பார். ஊர்காப்பாளர் மதுரைத் தேர் வீதிகளில் மழை பெய்த இரவுச் சாம நேரங்களிலும் காவலில் கண்ணுங் கருத்துமாய் இருப்பர். அக்காவல் தொழிலை விரும்பிச் செய்வர்.

நாடுகாப்பாரும் ஊர் காப்பாரும் பாடிகாப்பாரும்

நாடு காவல் கொண்டவர்களை 'நாடு காப்பார்' என்று கல்வெட்டுகள் குறித்துள்ளன. கி.பி.500இல் அமைந்த பூலாங்குறிச்சி கல்வெட்டு[129] "பிரம தாய முடையாருந், நாடுகாப்பாரும் புறங்காப்பாரும்" என்று குறிப்பிடுகிறது.

பிரம தாய முடையார் என்பார் அந்தணராவார். நாடுகாப்பார் என்பார் அரசகுடியினர்; புறங்காப்பார் என்பார் பாடி காவலுக்குரியவர் என்பதே இதன் பொருள்.

களப்பிரர் இக்கல்வெட்டு ஏற்பட்ட காலத்தில் பாண்டிய நாட்டினை கைக்கொண்டு ஆண்டனர் என்று அறிஞர்களால் குறிப்பிடப்படுகின்றனர். ஆனால் பூலாங்குறிச்சி கல்வெட்டில் களப்பிரர் பற்றிய எந்தக் குறிப்பினையும் காண முடியவில்லை.

ஆதலால் களப்பிரர் ஆட்சி பாண்டிய நாட்டில் பரவலாக இருந்ததில்லை எனத் தெரிகிறது. நாடு காப்பாரில் ஊர்காப்பார் உள் அடங்குவர். நாடு காவல் போன்று பாடி காவல் (பாடி காப்பவர்) என்ற ஒன்றினையும் கல்வெட்டுகளால் அறிகிறோம். பாடிகாவல் என்பது கோவில்களுக்குக் காவல் செய்யும் உரிமையும் விளைநிலம் போன்றவற்றைப் பாதுகாத்தலுமாம்.

பாடிகாவலர் கால ஓட்டத்தில் பின்னர் ஊர்காவலுக்கும் உரிமையுடையோராக மாறினர்.

மெய்க்காவல் என்பது கல்வெட்டுகளில் காணப் பெறுகிறது. இது கோயில்களின் உடைமைகளைக் காத்தலாம் - இது பாடிகாவல் பெற்ற மரபினரிடமே இருந்தது, பிற்காலக் கல்வெட்டுகளால் தெரியவருகிறது.[130]

இதை அறப்புறம் காவல் என்று நம்பியகப்பொருள் குறிப்பிடுகிறது. இது அனைவர்க்கும் உரித்து. ஆனால் நாடுகாவல் (ஊர் காவல்) அரசர்க்குரித்து என்றும் அந்நூல் கூறுகிறது.

---

129. ஆவணம் இதழ் 1, பக். 67-69. பனையூர் இராசேந்திரன் கண்டறிந்தது.
130. மேற்படி.

மதுரைக்காஞ்சியில் சொல்லப்பட்ட துஞ்சாக் கண்ணராகிய ஊர் காப்பாளர் சங்க கால ஊரன் மரபினராதல் வேண்டும். வல்லாரிலிருந்து நியமனம் பெற்ற அவர் வேதநூல்களையும் கற்றவராதல் வேண்டும்.

நூலினைக் கற்ற ஊர்காப்பாளர்கள் சில ஊர்களில் வாழ்ந்தனர் என்பதை 'ஊர் காப்பாளர் உறைபதி' என்று சிலம்பு அடையாளம் காட்டுகிறது.

உறையூர் என்ற ஊரும் உறைபதி என்றே பெயர் பெற்றிருந்தது. தொல் காலத்தில் சோழரின் தலைநகராக அது மிளிர்ந்தது. உறையூர்ச் சோழர்கள் பூர்வ அரச மரபிற்கு உரிமை கோரி பூவேந்திய சோழன் என்று தங்களைச் சிற்றிலக்கியங்களில் அடையாளம் காட்டியுள்ளனர்.

கொங்குநாட்டுச் செப்பேடுகளில் பூவேந்திய சோழன் என்று சங்க காலப் போர்வீரர் மரபினர் குறிக்கப்பெற்றுள்ளனர்.

'தூங்காத கிழவன்' என்ற பட்டம் பாண்டியர்க்குரியது என மேலே குறிப்பிட்டோம். பிற்காலப் பாண்டிய அரசன் பராக்கிரம பாண்டியனுக்குத் தூங்காத கிழவன் என்பது ஒரு பட்டம். இவன் பெயரில் கி.பி. 18-19ஆம் நூற்றாண்டின் வருவாய்த் துறை ஆவணப் பதிவேட்டில் இருவப்பபுரம் (தூத்துக்குடி) என்ற ஊரில் தூங்காத நாடன்(காவற்காடு) என்பார் நிலவுடைமையாளர் என்று தெரியவருகிறது.

சங்க காலமே 'நாடு கிழவன்' என்று வேந்தரும் - காட்டு நாட்டார் என்று இளையர் மரபிலே வந்த வேடரும் உரிமை பாராட்டினர்.

இலக்கியங்களில் 'கல்லா இளையர்', 'கல்லா மறவர்', 'கல்லா மழவர்' என்று பாடங்கள் உள்ளன.

கல்லா என்பதற்குப் பல பொருள் உண்டெனினும் கல்லாதவர் என்பது பொருத்தமானதாகும். மதுரைக்காஞ்சி கூறும் "கல்லா மாந்தர்" என்பதற்கு நச்சினார்க்கினியர் "காம நுகர்ச்சியினை அன்றி வேறொன்றையும் கல்லாத இளையர்" என்று உரை எழுதியுள்ளார். தனுர்வேதம் கல்லாதவர் (கற்காதவர்) என்பதும் இதனால் தெரியவருகிறது. கல்லாத மரபிலே வந்தவரை ஊர்காப்பாளராய்ப் பாதுகாத்தல் தொழிலுக்குச் சங்க காலம் பயன்படுத்தி இருக்க முடியாது.

வெட்சி வீரராகவே அங்கீகாரம் பெற்றவராகப் பாலை நிலத்தார் சொல்லப்படுவதுடன் ஆநிரை கவர்தல் மற்றும் ஊர் தீயிடுதல், ஊர் கொள்ளை, போர்க் கொள்ளை, சூறையாடுதல், விளைநிலங்களை அழித்தல் என்பனவற்றிற்குப் பயன்பட்ட வீரர் இளையர் என்பார். இவர்கள் எப்படி ஊர் காப்பர்? ஊர் அழிப்பவரன்றோ! பிற்காலத்தில் பெருமை ஏற்பட்டு விட்டபின் தூங்காத கிழவனுக்கு மாறாக உறங்காவில்லி தாசன் என்று இளையர் மரபிலே தோற்றம் பெற்றிருந்த வாண குல வீரர் பெயர் வைத்துக்கொண்டனர்.

அகப்பாடல் காட்டும் ஊர் காப்பாளர்

பரணரால் பாடப்பட்ட அகப்பாடல்(122) துஞ்சாக் கண்ணர் அரசனின் காவலர் என்று தெரிவிக்கிறது. துஞ்சாத கண்ணர் என்ற காவலர் கண்ணிற் தப்புதல் அரிதென்று பரணர் விளக்குகிறார்.

துஞ்சாக் கண்ணர் காவலர் கழுகுவர்
இலங்குவே லிளையர் துஞ்சின் வையெறிற்று

மூதூரில் வாழ்ந்தோர் விழாப்பற்றியும் ஊர்நிலை பற்றியும் குறித்துக் காட்டி ஊர் காப்பாளராகிய காவலர் கண்துஞ்சாது விழித்திருந்து ஊர் காப்பார். மாறாக அமைந்த வீரரான வேலினையுடைய இளையர் மரபுவழி வீரர் தூக்கம் கொள்வர் என்கிறார். இளையர் என்ற வீரரால் ஊருக்குத் தீங்கு நிகழ்தலும் கூடும் என்று பழையவுரை கூறுகிறது.

துஞ்சாக் கண்ணராகிய காவலர் என்னும் அரசுப் பணியாளரைப் போன்று அமைந்த மற்றொரு வகை வீரரால் இடையூறு ஏற்படும் என்பதோடு இளையர் கடமையாற்றாமல் தூக்கம் கொள்வர் என்றார்.

அகப்பாடல்(250) செல்லூர் கிழார் மகனார் பெரும் பூதங்கொற்றனார் எனும் புலவரால் பாடப்பட்டதாம்.

கொடுஞ்சி நெடுந்தே ரிளையரொடு நீக்கித்
தாரன் கண்ணியன் சேரவேந் தொருவன்

என்பதால் தேர் ஏறி வரும் உரிமை அக்காலம் இளையர் என்ற மரபு வழி வீரர்க்கு இல்லை என்பது பெறப்படும்.

தேர்வீரர் மரபிலே வந்தவனைத்தான் "தாரன் கண்ணியன்" என்று புலவர் சிறப்பித்தனர்.

'ஏவில் இளையர்' புறஞ்சேரி வழி வாழ்வியல் மரபினர் என்றும் ஊர்ச் சேரியின் உள்ளே புகா நிலையுடைய வீரர் என்றும் பரிபாடலால் புலனாகிறது.

நமது உரையாசிரியர் பலரும் பழைய மறவர் என்று நாணுடை மறவரைக் குறித்தனர். காட்டகத்து மறவரை எவரும் பழங்குடி மறவர் என்று குறிப்பிடவில்லை.

ஏழகத்தாரான நாணுடை மறவர்

இலக்கண நூலான புறப்பொருள் வெண்பா மாலை, "ஏழகத்தானொரு நேராம் அரசு" (பா.244) என்று கூறுதலால் ஏழகத்தார், ஏழகப்படை என்று அழைக்கப்படும் வீரர்கள் 'அரசு' என்று அடையாளமிடப்பட்ட அரசகுலத்தவரான வீரக்குடியினர் என்று தெரிகிறது.

ஏழக நிலை என்ற தலைப்பில் விளக்கம் தந்த ஐயனாரிதனார்

ஏந்துபுக ழுலகி னிளமை நோக்கான்
வேந்து நிற்றலு மேழக நிலையே
(புறப்பொருள் வெண்பா மாலை 245)

இதன் பொருள்: "உயருங் கீர்த்தியுடைய ஞாலத்தின் இளமையைப் பாராதே அரசன் பூமி காவல் பூண்டு நிற்பினும் ஏழக நிலையேயாம்".

இதிலிருந்து தெரியும் உண்மை ஏழகத்தார் என்பார் அரச குலத்தவர் என்று பெறப்படும்.

கி.பி.1222இல் அமைந்த நெய்வாசல் கல்வெட்டு[131] சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியனுக்கு உரியதாகும். இது, "இராஜகோயிற்ற மதிலும் ஏழகத்தார் கோயிற்ற மதிலும்" என்பதால், அரசகுடியின் மற்றொரு பிரிவினர் ஏழகத்தார் என்று அறியக்கிடக்கின்றது.

"ஏழகப் படையும் மறப்படையும்" என்ற இருவேறு பிரிவினர் படையில் பணிபுரிந்தனர். அக்கால அளவில் சங்க கால நாணுடை மறவரே ஏழகத்தார் என்றும் மறப்படை என்பார் காட்டகத்து மறவர், கைக்கோளர், வேளாண் சாமந்தர் போன்ற பலருமாவர்.

ஏழகத்தார் மரபில் வந்த வீரர்கள் தங்களை ஏழக நாடாள்வான் என்று உரிமை பாராட்டியுள்ளனர். அஞ்சுகோட்டை

131. புதுக்கோட்டை எண். 259.

நாடாள்வான், களவழி நாடாள்வான் என்று அழைக்கப்பட்ட தலைவர்கள் ஏழகத்தார் என்றும் உரிமை பாராட்டியவர்கள் என்று கல்வெட்டுகளில் தெரியவருகிறது.

சேரநாட்டில் வெள்ளைநாடர் எனப்பட்டவரும் இவரேயாதல் வேண்டும். கொல்லம் 364இல் அமைந்த செப்பேடுகள்[132] "கோவுக்குரிய கோக்குடை எப்பேற்பட்டதுந் நாலுகுடி வெள்ள நாடரையுங் கூட கர்ப்பிச்சுது பெருமையில் நாலென்று கண்காணிச்சுக் கொள்வது" என்பதால் அரசனைப் போன்று மதிப்புடைய அவன் சமூகம் வெள்ளைநாடரும், ஏழகத்தாரும் என்று தெளிவாகத் தெரியவருகிறது.

பிற்காலத்தில் மறவர் என்ற பெயர் சாதி அடைமொழியாகக் கூறப்பட்டாலும் மறவர் மரபினர் தங்களைப் பாடல்களில் 'வடுகக் குலத்தவர்', 'வடுக ராசாக்கள்' என்றே குறித்துள்ளனர்.

சிறுநெல்லிக் கோட்டையாரின் செப்பேடுகள் (கி.பி.1758) 'வடுகர் குல ராசாக்கள்' என்று அழுத்தம் திருத்தமாக உரிமை பாராட்டுகின்றன.[133]

வடுக அரசர் தமிழரசரிலும் வேறானவர் என்பது உரையாசிரியர்களின் கருத்தாகும். இவர் இந்திர குலத்தவர் என்று உரிமை பாராட்டுகின்றனர்.

மா. சந்திரமூர்த்தியால் பதிப்பிக்கப்பெற்ற சேடப்பட்டிச் செப்பேடு இவரை "வெள்ளைக் குடைக்குக் கள்ளவே வாய்த்த பெருமாள்" என்று உணர்த்துகிறது.[134] சேதுபதிகள் செங்காவிக்

---

132. கொல்லூர் மடம் செப்பேடுகள், காலம் கி.பி. 1188, 58, T.A.S. Vol. IV, Part I & II, திருவனந்தபுரம், 1999ஆம் ஆண்டுப் பதிப்பு.

133. பதிப்பு: புலவர் செ. இராசு (தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்).

134. மட்டிலாச் சேனையை சோட்டையால் வென்றவர் வேளமும் பரியிமிகுந்திடு முன்னாள் சோழனை அன்று துலங்கக் கட்டி முறைப்பாடு வெட்டி முறியக் குத்தி பிற்பாடு வெட்டிப் பேர் பாடிய தராசுரனை யுதுரம் படையற வெட்டும் தரவிட்டிக முள்ள சஹாய வீரர் வெள்ளக் குடைக்கும் வெண்சாமரைக்கும் கள்ளவே வாய்ந்த பெருமான் - சேடப்பட்டி அம்பலக்காரர் மடம் செப்பேடு, மா. சந்திரமூர்த்தி, முன்னாள் துணை இயக்குநர், தமிழ்நாடு தொல்லியல் துறை, கல்வெட்டு காலாண்டு இதழ்.

குடைக்கே தம் செப்பேடுகளில் உரிமை பாராட்டுகிறார்கள். அவர்கள் தமிழ் வேந்தரின் வெண்கொற்றக்குடைக்கு உரிமை பாராட்டவில்லை.

இருவகை மறவரில் அரசன் படையாளராகிய மறவரே உயர்வானவர். கி.பி.11ஆம் நூற்றாண்டு *வீரசோழியத்திற்கு* 1103இல் உரைசெய்த பெருந்தேவனார் 'படையாளர்' எனில் 'சான்றோர்' என்று விளக்கம் கூறி வலியுறுத்துகிறார்.

தொல்காப்பியம் "மாபெருந் தானையர் மலைந்த பூவும்" என்பதற்கு மூவேந்தருடைய பெரும்படையாளர் போந்தை வேம்பே ஆர் எனச் சூடிய பூவும் என்பதால் அரசனின் உயர்படை வீரர் என்று தெளிவுறும்.

"சால்பெருந்தானை" என்று அகப்பாடல் (347) சுட்டிக் காட்டுவது பெரும்படையையாகும். இருவப்புரம் (தூத்துக்குடி) ஊரில் பெரும்படை சாஸ்தா கோயில் என்று அழைக்கப்படும் அய்யனார் கோயில் உள்ளது. இக்கோயிலில் கி.பி.1682இல் அமைந்த கல்வெட்டு இந்த அய்யனாரை "க்ஷத்திரிய ஆழ்வார்" என்று வீரக்குடியின் பெருமை உரைக்கிறது.

வலங்கைப் பெரும்படையினர் பற்றிச் சோழர் காலக் கல்வெட்டுகளில் தெளிகின்றோம்.[135]

பெரும்பற்று, தண்டுபற்று, தண்டுராயன்விளை, தண்டு அவன்காடு போன்ற பல ஊர்களும் படைகள் இருந்த ஊர்களின் எச்சங்களாகும்.

---

135. வலங்கைப் பெரும்படைக் கல்வெட்டு பெருங்குளம் (தூத்துக்குடியில் உள்ளது). பெரும்படை வலங்கை மகாசேனை பற்றிக் கன்னட நாட்டுக் கோலார் கல்வெட்டு தெரிவிக்கிறது. வலங்கை பெரும்படை சான்றார் தொடர்பானது என்று அடையாறு பிரம்ம ஞான சபை நூலகத்தில் இருக்கும் வலங்கை மாலை என்ற பழம் ஏடு (கி.பி. 1600) முனைவர் ஆ. தசரதன் கண்டறிந்தார். இதற்கு முன்னர்ப் பதிப்பிக்கப்பட்ட வலங்கை நூலிலும் வலங்கைப் பெரும்படைச் சான்றார் பற்றி உள்ளது. இருவப்பபுரம் (சாயர்புரம்) பெரும்படை சாஸ்தா கோயில் கல்வெட்டுதனில் பெரும்படை சாஸ்தா சத்திரிய ஆழ்வார் என்று குறிப்பிடுகிறது.

தமிழக அரசு தொல்லியல் துறை அலுவலர் திரு. கோபாலன் இதனைக் கல்வெட்டு காலாண்டு இதழில் பதிப்பித்துள்ளார்.

நாணுடை மறவரின் நடுகல்

நாணுடை மறவர் என்போர் பதினெண்குடி அரசர் உள்ளிட்டாரோடு அமைந்த பதினெண்குடி வேளிர் ஆவர். வெல்போர் "வேந்தரும் வேளிரும் பிறரும்" என்பதிலிருந்து வேளிர் குடியினரே நாணுடை மறவர் என்பது புலனாகும்.

நடுகல் வணக்கத்தை HERO STONE WORSHIP என்று அறிஞர் குறிப்பர். "தலைமகனாகிய நாயகன் கல்" என்று நாட்டப்பட்ட நடுகல்லுக்கு வீரனின் பெயரால் மறவன் கல் என்று இலக்கிய வழக்கு உள்ளது. போரில் நிலைத்து நின்று புறமுதுகிடாதவனே நடுகல் நாயகன்.

ஆனால் பிற்காலத்தில் கரந்தைப் போரில் ஈடுபடாத வெட்சிவீரனுக்கும் நடுகல் எடுக்கப்பட்டது. கரந்தை வீரனுக்குச் செய்யப்பட்ட மரியாதையைப் பிறருக்கும் செய்ய வேண்டிய கட்டாயத்தில் அரசர்கள் நிலை உண்டாயிற்று. கரந்தைப்போர் நிலையில் உயர்குடி வீரர் அல்லாதவரும் பயன்பட்டனர். சமூகம் மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டது. வீரனுக்கு எடுத்த நடுகல் என்ற நிலையில் மாபெரும் மாறுதல் நிகழ்ந்தது.

கிருஷ்ணாரப்பன் நடுகல், சிறை மீட்டான் கல், மீனாரப்பன்கல், மூத்தாள்கல், சாணாரப்பன் கல் என்று தலைமக்கள் பெயராலும் வெட்சித்தாய உரிமை மக்கள் பெயரால் வேடன் நடுகல், வேடியப்பன் கல், பட்டான்கல் என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

மூத்தாள் கல் என்பது மூத்த குடிவீரரான கரந்தை வீரர் கல்லாம்.

அரசனுக்கு உயிர் கொடுத்தலைக் கொள்கையாகக் கொண்டிருந்த வீரர் குடி பழைமையான வேளிர்கள் என்பதையும் எண்ணி நோக்குதல் வேண்டும்.

மலைபடுகடாம்,

ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே

(மலைபடுகடாம் 387-390)

என்று குறிப்பிட்டுள்ள அடிகளுக்கு,

> ஏவல் பொருந்தாத பகைவர் முதுகிட்ட அளவிலே தமது வெற்றி தோன்ற ஆரவாரித்தாராக அது பொறாமல் இவ்விடம் உயிர் கொடுத்தற்கு நல்ல காலமென்று மீண்டு உயிரைக் கொடுத்த நாணத்தையுடைய மறவருடைய கெடாத நல்ல புகழையுடைய பெயர்களை எழுதி நட்ட கற்கள் முதுகிட்டுப் போனவரை இகழும் பலவழிகள் எண்ணுதல் மிகும்படி பலவாயிருக்கும்

என்று நச்சினார்க்கினியர் உரைசெய்தார்.

பண்டைக் காலத்தில் போரின்கண் நிலைத்துப் புறமுதுகிடாத போரினைச் செய்து களத்திலே வீழ்ந்த வீரனுக்கே நடுகல் நட்டப்பட்டு, அவன் வழிபாட்டுக்குரியவனானான். வெட்சி வீரனாகிய வேடர்க்குப் போரின்கண் சென்று வீழ்ந்தாலும் நடுகல் எழுப்பப் படவில்லை.

நல்ல வழியிலே நின்று ஆறலைத்து உண்ட மறவர் இவரன்று. போரின்கண் உறுதிப்பாடு கொண்டு புறமுதுகிட்டு ஓடாமல் தன் மன்னனுக்காக உயிரை விடுவதைப் பெருமூச்சாகக் கொண்டு தன் உயிர்மூச்சினை விட்ட வீரன். விழுப்புண் ஏற்று வீழ்ந்துபட்ட விழுமியோன் நாணுடை மறவன் எனப்பட்டோன். நாணுடை மறவர் யாராக இருத்தல் கூடும் என்று பார்ப்போம்.

> *இகந்தன ஆயினும் தெவ்வர் தேஎம்*
> *நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்*
> *புரைத்தோல் வரைப்பின் வேல்நிழல் புலவோர்க்குக்*
> *கொடைக்கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவும்*
> *(மலைபடுகடாம் 86-89)*

என்பதற்கு நச்சினார்க்கினியர்,

> பகைவர் தேயம் சேணிகந்தன வாயினும் ஆண்டுச் சென்று தூசிப்படையைக் கொன்று குவித்து வலியுண்டாகவென்று பின்னர் உயர்ச்சியையுடைய யானை அணிந்து நிற்கின்ற அணியிலே சென்று பொருத வேற்போரின் விளக்கத்தையுடைய அறிவுடையோர்க்குக் கொடுத்தற் குரிய நாடும் ஊரும் முதலியவற்றைக் கொடுத்த அவனுடைய குடியிலுள்ளோர் தோற்றரவும்

என்று கூறுகின்றார்.

வேள் நன்னன் சேய் நன்னனின் படைவீரரை அறிவுடையராகிய வீரர் என்றார். வேளிரின் குடியில் உள்ளோர்

தோற்றரவு என்றும் குறிப்பிட்டார். யானைப் போரையும் கூறி உயர்ந்த வீரர் என்றார்.

வேள் நன்னனைக் '*காஞ்சி சான்ற வயவர் பெரும*' என்று **பதிற்றுப்பத்து** (65:4;90:39) சுட்டிக்காட்டுகிறது.

புறப்பாடல் (228) "நெடுந் தானைப் புலவர்" என்பதற்குப் பழைய உரையாசிரியர் "மிக்க பெரிய சேனைகளையுடைய அறிவுடையோர்" என்றார். அறிவுடைய வீரர் என்ற மரபு வழி வீரர் இருந்தனர் என்று இதனால் உணரப்படும்.

வள்ளுவரும் அரசன் தனக்குத்துணையாக அறிவு உறுத்துதற்கும் படைத்தலைமை ஏற்பதற்கும் "மூத்த அறிவுடையார்" வேண்டும் என்று வலியுறுத்துகிறார். "தொல் அறிவாளர் தொழில்" என்று *திரிகடுகம்* (40) அடக்கமுடைய போர்த் தொழிலை வலியுறுத்துகிறது.

புறப்பாடல் (224) சோழன் கரிகாற் பெருவளத்தானை

வேதவேள்வித் தொழில் முடித்த தூஉம்
அறிந்தோன் மன்ற அறிவுடை யாளன்

என்று குறிக்கிறது.

அந்தணரைப் போன்று அரசரும் அறிவுடையோர் ஆயினர் என்று பேராசிரியர் தம் உரையில் வலியுறுத்துகிறார்.

இதனாலேயே "அறிஞர் தம்பிரான்" என்று *கலிங்கத்துப் பரணியில்* குலோத்துங்கன் அழைக்கப்பட்டான்.

திருக்குறள் பழையவுரை (சரஸ்வதி மகால் பதிப்பு) குறள் (150) பாடல் அடிக்கு, தக்க விளக்கம் அளித்து "அறிவுடையோர் வீராதி ஞான சூரர்" என்று காட்டியிருக்கிறது.

கபிலைகதை "விசயாலய சோழன் ஆறிலொன்று வரி பெற்று அறிவுடையோர் மற்றும் பிராமணர் உடனிருக்க ஆட்சி செய்தான் என்று கூறும் (எசாலம் வரலாற்றுப் புதையல், பக். 39).

வின்சென் சுமித் எழுதிய *இந்தியாவின் வரலாறு* (பக்.150) அறிவு பெற்றிருந்து சமுதாயத்தில் உயர்நிலைப் பெற்ற மூத்தவர்களைச் சத்திரியர் என்று பிராமணர் அழைத்தனர் என்கிறது.

வடமொழியில் அமைந்த சுக்ரநீதி அரசனைச் சூழ்ந்திருந்த அறிவுடைய வீரர் பற்றிக் குறிப்பிடுகிறது. சேரவேந்தரின்

படைவழிவந்த தொல்குடி வீரர் பற்றிப் *பதிற்றுப்பத்து* (51) எடுத்தோதுகிறது.

> *தாங்குநர் தடக்கையானைத் தொடிக்கோடு துமிக்கும்*
> *எஃகுடை வலத்தர்நின் படைவழி வாழ்நர்*
> *மறங்கெழு போந்தை வெண்தோடு புனைந்து*

என்பதால் சேரரின் வீரக்குடியினர் இவரெனத் தெரிகிறது. "ஏந்து வாள் வலத்தர்" "தோமரவலத்தர்" என்று சிறப்பிக்கப் பட்ட இவர் சேரரின் உறுதியான படைவீரர் என்று தெரிகிறது. "வலத்தர்" என்று குறித்துக் காட்டப்படும் இவர்கள் சங்க இலக்கியங்களில் சிறப்பாகக் குறிக்கப்பட்டிருக்கும் பழம்படையார்க்கும் கல்வெட்டுகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் வலங்கைப் பழம் படையிலார்க்கும் தொடர்புடையவர்கள்.

நாணுடை மறவரே வேளிர் குடியைச் சார்ந்தவர்

வேளிர்குடியைச் சார்ந்த அறிவுடைய வீரரே நாணுடை மறவர். இவரைச் சான்றோர் வீரர் என்று புறப்பாட்டும் *தகடூர் யாத்திரையும்* வலியுறுத்தும், பரிமேலழகர் கருத்துப்படி நாடும் ஊரும் (தண்ணடை) மூலப்படையினர்க்காம்.

பிற்கால நிலைமை வேறானது. புதிய மறவர் எனப்படும் பிற்கால மறவர் வேளிருக்கு உரிமை பாராட்டவில்லை. மறவர் தலைவனான வாணாதிராயன் தன்னைக் குறுநிலத் தலைவன் என்ற பொருளில் தம் மரபுரைத்து 'அசுரவேள்' என்று அடையாளங்காட்டுகிறான்.

பேரரசாக இருந்து உலகம் காத்த சுரர் வம்சத்திற்கு உரிமை கோரிய பாண்டியர்கள் குறுநிலப் பகுதியை ஆண்டபோது கல்வெட்டுகளில் 'வீரவேள்', 'சிவலவேள்' என்று பட்டமிட்டு முடிசூடினர். பலரும் வேள்பட்டம் தரித்தமையால் வீரவேள் என்று மகுடம் சூடினர் பாண்டியர்.

நம் இலக்கியங்களில் "வேள்" என்று இறைவனாகச் சித்திரிக்கப்பட்டவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். *திருப்புகழ்* (996) "வேதனத்ரய வேளே நமோ நம" என்று இறைவன் அழைக்கப் பட்டார்.

சுரர் வமிசத்துப் பட்டமாகக் கருதப்பட்ட வேள் பட்டம் 'முருகவேள்' என்று மலைகளின் தலைவனாகிய முருகனுக்கும்

'காமவேள்' என்று மன்மதனுக்கும் சூட்டப் பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

பரிபாடலில் வேல்கொண்டு வெஞ்சமர் புரிந்த முருகனை, " வெண்சுடர் வேல்வேள்" என்றும் மன்மதனை, "அம்பினது ஏத்தொழில் நிலைபெற்ற காமவேள் சிரமசாலையை ஒக்கும்" என்றும் குறிப்பிடுகிறது.

தண்டநீதித் தலைவர்

சிரமசாலை என்பது ஆயுதப்பயிற்சி செய்யும் இடமாகும். போர்க்கலைக்குரிய சிரமசாலையுடைய தலைமக்களைச் "சிரம நீதி சான்றவர்" என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் குறிப்பிடுகிறது.

போர்ப்பயிற்சி பெறும் நிலையை விளக்கிய வில்லி பாரதம், "சிரமநிலை காண்மின்" என்று குறிப்பிடுகிறது.

படை வழங்கலாகிய வீரர் மரபு வழிவீரர் தண்ட நீதிக் குரியவர் என்றனர். வேம்பற்றூரரார் ' இறைநெறி முறைமை யோங்கச் சாற்றரும் பெரிய தண்டம் கொள்ளுமின் சான்றோராயின்' என்று விளக்கம் தருகிறார்.

தண்டநீதி என்பது படைவழங்கல் என்று பரிமேலழகர் திருக்குறள் உரையில் குறித்துள்ளார். "படை வழங்கலாகிய தண்டநீதி கற்றலும்" என்று பரிப்பெருமாள் குறள்பாவிற்கு (725) உரைசெய்தார். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் அதிவீர ராம பாண்டியரால் பாடப்பெற்ற கூர்ம புராணம் "நேமிவரையும் மந்திரமு நிகழ்த்து மீழத் தண்டமாய்" என்று குறித்து ஈழத் தண்டம் பற்றி விளக்கியுள்ளார். ஈழத்தண்டம் தொடர்புடையவரே ஈழச்சான்றார்.

பிற்காலத்தில் நல்லாப்பிள்ளை பாரதம் போர்ச் செய்தியைக் குறித்தவிடத்து

மறிந்து தாழ்வன வாசிகள் மாமத வேழம்
தறிந்து வீழ்வன தேர்நிறை தகர்வன சான்றோர்
எறிந்த வேலினும் வாளினும் கணையினும் இளைஞர்
துறந்த யாக்கை எத்தனை கோடி சொல்வார்

என்று குறிப்பிட்டுள்ளது. குதிரை, யானை, தேர் என்று குறித்துச் சான்றோர் வீரர் எறிந்த வேல், வாள், அம்பு என்று விவரிக்கிறது. பழமையை உணர்ந்து நல்லாப் பிள்ளை கூறினார்.

'ஈழத் தண்டம்' என்று அழைப்பதும் ஏனாதி நாதரை 'ஈழச் சான்றான்' என்று சேக்கிழார் குறிப்பிடுவதும் இங்குக் கருதத்தக்கது.

பரிபாடல் (10) "மன்னர்தண்டம்" என்று அரசன் படையாளரைக் கூறுகிறது.

தண்டநீதித் தலைவராகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் சான்றோரைக் கூறியிருப்பதும் - தண்டநீதி என்பது படை வழங்கல் என்று உரையாசிரியர் கூறியிருப்பதும் எண்ணுதற்குரியதாம்.

வீரக்குடியிலே பிறந்த தண்டநீதித் தலைவர்கள் 'வலங்கை வேள்' என்று அழைக்கப்பட்ட சிரமசாலைத் தலைவர்கள் ஆவர்.

கி.பி. 18ஆம் நூற்றாண்டு நூலான ஆத்திசூடி வெண்பா, 'கிரடிக் கூடம், போர்க்கலை பயிற்றுவித்தல்' என்பதை விளக்கிய விடத்து 'உண்மைச் சாணார் எனும் ஏனாதி' என்று கூறுகிறது.

கி.பி.16,17ஆம் நூற்றாண்டு கொங்குநாட்டுச் செப்பேடுகளில் சான்றோர் குலத்தவர் தாம் படைக்கலப் பயிற்சி அளித்ததாகக் குறிப்பிடுகின்றனர்.[136]

பூபதி வேளாளர் என்னும் உபயவேளாளர்

கி.பி.18ஆம் நூற்றாண்டு ஆவணத்தில் சிறுகுடி வெள்ளாளரும் படைக்கலப் பயிற்சி அளித்ததாகக் குறித்தனர். சிறுகுடி வெள்ளாளரைப் பூபதி வெள்ளாளர் என்று பேரூர் மடத்துச் செப்பேடுகள் அழைக்கின்றன.[137]

பூபதி வேளாளர் மாறன் அகப்பொருள் மற்றும் திருப்பதிக்கோவை எனும் நூல்களில் உபய வேளாளர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர் அரச குலத்தவருக்கு மகட் கொடைக்குரிய வேளாளர் என்று தெரியவருகிறது.

---

136. பேரூர் மடத்துச் செப்பேடுகள், பார்க்க: கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள், பக். 285-289.

137. சிறுகுடி வேளாளர் இவர் பூபதி வேளாளர் எனப்பட்ட வேளாளரின் அமைந்த அகம்படியப் பிரிவினர். இவர் "இராஜ மூப்பமுதலியார்" என்று பட்டம் தரித்தவர். பக். 287 - கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணம்.

1. பஞ்சநாட்டார், 2. மருமூட்டில்லம், 3. செஞ்சே நாட்டார், 4. ஆரணத் தோர், 5. சோளியர் எனப்பட்ட ஈழவகுல மரபினர் இலங்கை நாட்டில் மடப்பள்ளி வேளாளர் எனப்பட்டனர்.

கூர்படைக் கலத்தொழில் குஞ்சரம் புரவிதேர்
ஊர்தொழில் மன்னரோடு உபயவே ளாளர்க்கு
உரித்துஎன மொழிப உரன்உடை யோரே

என்பதிலிருந்து வேளாளரில் ஒரு பிரிவினர் அதாவது உபய வேளாளர் போர்த்தொழில் செய்தனர் என்று தெரிகிறது.

கலிங்கம் வென்ற கருணாகரத் தொண்டைமான் பூபதி வேளாளர் என்று பேரூர் மடத்துச் செப்பேடு வலியுறுத்துகிறது.[138]

அரசனின் படையில் வீரராக இருத்தல் மற்றும் யானை குதிரை, தேர்ப்படைகளில் மன்னர்கள் போன்று உபய வேளாளரும் பிற்காலத்தில் இடம் பெற்றார்கள் என்று இந்நூல் கூறுகிறது.

அரசனின் படையில் பலர் உயர்நிலை பெற்றிருந்தனர் என்று அழைக்கப்பட்டனர் என்பது *திருவாலவாயுடையர் திருவிளையாடல் புராணம்* சொல்வதாகும்.

சேக்கிழார் புராணம் வளவர் சேனாபதிகுடி என்று வேளாளரில் மானக்கஞ்சாற நாயனாரை அடையாளம் காட்டுகிறார். இவர் போன்று பலரும் வேளாளர் என்று உரிமைபாராட்டி சேனாபதிகளாக வேந்தரின் படை நடத்தினர்.

"நாற்படை வன்னியராக்கிய பெருமான்" என்று கல்லாடம் சிவன் அருளால் நான்கு படைகளிலும் வன்னியர் (மறவர்) பயன்பாடு உடையவராக மாறினர்.

இவரைப் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த திருவிளையாடல் மற்றும் திருவிளையாடல்களில் வேளாண் மரபின் தொடர்புடையவர், வன்னியர் என்று வரையப்பட்டுள்ளது.

இதுபோன்று "வடதிசையாளும் கிராதர் கோமான் சேதிபர்கோன் என்பான் வன்னியர் என்று *திருவாலவாயுடையார் திருவிளையாடல்* கூறுகிறது.

வேளாளருக்கும் கிராதருக்கும் உரிமை பாட்டியவர் பலராகத் தோன்றுகிறது.

---

138. கருணாகரத் தொண்டைமான் மரபினர்க்குப் பேரூர் மடத்துச் செப்பேடு உரிமை கோருகிறது. சீ. இராமச்சந்திரன் அவர்களால் வாசித்து கண்டறியப்பட்ட திருப்பரங்குன்றம் (மதுரை) செப்பேடு தனில் கருணாகரத் தொண்டைமான் மரபுக்குச் சிறுகுடி வேளாளரே உரிமை கோருகின்றனர்.

வேடன் கண்ணப்பருக்கு உரிமை பாராட்டிய மறக்குலத் தலைவர் பற்றிப் பாளையப்பட்டு வம்சாவளியில் பாடங்கள் உள்ளன. கண்ணப்பரைக் கானவர்குலத்தர், கிராதர், வேடர், வேட்டுவர் என்று பலவிதமாக இலக்கியங்கள் பேசுகின்றன. மேலும் "ஊர்த்தொழில் மன்னவரோடு" என்றும் நூலில் சொல்லி யிருப்பது மன்னர் குலத்தவரே ஊரன் என்று பெறப்படும் ஊர் ஆளும் மரபினர் இலக்கியங்களில் குறிப்பாகத் *திருக்கோவையார்* "வைமமலர் வாட்படை ஊரர்" என்று (40:16) வலியுறுத்துகிறது.

சிறுகுடிப் பெருந்தொழுவரான வேளாளர்

பிற்காலத்தில் உபய வேளாளருக்கும் ஊரன் பதவியும் அளிக்கப்பட்டது என்று தோன்றுகிறது. "வைம்மலர் வாட்படைஊரர்" என்போர் பூர்வ அரசகுடியினர் ஆகலாம்.

"திருந்தா வாழ்க்கைச் சிறுகுடி எமக்கு" (*களவியற் காரிகை* பா.236 மேற். பொருளியல் 39), "மறுவோடு பட்டன மலைநாட, சிறுகுடியார் செய்வன பேணார்" (தொல். பொருள். களவியல் 116 நச். உரை. மேற்கோள்) இவைகளில் மேம்பட்டு நிலைபெற்றவரை *மதுரைக்காஞ்சி* "இருவகையானிசை சான்ற, சிறுகுடிப் பெருந்தொழுவர்" (122-123) என்று குறிப்பிடுகிறது. சிறுகுடி வெள்ளாளர் என்பார் அரசகுடிக்குச் சிறுகுடியாக இருந்தவர் என்பதாலேயே பூபதி வேளாளர் எனப்பட்டனர். *மதுரைக்காஞ்சி* பாடப்பெற்ற காலகட்டத்தில் இவர்கள் தொழுவராகவே இருந்தனர்.

சங்ககாலச் சிறுகுடிகள் தலைமக்கள் தொடர்புடையவராக இருந்தனர் என்று அகப்பாடல்களில் சீரிய விளக்கங்கள் உள்ளன.

மண்டலீகர் எனும் பெருஞ்செய் ஆடவர்

முந்நீர் நாப்பண் ஞாயிறு
பன்மீன் நடுவண் திங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கி யென்க

எனத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனை வாழ்த்துகிறார். இம்*மதுரைக் காஞ்சிப்* பாடலடிகளுக்கு (768-770) உரை செய்த நச்சினார்க்கினியர்,

> மண்டில மாக்கள் (மண்டலீகர்) தண்டத் தலைவர் முதலிய சுற்றத்தோர்க்கு நடுவே ஞாயிறு போல விளங்கி, பல கலைகளைக் கற்றோரிடத்தே மதிபோல

என்று குறித்துள்ளார்.

17ஆம் நூற்றாண்டில் அமைந்த கருமாபுரம் செப்பேடுகள் மதுராபுரியில் பாண்டியரிடத்தில் வாளது பயிற்றி என 'மதுரை மண்டலீகர்' சான்றாரை அடையாளம் காட்டுகின்றன. மண்டலீகர் என்போர் பாண்டியனின் சுற்றத்தார் ஆவர்

ஒனிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியற்
பெருஞ்செய் ஆடவர்த் தம்மின் பிறமே

என்ற மதுரைக்காஞ்சி அடிகள் 744-746க்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

உயர்ந்த யானைத்திரளின் ஒழுங்குகளைக் கைக்கொண்ட பூசிப்புலர்ந்த சாந்தினையும் விரவுதலையுடைய வியன்பூ மாலையினையும் பெரிய செய்கைகளையுமுடைய மண்டலங்களை ஆள்கின்றவரைக் கொணர்மின்

என்பதால் பெருஞ்செய் ஆடவர் என்போர் மண்டலீகர்கள் என்பதும் தெரியவருகிறது.

இவர்களை *நெடுநல்வாடை* (168-172)

போரிலே யானையின் துதிக்கையை வெட்டி எறியும் பெரிய செயலையுடைய வீரர் என்றும் அவர் முகத்திலும் மார்பிலும் விழுப்புண் ஏற்றவர்

என்றும் குறிப்பிடுகிறது. பாடலடிகள் வருமாறு:

.... மின்சுவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் ஆடவர்
ஒளிறுவாள் விழுப்புண் நாணிய புறம்போந்து

பெருஞ்செய் ஆடவர் அரச குடியினர் ஆவர் (புறம்.199). இவற்றால் சிரமசாலை என்பது ஆயுதப் பயிற்சிக் களம் என்பதனையும் அதன் தலைவர்கள் சான்றோர் (சான்றார்) என்பதனையும் உணரமுடிகிறது.

உயர்ந்த உறவு ஊக்கலர்

காழ்மண் டெஃகமொடு களைதயலைக் கலங்கிப்
பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை வியத்து
வானத்தன்ன வளநகர் பொற்ப
நோன்குறட் டன்ன ஊன்சாய் மார்பின்
உயர்ந்த உதவி ஊக்கலந்தி தம்மின் (மதுரைக்காஞ்சி 739-741)

வீரத்திருமகனை விளக்கியவிடத்து, "நெருப்பு நடந்தாற் போன்ற பகைவர் படைக்கு நடுவே சென்று பெரிய நல்ல யானையைப் போர்க்களத்தே படவெட்டிச் சீறிய புண்ணினால் வீழ்ந்த தலைவரைக் கொணர்மின்" என்றார்.

'களிறெதிர்ந் தெறிந்தோர் பாடு' (தொல. புறத்.17) என்றும் தும்பைத் திணை கூறிற்று என்று 'விழுமிய வீழ்ந்த குரிசிலர்' பற்றியும் விவரித்தார். யானையின் துதிக்கையை வெட்டி வீழ்த்தியவனைப் பெருஞ்செய் ஆடவன் என்று குறித்தனரே அன்றிக் 'கொடு நோக்காடவர்' என்று குறிக்கவில்லை.

பெருநிலத்தவனும் குறுநிலத்தவனும்

பன்னிருபாட்டியல் மகட்கொடை பற்றி விவரிக்கும் இடத்தில்,

பெருநில வேந்தன் மகட்பால் வேண்டி
ஒரு பெருந் தூதன் உரைத்த மொழி கேட்டுக்
குறுநில மறவன் வெஞ்சினம் திருகி
மாற்றம் மிகு உரைப்பது மறம் என மொழிப

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கே பெருநிலத்தவன் என்றும் குறுநிலத்தவன் என்றும் குறிக்கப்படுவோர் வேந்தரும் வேளிருமே ஆவர்.

மேலும் சிற்றரசு நிலை பெற்றோர் குறும்பர் என்ற வேடரும் அரட்டர் என்று அடையாளம் காட்டப்பட்ட மறவரும் ஆவர் என்பது **சேந்தன் திவாகரம்** சொல்லும் பாடமாகும்.

பெருநில வேந்தரும் குறுநில வேந்தரும் கொண்டிருந்த மணவுறவு பல இலக்கியங்களில் பதிவு செய்யப்பெற்றிருப்பதை நாம் அறியமுடிகிறது.

"ஆர் அமர் ஓட்டலும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையில் "குறுநில மன்னரும் காட்டகத்து வாழும் மறவரும் போர்த் தொழில் வேந்தரைப் புறங்காண்டலும்" என்றார்.

மேலும் புறம் (308) பாடலை "இது சீறூர் மன்னன் வேந்தனைப் புறங்கண்டது" என்றும் புறம் 316வது பாடலை "இது மறவன் ஆரம ரோட்டல்" என்றும் விளக்கியுள்ளார். குறுநில மன்னர் என்பார் குறுநில மறவராம்.

இதுபோன்று "ஆ பெயர்த்துத் தருதலும்" என்ற சூத்திர உரையிலும் இதே நிலையில் விளக்கம் தருவது சிந்திக்கத்தக்கதாகும்.

பழுவேட்டரையரும் மழவரும்

சோழனிடம் இருந்த படைப்பிரிவினர் போன்று பழுவேட்டரையரும் இளைய இரணமுக ராமன் படையை வைத்திருந்ததைப் பார்க்கும் போது சோழனின் தொடர்பு கோரி, இராமனின் இளையோன் இலக்குவனுக்கு உரிமை கோருவது போன்றாகிறது. இவர் அரச மரபின் இளங்கூறுபெற்று வாழ்ந்தோர் என்றும் எண்ண இடமுண்டு.

முனைவர் ஆ. தசரதனால் பதிப்பிக்கப்பட்ட **வலங்கை வாழ்த்து** " சோழகுலம் நாங்கள் என்று துரை மெய்க்கும் சேவகர்கள் என்றும் "வளம் சேரும் செம்பியர்க்கு வாய்த்த தம்பி நாடாக்கள்", "இளவரசுதான் பெற்றார் இராசாக்கள் கோபாலன்" என்றும் கூறுவதால் இளைய இரணமுக இராமன் படை என்பது போன்று 'இளவரசு பெற்றோர்' இளங்கூறு என்பதோடு பொருந்துகிறது.

இளவரசு காத்தவர்கள் என்று செப்பேடுகளிலும் காணப் பெறுகிறது. இப்படையில் வேளக்காரர்கள் இடம்பெறத் தொடங்கினர் என்றும் அறியலாம்.

குமரன் மறவன், கண்டன் மறவன் என்பதில் 'கண்டன்' என்ற பட்டப்பெயர் சோழர்க்குரியதாகும். கி.பி.12ஆம் நூற்றாண்டினரான ஒட்டக்கூத்தர் தனிப்பாடல், "கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா, கோபாலா" என்பதால் சோழரின் பட்டப்பெயரான கண்டன் என்ற பெயராலேயே பழுவேட்டரைய மன்னன் கண்டன் மறவன் என்று அழைக்கப்பட்டான் என்று அறியற்பாலதாம்.

'சோழன் மறவன்' பற்றி அகப்பாடல் கூறுவது போன்று கண்டன் மறவன் என்று சோழரின் தலைமையை ஏற்று வாழ்ந்தமையாலே வேந்தர், வேளிரோடு மண உறவு வைத்திருந்த பழுவேட்டரையர்கள் வேந்தரைப் போன்று மழவரோடும் மண உறவு கொண்டனர். மழவன் கொங்கிணி சென்னி நம்பியார் என்பாரை மாமடி என்பதால் இதனை அறியலாம்.

ஆனால் பண்டைய நாளில் மழவர் என்ற வீரர் மறவர் என்று அழைக்கப்பட்டுச் சேரர் குடியோடு பொருத்திப் பார்க்கப்பட்டனர்.

மழவர் என்ற தலைவர் காட்டுக்குடியில் தோற்றம் பெற்று வேந்தர் குடியோடு மணவுறவு கொண்டு வாழ்ந்தனர். எனினும் அவர்கள் சேரரின் கால்வழியினர் அல்லர்; மாற்றாந்தாய் மரபில் வந்த அதியமான் மரபினர்.

சேரர் நாட்டின் ஒரு பகுதியில் தகடூர் நாட்டினை ஆளத் தலைப்பட்டிருந்தனர். இவர்கள் காட்டகத்து மழவரான மறவராவர்.

கிழான் கிழவன், குறிநில மரபினர்

வேளிர்கள் என்போர் கிழான், கிழவன் என்னும் பட்டம் கொண்டோர் ஆவர். பல குடியினரும் இத்தகைய பட்டங்களைப் பெறத் தொடங்கினர் என்றாலும் நாடு கிழவன், மலை கிழவன் என்னும் பட்டம் வேந்தர்க்கும் குறுநிலக் கிழவன் என்னும் திருப்பெயர் வேளிரான குறும்பொறை நாடனுக்கும் இருந்தன.

"இனநிரைப் பல்லான் கிழவன்" (**நற்றிணை:** 291) என்னும் பட்டம் வணிகர்க்கு அல்லது வேளாளர்க்குரியதாகும்.

'ஆயர் வேட்டுவர்' எனத் தொடங்கும் **தொல்காப்பிய** நூற்பாவிற்கு (அகத். 21) உரை எழுதிய இளம்பூரணர்,

> நிலம் பற்றிய கிழவர் என்ற சொல் ஆயர், வேட்டுவர் போன்ற சாதியினருக்கும் ஆட்சி பற்றிய கிழவர், குறும்பொறை நாடன் என்போர்க்கும் உரியது

என்று சுட்டியிருப்பது எண்ணத்தக்கது. மகட்கொடை பற்றிய "நிகர்த்து மேல்வந்த" என்ற **தொல்காப்பிய** நூற்பாவிற்கு உரை எழுதிய இளம்பூரணர், "பெருஞ்சிக்கல் கிழான் மகட்கொடை மறுத்தது" பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பாரிவேளிர் மூவேந்தருக்கும் மகட்கொடை மறுத்துப் போரிட்டு வீழ்ந்தான். இத்தகையோரே ' குறுநில மன்னர்' என எடுத்தோதப்பட்டனர்.

கி.பி 926இல் ஏற்பட்ட திருச்சோத்துறைக் கல்வெட்டு, "கிழான் மரபுச் சான்றார்" பற்றிக் குறிப்பிடுகிறது.

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் அமைந்த கள்ளுமடைக் கல்வெட்டு, "பருத்திக் குடி நாட்டுப் பார்ப்பாரச் சான்றார்க்கும் பார் குடிகளுக்கும் பிரம்ம தேய கிழவர்க்கும்" என்பதால் பிரம்ம தேயக் கிழவர் எனப்படும் அந்தணர் பற்றியும் அறிகின்றோம்.

கிபி. 17ஆம் நூற்றாண்டில் சேது காவல் உரிமையை நாயக்கரிடமிருந்து பெற்றிருந்த மறவர் தலைவன் கிழவன் சேதுபதி என்று அழைக்கப்பட்டார்.

பிற்காலத்தில் கிழவன் என்ற உரிமைப் பெயரை நாடு, நிலம் பெற்று வாழ்ந்தோர் பலரும் தம் பெயரோடு இணைத்துக் கொண்டனர். அதன்பின் தலைமக்களுக்குரிய கிழவன் என்ற உரிமையுடைய பட்டம் உயர்த்தப்பட்ட பலருக்கும் வந்தடைந்தது

களப்பிரர் காலத்தில் அந்தணர் நிலவுடைமை அழிக்கப் பட்டு, வேளாள குலத்தவரில் உயர்ந்தவரைக் கடந்திருக்கைக் கிழவன் என்று பாண்டியர் செப்பேடுகள் கூறுகின்றன.

இதுவரை கூறியவற்றிலிருந்து பண்டைத் தமிழகத்தில் ஆட்சியாளராக இருந்தவர்கள் வேந்தரும் வேளிரும் எனப் பட்டனர். ஆட்சியாளரை எதிர்த்து நிமிர்ந்தவர்கள் வேடரும் வேட்டுவருமாகிய பாலை நிலத்தார். இவரும் காட்டு ஆட்சியைப் பெற்றனர்.

இவரிடமிருந்தும் அரசர்க்கு மகட்கொடை பெறப்பட்டது என்று இலக்கண நூல்களில் காணப் பெறுகிறது. ஆனால் வேடர், மறவர் என்போர் வேளிர் குலத்தவர் அல்லர். சிரமநீதி என்னும் ஆயுதப் பயிற்சி வழங்குவோரே அரசநீதிக்குரியோர். அவரே தண்ட நீதித் தலைவர்.

போர்க்கலை என்று உறுதி செய்யப்பட்ட போரில் நிலைபெற்ற மரபினர் வேந்தரும் வேளிரும் ஆவர். திட்டமிடாத தாக்குதல் போரில் பயன்பட்டவர் பாலை நிலத்தார்.

மீளியரும் கூளியரும்

மதுரைக்காஞ்சி (690-92),

வேல்கோ லாக வாள்செல நூறிக்
காய்கின முன்பிற் கடுங்கண் கூளியர்
ஊர்கடு விளக்கிற்றந்த ஆயமும்

என்ற அடிகளுக்கு

> எரிகின்ற சினத்தையுடைத் தாகிய வலியினையும் தறுகண்மையுடைய ஆயக் கரையிலிருந்த வேட்டுவர் பகைவர் ஊரினைச் சுடுகின்ற விளக்கிலே நிரைகாத்திருந்த வீரரை மாள வெட்டி வேல் கோலாக அடித்துக் கொண்டு வந்த பசுத்திரளும்

என்று வெட்சிப் போர் வீரர் நச்சினார்க்கினியர் விளக்கம் அளிக்கிறார்.

இவ்வீரர்களைக் கடுங்கண் கூளியர் என்றனர். ஆநிரை மீட்கும் கரந்தை வீரரை மீளியர் என்றனர். கூளியரும் மீளியரும் இருவேறுபட்ட பிரிவினர் என்பது உறுதியாகத் தெரியவருகிறது.

புறப்பொருள் வெண்பா மாலை (247) "மீளிமறவன்" என்று (தலைமையுடைய வீரன்) எடுத்தோதுகிறது. மீளி என்பவன் கரந்தை வீரனாக இருந்து வெட்சிக்குடிகளை அடக்கி ஆண்ட பாலை நிலத்தலைவன். ஆனால் பாலை நிலக்குடியிற் பிறந்தவன் அன்று. "பெருந்தகை மீளி" என்றும் "மீளியாளர்" என்று புறப்பாட்டும் (260) கூறுகிறது.

மூதிற் பெண்டிர் மகன்

தமிழ்ப்படைகள் ஒன்றுக்கொன்று மோதிய தலையாலங் கானத்துப் போரினைக் குடபுலவியனார் புறப்பாட்டில் (19) அரச வாகைத்துறையில் குறிப்பிடுகின்றார். இப்போரில் பாண்டியன் நெடுஞ்செழியனைச் சேரன் சோழன் மற்றும் குறுநில மன்னர் ஐவரும் எதிர்த்தனர்.

பெரும் போரில் மூதின் மகளிர் மகனும் கலந்து போரிட்டான். இவனைக் குறிப்பிட்ட விடத்து,

> யானையின் துதிக்கையை வெட்டி வீழ்த்திய வீரன் போர்க் களத்திலே ஏந்திய வாளொடு வெற்றியை ஈட்டித்தந்து வீழ்ந்து கிடந்தான். தன் தலைவனும் (கணவன்) உடன் வீழ்ந்து கிடந்தான். வீரத்தால் வெற்றியைத் தேடித் தந்த பெருவீரர்கள் களத்தில் வீழ்ந்த நிலையில் வீரமகனின் தாயர் தன்மகன் நிலை அறிந்து போரிட்ட இடத்திற்குச் சென்று கண்ணீர் உகுத்தனர்.

வேந்தர்க்காகக் குலமரபு காத்திட மடிந்திட்ட தன் தலைவனையும் மகனையும் எண்ணி உவகையால் பெருமகிழ்ச்சி கொண்டு அழுதாள். அத்தகைய தாயினைக் குடபுலவியனார் "மூதிற் பெண்டிர்" என்றார். பழைய உரையாசிரியர் அவரை மூதில் மகளாகிய பழைய மறக்குடி மகள் என்று குறிப்பிடுகின்றார். குடபுலவியனார்,

> எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்
> எந்தையொடு கிடந்தோரெம் புன்தலைப் புதல்வர்

என்று குறிப்பிடுகிறார். வீழ்ந்த வீரனை "ஏந்துவாள் வலத்தர்" என்றும் வெற்றியைத் தேடித்தந்து வீழ்ந்தவன் என்றும்

தலைவனாகிய (படைத்தலைவன்) வீழ்ந்து பட்டான் என்று புலனாதலாலும் மூதிற் மகளின் மகன் உயர்நிலை வீரன் என்று தெரியவருகிறது.

வீரரில் ஒருவகையினரை வேட்டுவர் என்றும் மேலே குறித்துள்ளதைப் பார்ப்போம். இதனால் இங்குக் குறிக்கப்பட்டுள்ள ஏந்துவாள் வலத்தர் வேட்டுவரிலும் வேறானவர் என்று தெரிய வருகிறது.

ஏந்துவாள் வலத்தர் என்பாரை உயர்குடி என்பதால் இவர் தனுர் வேதமாகிய போர்க்கலையைப் பயின்றவராகத் தோன்றுகிறது.

தண்டுடை வலத்தர் (பதிற். 80),
தோமா வலத்தர்
எஃகுடை வலத்தர் (பதிற். 41)

என்று சுட்டிக்காட்டப் பெற்ற உயர்குடி வீரர் பற்றி மேலும் அறியலாம்.

தாங்குநர் தடக்கையானைத் தொடிக்கோடு துமிக்கும்
எஃகுடை வலத்தர்நின் படைவழி வாழ்நர்
மற்கெழு போந்தை வெண்டோடு புனைந்து (பதிற்.51)

யானையை வெட்டி வீழ்த்தும் வீரரான அடிபெயராத நிலை நிற்கும் படைவழி வாழ்நர் என்பார் எஃகுடை வலத்தர் எனப்பட்டனர். இவர்கள் தொன்று தொட்டுப் போர்க்குடி மரபினர் என்று பெறப்படும்.

மேலும் பனம்பூமாலையை அணிந்து போர் புரியும் வீரர் என்றும் இவரை அடையாளமிடுகிறார்.

யானைப் போரிலே ஈடுபடும் வீரர்கள் காலாட் படையினராகக் கருதயிடமில்லை. மேலும்,

தோமர வலத்தர் நாமஞ் செய்ம்மார்
ஏவல் வியண் டிளையரொ டெழுதரும் (பதிற்றுப். 54)

என்பதிலிருந்து தண்டாயுதத்தைக் கையில் பிடித்துப் போர் புரியும் உயர் வகையினர் என்று உறுதியாகிறது.

தண்ட நீதி என்பதற்கும் தண்டாயுதத்திற்கும் தொடர்பு இருக்கலாம். இவ் வீரரின் ஏவல் பணி வீரராக இளையர் சொல்லப்படுவதாலேயே "ஏந்துவாள் வலத்தர் மேம்பட்ட நிலையுடைய போரின்கண் நிலைநின்று வாழ்ந்த போர்க்குடி நிலைமக்கள்" என்பதில் ஐயப்பாடில்லை.

பதிற்றுப்பத்தில் சுட்டிக்காட்டப்படும் "யானைவீரர்" முதியர் மரபிலே தோற்றம் பெற்றவராதல் வேண்டும்.

இவரைப் போன்று மூதில் மகளிர் மகன்களாகச் சொல்லப் பட்ட உயர்குடி வீரர் போரில் அம்பு சென்று தைத்த யானையின் துதிக்கையை வெட்டியும் எதிரில் யானை மீது அமர்ந்தவனை வீழ்த்தியும் அரசனுக்காக உயிர் துறந்தான் என்பதினால் பேரானந்தத்தில் மகிழ்ந்து வீழ்ந்து அழுதனர் அப்பெண்டிர் எனலாம்.

படைமாறாமல் போரின்கண் களத்தில் தன் தலைவனோடு வீழ்ந்து கிடந்தான் என்பதாலும் வீரர் வழி வீரர் என்று உயர் வகை வீரர் என்று பெறப்படும். அரச வாகையில் பாடப்பட்ட இப்பாடலில் அரசனுக்காகப் பலரும் உயிர் விட்டிருத்தல் கூடும்.

யானைப் போர்க்குரியவரான தன் கணவனையும், மகனையும் ஒரு சேர இழந்தாள். எனினும் அரசன் பொருட்டுப் போரில் வீழ்தல் பெருமைப்படக் கொள்தல் பண்டைய வீரர் குலக் கடமையாகும். இதுவே தண்டநீதி வீரர் எச்சமாகும்.

முதியர் என்ற சொல்லோடு தொடர்புடையது மூதின்மகளாகும். முதுகுடி வீரரை முதிய மறச் சான்றோர் என்று புறப்பாட்டின் உரைகளில் பல இடங்களில் கூறியுள்ளார்.

முல்லைப்பாட்டு பெருமூதாளர் என்பவரை ஒழுக்கத்தை யுடைய மெய்க்காப்பாளர் என்று குறிப்பிடுகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

உயர்ந்தோர் மருக! எனப் பாண்டியன் விளிக்கப்படுதல்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றிக் கூறும் *மதுரைக்காஞ்சியில்* *''உலகமாண்ட உயர்ந்தோர் மருக''* (மதுரைக்.23) என்ற விளியால் பல பாண்டியர்கள் வழியில் வந்தவனாக இந் நெடுஞ்செழியனைக் காணமுடிகிறது. ''உலகத்தை ஆண்ட உயர்ச்சி பெற்றோர் குடியில் உள்ளவனே'' என நச்சினார்க்கினியர் இதற்குப் பொருள் கூறுகின்றார்.

"பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது" (மதுரைக். 191) என்ற அடிக்கு நச்சினார்க்கினியர் "நின் குலத்தில் பெரியோர் நடந்த அடிப்பாட்டின் வழியைத் தப்பாமல்" என்கிறார். உயர்ந்தோர் என்போர் முற்காலப் பாண்டியர் ஆவர். இவர்கள் குடியும் பழங்காலத்தது. பலர்க்கு வரலாறு இல்லை. கதைகள் உள்ளன. இவற்றை *இறையனார் களவியலுரை* போன்ற நூல்களிலிருந்து அறியலாம்.

பொதியில் பொருந!

உலகமாண்ட உயர்ந்தோர் மருக (மதுரை. 23) என அழைத்ததற்குப்பின் மாங்குடிமருதனார் பாண்டியனைப் பொருப்பில் பொருந (மதுரைக். 42) என்கிறார். *மதுரைக்காஞ்சி* (40-42) யில் இப்பகுதி வருமாறு:

> *தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்*
> *தொன்முது கடவுள் பின்னர் மேய*
> *வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந!*

மதுரைக்காஞ்சியின் இவ்அடிகளுக்கு உரைகூறும் நச்சினார்க்கினியர்,

> இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின
> கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த
> அகத்தியன் பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனாயிருத்தற்கு
> மேவின ஒப்பற்றவனே

அகத்தியனுடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த சிறப்புக் கூறினார்

பொருநனென்றது தான்பிறர்க்கு உவமிக்கப் படுவானென்னும் பொருட்டு

என்கிறார். *சிலப்பதிகாரம்* வேட்டுவவரியின் இறுதிப் பாடலிலும் "பொதியிற் பொருப்பன்" என்பதற்கு அதன் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் "பொதியிற்பொரு பனாகிய வெற்றியை விரும்பும் பாண்டியன்" என்கிறார். பாண்டியன் ஒருவன் அகத்தியருடனிருந்து தலைச்சங்கத்தில் தமிழாராய்ந்த செய்தி *இறையனாரகப் பொருள்* முதல் நூற்பா உரையில் உள்ளது. இப்பாண்டியன் மலையத்துவச பாண்டியன்.

வடிம்பலம்ப நின்ற பாண்டியனான நெடியோனே முன்னோன்

சங்ககாலப் பாண்டியர்கள் தாம் பாடிய பாடல்களாலும் தம்மைப் பாடியோர் பாடல்களாலும் அறியப்படுகின்றனர். மேலும், இப் பாண்டியர்களுக்குப் பின்தோன்றிய முதலாம் மற்றும் இரண்டாம் பாண்டியப் பேரரசர்கள் வெளியிட்ட செப்பேடுகளாலும் அறியப்படுகின்றனர். இவ்வாறு சுட்டப்பெறும் முற்காலப் பாண்டியர்களில் முக்கியமானவனாகக் கருதப்பெறும் *வடிம்பலம்ப நின்ற பாண்டியனைப்* பற்றிய குறிப்புகள் மிகுந்து காணப்பெறுகின்றன. இதற்கான காரணங்கள் கதைகளாகவே அறியப்படுகின்றன.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனின் முன்னோனாக *மதுரைக்காஞ்சியில்* (61) "*நெடியோன்*" என்பவன் கூறப்படுகிறான். நச்சினார்க்கினியர் இவனை "வடிம்பலம்ப நின்ற பாண்டியன்" என்கிறார். பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதியைப் பாடும் நெட்டிமையார் பாடலில் "முந்நீர் விழவின் நெடியோன்" எனப் *புறநானூறு* (9:10) '*நெடியோன்*' ஒருவனைக் குறிப்பிடுகிறார். இதன் பழைய உரையாசிரியர் "முந்நீர்க் கடல் தெய்வத்திற்கு எடுத்த விழாவினையுடைய நெடியோன்" எனக் கூறி, மேலும் "முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்றானென்ற வியப்பால் நெடியோன் என்றார் என்ப" என்கிறார்.

மதுரைக்காஞ்சியின் (763) இறுதியில் "*நிலந்தரு திருவின் நெடியோன் போல*" என்பதற்கு "*மாயோன்*" என நச்சினார்க்கினியர் பொருளுரைக்கின்றார். மாயோன் என்ற

தாடாளன் வேளிர்க்கும் மூவேந்தருக்கும் முன்னோன் ஆதலால் மாயோன் என்ற நச்சினார்க்கினியர் கருத்து இங்குப் பொருந்தாது. ஏனெனில் *தொல்காப்பியச்* சிறப்புப் பாயிரத்தில் *"நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து"* என வருவதற்கு, அதன் உரையாசிரியர் இளம்பூரணர் "மாற்றாரது நிலத்தினைத் தன்கீழ் வாழ்வார்க்குக் கொண்டு கொடுக்கும் போர்த் திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தியது அவைக்கண்ணே" என்கிறார். நச்சினார்க்கினியரும் இவ்வாறே கொள்கிறார். இதனால் நிலந்தருதிருவின் பாண்டியனும் *மதுரைக்காஞ்சி* குறிப்பிடும் நெடியோனும் ஒருவனே எனலாம்.

சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில் (11:17-22) வரும் மறையோன் முதலில் ஒரு முற்காலப் பாண்டியனை வாழ்த்திய பின்னரே வேறு இரு பாண்டியர்களைக் குறிப்பிடுகிறான்.

> *அடியிற் றன்னள வரசர்க்கு உணர்த்தி*
> *வடிவேல் எறிந்த வான்பகை பொறாது*
> *பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
> *குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள*
> *வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு*
> *தென்றிசை யாண்ட தென்னவன் வாழி*

இப்பாடலடிகளில் குறிப்பிடப்பெறும் தென்னவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என அறியலாம். ''கடலினளவை அடியாலே இன்ன அளவினது இதுவென்று அரசர்க்குக் காட்டி'' என உவே.சாமிநாதையர் பொருள் கூறுகிறார். அடியார்க்கு நல்லாரின் விளக்கம் வருமாறு:

> முன்னொரு காலத்துத் தனது பெருமையினதளவை அரசர்க்குக் காலான் மிதித்துணர்த்தி வேலானெறிந்த அந்தப் பழம் பகையினைக் கடல் பொறாது பின்னொரு காலத்து அவனது தென்றிசைக் கண்ணதாகிய பஃறுளியாற்றுடனே பலவாகிய பக்கமலைகளையுடைய குமரிக் கோட்டையும் கொண்டதனால் வடதிசைக் கண்ணதாகிய கங்கையாற்றினையும் இமயமலையினையும் கைக்கொண்டு ஆண்டு மீண்டும் தென்றிசையை ஆண்டதென்னவன் வாழ்வானாக

இத் 'தென்னவன்' வடிம்பலம்ப நின்ற பாண்டியனே!

சிலப்பதிகாரம் வேனிற் காதை முதல் மற்றும் இரண்டாம் அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் கூறும் விளக்கமாவது.

முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச் சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் உள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீயினார் காய்சினவழுதி முதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னுமாற்றிற்கும் குமரி யென்னுமாற்றிற்கு மிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ்மதுரை நாடும் ஏழ் முன்பாலை நாடும் ஏழ் பின்பாலை நாடும் ஏழ்குன்ற நாடும் ஏழ்குண காரைநாடும் ஏழ்குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல் காண்டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றா ரென்றுணர்க.

வேள்விக்குடிச் செப்பேடுகளில், கடற்கோளால் பாண்டிய நாட்டின் தென்பகுதி அழிவுற்றபோது பாண்டிய மன்னன் ஒருவன் உயிர்வாழ்ந்ததாகவும் குறிப்பிடப் பெறுவதை இந்நெடியோனுக்கு ஏற்றிக் கூறுகின்றனர்.

சின்னமனூர் செப்பேடுகளில் கடல்மீது வேலெறிந்து பெருவெள்ளத்தைத் தடுத்த செய்தியை இவனுக்குரியதாகக் கூறுகின்றனர். பாண்டியர் தொடர்பான பிற்கால நூல்களும் இம் முற்காலப் பாண்டியனின் கதைகளைச் சுட்டுகின்றன.

சயமாகீர்த்தி எனவரும் பெயரால் இப் பாண்டியன் கடல் கடந்து, 'சய' என்னும் தீவை வென்று, விழாக்கொண்டாடினான் என மா. இராசமாணிக்கம் தன்னுடைய *பத்துப்பாட்டு ஆராய்ச்சி* நூலில் குறிக்கின்றார்.

இவற்றால் வடிம்பலம்ப நின்ற பாண்டியனே **முதல் நெடியோன்** என்று போற்றப்பட்டிருக்கலாம் என்கின்றனர். இவனுக்குப் பிற்காலம் வந்த பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியும் நெடியோன் ஆவான்.

'உயர்ந்தோர் மருக' என்பது போல் *புறநானூற்றில்* குடபுலவியனாரும் (19) *'வியன் ஞாலம் தாளிற்றந்து தம்புகழ் நிறீஇ ஒருதாமாகிய உரவோர் உம்பர்'* எனப்பாண்டியனை விளிக்கின்றார்.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு முன்னோனாகச் சிறப்பாகக் கூறப் பெறுபவரில் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் அடங்குகிறான். வடிம்பலம்பநின்ற பாண்டியனைப் போலவே *புறநானூறும், மதுரைக்காஞ்சியும்* கடுங்கோன் (கி.பி.6-7 ஆம் நூற்றாண்டுகள்) வெளியிட்டது முதலான செப்பேடுகளும் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நினைவுகூர்கின்றன. *புறநானூற்றின்* தொடக்கப் பாடல்களான 6, 9, 12, 15 மற்றும் 64 எனும் பாடல்கள் இவனைக் குறிக்கின்றன.

காரிகிழாரும் (புறம்.6) நெட்டிமையாரும் (புறம்.9, 12, 15) நெடும்பல்லியத்தாரும் (புறம். 64) இப் பாண்டியனை மட்டுமே பாடியுள்ளனர். இவனும் வடக்கே இமயம் எல்லையாகத் தெற்கே குமரி எல்லையாக இடைப்பட்ட நாடுகளை வென்று ஆண்டான் எனக் காரிகிழார் பாடியுள்ளார். வென்ற பொருள்களைப் பரிசில் வேண்டி வந்தார்க்கு அவர் வரிசை அறிந்து வழங்கினான். நான்மறை முனிவரும் இவனை வணங்கினர்.

நெட்டிமையார் ''நன்னீர்ப் பஃறுளி மணலினும் (பல நாள்கள்) வாழவேண்டும்'' என இவனை வாழ்த்துகிறார். ''செந்நீர் பசும்பொன் வயிரியர்க்கீத்த'' (புறம்9) அவ்அரசன், பொற்றாமரையைப் பாணர் சூடவும், யானையொடு தேரைப் புலவர்கள் பெறவும் செய்தான் (புறம்.12). பல யாகங்களைச் செய்தான் என்பதை,

நற்பனுவல் நால்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்

மூலம் அறியலாம் (புறம். 15) பல்யாக சாலைகள் பல போர்களின் இறுதியில் ஏற்பட்டதாகலாம். அப்போர்களின் வெற்றியாகப்

போர்க்களங்களில் வெற்றித்தூண்கள் நாட்டப் பெற்றிருக்கலாம். *மதுரைக்காஞ்சியிலும் (759-760),*

> **பல்சாலை முதுகுடுமியின்**
> **நல்வேள்வித் துறைபோகிய**

பல்யாக சாலைகள் குறிப்பிடப்படுகின்றன.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

சின்னமனூர் செப்பேடுகள் (பெரிய சாசனம்) கூறும் பாண்டியர்கள் வருமாறு:

வானவெல்லைவளாத்தாண்டும் வளைகடல் கடந்து அமிர்தம் கொண்டு
நானிலத்தோர் விஸ்மயப்பட நாற்கடலொரு பகலாடியும்
மறுகிலொளிர் மணிமுடியொடு சங்கவெள் வளைதரித்தும்
நிலவுலகம் வலம்செய்தும் நிகரில் வென்றியமரர்க்குப்
பலமுறையும் தூதுய்த்தும் பாகசாசனன் ஆரம்வவ்வியும்
செம்மணிப் பூணொடு தோன்றித் தென்றமிழின் கரைகண்டும்
வெம்முனைவே லொன்றுவிட்டும் விரைவ ரவிற்கடன்மீட்டும்
பூழியனெனப் பெயரெய்தியும் போர்க்குன்று ஆயிரம் வீசியும்
பாழியம்பா யலில் இனிதமர்ந்தும் பஞ்சவனெனும் பெயர் நிறீஇயும்
வளமதுரை நகர்கண்டும் மற்றதற்கு மதில்வகுத்தும்
உளமிக்க மதியதனால் ஒண்டமிழும் வடமொழியும்
பழுதறத்தான் ஆராய்ந்து பண்டிதரின் மேந்தோன்றியும்
மாரதர்மலை களத்தவியப் பாரதத்திற் பகடோட்டியும்
விசயனைவசு சாபநீக்கியும் வேந்தழியச் சுரம்போக்கியும்
வசையில்மாக் கயல்புலிசிலை வடவரைநெற் றியில் வரைந்தும்
தடம்பூதம் பணிகொண்டு தடாகங்கள் பல திருத்தியும்
அடும்பசிநோய் நாடகற்றி அம்பொற்சித் திரமுயர்த்தும்
தலையாலங்கானத்தில் தன்னொக்கு மிருவேந்தரைக்
கொலை வாளில் தலைதுமித்துக் குறைத்தலையின்
கூத்தொழித்தும்
மகாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்

இச்செப்பேடுகளில் கூறப்பெறும் பாண்டியர்களுள் சங்க இலக்கியச் சான்றுகள் பெற்றோர் ஒருசிலரே. ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் சுட்டப் பெறவில்லை. பல பாண்டியர்கள் கதைகளாலேயே அறியப்படுகின்றனர். ஆயினும் இச்செப்பேடுகளை வெளியிட்ட முதற்பாண்டியப் பேரரசர்களில் ஒருவன் தன் முன்னோனான தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனுக்கே சிறப்புக் கொடுத்திருப்பதைக் காணமுடிகின்றது.

தளவாய்புரச் செப்பேடுகளிலும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் குறிப்பிடப் பெறுகிறான். அவனுடைய முன்னோர் பட்டியல் இச்செப்பேடுகளில் குறிப்பிடப்படுகிறது.

விசையொடு விண்மீனொடு போர்மிக்கெழுந்த கடற்றிரைகள்
சென்றுதன் சேவடிப்பணிய அன்றுநின்ற ஒருவன் பின்
விஞ்சத்தின் விஜ்ரும்பணையும் பெறல் நகுஷன் மதவிலாசமும்
வஞ்சத்தொழில் வாதாவிசீராவியும் மகோததிகளின்
சுருங்காத பெருந்தன்மையும் சுகேதுசுதை சுந்தரதையும்
ஒருங்குமுன்னாள் மடிவித்த சிறுமேனி உயர்தவத்தோன்
மடலவிழ்பூ மலயத்து மாமுனி புரோசிதனாகக்
கடல்கடைந்து அமிர்து கொண்டுங் கயலிணை வடவரை பொறித்தும்
ஹரிஹயன தாரம்பூண்டும் அவன்முடியொடு வளைஉடைத்தும்
விரிகடலை வேலின் மீட்டும் தேவாசுரஞ்செருவென்றும்
அகத்தியனொடு தமிழாய்ந்தும் மிகத்திறனுடை வேந்தழித்தும்
தசவதனன் சார்பாகச் சந்துசெய்தும் தார்த்தராஷ்ட்ரர்
படை முழுதும் களத்தவியப் பாரதத்துப் பகடோட்டியும்
மடைமிகுவேல் வானரத்வஜன் வசுசாப மகல்வித்தும்
அரிச்சந்த்ர னகரழித்தவன் பரிச்சந்தம் பலகவர்ந்தும்
நாற்கடலொரு பகலாடி நாற்கோடி பொன்னியதிநல்கி
நூற்கடலைக் கரைகண்டு நோன்பகடாயிரம் வழங்கியும்
உரம்போந்த திண்டோளரைசுகள் சுரம்போகித் துறக்க மெய்தியும்
பொன்னிமையப் பொருப்பதனில் கன்னிமையில் கயலெழுதியும்
பாயல்மீமிசை நிமிர்ந்து பல்லுண்டி விருப்புற்றும்
காயல்பாய் கடல்போலக் குளம்பலவின் கரை யுயரியும்
மன்னெதிரா வகைவென்று தென்மதுரா புரஞ்செய்தும்
அங்கதனி லருந்தமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ்வளர்த்தும்
ஆலங்கானத்து அமர்வென்று ஞாலங்காவல் நன்கெய்தியும்

ஆரியப்படை கடந்த பாண்டியன் காலத்திலும் அவனுக்குப் பின்வந்த வெற்றிவேற் செழியன் காலத்திலும் ஆட்சி செய்த சேரன் *பதிற்றுப்பத்தின்* ஐந்தாம்பத்தின் தலைவனான கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் என்பதைச் *சிலப்பதிகாரத்திலிருந்து* தெரிந்து கொள்ளலாம். இவன் காலத்தவனாக உறையூரிலிருந்து ஆண்ட சோழன் பெருநற்கிள்ளி ஆவான். இதைச் சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரை கூறுகின்றது. இவர்கள் ஒரு காலக்கட்டத்தவர் ஆவர்.

செழியனும் சேரனும் சோழனும்

சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும் ஒரு காலக்கட்டத்தவர் ஆவர்.

பதிற்றுப்பத்தில் சேரமான் யானைக்கண் சேய்மாந்தரஞ் சேரல் இரும்பொறை இடம் பெறவில்லை. ஆயினும் கிடைக்காத

பத்தாம் பத்தின் தலைவன் இவனே என்பாரும் உளர். இவனே ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன். குறுங்கோழியூர் கிழார் என்பவர் இச் சேரமானைப் பற்றிப் பாடிய மூன்று பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. (புறம்.17,20,22) பதினேழாம் பாடல் குறிப்பில்,

> பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் பிணியிருந்த யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை வலிதிற்போய்க் கட்டில் எய்தினானைக் குறுங்கோழியூர்கிழார் பாடியது

என உள்ளது. இதனால் இச்சேரனுக்கும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனுக்கும் போர்த் தொடர்புள்ளதாகத் தெரிகிறது. இத் தொடர்பு தலையாலங்கானத்துப் போரின் போதா அதன்பின்பா என்பதில் கருத்து வேறுபாடுள்ளது.

> ... மாப்பயம்பின் பொறைபோற்றாது
> நீடுகுழி யகப்பட்ட
> பீடுடைய வெறுழ் முன்பிற்
> கோடுமுற்றிய கொல்களிறு
> நிலைகலங்கக் குழிகொன்று
> கிளைபுகலத் தலைக் கூடியாங்கு
> நீபட்ட வருமுன் பின்
> பெருந்தளர்ச்சி பலர் உவப்பப்
> பிறிது சென்று மலர்தாயத்துப்
> பலர்நாப்பண் மீக்கூறலின்
> உண்டாகிய உயர்மண்ணும்
> சென்றுபட்ட விழுக்கலனும்
> பெறல்கூடும் இவன்நெஞ்சுறப் பெறின் (புறம். 17:1-26)

இப்பாடல் வரிகளுக்கான பழைய உரையாசிரியர் கூறும் குறிப்புகளில் தலையாலங்காநத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சுட்டப்பெறுதலைக் காணலாம்.

> யானை படுக்குங்குழிமேல் பாவின பாவைத் தன்மனச் செருக்கால்பாதுகாவாது ஆழத்தால்நெடியகுழியின்கண்ணே அகப்பட்ட பெருமையை உடைத்தாகிய மிக்க வலியை யுடையகொம்பு முதிர்ந்தகொல்லுங்களிறு அதன் நிலைசரியக் குழியைத் தூர்த்துத் தன்னினம் விரும்பத் தன்னினத்தினிலே சென்று பொருந்தினாற்போல பொறுத்தற்கரிய வலியாற் பகையை மதியாது நீயுற்ற பெரிய தளர்ச்சி நீங்கப் பிறிதொரு சூழ்ச்சியால் போய்ப் பலரும் மகிழப் பரந்த உரிமையையுடைய இடத்தின் நின் சுற்றத்தார் பலர்க்கு

> நடுவே உயர்த்துச் சொல்லப்படுதலால், நீ செழியனால் பிணிப்புண்பதற்கு முன்பு நின்னால் அழிக்கப் பட்டுப் பின்பு தம்மரசுவௌவாது நின்வரவு பார்த்திருந்த அரசர் நமதாய் இவனாற் கொள்ளப்பட்டு உண்டு அடிபட்டுப் போந்த மேம்பட்ட நிலமும் இவன்பால் சென்றுற்ற சீரிய அணிகலமும் கிடைத்தலுண்டாம், இவனது நெஞ்சு நமக்கு உரித்தாகப் பெறினென நினைந்தும், நின்வரவு பார்த்திராது தம்மரசு வௌவிய பகைவர் எடுத்த கொடியையுடைய உயர்ந்த மதிலையும் மிக்க காடும் அகழும் முதலிய காவலையுடைய அகலிய அரணினையும் நான் இனி இழந்து தங்குவேம், இவன் நம்மைவெகுண்டு பார்த்தான் மிகவென நினைந்தும் பகைவேந்தர் ஏவல் செய்யத் தொடங்குதற்குக் காரணமாகிய நினது வயுடனே புகழைவாழ்த்திக் காண்பேனாக வந்தேன்

இப் பகுதியில், *செழியனால் பிணிப்புண்டதற்கு முன்பு* இருந்த நிலையும், செழியனின் பிணிப்பிலிருந்து படுகுழியில் வீழ்ந்த யானை தானே தப்பித் தன் நிரையுடன் சேர்ந்தது போன்ற சேரனின் செயலும் கூறப்பெறுகின்றன.

சேரமன்னர் வரலாறு (2002) என்ற நூலில் ஔவை துரைசாமிபிள்ளை பி.ஆர். அரங்கநாத புஞ்சா என்பவரை மேற்கோள்காட்டி குட்டநாட்டு முதுவர்கள் கூறும் கதை ஒன்றை எழுதியுள்ளார். தலையாலங்கானத்துப் போரில் சேரர் குடித் தலைவன் ஒருவன் பாண்டியனோடு போரிட்டு அழிந்த செய்தியைக் கேட்ட சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை பாண்டியனுடன் ஓரிடத்தில் பொருதான் என்றும் பாண்டியன் சேரனைத் தந்திரமாகப் பிடித்துச் சிறையிலடைத்தான் என்றும் சேரனுடைய ஒற்றர்களால் அச் சிறைக்கூடத்திலிருந்து அவன் தப்பி, சிறைக் கோட்டத்தைத் தன் வீரர்களால் எரித்துத் தன் நாட்டுப் பகுதியான குட்டநாட்டை அடைந்து பின் தன் தலைநகர் அடைந்தான் என்றும் பாண்டியன் துரத்தி வந்தும் பயனில்லை என்றும் எழுதியுள்ளார்.

இச் சேரமானைப் பற்றிப் பொருந்தில் இளங்கீரனார் என்பவர் பாடிய ஒருபாடல் *புறநானூற்றில்* 53 ஆம் பாடலாக இடம்பெறுகின்றது. அப்பாடலில், விளங்கில் என்ற பகுதிக்குப் பகைவரால் வந்த கெடுதலைத் தீர்த்தவன் இச்சேரமான் என்கிறார் இப்புலவர். மேலும் ‘விரைந்து பல்பொருள் அடங்கும் பாடல்களைப் புனையும் செவ்விய நாவினையும் மிகுந்த அறிவையும் புகழையும் உடைய கபிலன் இருந்திருப்பானாயின்

மிக்க நன்றாயிருக்கும் என இச்சேரன் வருந்தியதாகவும் அந்த இடத்தைத் தான் நிரப்ப வந்ததாகவும் பாடியுள்ளார்.

கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடிய பத்துப்பாடல்கள் *பதிற்றுப்பத்தில்* ஏழாம் பத்தாக இடம் பெறுகின்றன. ஆதலால் யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை செல்வக்கடுங்கோ வாழியாதனுக்குப் பிற்காலத்தில் ஆட்சிக்கு வந்த சேரனாக அறியப் பெறுகின்றான்.

இச் சேரன் தன் இறுதிக்காலத்தில் நோயுற்றிருந்ததைக் குறுங்கோழியூர் கிழார் பாடிய, "நீ துஞ்சாய் மாறே" (புறம். 22:38) என்பதன் உரையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அவ் உரை வருமாறு:

> எங்கோவே! நீ துஞ்சாதபடியாலே இரும்பொறை யோம்பிய நாடு புத்தேளுலகத்தற்றெனப் பிறர் சொல்லக்கேட்டு நிற்பாடிய அலங்கு செந்நாப் பிறரிசை நுவலாதபடி வந்து இனிது கண்டேன்; நினது படைப்பொடு வாழ்வாயாக..."

இதிலிருந்து, இச்சேரமான் தன் இறுதி வாழ்நாளில் நோயுற்றிருந்ததாக அறிய முடிகின்றது.

கூடலூர் கிழார் என்பவர் இச்சேரமானைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்று *புறநானூற்றில்* (229) இடம் பெற்றுள்ளது. அதில் உள்ள குறிப்பு வருமாறு:

> கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இன்னநாளில் துஞ்சுமென அஞ்சி, அவன் துஞ்சிய விடத்துக் கூடலூர் கிழார் பாடியது.

இப்பாடலில் வானியலை ஆராய்ந்து ஒரு விண்மீன் விழுந்ததைக் கண்டு அரசனுக்கு இறப்பு எய்துமென அஞ்சி அவன் நோயிலனாக இருக்கவேண்டு மெனவிரும்பி அவ்வரசனைப் பிற பரிசிலருடன் ஏழாம் நாள் காண வந்தபோது அவன் இறந்திருப்பதைக் கண்டு வருந்திப் பாடியதாக உள்ளது. இதன் மூலம் இச் சேரமான் நோயுற்று இறந்ததைக் காணமுடிகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனால் சேரமான் யானைக்கண்சேய் பிடிக்கப்பட்டான் என்பது *புறநானூறு* 17ஆம் பாடலின் பாடல்குறிப்பிலிருந்தும் அதன் பழைய உரையிலிருந்தும் தான் தெரியவருகின்றன.

இப்பாண்டியனால் வெல்லப்பட்ட "இருபெருவேந்தர்" (மதுரைக் காஞ்சி, அடி 55) என்பதில் சேரமாமன்னன் ஒருவனும் அடங்குகிறான்.

மேலும், *புறநானூறு 19ஆம் பாடலில் குடபுலவியனாரால் குறிப்பிடப் பெறும் "வெருவரு பறந்தலை எழுவர் நல்வலங்கடந்தோய்" (புறம்.19:16-17) என்பதில் வரும் எழுவரில் சேரனும் ஒருவன் ஆவான். இவ் அடிகளுக்கு உரையாக "அஞ்சத்தக்க போர்க்களத்தின் கண்ணே இருபெருவேந்தரும் ஐம்பெரு வேளிருமாகிய எழுவரது நல்ல வலியை வென்றோய்" எனப் பழைய உரையாசிரியர் கூற்றிலிருந்து இருபெருவேந்தர்களில் சேரனும் அடங்குகிறான். இப் பாண்டியனே பாடிய பாடலில் (புறம். 72:7) வரும் "சினங்கெழுவேந்தர்" என்பதிலிருந்தும் போருக்கு வந்த வேந்தர்களில் சேரனும் உள்ளான் என அறியலாம்.*

இப் பாண்டியனைப் பாடிய இடைக்குன்றூர் கிழாரும் (புறம். 76:12-1) "புனை கழல் எழுவர் நல்வலமடங்க ஒருதானாகிப் பொருதுகளத்தடலே" என்கிறார். இதற்குரிய பழைய உரையில் "இருபெருவேந்தரும் ஐம்பெருவேளிரு மாகிய ஏழரசருடைய நல்லவென்றி அடங்கத் தான் ஒருவனாய் நின்று பொருது களத்தின்கண்கொல்லுதல்" என்கிறார். எழுவரையும் பாண்டியன் கொன்றான் எனப் பழைய உரையாசிரியர் கூறுகின்றார் (அகநானூற்றில் (36:13-23).

கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத்து அகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரறிநறவின் எருமையூரன்
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநன் என்று
எழுவர் நல்வலம் அடங்க ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்று களம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே

*என மதுரை நக்கீரர் பாடிய பாடலில் எழுவரையும் பாண்டியன் கொன்றதாகவே கூறப்பட்டிருக்கிறது. **அகநானூறு** 175ஆம் பாடலில் (175:10-13) ஆலம்பேரி சாத்தனாரால்*

காலிய நெடுந்தேர்க் கைவண் செழியன்
ஆலங் கானத்து அமர்கடந்துயர்த்த
வேலினும் பல்லூழ் மின்னி

என்பதில் பாண்டியன் போரில் வெற்றிபெற்றதாகவே கூறப்படுகிறது. அகநானூறு 209 ஆம் பாடலிலும் (209:3-6) கல்லாடனாரால்

பொன்னணி நெடுந்தேர்த் தென்னர் கோமான்
எழுவுறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங்கானத்து ஆர்ப்பினும் பெரிதுஎன

அவ்வெழுவரும் பாண்டியனின் கீழ் அடங்கிக் கிடந்ததாகப் பாடப்பெற்றுள்ளது.

வரலாற்றாசிரியர் சதாசிவபண்டாரத்தார் பாண்டியனைப் பற்றிக் கூறுவதாவது.

> வஞ்சினங் கூறிப் போருக்கெழுந்து உழிஞை சூடிப் போர் புரியத்தொடங்கினன். இவன் மிக்க இளைஞனாயினும் , சிறிதும் அஞ்சாமல் கடும்போர் புரிந்து அன்னவர் எழுவரும் புறங்காட்டி ஓடச் செய்தனன். தோல்வியுற்ற எழுவரும் ஓடிச்சென்று சோழ நாட்டில் புகும்போது நெடுஞ்செழியன் அவர்களை விடாது பின்தொடர்ந்து சென்று தலையாலங்கானத்து மறித்துப் பெரும்போர் நடத்தி வாகை மிலைந்தனன். இவன், இதனோடு நில்லாமற் பகைஞர்களை அவர்களுடைய உறையூர், வஞ்சி முதலான நகரங்கள் வரையில் போர்ப்பறை யொலிப்பத் துரத்திச் சென்று அன்னோரின் உரிமை மகளிர் நாணமுற்று உயிர்துடிக்குமாறு அவர்களைக் கொன்றனன்

என்கிறார். சேரன் இறந்தான் எனப் *புறநானூறு* 78ஆம் பாடலை இடைக்குன்றூர் கிழாரே பாடியுள்ளார். இப்பாடலில் படை வீரர்களின் மகளிர் நாணி இறந்தனர் என்று தெரிகிறது. பின்பு அவ்வவ் ஊர்களுக்குச் சென்று வீரர்களைக் கொன்றான் என்றும் தெரிகிறது.

. . . சிலைத் தெழுந்து
விழுமியம் பெரியம் யாமே நம்மில்
பொருநனும் இளையன் கொண்டியும் பெரிதுஎன
எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டவர் அடுதலும் ஒல்லால் ஆண்டுஅவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூர் ஆங்கண்
என்கிணை கறங்கச் சென்று ஆண்டு அட்டனனே

என்கிறார்.

இப்பாடலின் பழைய உரையில்,

> ஆர்த்து எழுந்திருந்து, 'சிறப்புடையேம், படையால் பெரியேம் யாங்கள், நம்மில் பொருவானும் இளையன், கொள்ளையும் பெரிது' என இகழ்ந்து வந்த நிலையில்லாத வீரர் புற்கென்ற கண்ணராய் நின்றவிடத்து நில்லாது புறத்தே போக அவரை இப்போர்க் களத்தின் கண்ணே கொன்றிடுதலும் உடம்படானாய் அவ்விடத்து அவர் மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய மகளிர் நாணினராய் இறந்துபடத் தந்தையருடையவாகிய தங்களூரிடத்துத் தெளிந்த போர்ப்பறையொலிப்பச் சென்று அவ்விடத்தே கொன்றான்

எனக் கூறப்பட்டுள்ளது. உறையூருக்கும் கருவூருக்கும் அப் பகைவர்களை விரட்டிச் சென்று கொன்றான் என்றும் இதிலிருந்து அறியமுடிகின்றது.

வரலாற்றாசிரியர் கே.வி. இராமனும் பண்டாரத்தார் போலவே எழுதியுள்ளார்.

> இவன் இளைஞனாயினும் சிறிதும் அஞ்சாமல் படையுடன் சென்று எதிரிகளுடன் பொருது அவர்களைப் புறமுதுகிட்டோடும்படி செய்தான். இப்பெரும் போர் தஞ்சைமாவட்டத்திலுள்ள தலையாலங்கானம் என்னும் ஊரில் முடிவுற்றது. இப்போர்க் களத்தில் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை பாண்டியர் களால் சிறைபிடிக்கப்பட்டான். இவ் வெற்றியின் விளைவாகத் தமிழகப் பகுதியில் பெருவேந்தனாக மதிக்கப்பட்டான். இப்போரைத் தொடர்ந்து நடத்திச் சென்றான். பகைவரை உறையூர் வஞ்சி முதலிய நகரங்கள் வரை துரத்திச் சென்றான். (ப.46)

சின்னமனூர் செப்பேடுகளில்

> தலையாலங்கானத்திற் தன்னொக்கு மிருவேந்தரைக்
> கொலைவாளில் தலைதுமித்து

என்று கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டிருத்தலையும் காணலாம். பாண்டியன் தரப்புச் சான்றுகள் சேரன் ஒருவன் கொல்லப் பட்டான் என்றும், சேரன் தரப்புப் பாடல்கள் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை பாண்டியனால் பிடிக்கப்பெற்றுப் பின்தப்பிச் சென்று அரசிருந்தான் என்றும் பின்பு நோயுற்றான் என்றும் கூறுகின்றன. இதிலிருந்து இரு போர்கள் நடந்திருப்பதாக அறியமுடிகின்றது. முதல் போர் தலையாலங்கானத்துப் போர்.

அதில் ஒரு சேரன் இறந்தான். அவன் பெயர் தெரியவில்லை. மற்றொரு போரில் சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் பாண்டியனால் சிறையில் அடைக்கப்பட்டுத் தப்பினான் என்றும் தெரியவருகின்றது. இச் சேரனைத் துரத்திச் சென்றபோதே குட்டநாட்டிலிருந்த பல்குட்டுவர்களைப் பாண்டியன் வென்றான் (மதுரைக். 105) என்றும் தெரிய வருகின்றது.

போரில் கொல்லப்பட்டவன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்றும் சோழன் என்பவன் இராசசூயம் வேட்டபெரு நற்கிள்ளி என்றும் சதாசிவ பண்டாரத்தார் கூறி வரலாற்றுப்பிழை செய்துள்ளதாகத் தெரிகிறது.

> சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்றும் வேளிர் ஐவரும் இந்நெடுஞ்செழியனை இளைஞன் என்று இகழ்ந்து கூறிப் பாண்டி நாட்டைக் கைப்பற்றக் கருதி மதுரை நகரை முற்றுகை யிட்டார்கள் (சதாசிவ பண்டாரத்தார், ப.23)

ஆனால் *புறநானூறு* 127ஆம் பாடல் சேரமான் மாந்தரஞ்சேரல் என்ற மற்றொரு சேரனும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் தம்முள் போரிட்டார்கள் என்று கூறுகின்றது. இப்பாட்டின் பாடல்குறிப்பு வருமாறு:

> சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் துப்பாகிய தேர்வண்மலையனை வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடியது

என்பதில் இவ்விருபெருவேந்தரும் பொருதசெய்தி உள்ளது. தேர்வண்மலையனைப் பாராட்டிப்பாடும் இப்பாடலில், அவன் அப்போரை விலக்கி அவ் இருவர்க்கும் நல்லது செய்தான் எனப் பாராட்டப்படுகிறான்.

நள்ளாதார் மிடல்சாய்த்த
வல்லாளரின் மகிழிருக்கையே
. . . குன்றத்தன்ன களிறு பெயரக்
கடந்தட்டு வென்றோனும் நிற்கூறும்மே
வெலீஇயோனிவனெனக்
கழலணிப்பொலிந்த சேவடி நிலங்கவர்
விரைந்துவந்து சமந்தாங்கிய
வல்வேன் மலையன் அல்லனாயின்

நல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்கெனத்
தோற்றோன் தானும் நிற்கூறும்மே
தொலைஇயோ னிவன் என
ஒரு நீயாயினை பெரும. . .

இப்பாட்டின் பழைய உரையாவது:

> மலைபோலும் யானை படஎதிர்நின்று கொன்று வென்றவனும் நம்மை வெல்வித்தோன் இவனென நின்னையே மகிழ்ந்து சொல்லும்; வீரக் கழலாகிய அணியாற் சிறந்த செய்ய அடியாலே போர்க் களத்தைக் கைக் கொள்ளவேண்டி விரைந்துவந்து போரைத் தடுத்த வலிய வேலினையுடைய மலையன் அல்லனாயின் நல்லபோரை வெல்லுதல் நமக்கு எளிதெனத் தோற்றவனும் நம்மைத் தொலைவித்தோன் இவனென நின்னையே புகழ்ந்து சொல்லும்; ஆதலால், நீ ஒருவனாயினாய், பெரும!

சோழனுக்கும் சேரனுக்கும் போர் ஏற்படாமல் விலக்கப்பட்டதாக இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

வெற்றிவேற்செழியன் காலத்தில் உறையூரில் பத்தினிக் கோட்டம் அமைத்தவன் சோழன் பெருநற்கிள்ளி என்பது *சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரையின்மூலம்* தெரியவருகின்றது. இப் பெருநற் கிள்ளிக்குப் பின்பு இராசகுயம் வேட்ட பெருநற் கிள்ளி வாழ்ந்தவனாவான். இவனைப் பாண்டரங்கண்ணனார் பாடிய பாடல் *புறநானூற்றில்* (16) இடம்பெற்றுள்ளது. ஔவையார் பாடியுள்ள பாடலும் (புறம்.367) உலோச்சானார் பாடலும் (புறம். 377) *புறநானூற்றில்* காணப்படுகின்றன. ஔவையார் பாடிய *நற்றிணைப்* பாடலிலும் (390) இவன் குறிப்பிடப்பெறுகிறான்.

ஔவையார் பாடிய பாடலின் (புறம். 367) பாடற்குறிப்பில்

> சேரமான் மாரிவெண்கோவும் பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் ஒருங்கிருந்தாரை ஔவையார் பாடியது

என்றுள்ளது. இவ் இருப்பு சோழன் இராசசூயம் செய்யும்போது எனக் கொள்வது தவறாகாது. அவ்வாறெனில், தலையாலங் கானத்துப் போருக்குப் பின் நடந்த நிகழ்ச்சியாக இவ் இருப்பைக் கருதலாம்.

யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரலுக்குப் பின்பு வந்தவன் எனக் கருதப்பெறும் மாந்தரஞ்சேரல் இரும்பொறையுடன்

போருக்குச் சென்றவனான இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி சேரநாட்டில் அவன் பின்பு வந்த சேரன் மாரி வெண்கோவுடனும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனுக்குப்பின் வந்த பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியுடனும் ஒருங்கிருந்ததால் இச்சோழன் மிக நீண்டநாள் ஆட்சி செய்தவனாகக் கருதப்படுகிறான்.

பாண்டியன் மேல் பகை எவ்வாறு ஏற்பட்டது?

சேரனுக்கும் சோழனுக்கும் மற்றும் ஐந்து குறுநில மன்னர்க்கும் பாண்டியன் மேல் பகை எவ்வாறு ஏற்பட்டது என்பதற்குப் பாண்டியன் மற்றும் பகைவரின் பின்புலங்களை ஆராயவேண்டும். இப் பாண்டியனின் தந்தை யார்? தாயாதிகள் யார் யார்? எனத் தெரிந்து கொள்வதற்குத் தக்க சான்றுகள் இல்லை. இளமைக் காலத்திலே இவன் அரசனாக வந்ததற்குக் காரணம் இவனுடைய தந்தையின் அகாலமரணமாகலாம். இவன் அரசனாவதற்கே பாண்டி நாட்டுச் சூழல் அமைந்திருந்தது. இவனுக்குப் போட்டியாக எவரும் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருக்க பெரிய வேந்தரான சேரனும் சோழனும், ஐந்து குறுநில மன்னர்களும் இப்பாண்டியனின் மேல் ஏன் பகைகொண்டனர்?

இப் பெருவேந்தர்களின் பெயர்கள் என்ன என்ன என்ற குறிப்பு எதுவும் இல்லை. கருவூரைச் சேர்ந்தவன் சேரன் எனவும் உறையூரைச் சேர்ந்தவன் சோழன் எனவும் தெரியவருகின்றது. வேறு ஐவர் பெயர்களும் அறியப்படுகின்றன. இவர்கள் எழுவரும் மதுரையை முற்றுகையிட்டிருந்ததாகவே கருதலாம். பாண்டியன் மேல் ஏற்பட்ட பகைக்குக் காரணம் எதுவும் இவர்கள் தரப்பிலிருந்து தெரியவில்லை.

பாண்டியனின் வஞ்சினப் பாடல் ஒன்று **புறநானூற்றில்** உள்ளது. அதில் (புறம்72) கூறியிருக்கும் வஞ்சினத்தைப் பார்த்தால் பகைக்கான காரணம் தெரிந்துவிடும். சேரனும் சோழனும் மற்றும் குறுநில வேந்தர் ஐவரும் சேர்ந்து தம் இடங்களில் இருந்துகொண்டு இப் பாண்டியனைப் பற்றி ஏளனம் செய்தனர். 'சிறுவன்' என எள்ளி நகையாடியுள்ளனர். ''இளையன் இவன் என உளையக் கூறி'' யுள்ளனர்(புறம். 72:2). தம்மிடம் பெரிய யானைப்படையும் தேர்ப்படையும் குதிரைப்படையும் வீரமிகுந்த காலாட்படையுமாகிய நால்வகைப் படைகள் உள்ளன எனக் கர்வத்துடன் ''சிறு சொல் சொல்லி'' யுள்ளனர். (புறம். 72: 3-7). விழுமியம் பெரியம் யாமே! நம்மில் பொருநனும் இளையன்''

எனப் பலப்படப் பேசியுள்ளனர் (புறம். 78: 5-6) மேலும் ''பாண்டி நாட்டில் பெரிய கொள்ளை'' உள்ளது என்றும் (புறம். 78:6) ''எள்ளி''யுள்ளனர் (புறம். 78:7). இவ்வாறு பெருமைப்பட்டுக் கொண்ட பகைவர்களின் கருத்தைப் பாண்டியன் அறிந்தான்.

முன்பு பூதபாண்டியன் என்ற தன் முன்னோனை வெல்ல வேந்தர் சிலர் இதுபோன்று கூட்டாகப் போருக்கு வந்தபோது அவர்களை வெல்லுவேன் என வஞ்சினம் கூறி அவ்வாறே ஒல்லையூரில் வென்று 'ஒல்லையூர் தந்த பூதபாண்டியன் (புறம். 71) எனப் பெயர் பெற்ற பாண்டியனின் வஞ்சினப் பாடலையும் படித்திருந்தான் இப்பாண்டியன். அவன் கூறிய வஞ்சினமாகிய மொழிகளை அறிந்திருந்தான். 'போரில் தோற்றுவிட்டால் தன் தேவியைப் பார்க்க மாட்டேன் என்றும், தோற்றால் செங்கோல் இல்லாத கொடுங்கோல் ஆட்சி செய்தவன் ஆவேன் என்றும், புதுவருவாயையுடைய மையல் ஊர்க் கோமான் மாவன், எயிலூர் ஆந்தை, அந்துவஞ் சாத்தன், ஆதனழிசி, இயக்கன் எனும் தன் நண்பர்களும் குறுநில மன்னர்களுமானவர்களின் நட்பைப் பெறாதவேனாகுக'' எனவும் (புறம்.71) வஞ்சினம் கூறியதையும் இப்பாண்டியன் அறிந்திருந்தான்.

அதைப் போன்ற சூழ்நிலை இப்போது பாண்டிய நாட்டில் மீண்டும் ஏற்பட்டு விட்டது. பகைவர்கள் பாண்டியனை எள்ளி நகையாடியுள்ளனர். கொள்ளையிடவும் கருதியுள்ளனர். மதுரை நகரை முற்றுகையிடவும் செய்துள்ளனர். இத் தருணத்தில் இளைஞனாயிருந்த பாண்டியனும் வஞ்சினம் உரைக்கின்றான். அவர்களை வெல்வேன் என்கிறான். அவ்வாறு செய்யவில்லை என்றால் தன் குடிகள் தன்னைக் கொடுங்கோலன் எனக் கூறட்டும் மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்டுள்ள தன் தமிழ் அவைப் புலவர்கள் தன்னைப் பாடாது ஒழியட்டும் எனக் கூறினான். வஞ்சினம் கூறிப் போருக்குப் புறப்பட்டான். இவ்வஞ்சினப் பாடல் (புறம். 72) வருமாறு.

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்று
உறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை

அருஞ் சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடிய னெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையான் உறவே.

என வஞ்சினம் உரைத்தான்.

பாண்டியனின் தமிழ் அவையில் இடைக்குன்றூர் கிழார் என்பவரும் இருந்தார். அவர் இப்பாண்டியனின் சிறுவயதுத் தோற்றத்தை அறிந்தவர். போருக்குப் புறப்பட்டுச் சென்ற இவனைப் பாடவேண்டுமென்று நினைத்தார். ஒரு பாடலில் அவன் புறப்பட்டுச் சென்ற விதத்தைப் பாடினார். அதற்குள் போர் தொடங்கி விட்டது. பகைவர்களில் பலரை அவன் ஒரு பகற்பொழுதில் மாய்த்து விட்டான். அதையும் சேர்த்துப் பாடினார்.

வஞ்சினம் கூறிய பாண்டியன் போருக்குப் புறப்பட்டான். இது அவனது கன்னிப்போர். மதுரை மூதூரில் தன் கோட்டையை முற்றுகையிட்டுள்ள பகைவரை முறியடிக்கும் போர். அவன் இளைஞன். பால்மணம் மாறியுள்ள பருவத்தினன். போருக்குச் செல்வதற்கு முன்னால் பொய்கையில் நீராடினான். சோறுண்டான். போர் உடைகளைத் தரித்தான். வேம்பின் தளிரைச் சூடினான். போர்க்கோலம் பூண்டான். அக்கோலத்தில், போர் முரசும் அடிக்கப்படும் பின்னணியில் நடந்து வந்தான். அந்நடை களிறு போல இருந்தது. பெருமிதம் கலந்த நடையாயிருந்தது. பக்குவமுற்றிருந்த பாண்டியன் பகைவர் பலராயினும் பெருமிதத்தோடு இருந்தான். போர் செய்து பகைவர் சிலரை வீழ்த்தினான். பகற்பொழுதில் தொடங்கிப் பகற்பொழுதிலே முடிவடையும் அறப்போரில் அவன் கொல்லாதிருந்த பகைவர் குறைவாகவே இருந்தனர். அந்நாளையப் போர் முடிவடைய விருக்கும் நேரமும் குறைவாகவே இருந்தது. கூடவே சென்றிருந்த புலவர் இடைக்குன்றூர் கிழார் இதை அறிந்தார். பகைவர்களில் இறந்தவர் போக எஞ்சுபவர்களும் இருப்பார் போலும் என நெட்டுயிர்த்தார். அதனை ஒரு பாடலாக வெளிப்படுத்தினார்.

மூதூர் வாயில் பனிக்கய மண்ணி
மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து
தெண்கிணை முன்னர்க் களிற்றி னியலி
வெம்போர்ச் செழியனும் வந்தனன் எதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே
எஞ்சுவர் கொல்லோ பகறவச் சிறிதே. (புறம். 79)

இப்பாடலின் உரை வருமாறு:

> தனது பழைய நகரிவாயிற்கட் குளிர்ந்த பொய்கையின் கண்ணே மூழ்கி மன்றத் திடத்து வேம்பினது ஒள்ளிய தளிரைச்சூடித்தெளிந்த ஓசையையுடைய பறை முன்னாகக் களிறு போலப் பெருமிதத்தோடு நடந்து வெய்ய போரையுடைய நெடுஞ்செழியனும் வந்தான் அவனோடு பகைத்த நிலையில்லாத மறவர் பலரே; பகற்பொழுது மிகச் சிறிதாதலால், அவருட் சிலர் படாதொழியவும் கூடும் என்பது பழைய உரை. இப்படிப் படாதொழிந்த பகைவீரர்களை விரட்டிச் சென்ற நிகழ்ச்சி பின்னால் வருகின்றது.

முற்றுகையை விலக்கிய பாண்டியன் வேம்பின் தளிரொடு இப்பொழுது உழிஞைக் கொடியையும் சூடியிருந்தான். பகைவர் பலரை வீழ்த்திக் கன்னிப் போரில் வெற்றிகண்டான். அப்பகைவரை விரட்டித் தாக்கும் நிலையில் பாண்டியன் விளங்கினான். அவன் மதுரையில் போருக்குப் புறப்பட்டுச் சென்றதை மட்டுமே விரைவாகப் பாடிவிட்ட இடைக்குன்றூர் கிழார் இப்போதுள்ள பாண்டியன் தோற்றத்தையும் அவன் சிறுவனாயிருந்தபோது தன்னிடம் தமிழ் படித்த தோற்றத்தையும் ஒப்பிட்டுப் பாட விரும்பினார்.

ஒன்றை நீக்கி ஒன்றைக் கொண்ட பருவத்தினனாகப் பாண்டியன் சித்திரிக்கப்பட்டுள்ளான். காலில் கிண்கிணிக்குப் பதிலாக வீரக்கழல்; தலையில் குடுமி வெட்டப் பட்டிருந்தது; அத்தலையில் வேம்பின் தளிரும் உழிஞைக் கொடியும் சூடியிருந்தான். சிறுவனாயிருந்த போது அணிந்த கைவளைகளை நீக்கிவிட்டான்; பதிலாக வில்லைப் பிடித்திருந்தான். தேரின் மேல் ஏறிவிட்டிருந்தான். ஆயினும் ஐம்படைத் தாலியைத் தன் மார்பிலிருந்து நீக்கவில்லை. பால் சோற்றை நீக்கிச் சோற்றை உண்ணத் தொடங்கிவிட்டான். புதிதாக வந்த அதிகமான எதிரிகளின் வீரர்களைக் கண்டு வியக்கவும் இல்லை. எதிரிகள் என இகழவும் இல்லை. அவரைக் கொன்றதற்கு மகிழவும் இல்லை; பெருமைப்படவும் இல்லை. சிறுவயதிலேயே பக்குவம் பெற்றவனாகத் தோற்றம் பெற்றுள்ளான்.

கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்க அவன் கண்ணி தார் பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே பால்விட்டு
அயினிம் இன்றுஅயின் றனனே வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
கவிழ்ந்து நிலம் சேர வட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்றும் அதனினுமிலனே

இதற்குரிய பழைய உரை வருமாறு:

> *சதங்கை வாங்கப்பட்ட காலிலே ஒள்ளிய வீரக் கழலினைச் செறித்துக் குடுமியொழிக்கப்பட்ட சென்னிக் கண்ணே வேம்பினது ஒள்ளிய தளிரை நெடிய கொடியாகிய உழிஞைக்கொடியொடு சூடிக் குறிய வளைகளை யொழிக்கப்பட்ட கையின்கண்ணே வில்லைப் பிடித்து நெடிய தேரினது மொட்டுப் பொலிவு பெற நின்றவன் யாரோதான்? யாரேயாயினும் அவன் கண்ணி வாழ்வதாக. தாரையணிந்து ஐம்படைத் தாலி கழித்ததும் இலன். பாலை யொழித்து உணவும் இன்றுண்டான். முறை முறையாக வெகுண்டு மேல் வந்த புதிய வீரரை மதித்ததும் அவமதித்ததும் இலன். அவரை இறுகப் பிடித்துப் பரந்த ஆகாயத்தின்கண்ணே ஒலியெழக் கவிழ்ந்து உடலம் நிலத்தின் கண்ணே பொருந்தக் கொன்றதற்கு மகிழ்ந்ததுவும் இவ்வாறு செய்தேமென்று தன்னை மிகுத்ததுவும் அதனினும் இலன்''.*

பாண்டியன் நெடுஞ்செழியனுடைய இளமைத் தோற்றத்தையும் முதல் வெற்றியையும் நேரில் கண்ட புலவர் இடைக்குன்றூர் கிழார், மேலும் மேலும் அவனைப் பாராட்ட நினைத்தார். அவன் அடைந்த வெற்றியை ஒரு பாடலில் சொல்லியது அவருக்கு நிறைவில்லை. நேருக்கு நேர் இரு அரசர்கள் போர் புரிதல் இயல்பு. அவர்களுள் ஒருவனுக்கு வெற்றி கிடைக்கும்; ஒருவனுக்குத் தோல்வி கிடைக்கும். ஆனால் பாண்டியனோ ஒருவனே நின்று எழுவரை வென்றுள்ளான் என்பதைப் பற்றி மேலும் மேலும் பாடவேண்டும் போலிருந்தது அப்புலவர்க்கு. மதுரையினின்றும் நீங்கிப் போர் நடந்து

கொண்டிருந்த தலையாலங்கானத்திற்குப் பின்தொடர்ந்து சென்றார்.

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்றுஇவ் வுலகத் தியற்கை
இன்றி னூங்கோ கேளலந் திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை யொண்டளிர்
நெடுங் கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
ஒலியன் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின்று தெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும் பூண்செழியன்
பீடுஞ் செம்மலும் அறியார் கூடிப்
பொருது மென்று தன்றலை வந்த
புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே (புறம். 76)

கைகளில் வளைகளை நீக்கியிருந்த பாண்டியன் இப்போது பசும்பொன்னால் செய்யப்பெற்ற பூணை அணிந்திருந்ததைப் புலவர் பார்த்தார். அதனால் அவனைப் ''பசும்பூண் செழியன்'' என்றார். அவன் எழுவரையும் வெற்றி பெற்றதால் ''நிலந்தரு திருவில் நெடியோன்'' என்பதுபோல் ''நாடுகெழு திருவில் பசும்பூண் செழியன்'' என்று அழைக்கின்றார். மதுரையில் வேம்பின் தளிரைச் சூடிக் கன்னிப் போர் செய்த பாண்டியன், இருபெருவேந்தர் மற்றும் வேளிர் ஐவரின் முற்றுகையை நீக்கி, அவர்களின் வீரர்கள் பலரைக் கொன்றான். அப்பகைவரின் மதிலை வளைத்துப் போர் செய்ய அவர்களை விரட்டிச் சென்றான். ஆதலால் உழிஞையைச் சூடிச் சென்றான். புறநானூற்றின் 77 ஆம் பாடலில் வம்ப வீரரைக் கொன்றான் என்று கூறிய புலவர் மேற்சுட்டிய பாடலில் இருபெரு வேந்தரையும் ஐந்து வேளிரையும் கொன்றதாகவே கூறுகின்றார். பாண்டியனின் வெற்றியின் அடுத்த நிலையில் இப்பாடல் எழுந்துள்ளது.

இளையவனாய் இருந்த பாண்டியன் இப்போர்க் காலக் கட்டத்தில் பசும்பூண் அணியும் பாண்டியனாகி விட்டிருந்தான். மேலும் பகைவரை வென்றதால் தலையாலங்கானம் தொட்டடுத்த அவர்களுடைய நாட்டுப் பகுதிகளையும் பிடித்துக் கொண்டான். ஆதலால் ''நாடு கெழு திருவில்'' எனப் பாடியுள்ளார்.

இடைக்குன்றூர் கிழாருக்கு நிறைவு அப்போதும் ஏற்படவில்லை. மதுரை முற்றுகையை நீக்கிய பாண்டியன்

பகைவரை விரட்டித் தலையாலங்கானத்தில் அவர் பகையை அறுத்தான். மிஞ்சிய வீரரைக் கொன்றான். எழுவர் அரசர்களைக் கொன்றான். எஞ்சியிருந்த வீரர்களை அவரவர்கள் ஊர்களுக்கே விரட்டிச் சென்றுகொன்றான் என்று பாடுகின்றார். இப் பாடலுக்கு உரை கூறிய பழைய உரையாசிரியரோ சோழனுடைய உறையூருக்கும் சேரனுடைய கருவூருக்கும் இப்பாண்டியன் சென்றான் என்கிறார்.

வணங்குதொடைப் பொலிந்த வலிகெழு நோன்றாள்
அணங்கருங் கடுந்திற லென்னை முணங்குநிமிர்ந்
தளைச் செறி யுழுவை யிரைக்குவந் தன்ன
மலைப்பரு மகல மதியார் சிலைத் தெழுந்து
விழுமியம் பெரியம் யாமே நம்மில்
பொருநனும் இளையன் கொண்டியும் பெரிது என
எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டவர் அடுதலும் ஒல்லான் ஆண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூர் ஆங்கண்
தெண்கிணை கறங்கச் சென்றான் ஆண்டு அட்டனனே (புறம்.78)

பாண்டியன் இளைஞனாயிருக்கிறான்; நாமோ படை பலத்தோடு உள்ளோம். அதனால் அவன் நாட்டை வென்று பெரிதாகக் கொள்ளையிடவும் செய்யலாம்

என்று எண்ணி மதுரையை முற்றுகை இட்ட பகை வீரர்களை முதலில் முறியடித்துப் பின் விரட்டிச் சென்று, தலையாலங் கானத்தில் சிலரைக் கொன்று, பின்வாங்கி ஓடியவர்களை அவரவர்கள் ஊருக்கே சென்று, அவ்வீரர்களின் மனைவியர் அவர்களின் கோழைச் செயலுக்கு நாணி இறந்துபோன பின்னர் அவ்வீரர்களைக் கொன்றான்.

தலையாலங்கானத்துப் போர் ஒரு நாளையப் போர் எனலாம். ஒரு பகல் பொழுதில் நடந்த போர் என்று கருதலாம். அப்போர் அந்நாளுடன் நின்று விடவில்லை. உறையூருக்கும் கருவூருக்கும் தொடர்ந்து சென்று நடைபெற்றது.

குறுநிலமன்னர் ஐவரில் திதியன்

திதியன் சேரனுடனும் சோழனுடனும் சேர்ந்து வந்த ஐவர்களில் திதியன் என்பவனே முதலில் கூறப்படுகின்றான்.

'சினங்கெழு' திதியன் எனப் பெயரடை பெற்றுள்ளான். (அகம். 36:15) இத் திதியனுக்கு எதிரியாகப் பாண்டியனுடன் அணி சேர்ந்து கொண்டவர்கள் கோசரும் ஆவர் என்பதை *மதுரைக்காஞ்சியின்* 773 ஆம் அடியின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. அதில் அவர்கள் "கடந்தடு வாய்வாள் இளம்பல்கோசர்" எனப்படுகின்றனர். இக்கோசர்க்கும் திதியனின் முன்னோர்க்கும் பகை இருந்து கொண்டிருந்தது. கோசர் பாண்டியனுடன் சேர்ந்ததால் எதிரணியில் திதியனும் இடம்பெற்றான்.

கோசர்களுக்கும் திதியனுக்கும் பகை இருந்ததை அன்னிமிஞிலியின் வரலாற்றால் அறியலாம். **அகநானூற்றில்** 196, 262ஆம் பாடல்களைப் பரணர் பாடியுள்ளார். தன் "வாய்மொழித் தந்தையின்" (அகம்.262) கண்களைக் கெடுத்த "ஒன்றுமொழிக் கோசரை"க் "கடுந்தேர்த் திதியன்" (அகம். 196) என்பவனால் கொல்வித்தாள் அன்னிமிஞிலி. ஒன்றுமொழிக் கோசர் என்போர் பரணரால் "ஊர்முதுகோசர்" (அகம் 262) என்றும் அழைக்கப்பட்டனர்.

தேர் ஏறும் தகுதிபடைத்த இத் திதியன் "மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன், செருவியல்நன்மான் திதியன்" (அகம்.262, 9-10) எனவும் படுகிறான். இத்திதியனிடம் படைகள் இருந்தமை இவற்றால் தெரியவருகின்றது. பரணருக்கு முற்காலத்திலும் சமகாலத்திலும் அதற்குப் பிந்திய காலத்திலும் திதியன் என்ற பெயரில் மூன்று குறுநில மன்னர் இருந்திருந்தனர் என அறியமுடிகிறது.

திதியன் என்பவன் அன்னி என்பவனை அவனுடைய குறுக்கைப் பறந்தலையில் போரிட்டு வென்றுள்ளான் என்பதை **அகநானூறு** 45, 126, 145 ஆகிய பாடல்களில் முறையே வெள்ளிவீதியாரும், நக்கீரரும், கயமனாரும் பாடியுள்ளனர். திதியனுடன் போர் செய்யாதே என அன்னியை எச்சரித்தவன் வேள்குல எவ்வி ஆவான் (அகம். 126). அப்படியும் அவன் திதியனுடன் போரிட்டு இறந்தான். நக்கீரர் பாட்டில் கூறப்படும் இத்திதியனே தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனுக்கு எதிராக வந்த எழுவரில் ஒருவனாவான் எனக் கருதலாம்.

மேற்சுட்டிய மாவேள் எவ்வி என்பான் திதியன் சார்பானவன் ஆகலாம். அன்னி என்பான் பாண்டியன் சார்பானவன் ஆகலாம். திதியனை வென்ற பாண்டியன் எவ்வியை வென்று அவனுடைய மிழலைக் கூற்றத்தைக் கைப்பற்றித் தன் நாட்டுடன் பிற்காலத்தில் சேர்த்துக் கொண்டான். இதைப் *புறநானூறு* 24 ஆம் பாடல் குறிக்கிறது. இதன்மூலம் எவ்வியின்

நாடு பாண்டியன் ஆட்சியின் கீழ் வந்துள்ளது. பாண்டியன் கோசர்க்கும் அன்னிக்கும் ஆதரவாகச் செயல்பட்டுள்ளான் என அறியலாம்.

எழினி

எழினி என்பவனும் பகைவரில் ஒருவனாகப் பாண்டியன் மேல் படையெடுத்து வந்தவன்தான். இவன் போரில் வல்ல பல யானைகளைக் கொண்டிருந்தவன் ஆதலால் "போர்வல்யானைப் பொலம்பூண் எழினி" (அகம்.36:16) எனப்படுகின்றான். எழினியின் பரம்பரையினர் அதியமானுடன் தொடர்பு படுகின்றனர்.

எழினி என்ற பெயரில் பழங்காலந் தொட்டுப் பலர் இருந்துள்ளனர். அவர்களில் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனுடன் போரிட வந்தவனையே நாம் அறிதல் வேண்டும். போரின் முன்பாக, ஆநிரைகளைக் கவர்ந்து வருதலைச் செய்வர். ஆநிரைகளைக் கவர்தலாகிய வெட்சிப் போரைச் செய்தலில் வல்லவனாக எழினி என்பவனைத் தாயங் கண்ணனார் என்ற புலவர் அகநானூற்றில் பாடியுள்ளார் (அகம். 105).

மதுரையை முற்றுகை இடுவதற்கு முன் சேரனும் சோழனும் அவர்களுக்குத் துணையாக வந்த குறுநிலமன்னரும் பாண்டியனுடைய ஆநிரைகளைக் கவர்ந்தலாகிய வெட்சிப் போரைத் தொடங்கினர். அதில் வென்ற பின்பே மதுரையை முற்றுகையிட்டனர். இவ் வெட்சிப் போரில் பாண்டியனின் ஆநிரைகளைக் கவர்ந்தவன் இந்த எழினி ஆகலாம். அதற்கேற்ப அவன்,

பந்துபுடைப் பன்ன பாணிப் பல்லடிச்
சில்பரிக் குதிரைப் பல்வேல் எழினி
கெடலருந் துப்பின் விடுதொழில் முடிமார்
கனையெரி நடந்த கல்காய் கானத்து
வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்
தேம்பிழி நறுங்கள் மகிழின் முனைகடந்து
வீங்குமென் சுரைய ஏற்றினந் தரூஉம்
முகைதலை திறந்த வேனில்
பகைதலை மணந்த பல்லதர்ச் செலவே (அகம். 105:9-17)

குதிரைப்படை வீரர்களையும் வேற்படை வீரர்களையும் கொண்ட எழினியின் வீரர்கள் அவ் எழினியின் ஆணையால் மதுரை மாநகர்க்கு வடக்கே பாறைகள் நிறைந்திருந்த காட்டில்

மேய்ந்த பாண்டியனின் ஆநிரைகளைத் தடுத்த பாண்டிய நாட்டு வீரர்களைக் கள் அருந்திய மகிழ்ச்சியில் வென்று அவ் ஆநிரைகளைக் கொண்டுவந்து சேர சோழர் சேர்ந்த கூட்டணி அரசர்க்கு அளித்த வெற்றியைத் தாயங்கண்ணனார் தன்பாட்டில் சுட்டியிருக்கின்றார் எனக் கருதலாம். இந்த வெட்சிப் போரின் பின்புதான் தலையாலங்கானத்தில் எழினி பாண்டியனால் கொல்லப்பட்டான்.

எருமையூரன்

எருமையூரன் என்பவனும் தலையாலங்கானத்துப் போரில் பாண்டியனால் கொல்லப்பட்டவன் ஆவான். இவன் "நார் அரி நறவின் எருமையூரன்" என *அகநானூற்றில்* (அகம். 36:17) பாடப்படுவதால் பனம் பன்னாடையால் அரிக்கப்பெறும் கள் நிறைந்த நாட்டை யுடையவன் எனக் கருதலாம். நக்கீரரே *அகநானூற்றில்* 253ஆம் பாடலில் எருமை நன்னாட்டைக் குறிப்பிடுகிறார். இதற்குத் தலைவன் வடுகர் பெருமகனாகும். ஆதலால் இது மைசூர் நாடே என்பது தெளிவாகிறது. இவனும் எழினிபோன்று ஆநிரைகளைக் கவர்வதில் வல்லவன். முன்பு கொங்கர்களை முறியடித்து அவர்களின் பல நாடுகளைப் பாண்டிய நாட்டுக்குச் சேர்த்த பசும்பூண் பாண்டியன் பற்றிய குறிப்பும் இந்த அகநானூற்றுப் பாடலில் (253:4-6) கூறப்படுவதால், பாண்டியர்களுக்கும் எருமையூரர்களுக்கும் பகை இருந்துவந்திருக்க வேண்டும். அயிரி ஆறு எருமை நாட்டைச் சார்ந்ததாக அறியப் படுகின்றது. எருமைநாடு குடநாடு என்றும் கூறப்படுகிறது. எருமையூரனின் இயற்பெயர் தெரிந்திலது. அவன்

. . . வடா அது
ஆரிருள் நடுநாள் ஏரா ஒய்யப்
பகைமுனை யறுத்துப் பல்லினஞ் சாஅய்க்
கணஞ்சால் கோவலர் நெடுவிளிப் பயிரறிந்து
இனந்தலைத் தரூஉம் துளங்கிமில் நல்லேற்றுத்
தழூஉப்பிணர் எருத்தம் தாழப் பூட்டிய
அந்தூம் பகலமைக் கமஞ்செலப் பெய்த
துறுகாழ் வல்சியர் தொழுவறை வௌவிக்
கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்
நேரா வன்றோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட்டு ள்ளதை
அயிரி யாறு . . . . (அகம். 253:9-20)

எருமையூரன் ஆநிரைகளைக் கவர்தலாகிய வெட்சிப் போரைச் செய்வதில் வல்லவன் என்பதை மேற்சுட்டிய பாடலடிகள் உணர்த்துகின்றன. அதுவும் முன்பொரு காலத்தில் இந்த எருமையூரன் நள்ளிரவில் வடதிசைக்கண் நிறைந்த ஆநிரைகளை அவற்றை மேய்க்கும் கோவலர் கூவியழுமாறு கவர்ந்து, எதிர்த்த வீரர்களை வென்று, தன்னுடைய ஊரில் உள்ள ஆநிரைகளோடு சேர்த்ததையே நக்கீரர் பாடியுள்ளார். இவனே மதுரையின் மேற்குப் பக்கத்திலிருந்த பாண்டிய நாட்டு ஆநிரைகளை நடு இரவில் கவர்ந்தவன் எனத் தெரிகிறது. பாண்டிய நாட்டுடனிருந்த பண்டைய பகை காரணமாக எருமையூரன் சேரன், சோழனுடன் சேர்ந்து போருக்கு வந்து முதலில் வெட்சிப் போரைத் தொடங்கியவன் ஆகலாம்.

இருங்கோவேள்

இருங்கோ வேண்மான் என்பவனும் இறந்த குறுநிலமன்னர்களில் ஒருவன் ஆவான். இவனும் வேள்குலத்தைச் சார்ந்தவன். இவனைத் "தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின் இருங்கோ வேண்மான்" என மதுரை நக்கீரர் **அகநானூற்றில்** பாடியுள்ளார். இருங்கோவேண்மான் வேளிர் ஆயினும் சோழனுக்கும் கிளைஞன் ஆவான். கொடும்பாளூரில் இவ்வேளிர் குலத்தினர் ஆட்சிசெய்து வந்திருந்தனர். பிற்காலத்தில் புதுக்கோட்டைப் பகுதிகளுக்கும் குடிபெயர்ந்தனர். இப்பகுதி கோநாடு எனவும் அழைக்கப் பெற்றது. கொடும்பாளூர் இருங்கோ வேளிர்க்குக் கோநாடர் என்பதும் பெயர்.

கொடும்பாளூர் இருக்குவேளிரில் ஒருவனைக் கபிலர் "வேளிருள்வேளே" என்கிறார். பாரிமகளிரை மணந்து கொள்ளுமாறு கபிலர் இவ்வூரிலிருந்த இருக்குவேளை வேண்டினார். அவனுடைய பழமையை அவர் கூறுவதாவது:

நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரையாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போர் அண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங்கோவே (புறம்.201:8-13)

என்கிறார்.

இதிலிருந்து இருங்கோவேள் பரம்பரையினர் மிகவும் பழங்காலத்திலிருந்தே வந்தவராகத் தெரிகிறது. பாரிமகளிரை மணக்க அவன் இசையவில்லை. ஆதலால் கபிலர் அவ் வேள் குலத்துக்கு ஏற்பட்ட ஒரு கேட்டைக் கூறி, அவனை விடை கொள்வதாக மற்றொரு பாடல் (புறம்.202) அமைகிறது. முன்பு கழாத்தலையார் என்ற புலவரை இருங்கோவேளின் முன்னோன் இகழ்ந்ததால், பொன்வழங்கி உதவிய அரையம் கேடடைந்தது. அதுபோல் பாரிமகளிரையும் தன்னையும் இகழ்ந்த இருங்கோ வேண்மான் சந்ததியும் கேட்டையும் எனும் கருத்துப்பட அப்பாடலைப் பாடியுள்ளார்.

அதற்கேற்ப இந்த இருங்கோவேண்மானின் பிற்காலத்தவன் பாண்டிய மன்னனால் தலையானங்கானத்தில் கொல்லப்பட்டான். இருங்கோ வேண்மானுக்கும் பாண்டியனுக்கும் எதனால் பகை என்றறிய முடியவில்லை. சோழன் குடியினனான இந்த இருங்கோ வேண்மானின் தொட்டடுத்த முன்னோன் சோழனால் வெல்லப்பட்டான் என்பதைப் *பட்டினப்பாலை* (282) கூறுகிறது.

> நீடுநிலை அரையத்துக்கேடும் கழாத்தலையை இகழ்ந்ததன் பயனென்ற உம்மையான், இவ்விகழ்ச்சியும் உனக்கும் கேடுதரும்— அது கெடுவதற்குக் காரணம், கழாத்தலையை நுமருள் ஒருவன் இகழ்ந்ததனால், அவன் வாக்குத் தப்பாதாகலின் அவன் வசையாகப் பாடினானென்று சொல்லுவர், அதுவேயென்பதாம்

எனப் பழைய உரையாசிரியர் கூறுகின்றார். கழாத் தலையாரின் சாபம் ஒரு பக்கத்திலிருக்கட்டும். இருங்கோ வேண்மான் குடியினர் புலவர்களை இகழ்ந்தது ஒரு பக்கத்திலிருக்கட்டும். இதுபோன்ற இகழ்ச்சி மொழிகளைப் பாண்டியன் மேலும் இருங்கோ வேண்மான் கூறியிருந்திருக்கலாம். அதுவே பாண்டியனுடனான பகைக்குக் காரணம் ஆகலாம்.

பொருநன்

பொருநன் என்பவன் கொல்லப்பட்ட ஐவரில் இறுதியாகக் கூறப்படுகிறான். இவனை *அகநானூறு* (36) "இயல்தேர்ப் பொருநன்" என்கிறது. இதனால் தேரில் ஏறிவரும் தகுதியுடைய குறுநிலமன்னன் எனலாம். பொருநன் என்பதற்கு அரசன் என்றும் போர்செய்வீரன் என்றும் பொருள் உள்ளது.

மாவேள் எவ்வியின் மிழலைக் கூற்றம், வேளிரின் முத்தூர்க்கூற்றம் வெற்றி

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் கொண்ட மற்றொரு வெற்றி *புறநானூற்றில்* (24) கூறப் படுகிறது. இப்பாடலை மாங்குடி கிழார் என்பவர் பாடியுள்ளார். இவரை வேறுபாடமாக மாங்குடி மருதனார் என்பர். மாங்குடி மருதனாரால் பாடப்பெறாத இவ்வெற்றி அப்பாட்டுப் பாடப் பெற்ற பிறகு கிடைத்த வெற்றி எனச் சிலர் கருதுகின்றனர்.

"வேள் எவ்வி முன்னர் ஆட்சிபுரிந்ததும் இருங்கோ வேண்மானுக்குரியதுமாகிய மிழலைக் கூற்றத்தையும் அதற்கடுத் துள்ளதும் வேளிர்களுக்குரியதுமாகிய முத்தூர்க் கூற்றத்தையும்" (தலையாலங்கானத்துப்) போருக்குப்பின் பாண்டியன் கைப்பற்றினான் எனச் சதாசிவ பண்டாரத்தார் கூறுகின்றார் (பக்.24-25). இப் பகுதிகள் புதுக்கோட்டைப் பகுதியிலும் தஞ்சாவூர் மாவட்டம் அறந்தாங்கி வட்டத்திலும் இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை வட்டத்திலும் முன்பிருந்த ஊர்கள் எனவும் அவர் கூறுகின்றார்.

மிழலைக் கூற்றம் இருங்கோ வேண்மானுக்குரியது எனப் பண்டாரத்தார் கூறுவதிலிருந்து தலையாலங்கானப் போரில் பாண்டியனால் இருங்கோ வேண்மான் கொல்லப்பட்டதும் இயல்பாகவே அவனைச் சார்ந்த நாட்டுப்பகுதிகள் பாண்டியனின் கீழ் வந்துவிட்டிருக்கும். ஆதலால் மாங்குடி மருதனார் அதைப்பற்றி விரித்துக் கூறவில்லை எனலாம்.

இப்பகுதிகள் முன்பு பாண்டியர்களிடமே இருந்தன என்பதற்குச் சான்றாக அடியார்க்கு நல்லாரின் கருத்து (சிலம்பு:11, காடுகாண் கதை : 17-22ன் உரை) ஒன்றுள்ளது.

> அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட்டெல்லையிலே
> முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும்
> என்னுமிவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்
> வாழ்வானாக

என்னும் பகுதியில் முத்தூர்க் கூற்றமும் குண்டூர்க் கூற்றமும் சோழ, சேரர்களின் பகுதிகளாகவும் பாண்டியர்களின் பகுதிகளாகவும் அமைந்த எல்லைப் போராட்டப் பகுதிகள் ஆகும். இங்குக் கூறப்பெற்ற தென்னவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் ஆவான்.

மாங்குடி கிழாரின் பாடலிலிருந்து (புறம். 24) மிழலையும் முத்தூரும் எவ்விக்குரியதும் வேளிர்க்குரியதுமான பகுதிகளாகவே தெரிகின்றன. மாவேள் எவ்வி திதியனுக்கு நண்பன் கோசர்க்குப் பகைவன், அன்னி என்பானுக்குப் பகைவன்; அன்னி என்பான் திதியனால் கொல்லப்பட்டான் என முன்னர்க் கண்டோம். திதியன் பாண்டியனால் கொல்லப்பட்டான். ஆதலால் பாண்டியனுக்குப் பகைவனாகவே எவ்வி அமைந்திருக்கிறான். மிழலையின் சிறப்பு வருமாறு:

முந்நீருண்டு முந்நீர்ப் பாயும்
தாங்கா வுறையுள் நல்லூர் கெழீஇய
ஓம்பா வீகை மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலை (புறம் 24:16-19)

பனைநீர், கரும்பின் சாறு, இளநீர் ஆகிய முந்நீரைப் பருகுபவராகிய மருத நிலத்து மக்கள் வாழும் நல்லூர்கள் செறிந்த ஊர்மிழலை. வேளிர் குலத்திலே பெரிய வேளாகக் கருதப்பெறுபவன் எவ்வி ஆவான். அவனிருந்த பகுதியே மிழலை என அறியலாம்.

யானைப் படைகளையுடைய தொன்முதிர் வேளிர்கள் பாதுகாத்து வரும் திரண்ட நெற்களஞ்சியம் உள்ள முத்தூற்றுக் கூற்றத்தையும் மிழலையுடன் பாண்டியன் கைப்பற்றினான். இதனை,

... கழனிக்
கயலார் நாரை போர்விற்சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பைநெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய' (புறம்.24:19-23)

முத்தூற்றுக்கூற்றம் முன்பு பாண்டிய, சோழ நாடுகளின் எல்லைப் போராட்டப்பகுதி ஆதலால், அதைக் கைப்பற்றுவதில் இரு நாட்டு அரசர்களுக்கு அடிக்கடி எல்லைப்போர் நடந்திருக்கலாம். எவ்வி, அன்னி எனும் பெயர்களையும் மிழலை, முத்தூற்றூர் எனும் ஊர்கள் இவற்றை நோக்கும்போது, சேரநாட்டுத் தொடர்புள்ளதை அறியமுடிகிறது. சேரநாட்டுடன் கொள்வினை கொடுப்பினைகள் அடிக்கடி நடந்துள்ளன.

அழும்பில்வேள்

சேரன் செங்குட்டுவன் காலத்தில் சேரநாட்டின் முக்கிய அரசியல் அதிகாரியான அழும்பில் வேளைப் பாண்டியன் வென்றதுபற்றி *மதுரைக்காஞ்சி* சற்றுப் பின்பகுதியில் (344-45)

கூறுவதால், இச் சேரநாட்டுப் போர் தமிழக வடமண்டலங்களைக் கைப்பற்றிய பின் நடந்ததாகக் கூறலாம்.

சிலப்பதிகாரத்தில் இந்த அழும்பில்வேள் கூறப்படுகிறான். இவனுடைய ஊர் அழும்பில் ஆகும். இது பெரும்பூட்சென்னி என்ற சோழன் தொடர்பாக *அகநானூற்றில்* (44) கூறப்படுகிறது. *புறநானூறும்* (283) அழும்பில் என்ற பெயரில் ஓர் ஊர் இருந்ததாகக் கூறுகிறது. இவ்வூரை மூவேந்தர்கள் வலுப்பெறும் போது தம்முடன் சேர்த்துக் கொள்வர் போலும். இப்பாடலின் பழைய உரை இவ்வூரைப் பாண்டிய நாட்டு ஊராகக் கூறுகிறது. இதில் சேரன் செங்குட்டுவனுக்குக் கட்டுப்பட்டவனாக அழும்பில் வேள் இருந்துள்ளான்.

சேரன் செங்குட்டுவனின் படைகள் வட நாட்டுக்கு செல்லுதலில் இந்த அழும்பில் வேளுக்கு முக்கியப்பங்கு இருந்தது.

இமயமால்வரைக் கெங்கோன் செல்வது
கடவுளெழுதவோர் கற்கே யாதலின்
வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
தென்றமிழ் நன்னாட்டுச் செழுவில்கயல்புலி
மண்டலை யேற்ற வரைக வீங்கென

ஓலையெழுதச் சொல்லி, வடதிசைக்குச் செல்வதைப் பறைகள் அறைவித்தும் சொல்லச் செய்கிறான். மேலும் வடதிசை சென்று இமயத்தில் கல்லெடுத்து வந்தபிறகு அழும்பில் வேளுடன் ஆயக்கணக்கர்களை மூதூர்களிலே சென்று சேரன் ஆணையைக் கூறுமாறு பணிக்கப்படுகின்றான். இப்படிப் பட்டவன் செங்குட்டுவன் காலத்தில் குறுநில மன்னனாக அங்கீகரிக்கப் பட்டிருந்தான் என்பதை *மதுரைக்காஞ்சி* (344-5) விளங்கு பெருந்திருவின் மான விறல்வேள் அழும்பில் என்கிறது.

முன்பு பாண்டிய நாட்டுப் பகுதியாக இருந்த அழும்பில் சேரநாட்டுடன் சேர்ந்ததால் ஏற்பட்ட பகை காரணமாகவே புதிய வருவாயினையுடைய அழும்பில் போன்ற ஊர்களைப் பாண்டியன் கைப்பற்றினான் எனலாம்.

வேளிரின் குறிஞ்சிப் பகுதிகளை வென்ற பாண்டியன்

தலையாலங்கானத்துப் போருக்குப் பிறகு பாண்டியன் நெடுஞ்செழியன் வேளிர் குலத்தினர் ஆட்சி செய்த குறிஞ்சி

நிலப்பகுதிகளை வென்ற செய்தி மதுரைக்காஞ்சியில் பாடப் பெற்றுள்ளது. அம் மன்னர்களின் நாட்டுப்பகுதிகளைப் பாண்டிய நாட்டுடன் சேர்த்துக் கொண்டான் என அது தெரிவிக்கின்றது.

இலங்கருவிய வரை நீந்திச்
சுரம்போழ்ந்த விகலாற்றல்
உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின்
நிலம்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்' (மதுரைக்.57-62)

இக்குறிஞ்சி நில மன்னர்களின் பகுதிகள் சோழநாட்டில் இல்லை. பாண்டிய நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் இடைப்பட்ட பகுதிகள் ஆகலாம். இவ்வடிகளுக்குரிய நச்சினார்க்கினியர் உரைவருமாறு:

உயர்ந்து விளங்குகின்ற அருவிகளையுடைய மலையின் குறிஞ்சி நில மன்னரையெல்லாம் வென்று உயர்ந்த சீரிய தலைமையினாலே, மாறுபாட்டை நடத்துதலையுடைய பகைவர் காடுகளைப் பலவழியாகப் பிளந்த சிறப்பினாலே, நாட்டிலிருக்கின்ற அரசன் நிலங்களை யெல்லாம் கொண்ட பெரிய உதவியையும்

என்கிறார். காடுகளையும் மலைகளையும் அரணாகக் கொண்டு ஆட்சி செய்த குறிஞ்சி நில அரசர்களைப் பாண்டியன் வென்றான் என இதன்மூலம் அறியலாம். இவர்கள் வேள்குலச் சிற்றரசர்கள் ஆவர்.

தோற்றுப்போன பல கொற்றவரின் கோன் ஆதல்

பாண்டியர்களின் மேலாண்மையிலிருந்து விடுபட்டு விடுதலை பெற்றிருந்த இக் குறுநிலமன்னர் பலரை வென்றதால் இப்பாண்டியன் அரசர்க்கு அரசன் ஆவான். தலையாலங் கானத்துப் போர் மற்றும் இக் குறிஞ்சிப்போர் காரணமாக இப்பாண்டியன் கொற்றவர் தம் கோன் ஆகிய செய்தி மதுரைக்காஞ்சியில் கீழ்க்காணுமாறு இடம் பெறுகின்றது.

அருங்குழுமிளைக் குண்டுகிடங்கின்
உயர்ந்தோங்கிய நிரைப் புதவின்
நெடுமதி னிரைஞாயில்
அம்புமி ழயிலிருப்பம்
தண்டாது தலைச் சென்று
கொண்டு நீங்கிய விழுச்சிறப்பின்
தென்குமரி வடபெருங்கல்

குணகுடகடலா வெல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப
வெற்றமொடு வெறுந் தொழுகிய
கொற்றவர்தங் கோனா குவை (மதுரைக்.64-74)

பகைவர்களின் காவல் நிறைந்த காடுகளையும் கிடங்குகளையும் கோபுரங்களின் வாயில்களையும் நெடிய மதில்களையும் மறைவிடங்களையும் அரண்களையும் கைக் கொண்டதால் அவற்றிலிருந்து நீங்கிய அரசர்கள் எல்லாம் பணிந்து ஏவல் கேட்கும்படியாக அவர்களின் தலைவனாகப் பாண்டியன் அப்போது கருதப்பட்டான். “கொற்றவர்தம் கோன்” என்பதால் இதன்மூலம் பேரரசன் நிலையை அவன் எய்தினான் எனலாம்.

பாண்டியனின் சாலியூர் (நெல்லூர்) வெற்றி

தற்போது ஆந்திரப் பகுதியில் உள்ள நெல்லூர் முற்காலத்தில் பாண்டியப் பேரரசர்கள் படையெடுத்துத் தமக்குள் அகப்படுத்திய வடவெல்லை ஊராக இருந்தது. இதற்குக் காரணம் அங்குள்ள மருதநில நெல்மட்டுமன்று, கடல் வளமும் துறைமுகமும் ஆகும். நெல்லூரைக் கைப்பற்றியதால் இப்பாண்டியன் “நெல்லின் ஊர்கொண்ட உயர் கொற்றவன்” எனப்படுகின்றான். இதனை *மதுரைக்காஞ்சி* விவரிக்கின்றது. முதலில் நெல்லூர் வருணனை வருமாறு:

வானியைந்த விருமுந்நீர்ப்
பேஎநிலைஇய விரும் பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை யிதையெடுத்து
இன்னிசைய முரச முழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர் நெல்லின்
ஊர்கொண்ட வுயர் கொற்றவ (மதுரைக்.75-88)

பாண்டியன் தன் கன்னிப் போருடன் நிற்காது “தனக்கு நடவாததோர் ஊர்கொண்டான்” என்று நச்சினார்க்கினியர் பொருளுரைக்கின்றார். அவர் கூறும் நெல்லூர் வருணனை வருமாறு:

மேகம் படிந்த பெரிதாகிய மூன்று நீர்மையையுடைய அச்சம் நிலைபெற்ற கரிய கடலிடத்து, கடிய காற்றாலே வளைகின்ற திரையைக் குறுக்கே பிளந்தோடும்படி பாய்விரிக்கப்பட்டு, இனிய ஓசையையுடைய முரசம் முழங்கா நிற்க, பொன் மிகுதற்குக் காரணமாகிய சீரிய சரக்குகளை நாட்டிலுள்ளார் நுகரும் படியாக, கரையைச் சேர வணிகம் வாய்த்து வந்து இழிதலைச் செய்யும் நெடிய கொடி பாய்மரத்தின் மேலே ஆடும் இயல்பினையுடைய பெரிய மரக்கலம் கருமேகஞ் சூழ்ந்த மலைபோலக் கடல் சூழ்ந்த அசைகின்ற இருப்பினையும் தெளிந்த கடலாகிய ஆழத்தையுடைய கிடங்கினையுமுடைய தலைமை யமைந்த உயர்ந்த நெல்லின் பெயரைப் பெற்ற சாலியூரைக் கொண்ட உயர்ந்த வெற்றியை உடையவனே!

சாலியூர் என்னும் நெல்லூர் பற்றிய மாற்றுக் கருத்துகள் கா. அப்பாத்துரைக்கும் மா. இராசமாணிக்கத்துக்கும் உள்ளன. அது கடல்கடந்த நாட்டின் ஓர் ஊர் என்றும் இவ்வூர் நெடியோன் என்று முன்பு கூறப்பெற்ற வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் வெற்றிச் சின்னங்களான சாவகம் அல்லது சுமத்ராவிலுள்ள சாலியூரே எனவும் *தென்னாட்டுப் போர்க்களங்கள்* என்ற தன்நூலில் அப்பாத்துரை கூறுகிறார் (பக்.28). அப்பாத்துரையின் இக் கருத்து தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனைப் பொறுத்தவரையில் பொருந்தாது.

பத்துப்பாட்டு ஆராய்ச்சி (1970) எழுதிய மா.இராசமாணிக்கம் சாலியூர் என்னும் நெல்லூர் வெற்றியைப் பாண்டியனின் கடல்கடந்த வெற்றி என்கிறார். பிற்காலத்தில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழநாட்டை வென்று தமிழகத்தின் வடக்கேயுள்ள நெல்லூர் வரை சென்றுள்ளதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. சோழ அரசர்களில் சிலரும் இந் நெல்லூரையே தம் வெற்றிப் பகுதியின் வடக்கு எல்லையாகக் கொண்டுள்ளனர்.

பல்குட்டுவரை வென்றது

வடபகுதிப்போரை வென்ற பாண்டியன், அதன்பின், மேற்குப் பகுதிப் போர்களில் ஈடுபட்டான். இப்போருக்குப் புறப்படுகின்ற வழியில் இருந்த தன் நாட்டவர்களான பலவகைத் தொழில் செய்வார்களுக்கு ஆங்காங்கே தங்கி அவரவர்க்குப் பரிசில் நல்கினான். பொருநர்க்கு ஆநிரைகளை வழங்கினான். அவர்கள் பெண்டிர்க்குப் பொன்னால் செய்த தாமரைப்பூக்களை அளித்தான். இவ்வாறு தன் ஊர்களைக் கடந்து, தன் பகுதிக்

கடற்கரைப்பகுதியையும் கடந்து நாட்டில் ஆட்சி செய்த குட்டுவர் சேரர்கள் பலரை வென்றான். இதனையே "பல்குட்டுவர் வெல்கோவே" என *மதுரைக்காஞ்சியில்* (105) கூறுகின்றார்.

"பலவாகிய குட்டநாடு" என நச்சினார்க்கினியர் விரித்துக் கூறுவதால் சேரநாட்டுக் குட்ட நாட்டுப் பகுதிகளில் பல ஆட்சியாளர்கள் இருந்ததாகக் கருதலாம். சேரப் பெருவேந்தன் ஒருவன் தலையாலங்கானத்தில் பாண்டியனால் கொல்லப் பட்டதால் அச் சேரனுக்குக் கீழ் ஆட்சிசெய்த அவன் உரிமைச் சுற்றத்தாரும் மீண்டும் தலையெடுக்காதவாறு பாண்டியனால் அவ்வப் பகுதிகளுக்குச் சென்று வெல்லப்பட்டிருக்க வேண்டும்.

எவர் பெயரையும் குறிப்பிட்டுக் கூறாமல் 'பல்குட்டுவர்கள்' என *மதுரைக்காஞ்சி* கூறுவதால் இப்பாண்டியன் குட்ட நாட்டுப் பகுதிகள் பலவற்றையும் தன் ஆட்சிக்குள் கொண்டு வந்தான் எனலாம்.

குட்டநாடு சேரர்களின் முக்கியப் பகுதி ஆகும். அது செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துள் ஒன்று. பாண்டியனின் தென்பாண்டி நாடும் சேரனின் குட்டம், குட நாடுகளும் தொட்டடுத்து உள்ளன. குட்ட நாட்டுக்கும் தென்பாண்டி நாட்டுக்கும் இடையில் வேணாடு என்றொரு பகுதி பிற்காலத்தில் தோற்றம் பெற்றது. அதுபோன்றே பாண்டிய நாட்டுக்கும் குட்ட நாட்டுக்கும் இடையில் பூழி நாடும் புதிதாய்த் தோற்றம் பெற்றது.

சேரர்கள் ஒரே காலக்கட்டத்தில் சேரநாட்டின் வெவ்வேறு பகுதிகளை ஆண்டனர் எனக் கருதுவது தவறாகாது. இவர்களில் பலர் குட்டுவர்கள் எனக் கூறப் பெற்றனர். இவர்களின் ஒட்டுமொத்த தலைநகர் வஞ்சியாகக் கருதப்பெற்றது.

சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இப் பாண்டியன்மேல் படையெடுத்து வந்ததையும், பாண்டியனால் தந்திரமாகப் பிடிக்கப்பட்டுச் சிறையில் அடைபட்டதையும், பின்பு அச் சேரன் சிறையிலிருந்து தப்பிச் சென்றதையும் முன்பு பார்த்தோம். அவ்வாறு தப்பிச் சென்றவன் குட்ட நாட்டுக்கு நேரிமலை வழியாகத் தப்பிச் சென்றான் என்றும் பின் தொடர்ந்து குட்ட நாட்டுக்குச் சென்ற பாண்டியன் அச் சேரமானைப் பிடிக்க வியலவில்லை என்றும் அப்பகுதியில் உள்ள முதுவர்களிடையே கதைகள் வழங்குகின்றன. இதனடிப்படையிலேயே குட்டநாட்டுப் பல்குட்டுவரைப் பாண்டியன் வென்றிருக்கவேண்டும்.

முதுவெள்ளிலைக் குறுநிலமன்னன் பாண்டியன் ஏவல் கேட்டல்

இவ்வூர் மருதமும் நெய்தலும் சேர்ந்த பகுதிகளைக் கொண்டது. சாலியூர் (நெல்லூர்) போல இவ்வூர்ப் பகுதிகளில் நெல் அறுப்பாருடைய ஓசை (மதுரைக்.110) புள்ளின் ஆரவாரம் (மதுரைக்.111), சுறாமீன்கள் நிறைந்த கடலின் துவலை ஓசை (மதுரைக்.115) கரையேறும் மீனவர்களின் பேச்சொலிகள் (மதுரைக்.116), உப்பளங்களில் வணிகத்தால் எழும் ஒலி மற்றும் சிறிய குடிகளானவர் செய்யும் பெரிய தொழில்களின் இடையே எழும் ஒலிகளையுடைய முதுவெள்ளிலையில் உள்ளோர்க்குத் தலைவனாகிய குறுநிலமன்னன் பாண்டியனின் ஏவல் கேட்டதாகக் கூறப்படுகிறது.

ஒலியோவாக் கலியாணர்
முதுவெள்ளிலை மீக்கூறும்
வியன்மேவல் விழுச் செல்வத்
திருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந் தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு
தொன்று மொழிந்து தொழில் கேட்ப (மதுரைக்.118-124)

இதற்குப் பொருள் கூறும் நச்சினார்க்கினியர் இவ்வூர் ஒரு குறுநிலமன்னனின் இருப்பு என்கிறார். அவர் கூறுவதாவது:

> உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு வாணிகமென்கின்ற இரண்டு கூற்றாலே அகலம் பொருந்தலை யுடைய சீரிய செல்வத்தாலே புகழ்நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்கு நிலத்து வாழ்வாருடனே பழமை கூறிநின்று ஏவலைக் கேட்கும்படியாக

பல்குட்டுவரை வென்ற பாண்டியன் முதுவெள்ளிலையைப் போர் செய்யாது கைப்பற்றியதாகக் கொள்ளலாம். கடற்கரைப் பகுதியின் வருணனை உள்ளதால் இது கடல்சார் ஊராகும். இதன் குறுநில மன்னனும் பாண்டியனுக்குப் பணிந்து அவன் ஏவல் கேட்டதாகக் கொள்ளலாம். இதையே, **மதுரைக்காஞ்சி** அடுத்ததாகப் பாடியுள்ளது.

காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட வெரி பரப்பி
ஆலங்கானத்து அஞ்சுவர விறுத்து
அரசுபட அமருழக்கி

முரசு கொண்டு களம் வேட்ட
அடுதிறல் உயர் புகழ் வேந்தே! (மதுரைக்.125-130)

தலையாலங்கானத்தில் களவேள்வி

முதுவெள்ளிலையைப் பிடித்த பின்பு தலையாலங் கானத்தில் இப்பாண்டியன் களவேள்வி செய்த பகுதி *மதுரைக் காஞ்சியில்* பாடப்பெற்றுள்ளதால், முதுவெள்ளிலை என்பதும் கடல்சார் ஊர் ஆதல் வேண்டும். இதனால், தலையாலங்கானப் போரைத் தொடர்ந்து ஒருபுறம் குறிஞ்சி நிலமன்னர்களை வென்றதும், மறுபுறம் நெல்லூரை வென்றதும், பின்னொரு புறம் பல்குட்டுவரை வென்றதும் கூறப்படுவதால் ஒட்டுமொத்தமாகத் தலையாலங்கானத்திலேயே பாண்டியன் களவேள்வி செய்ததாகக் கருதலாம்.

பாண்டியன் தன் பகைவரின் முரசுகள், வெண்கொற்றக் குடைகள் போன்றவற்றைக் கைப்பற்றிக் களவேள்வி செய்ததை *அகநானூறு* (36) கூறுகிறது.

முரசொடு வெண்குடை அகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்று (அகம்.36:21-22)

இதனையே *புறநானூற்றில்* மாங்குடி கிழார் என்பவரும் பாடு கின்றார். களவேள்வி எப்படி நடந்தது என அவர் வருணிக்கின்றார்.

அரைசுபட அமருழக்கி
உரைசெல முரசுவெளவி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித் தோட்டு உடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய! (புறம். 26:6-11)

களவேள்வி எப்படி செய்தனர் என்பதற்கு இப்பாட்டு வரிகள் சான்றாம். இத்தகு வேள்விகளைச் செய்த பின்பு நன்கு அமைந்த அறிவு, ஐம்புலன் அடக்கும் விரதங்கள், நான்குவேதப் பயிற்சியையும் உடைய நான்மறையாளர்கள் சுற்றியிருந்து வேந்தர்கள் ஏவல்கேட்ப நிலைபெற்ற வேள்விகளையும், பாண்டியன் செய்தான். இதனை அதேபாடலில்,

ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக
மன்ன ரேவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே!

என்கிறார் மாங்குடிகிழார். இதையே மதுரைக்காஞ்சியிலும் "முரசுகொண்டு களம் வேட்ட"(129) என வருவது முன்னரும் சுட்டப்பட்டது காண்க.

களவேள்வி வெற்றியின் பின்பு அப்போர்க்களத்தில் செய்யப்படும் ஒரு சடங்கு; போர்வீரர்களுக்குச் செய்யப்படும் ஒரு விருந்து என்றுகூடச் சொல்லலாம்.

தலையாலங்கானம் அல்லது தலையாலங்காடு, ஆலங்கானம் (காடு) என்னும் ஊர் சோழநாட்டைச் சேர்ந்தது. பிற்காலத்தில் அது தேவாரம் பெற்ற ஒரு சிவதலம் ஆகும்.

பல களவேள்விகள் செய்த பல்சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பழந்தமிழ்ப்பாடல்கள் குறிப்பிட்டதை முன்னே கண்டோம். இப்போது பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் ஒவ்வொரு வெற்றியின் பின்னும் களவேள்வி செய்தான். இக் களவேள்வியின் போது வீரர்களின் ஆரவாரம் எழுந்தது. ஆதலால் இவ் வேள்வி வீரர்களைப் பாராட்டுவதற்காகச் செய்யப்படுகிறது.

தென்பரதவர் போரேறு

கொற்கை நகர் துறைமுகமும் ஆதலால் வணிகத்துடன் கடற்படையும் கொண்டதாக அது விளங்கிற்று. அக்கடற்படையில் பரதவர்களே போர் வீரர்கள். தலைமக்களை முதலில் கூறிவிட்டு அவர்களின் கீழுள்ள போர் வீரர்களை அடுத்துக் கூறி, அவர்கள் அனைவர்க்கும் பாண்டியனே தலைவன் எனக் கூறுதலைக் காணலாம். தலைமக்களையும் கடற் போர் வீரர்களைப் புரப்பதாலேயே பாண்டியன் "கொற்கையோர் பொருநன்" எனப்படுகிறான். தென் பரதவரின் இயல்பு வருமாறு:

செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று
அஞ்சுவரத் தட்கு மணங்குடைத் துப்பிற்
கோழூஉன் குறைக் கொழுவல்சிப்
புலவிற் பொலி கூவை
ஒன்று மொழி யொலியிருப்பின்
தென்பரதவர் போரேறே! *(மதுரைக். 139-144)*

தென்பரதவர் என்போர் கடற்போர் வீரரே. அவர்களைத் தென்திசைக்கண் குறுநிலமன்னர் என நச்சினார்க்கினியர் கூறுகிறார். இது பொருந்துவதாகத் தெரியவில்லை. மீனவர் என வேறிடங்களிலும் இக் குறுநில மன்னரைக் குறிக்கின்றனர்.

> தாங்கள் செறப்பட்ட பகைவர் மனம் கலங்கும்படி அவரிடத்தே சென்று அவர்க்கு அச்சந்தோன்றத் தங்கும் வருத்தத்தையுடைத்தாகிய வலியினையும் கொழுத்த இறைச்சியையுடைய கொழுத்திருக்கின்ற சோற்றினையும் எய்த அம்பு தன்னை மீண்டும் தொடுத்தலின் புலால் நாற்றத்தையுடைய வில்லினையும் பொலிந்த கூவைக் கிழங்கினையும் வஞ்சினம் கூறுதலையும் ஆரவாரத்தை யுடைய குடியிருப்பினையும் உடைய தென்றிசைக்கண் வாழும் பரதவர்க்குப் போர்த் தொழிலைச் செய்யும் ஏறாயவனே!
>
> இதனால் பரதவரைத் தனக்குப் படையாக அடிப்படுத்தினமை கூறினார்

என்கிறார் நச்சினார்க்கினியர். பரதவர் படைக்கும் தலைவன் பாண்டியனே என்ற பொருளில் இவ்வாறு பாடப்பெற்றுள்ளது. "வயவர் பெரும! (*பதிற்றுப்பத்து 70:11*) என்பதுபோலப் "தென்பரதவர் போரேறே" எனக் கொள்ளவேண்டும். வஞ்சினம் கூறுதலில் "ஒன்றுமொழி கோசர்" போல் "ஒன்றுமொழி யொலியிருப்பில் தென்பரதவர்" எனக் கருதவேண்டும்.

இப்பரதவர் படைக்கும் போர்த்தொழிலை ஏற்படுத்திக் கொடுத்தவன் பாண்டியன் என்பதால் குட்ட நாட்டைக் கைப்பற்ற இப்பரதவர் படை பயன்படுத்தப் பட்டிருந்ததாகக் கருதலாம். சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடிய *புறநானூற்றுப்பாட்டில்* (378) தென்பரதவர் கூறப் பெறுகின்றனர். இப்பரதவரின் வலிமையை அடக்கியதாகச் சோழன் கூறப்படுகின்றான். அடக்கித் தனக்குரியதாக வைத்துக் கொண்டான் ஆகலாம். பாண்டியனும் "பரதவரைத் தனக்குப்படையாக அடிமைப்படுத்தினான்" என நச்சினார்க்கினியர் கூறுகின்றார். பரதவர்க்கெனத் தனி நாடு இல்லாமையால் அவர்கள் படை வீரர்களே ஆவர். அவர்களின் குடியிருப்பு எந் நேரமும் ஆரவாரம் மிக்கதாயிருந்தது. இக் குடியிருப்புகள் சேரி, பாக்கம் எனப்பட்டன. கள் அருந்துதல் இச்சேரிகளிலும், பாக்கங்களிலும் இருந்தது. இவ்வாறான சேரிகளையும், பாக்கங் களையும் அதிலிருந்த மக்கள் மற்றும் வீரர்களையும் அவர் செய்யும் தொழிலான முத்துக்குளித்தலையும், சங்குகள் குளித்தலையும் போர் செய்தலையும் கட்டிக் காக்கும் நற்கொற்கையோரை விரும்புவனாகப் பாண்டியன் அமைகின்றான்.

நற்கொற்கையோர் நசைப்பொருநன்

சோழநாட்டுப் பகுதிகளையும் சேரநாட்டுப் பகுதிகளையும் வென்ற பாண்டியன் தன்நாட்டு நலன்களையும் காத்துக் கொள்வதற்காகக் கொற்கைக்குச் சென்றான். கொற்கை என்ற உடனே நல்முத்துகள் தாம் முன்வருகின்றன. அதுபோலவே *மதுரைக்காஞ்சியிலும்* முத்துகளையும் அக் கொற்கைப் பதியுள்ள மேன்மக்களையும் பாண்டியன் விரும்புவனாகப் பாடப் பெற்றுள்ளது. இவனுடைய கன்னிப் போருக்கும் அதனைத் தொடர்ந்து நடந்த வடக்கு, மேற்குப் பகுதிகளின் போர்க்கும் கொற்கையோரும் பங்காற்றியதால் அவர்களையும் பாராட்டும் நிமித்தமாக இவனுடைய கொற்கைப் பயணம் அமைந்ததாகக் கொள்ளலாம்.

பேருலகத்து மேஎந் தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப் பொருந (மதுரைக். 133-138)

முத்தைக் கூறும்பொழுது முத்துக் குளிப்போரையும் சங்குகள் குளிப்போரையும் அவர்தம் இருப்புகளையும் கூறுகின்றார் புலவர். இக்குடியிருப்புகளில் கள் உணவாகக் கொள்ளப்பட்டது. கொற்கையில் மேற்குலத் தோன்றல்களாகிய தலைமையினை உடையவர்களைப் பற்றி நச்சினார்க்கினியர் கூறும்போது "பெரிய நன்மக்களிடத்தே மேலாய்த் தோன்றுகை யினாலே புகழையுடைய விழுமிய தலைமை" என்கிறார். பாண்டிய நாட்டுக்கும் பேரளவில் வருவாயையும் பெயரையும் ஈட்டித் தருவது கொற்கை முத்துகளே. அம் முத்துவருவாயை நிருவகிக்கவும், துறைமுகத்தை நிருவகிக்கவும், அப்பகுதிகளை நிருவகிக்கவும் நல்ல தலைமக்கள் கொற்கையில் இருந்தனர் எனலாம்.

கொற்கையார் என்ற சொல் பாண்டிய அரசனையும் அவன் குலமரபுவழிக் குடியையும் குறித்திடக் கூடும். *சிலப்பதிகாரம்* ''கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் ஆயிரம் பொற் கொல்லரைக் காவு கொடுத்துவிட்டு மதுரைக்கு வந்து அரச பதவியில் அமர்ந்தான்'' என்கிறது.

யாப்பருங்கல விருத்திச் செய்யுளியல் (ப.387) புறநடை நூற்பாவுக்கான மேற்கோள் பாடலில்

பல்கேள்வித் துறைபோகிய
தொல்லிசையான் மீக்கூறும்
கொற்கையார் குலவேறே
கூடலார் அடுபொருந

பாண்டிய குலத்தவரைக் கொற்கையார் குலத்தவர் என்று சொல்லும் இலக்கிய வழக்கு இருந்துள்ளது. கூடல் என்பது மதுரைக்கு மறுபெயர்.

பாண்டிய வேந்தர்களைக் கொற்கையர் கோமான் என்றும் அழைத்துள்ளனர். இதுபோன்று மதுரையார் என்றும் பாண்டிய மரபினரை அழைத்தனர்.

யாப்பருங்கல விருத்தி செய்யுளியல் இரண்டாம் நூற்பாவுக்கான மேற்கோள் பாடல்,

பல்யானை மன்னர் முருங்க அமருழந்து
கொல்யானை தேரோடு கோட்டத்து - நல்ல
தலையாலங் கானம் பொலியத் - தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோர் மருக! - அடுதிறல்
ஆளி நிமிர்தோள் பெருவழுதி! எஞ்ஞான்றும்
ஈரம் உடையையாய் என்வாய்ச் சொல்கேட்டி
மறப்புற மாக மதுரையார் ஓம்பும்
அறப்புறம் ஆசைப் படேற்க........

என்பதால் வீரத்தாலும் அறத்தாலும் சிறந்து விளங்கிய பாண்டியர், மதுரைக்குரியோர் என்பதால் மதுரையார் என்றும் கொற்கைக்கும் உரியோர் என்பதால் கொற்கையோர் என்றும் அழைக்கப்பட்டனர்.

சிலம்பு, வாழ்த்துக் காதையில் 'மதுரையார் கோமான் தன் தொல்குலம்' என்பதாலும் மதுரையார் என்ற மரபுவழி வீரர் குலத்தார் பாண்டியராம்.

பாண்டிய வேந்தரின் மலைப்பகுதியின் நிலைமையை விளக்கி 'மதுரையார் கோமான்' என்று இளங்கோவடிகளால் அழைக்கப்படும் பாண்டியர் என்பாரின் மரபுவழி மக்கள் 'மதுரையான்' என்று செப்பேடுகளில் குறிக்கப்படுகின்றனர்.

சென்சஸ் ரிப்போர்ட்களிலும் மதுரையான் என்ற சாதிப்பட்டம் உடையவராகச் சான்றார் உணர்த்தப்படுகின்றனர்.

பாண்டியர் குலத்தவர் பற்றி *நெடுநல்வாடை(106-107)* யில் வரும்

பீடுகெழு சிறப்பின் பெருந்தகை அல்லது
ஆடவர் குறுகா அருகடி வரைப்பின்

என்ற பாடலடிக்கு நச்சினார்க்கினியர்

> பெருமை பொருந்தின தலைமையினை உடைய பாண்டியனல்லது(நெடுஞ்செழியன்) சிறுகுறுந் தொழில் செய்யும் ஆண்மக்களும் அணுக வாராத அரிய காவலையுடைய கட்டுக்களின்

என்றார்.

இதனால், சிறு குறுந்தொழில் செய்யும் குடியினரிலும் வேறுபட்ட குடியிற் பிறந்தவர் பாண்டியர் என்றும் உணரற்பாலதாம்.

மண்டலங்களைக் கைப்பற்ற மற்றுமொரு பெரும்போர்

இதுவரை வென்ற நாடுகளிலிருந்து பெறப்பட்ட பொருள்களை இரவலர்க்கும் படைவீரர்களுக்கும் தலைமை சான்றவர்க்கும் புலவர்க்கும் கொடுத்து விட்டு, வீணே இருக்காது பாண்டியன் மீண்டுமொரு தொலைதூரப் போர் செய்தது பற்றி *மதுரைக்காஞ்சி* கூறுகிறது. இப்போர்கள் வஞ்சிப்போர்களாம். இப்போர் சோழ, தொண்டை மண்டலங்களைக் கொண்ட போராகக் கருதப்படுகிறது.

அரிய வெல்லாம் எளிதினிற் கொண்டு
உரிய வெல்லாம் ஓம்பாது வீசி
நனிபுகன்று உறைதும் என்னாது ஏற்றெழுந்து
பனிவார் சிமையக் கானம் போகி
அகநாடு புக்கவ ரருப்பம் வௌவி
யாண்டுபல கழிய வேண்டு புலத்திறுத்து
மேம்பட மரீஇய வெல்போர்க் குருசில் (மதுரைக். 145-151)

பாண்டியன் மேலும் மண்ணாசையால் பகைவர் மேல் படையெடுத்துச் சென்றதாகிய வஞ்சிப்போரோடும், அப்பகைவர்களின் அரண்களைக் கைக்கொண்டதாகிய மண்ணுமங்கலத்தோடும் அமையாமல், அந்நாட்டுப் பகுதிகளில் பல ஆண்டுகள் போரிட்டுத்

தங்கி இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் பகைவர் நாடுகள் பாழாயின (மதுரைக்காஞ்சி 176) அப்பகைவர் பாண்டியனின் ஏவல்கேட்டு நடந்தனர் (189). "நாவலந் தீவின்கண் உளவாகிய சோழமண்டலம் தொண்டை மண்டலம் என்கின்ற மண்டலங்களை நின்னவாக வளைத்துக்கொண்டு" என நச்சினார்க்கினியர் கூறுவதால் இப்போர் மிக்க முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப் படுகின்றது. "அம் மண்டலங்கள் மேம்படுதற்கு வழிகாட்டிய குருசில்" என்கிறார் பாண்டியனை.

நெடுநல்வாடைப் பாசறை

சோழ, தொண்டை மண்டலங்களில் நடந்த பெரும்போர் குளிர்காலத்தில் நடந்த போராகத் தெரிகிறது. அதனாலே "பனிவார் சிமையம் கானம் போகி" (மதுரைக். 148) என்கிறார். நெடுநல்வாடையில் பாண்டியன் இடம்பெறும் போர்ப்பாசறை இம் மண்டலங்களின் பாசறையே. இம் மண்டலங்களில் இருந்த பல அகநாடுகளில் பாண்டியன் புகுந்துள்ளான் (மதுரைக்.149) ஆங்குள்ள பழம்பெரும் எயில்களைப் பிடித்துள்ளான். அவ்வாறு வென்ற உள்நாட்டுப் பகுதிகளில் அமைதி ஏற்படுத்த ஆங்காங்கே பல ஆண்டுகள் தங்கியுள்ளான் (மதுரைக். 150). அதன்மூலம் அப் பகைவர்கள் மீண்டும் தலைதூக்காதபடி அவர்களின் காவல் மரங்களை அழித்துள்ளான். பகைவர்களின் மருத நிலங்களை அழித்துக் காடாக்கியுள்ளான். பகைவர்கள் மீண்டும் கிளர்ந்தெழுவதற்குரிய வருவாய் பெரும்பாலும் மருத நிலங்களிலிருந்து பெறப்படும். ஆதலால் இவ்வாறு அழிவு செய்தான் எனலாம்.

இழிபு அறியாப் பெருந் தண்பணை
குரூஉக் கொடிய வெரிமேய
நாடு எனும் பேர் காடாக
ஆசேர்ந்த வழி மா சேப்ப
ஊரிருந்த வழி பாழாக
இலங்குவளை மடமங்கையர்
துணங்கையஞ் சீர் தழூஉ மறப்ப
அவை இருந்த பெரும்பொதியில்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய் மகளிர் பெயர்பாட
அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்
நிலத்தாற்றும் குழூஉப் புதவின்
அரந்தைப் பெண்டிர் இனைந்தனர் அகவ

கொழும் பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல் சேர
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குரலொடு முரலக்
கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கை
களிறுமாய் செருந்தியொடுகண்பமன்றூர்தர்
நல் ஏர் நடந்த நசை சால் விளைவயல்
பல் மயிர் பிணவொடு கேழல் உகள
வாழாமையின் வழிதவக் கெட்டுப்
பாழாயினநின் பகைவர் தேஎம் (மதுரைக் 154-176)

போரினால் பகை அரசர் அழிதலுடன் படைவீரர்கள் உட்பட அவர் மகளிர் மற்றும் ஊரார்களுக்குப் பெருந்துன்பம் ஏற்படும் என்பதும் இப்பகுதியினின்று தெரிந்து கொள்ளலாம். மருதநிலங்கள் அழிந்தன. அவை காடாயின; ஆநிரைகள் இருந்த இடம் புலிகள் நிறை காடாயின; ஊர்கள் பாழாயின; மங்கையர் துணங்கைக் கூத்தையையும் குரவைக் கூத்தையும் ஆடவில்லை. இக் கூத்துகள் நடைபெறும் மன்றில்களும் சான்றோர் கூடிய அம்பலங்களிலும் பேய்கள் உலவின. இல்லுறை தெய்வங்கள் உலவும் இடங்களில் மனக் கவற்சியை உடைய பெண்கள் ஓல மிட்டனர். ஆதரவில்லாதவர்கள் அடுத்த ஊர்களுக்குச் சென்றனர்.

சோழ, தொண்டை மண்டலங்களில் ஆட்சிமுறை

பாண்டியன் செய்த இப் போர் அம்மண்டலங்களில் இருந்த வாழ்க்கை முறைகளை மாற்றிவிட்டது. ஏர் நடந்த இடம் பன்றிகளின் இடமாகிவிட்டது. மொத்தத்தில் பகைவர் நாடுகள் பாழாயின. இவற்றுக்குக் காரணம் பாண்டியனின் படையெடுப்பு என்றாலும் பாண்டியனை எதிர்த்தவர்களும் ஒரு காரணமாகலாம். அவர்கள் இந்த அழிவுக்குப் பின்னரே நெடுஞ்செழியனின் ஏவல் கேட்க அடங்கினர். இதன் மூலம் பகைவர் நாடுகளை அழித்துக் கொண்டு பின் பகை அரசர்களைப் பிடித்தான் எனலாம்.

பாண்டியன் யானைப்படைகளை எங்கும் பரக்க நிறுத்தினான். பரந்த தன் படை வீரர்களைப் பகைவர் மேல் செலுத்தினான்; குதிரைப்படைகளையும், வேல், விற்படைகளையும் ஏவி விட்டான். இதன் காரணமாகப் பகைவர் வெல்லப்பட்டனர். அவர்கள் கோட்டைகள் கைப்பற்றப்பட்டன. அவர்களுக்கு உதவ வந்த சுற்றத்தாரும் வலியிழந்தனர். இவ்வளவும் செய்த பின்னரே சோழ, தொண்டை மண்டலங்களைப் பாண்டியனால் கைப்பற்ற முடிந்தது.

கடுஞ்சினத்த களிறுபரப்பி
விரிகடல் வியன்றானை யொடு
முருகுறழப் பகைத்தலைச் சென்று
அகல் விசும்பின் ஆர்ப்பு இமிழப்
பெயல் உறழக் கணை சிதறிப்
பல புரவி நீறு கைப்ப
வளை நரல வயிரார்ப் பப்
பீடழியக் கடந்து அட்டு அவர்
நாடழிய எயில் வௌவிச்
சுற்றமொடுதூவறுத்தலின்
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப (மதுரை.179-189)

இவ்வளவு அழிவுகளைப் பாண்டியன் பகைவர் மக்களுக்குச் செய்ததாலேயே அவர்கள் அவன்வழிக்கு வந்தனர். அதன் பின்பே அவர்களுக்கு அவன் அறிவுரைகளை வழங்கினான்.

அரைசியல் பிழைத்தால் அறங்கூற்றாவது அன்றைய நம்பிக்கை. தன் முன்னோனான ஆரியப்படைக் கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனுடைய ஆட்சியில் அரைசியல் பிழைத்து அதைத் தன் உயிரைக் கொடுத்து அவன் மாற்றினான். அப்படியிருந்தும் மதுரை அழிந்தது. அந்நிலை மீண்டும் எழாதவாறு இப்பாண்டியன் அரைசியல் பிழையாதவாறும், அறநெறிகளை இவ்விரு மண்டலத்தார்க்கு உரைத்தும், தம் முன்னோர்கள் சென்ற வழி பிறழாது ஆட்சி செய்ததாகப்பாடல் பெற்றுள்ளது.

வியன்கண் முதுபொழின் மண்டில முற்றி
பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடமுதற் தோன்றிய தொன்று தொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம் (மதுரைக். 190-194)

நச்சினார்க்கினியர் கூறும் உரையில் இப்பாண்டியன்,

நூல்களில் கூறிய அரசிலக்கணத்தில் தப்பாமல் நின் குலத்தில் பெரியோர் நடந்த அடிப்பாட்டின் வழியைத் தப்பாமல் அறநெறி இருக்கும்படி இதுவென்று அவர்களுக்கு விளக்கி மேற்றிசைக் கண் தோன்றிய நின்குலத்திற்குப் பழைதாகிய எல்லாரும் தொழும் பிறை நாடொறும் சிறக்குமா போல நின்னுடைய வெற்றியாலே நின் பின்னுள்ளோர்க்கு உண்டாம் கொற்றம் அவர்கள் வழிவழியாக மிகுவதாக

இப்பகுதியில் பாண்டியன் சந்திர குலத்தினன் என அறிந்து கொள்ளமுடிகிறது. பிறைச்சந்திரன் வளர்வது போல பாண்டியன்

வளர்ந்தான். முழுச்சந்திரன் தேய்வது போல் பகைவர் தேய்ந்தனர். சிறுவனாயிருந்த பாண்டியன் வளர்ந்து பேரரசனானான். பேரரசராய் இருந்த பகை அரசர்கள் தேய்ந்து போயினர். இதனைக்

குணமுதற் தோன்றிய காரிருள் மதியின்
தேய்வன கெடுகநின் தெவ்வர் ஆக்கம்

என்கிறார் மாங்குடி மருதனார்.

தமிழப்படை கைகலந்த தலையாலங்கானம்

தலையாலங்கானத்துப் போர் தலைசிறந்த போராகக் கருதப்பட்டதால் அக்காலக்கட்டத்தைச் சார்ந்த புலவர்கள் நாவில் பட்டுப் பாட்டிலும் இடம் பெற்றது. ஓர் அரசனை ஓர் அரசன் எதிர்கொள்வது உலகத்து இயற்கை என இடைக்குன்றூர் கிழார் பாடிய புறப்பாட்டால் முன்பு அறிந்தோம். ஆனால் தலையாலங்கானத்தில் அந்நிலை இல்லை. ஓர் அரசனை, அதுவும் இளைஞனுடன் ஏழு அரசர்கள் போரிட வந்தனர். அவனும் தமிழன்; போரிட வந்த ஏழு அரசர்களும் தமிழர்கள். இருதரப்பு வீரரும் தமிழர்களே. எத்தனைபேர் இறந்தாலும் கூற்றுவன் ஒருவனே என்பதுபோல் எழுவர் தரப்பில் பலர் இருந்ததையும் (இறந்ததையும்) பாண்டியன் ஒருவனே அவர்க்குக் கூற்றுவன் என்பதையும் இறுதியில் கூற்றுவனே வென்றவன் என்பதையும் குடபுலவியனார் (புறம். 19:1-4) பாடியுள்ளார்.

இமிழ்கடல் வளைஇய ஈண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத் தொருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய!

'தமிழ்தலை' என்பதற்குப் பழைய உரையாசிரியர் "தமிழப் படை" என்கிறார். "வென்வேற்செழிய!" என விளிப்பதை வைத்து இப் பாண்டியனே ஆரியப்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் மதுரையில் இறந்தபின் கொற்கையிலிருந்து மதுரைக்கு வந்து ஆட்சியை ஏற்ற வெற்றிவேற் செழியன் ஆவான் எனச் சிலர் கருதுகின்றனர். அது பொருந்தாது என முன்பும் கண்டோம்.

பாண்டியன் வெற்றிக்காகப் பாடுபட்ட தலைவர்களும் மூதிற்பெண்டிரின் புதல்வர்களும் இறத்தல்

குடபுலவியனார் என்பவர் ஒரு பெண்பாற்புலவர் போலத் தெரிகிறது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனின்

"முத்தாரம் அகத்திட்ட மார்பை விரும்பி முயங்கினேன் அல்லனோ" என்பதிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம். இவர் இப்பாண்டியனைப் பற்றிப் பாடிய பாடல்கள் *புறநானூற்றில்* 18, 19ஆம் பாடல்களாக இடம்பெற்றுள்ளன. தலையாலங்கானத்துப் போர் முடிந்த பின்பு பாடப் பெற்ற பாடலாக இவை அறியப்படுகின்றன.

இப்பாடலில் மூதிற்பாண்டிர் படைத் தலைவரோடு தம் புதல்வரும் பாண்டியனுக்கு வெற்றியை ஈட்டித்தந்து போர்க் களத்தில் வீழ்ந்து கிடந்ததைக் கண்டு இப்படிப் பட்ட வெற்றியைப் பற்றி உவகையால் அழுததாகப் பாடப் பெற்றுள்ளது.

> எறிந்துக்களம் படுத்தவேந்துவாள் வலத்தர்
> எந்தையொடு கிடந்தோர் எம்புன்றலைப்புதல்வர்
> இன்னவிறலு முளகொல் நமக்கென
> மூதிற் பெண்டிர் கசிந்தழ (புறம்.19:12-15)

இதற்கான பழைய உரையில் களத்தில் பட்டவர்கள் படைத்தலைவரும் மூதிற் குலப் பெண்டிரின் புதல்வர்களும் ஆவர் எனப்படுகின்றது.

> வாள் வெற்றியையுடையோராய் எந்தலைவனோடு
> கிடந்தார் எம்முடைய புல்லிய தலையை யுடைய மைந்தர்,
> இப் பெற்றிப் பட்ட வென்றியும் உளவோ நமக்கென்று
> சொல்லிய முதிய மறக்குடியிற் பிறந்த பெண்டிர் இன்புற்று
> உவகையால் அழ,

என வருகின்றது. மூதிற் பெண்டிர் என்பது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடியில் பிறந்த பெண்டிர் ஆவர். எந்தை என்பதை 'எம் தலைவன்' என உரை கூறுகிறது. இதனால் இறந்தவர்கள் மூதிற் பெண்டிரின் ஊர்த் தலைவரும் புதல்வரும் எனலாம். 'முதிய மறக்குடி' என உரை கூறுவதால். மூதிர் பெண்டிர் முதியர் குலத்தைச் சேர்ந்தவர் எனலாம். இம் முதியர் கூட்டத்தினர் பற்றிப் *பதிற்றுப்பத்து*, *புறநானூறு* போன்ற நூல்களிலும் கூறப்பெற்றுள்ளது.

முதியர் என்பது ஆண்பாலரைக் குறிப்பது போல மூதிற் பெண்டிர் ஏன்பது பெண்பாலரைக் குறிப்பிடும் சொல் ஆகும்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

புறநானூற்றின் 19ஆம் பாடலில் தலையாலங்கானத்துப் போர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் *புறநானூற்றின்*

18ஆம் பாடலில் *மதுரைக்காஞ்சியின்* இறுதிப் பகுதிகள் போல் "மக்களுடைய நலன்களின் மேல் பாண்டிய மன்னன் கவனம் செலுத்த வேண்டும்" என அறிவுறுத்தப்படுகின்றது. ஆதலால் இப்பாடல், அனைத்துப் போர்களையும் பாண்டியன் நடத்தி முடித்துத் தன் நகரில் அமர்ந்து அமைதியுற்ற காலக்கட்டத்தில் பாடப்பெற்றதாகக் கருதலாம்.

"உயர்ந்தோர் மருக" என மாங்குடி மருதனார் விளித்ததுபோல் இப்பாடலிலும், குடபுலவியனார் பாண்டியனை "உரவோர் உம்பல்" என்கிறார். 'தாளில் தந்து' என்பதால் வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் வழித்தோன்றல் என்கிறார்.

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம் புகழ் நிறீஇ
ஒருதா மாகிய வுரவோ ரும்பல் (புறம். 18:1-4)

"உலகமாண்ட உயர்ந்தோர் மருக" (மதுரைக்.23) என்பது போல் உரவோர் என்னும் மூதாதையர் தம்புகழை இவ் உலகத்தில் நிறுத்திச் சென்றுள்ளனர். அப்படியானவர்களின் வழியில் வந்தவனே என முதலில் விளிக்கின்றார். இதன் மூலம் பண்டைய பாண்டியப் பேரரசர்கள் ஆண்ட நிலப்பகுதிகளையும் புகழையும் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் மீண்டும் ஆளுவதாகக் கருதலாம்.

வயவேந்தன்

பாண்டிய நாட்டின் அகலம் கூறியவர் அதன் தலைநகராம் மதுரையின் சிறப்பைக் கூறுகின்றார். பழைய ஊராகிய இம் மதுரைமூதூர் குழிந்த நீர் நிலை அகழிகளையும் நெடிய மதிலையும் உடையது. இத்தகு காவல் மிகுந்த மதுரையின் "வயவேந்தே" (புறம்.18:12) எனவும் அவனை விளிக்கிறார்.

அடுபோர்ச் செழியன்

அடுத்ததாக அவனை "அடுபோர்ச் செழிய" என்கிறார் (புறம். 18:27). இதற்குக் "கொல்லும் போரைச் செய்யும் செழியன்" எனப் பொருள் கூறலாம். பகைவர்களைக்கொல்லும் போரைச் செய்த செழியன் போரால் தளர்ந்துள்ள தன் நாட்டு மக்களின்மேல் கவனம் செலுத்துமாறு "உண்டி கொடுத்தோர்

உயிர் கொடுத்தோரே" எனும் கருத்தமையும் மிகச் சிறந்த பாடலடிகளைப் பாடியுள்ளார். அவை வருமாறு:

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்டு
அடம்பும் உயிரும் படைத்திசினோரே (புறம். 18:18-23)

"ஆதலால், கொல்லும் போரையுடைய செழிய! இதனைக் கடைப் பிடித்து விரைந்து நிலங்குழிந்த விடத்தே நீர்நிலை மிகுமாறு" செய்க என்று அறிவுறுத்துகிறார்.

பாண்டியனின் அறம்

பாண்டியர்கள் பலர் புலமையுடையவர்களாக இருந்தாலும் அறத்தை மிகுதியாக நினைத்ததால் தாம் பாடிய பாடல்களில் அதை வலியுறுத்துவதை அறியலாம். கடலுள்மாய்ந்த இளம்பெரு வழுதியின் *புறநானூற்றுப் பாட்டில்* (182) இந்திரர்க்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அதைத் தனித்துண்ணல் செய்யார். யாரோடும் வெறுப்பைக் காட்ட மாட்டார். சோம்பியிருத்தலும் செய்யார். புகழுக்கு உயிரையும் கொடுப்பர். பழி வந்தால் உலகமே கிடைப்பதாயினும் கொள்ளார். இப்படியான நிலையான மனநிலை பாண்டிய அரசர்களுக்கு இருந்தது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும் பல போர்களுக்குப்பின் அப்படியான மனநிலைக்கு வந்ததாக *மதுரைக்காஞ்சியிலிருந்து* தெரிகிறது.

உயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய் நட்பினையே
முழங்குகடலேணி மலர்தலை யுலகமொடு
உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க்கு அஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி
ஈதலுள்ளமொடு இசைவேட் குவையே (மதுரைக் 197-205)

இதற்கு நச்சினார்க்கினியர் கூறும் விளக்கமாவது:

ஒரு பொய்யாலே உயர்ந்தநிலையையுடைய தேவருலகை அவர் நுகரும் அமுதத்தோடே பெறுவையாயினும். அவற்றைத் தருகின்ற பொய் நின்னைக் கைவிட்டு நீங்க மெய்யுடனே நட்புச் செய்தலை யுடையை, முழங்கு கடலாகிய எல்லையையுடைய அகன்ற இடத்தையுடைய உலகத்துள்ளாருடனே உயர்ந்ததேவருலகத்துத் தேவரும் பகைவராய் வரினும் பகைவர்க்கு அஞ்சித் தாழ்ந்து ஒழுகுதலைச்செய்யாய்; தென்றிசை நிலத்தின் மலைகளெல்லாம் நிறையும்படி வாணனென்னும்சூரன் வைத்த சீரிய பொருட்டிரள்களினைப் பெறுவையாயினும் பிறர்கூறும் பழிநமக்கு வருவதாக வென்று கருதாய், சீரிதாகிய பொருளைக் கொடுத்தலை யுடைத்தாகிய நெஞ்சுடனே புகழை விரும்புவை

பாண்டியன் இவ்வாறான நிலைக்கு வந்த காரணம் அவன் பெற்றிருந்த மனநிலை ஆகும். பல போர்கள்; பல உயிர் இழப்புகள்; நாடுகளை அழித்துக் காடாக்கியமை போன்றவற்றால் பாண்டியன் கந்தழி நிலையை எய்தியிருந்தான். "கந்தழியாவது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்தபொருள்" என நச்சினார்க்கினியரே (திருமுருகா. உரை) கூறுகின்றார்.

காஞ்சியும் கந்துழியும்

நச்சினார்க்கினியர் கந்தழியைப் பற்றி முன்னே கூறினார். காஞ்சி பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

*இப்பாட்டிற்கு மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சி யென்று துறைப்பெயரானன்றித் திணைப்பெயராற் பெயர் கூறினார். இத் திணைப்பெயர் பன்னிருபடல முதலிய நூல்களாற் கூறிய திணைப் பெயரன்று, தொல்காப்பியனார் வறிய திணைப்பெயர்ப்பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின், வஞ்சி மேற்சொல்லானும், காஞ்சி எஞ்சாதெதிர் சென்றூன்றலானும், "வஞ்சியுங் காஞ்சியுந் தம்முண்மாறே" என்னப் பன்னிருபடலத்திற்கூறிய திணைப்யெர் இப்பாட்டிற்குப் பொருளன்மையுணர்க. அவர் முதுமொழிக் காஞ்சி முதலியவற்றைப் பொதுவியலென்று ஒரு படலமாக்கிக் கூறலின், அவை திணைப்பெயராகாமை யுணர்க.

இனி, மதுரைக்காஞ்சியென்றதற்கு மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சியென விரிக்க. இஃது உருபும் பொருளும் உடன்றொக்கது. "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" (தொல். புறத்சூ.22) என்பதனாற் காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று. அது, "பாங்கருஞ் சிறப்பிற்

பல்லாற்றானு, நில்லா வுலகம் புல்லிய நெறித்தே" (தொல்.புறத்.சூ.23) என்பதாம். இதன்பொருள்: பாங்கு அருசறிப்பின்-தனக்குத் துணை யில்லாத வீடுபேறு நிமித்தமாக, பல அற்றானும் - அறம் பொருள் இன்பமென்னும் பொருட்பகுதியானும், அவற்று உட்பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையு முதலியவற்றானும், நில்லா உலகம் புல்லிய நெறித்து - நிலை பேறில்லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினை உடைத்து அக்காஞ்சி யென்றவாறு. எனவே, வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமை யென்றவாறு. எனவே, வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமை சான்றோரறையுங் குறிப்பினது காஞ்சித்திணை யென்பது பொருளாயிற்று.

முடிவுரை

பழங்காலத்தில் இந்நில உலகில் பல நாகரிகங்கள் தோன்றின. அவற்றுள் தமிழர் நாகரிகமும் ஒன்று. தொன்மை முதல் இன்று வரையும் இந்நாகரிகம் தொடர்கின்றது. காலத்திற்கேற்பத் தமிழர் நாகரிகம் மாற்றம் அடைந்திருக்கலாம்; புதியன புகுத்திருக்கலாம்; பழையன கழிந்திருக்கலாம்.

பழந்தமிழர் நாகரிகத்தின் தலையாய பண்புகளைப் பாண்டியரின் பாண்டிய நாட்டிலும் சோழரின் சோழநாட்டிலும் சேரரின் சேர நாட்டிலும் கண்டறிந்து கொள்வதற்கேற்ப இலக்கண, இலக்கிய, தொல்லியல் சான்றுகள் கிடைக்கின்றன. புறச்சான்றுகளும் கிடைத்துவருகின்றன.

மூவேந்தர் காலப் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரை தொடர்பான பழந்தமிழ்ப் பாடல்கள் பல இருப்பினும், பத்துப் பாட்டுள் ஒன்றான *மதுரைக்காஞ்சியில்*தான் பாண்டியரின் வரலாறும் பாண்டிய நாட்டின் வரலாறும் மதுரையின் சிறப்பும் பிறவும் பாடப்பெற்றுள்ளன. பாண்டிய அரசியலமைப்பு இந்நூலில்தான் சிறப்பாகக் காட்டப்பெற்றுள்ளது.

சோழரின் கடற்கரைப் பட்டினமான புகார் நகரம் குறித்த செய்திகளைப் *பட்டினப்பாலையில்* காணமுடிகிறது. மூவேந்தர் காலத்துச் சோழநாட்டையும், சோழர்களின் வரலாற்றையும் பிற பழந்தமிழ்ப் பாக்களில் கண்டறிந்து கொள்ளலாம்.

சேரரின் வரலாற்றையும் வெற்றி, கொடைச் சிறப்புகளையும் *பதிற்றுப்பத்துக்* பாக்களிலும் புறப்பாடல்களிலும் பிறவற்றிலு மிருந்து தெரிந்துகொள்ள முடிகின்றது.

மூவேந்தர்களைப் போலத் தொன்மையான வரலாற்றைக் கொண்டுள்ள வேளிர்கள் பற்றிய பழந்தமிழ்ப் பாக்கள் மிகுந்து கிடைக்கின்றன.

அவ்வேளிர் தொடர்பான வரலாறு ஓரளவு எங்களால் இந்நூலில் வரையறுக்கப்பெற்றுள்ளது.

மூவேந்தர்கால அரசியல் அமைப்பு

பழந்தமிழ் நூல்களிலிருந்து சேர, சோழ, பாண்டியர்களின் அரசியல் வரலாறு ஒரே மாதிரியாகவே அமைந்துள்ளது. அதாவது

- அரசன் முன்னிலை வகிக்கிறான்
- வேளிர்குலச் சிற்றரசர் அவனைச் சூழ்ந்துள்ளனர்.
- அரசனின் சுற்றத்தார் அரசனை மையப்படுத்தி அமைந்துள்ளனர். இவர்கள் பல முக்கியப் பொறுப்புகளில் இருந்தனர்.
- அச்சுற்றத்தாரில் சிலர் அமைச்சர்களாயும் படைத் தலைவர்களாயும் இளவரசர்களாகவும் பதவி வகித்தனர்.
- அரசனின் பட்டத்தரசியும் அரசகுல மகளிரும் கற்பில் சிறந்தவர்களாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளனர்.
- அரச குலத்தினர் அந்தணர்களை முதன்மையாகப் போற்றினர். அவர்களால் பாடப்பெற்றனர். அவர்களுக்குப் பரிசில் நல்கிப் பாதுகாத்தனர்.
- அரசன் குடும்ப வாரிசு அடிப்படையில் பதவி ஏற்கிறான். வாரிசுகள் பல இருந்த நிலையில் மூத்தவன் அரசனாகவும் இளையோர் இளவரசர்களாயும் பதவி வகித்துள்ளனர்.
- அரசனின் தம்பிமார் நாடுகளின் பல பாகங்களில் ஆட்சி செய்ததும் அறியக் கிடக்கின்றது.
- அரசகுடும்பத்துப் பெண் ஆட்சி செய்ததற்கான சான்றுகள் இல்லை.
- வேளிரும் வேந்தரும் சான்றோர் குலத்தவரே.
- சான்றோர் குலத்தவரே மையப்பகுதியினர் ஆவர்

மையத்திலிருந்து பல படிநிலைகளில் சான்றோர் குலத்தவரே அமைந்திருந்ததைக் கீழ்க்காணுமாறு விளக்கலாம்.



மதுரைக்காஞ்சி இந்த அரசியலமைப்பை வெளிப்படுத்துகிறது. இந்த அரசியலமைப்பையே இந்நூலிலும் நாங்கள் எழுதியுள்ளோம்.

மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் அரசியல் அமைப்புப் போல் வேறு எந்தப் பழந்தமிழ் நூலிலோ பாடலிலோ அரசியல் அமைப்பு தெளிவாக இடம்பெறவில்லை. ஆதலால் சான்றோர் குலத்தவர் பற்றிய வரலாற்று விளக்கத்திற்கு *மதுரைக்காஞ்சி* தேர்ந்தெடுக்கப்பெற்றது. அதன் பாட்டுடைத்தலைவனான தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனுக்கு முன்பும் பின்பும் மூவேந்தர்காலத்துப் பாண்டியர்கள் ஆட்சி செய்திருந்தாலும் இப்பாண்டியனே தலைசிறந்த வரலாற்று நூலான *மதுரைக்காஞ்சியில்* சித்திரிக்கப்பெற்றுள்ளான்.

மதுரைக்காஞ்சி எனும் நூலில் பதிவாகியுள்ள வரலாற்றுச் செய்திகள், தமிழ்ப் பண்பாட்டுச் செய்திகள், நிலங்கள் தொடர்பான வருணனைகள், பல்வேறு மக்கள் பற்றிய பண்பாட்டுச் செய்திகள், பாண்டியநாடு மற்றும் சேர, சோழ நாடுகள், அவற்றின் ஊர்கள் பற்றிய செய்திகள், போர்கள், கலைஞர்கள் பற்றிய குறிப்புகள், ஊர் காவலர், கோட்டைக் காவலர், வீரர்கள், மண்டலத் தலைவர்கள், அரசனின் சுற்றத்தார், கோசர், மாறன், ஐவர் கேளிர், குறுநிலமன்னர், செல்வர், குரிசிலர்,

ஊக்கலர், பெருஞ்செயாடவர், விழுமியோர் போன்ற தலைவர்கள் பற்றிய செய்திகளையும் அறிந்துகொள்ள முடிகின்றன.

மதுரைக்காஞ்சியிலுள்ள அரசியல் அமைப்புடன் பிறநாட்டு அரசியல் அமைப்புகளை ஒப்பிடல்

மதுரைக்காஞ்சி கூறும் அரசியல் வரலாற்று அமைப்பை அது பாடப்பெற்ற காலத்துக்குச் சமமான கிரேக்க, உரோம, வடநாட்டு அரசுகளின் அரசியல் அமைப்புகளுடன் ஒப்பிட்டு ஆராய்வது இன்றியமையாததாகும். அவ்வாறு ஆராய்ந்து பார்த்தால் பண்டைத் தமிழரின் அரசியல் வரலாற்றின் சிறப்பும், மேன்மையும் உலகுக்குத் தெரியவரும். அவ்வகையான ஆய்வுக்கு இந்த நூல் படிக்கட்டாக அமையும்.

- கல்வி அறிவு, மொழிவளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி
- உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம்
- நாட்டின் பாதுகாப்புக்காக யானைப்படை உள்ளிட்ட பலவகைப் படைகள் கொண்ட சேனைகள்
- பண்பாட்டு வெளிப்பாட்டுக்கான கலைகள், நிலம், மலை, கடல் சார்ந்த தொழில்கள்
- தமிழ்த் தத்துவச் சிந்தனைகள்
- அரசியல் நிருவாகம்
- சான்றோர் சுற்றத்துடனான அரசியல் கட்டமைப்பு

போன்றவற்றை ஆராய வழிவகுக்கும்.

மதுரைக்காஞ்சியை மையமாக வைத்து அரசகுலச் சான்றோர் வரலாற்றை ஆராய்ந்தால் இவை போன்ற தனித் தன்மைகள் இந்நூலில் வெளிப்பட்டுள்ளன.

துணைநூல்கள்

அகநானூறு, கழகப் பதிப்பு, சென்னை 1.

அகநானூறு, ச.வே. சுப்பிரமணியன் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை 1.

ஆவணம் (இதழ்கள்), தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர் 7.

இராசு (புலவர்), முனைவர் (பதிப்பாசிரியர்), *கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள்*, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

--------, *தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்*, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

இராமச்சந்திரன், சீ., *வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2004, சென்னை 113.

---------, அ. கணேசன், *தோள்சீலைக் கலகம் - தெரிந்த பொய்களும் தெரியாத உண்மைகளும்*, தென்னிந்தியச் சமூக வரலாற்று ஆய்வு நிறுவனம், சென்னை 44.

இருங்கோவேள் பிள்ளைத் தமிழ், கி.பி. 18ஆம் நூற்றாண்டு.

இலக்கண விளக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 1.

இளங்குமரன் உரை, *தகடூர் யாத்திரை*.

இறையனார் களவியல் (நக்கீரர்) உரை, கழகப் பதிப்பு, சென்னை 1.

கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரை), கழகப் பதிப்பு, சென்னை 1.

கன்னியாகுமரி கல்வெட்டுகள், தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை 113.

காசிநாதன், நடன., *தமிழர் காசு இயல்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113.

கிருஷ்ணமூர்த்தி, ச., *கல்லிடைக்குறிச்சிக் கலைக்கோயில்கள்*, உண்ணாமலை பதிப்பகம், திருவான்மியூர், 2005, சென்னை 41.

--------------, *திருவாவடுதுறை ஆதினச் செப்பேடுகள்*, உண்ணாமலை பதிப்பகம், திருவான்மியூர், 2005, சென்னை 41.

--------------, *தமிழ்நாட்டுச் செப்பேடுகள்*, தொகுதிகள் 1, 2, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

--------------, *நடுகற்கள்*, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003.

சங்ககால மன்னர்களின் காலநிலை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113, 2000.

சதாசிவ பண்டாரத்தார், *பாண்டியர் வரலாறு*, 1956.

சாந்தலிங்கம், சொ., *தமிழர் பண்பாட்டுப் பதிவுகள்*, அருள் பதிப்பகம், சென்னை 78.

-------------, *குடுமியான் மலை*, தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, தருமபுரி, 1990.

-------------, *வரலாற்றில் தகடூர்*, தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, தருமபுரி, 1990.

சாமிநாதையர், உ.வே. (பதிப்பாசிரியர்), *புறநானூறு மூலமும் பழைய உரையும்*, உ.வே.சா. நூலகம், சென்னை 4.

-------------, *பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்*, உ.வே.சா. நூலகம், சென்னை 4.

-------------, *பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்*, உ.வே.சா. நூலகம், சென்னை 4.

-------------, *சிலப்பதிகார மூலமும் அரும்பத உரை அடியார்க்கு நல்லாருரையும்*, உ.வே.சா. நூலகம், சென்னை 4.

-------------, *மணிமேகலை*, உ.வே.சா. நூலகம், சென்னை 4.

-------------, *புறப்பொருள் வெண்பா மாலை*, உ.வே.சா. நூலகம், சென்னை 4.

சேதுராமன், ஆ., *சங்கரசோழன் உலா*, கும்பகோணம்.

தசரதன், ஆ., *வலங்கைச் சான்றோரும் சோழரும்*, தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை 115, 1996, 1997.

-------------, பத்மநாப சுவாமிக் கதைப்பாடல்கள் 1, 2, தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை 115, 2005.

-------------, *வலங்கை மாலை எனும் அரசகுல மாலை* (பதிப்பில்).

------------- (பதிப்பாசிரியர்), *சத்திரியகுல விளக்க வினாவிடை* (அரசகுமார நாடார் & கண்ணாயிர நாடார் எழுதியது 1900), மறுபதிப்பு, தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை 115, 2008.

-------------, 'சங்ககால அரசகுல மகளிர்' *தமிழியல் (Journal of Tamil Studies*, Vol. 70) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113, ஜுன், 2010.

தமிழ்நாட்டு வரலாறு (சங்ககாலம்), அரசியல், பாடநூல் நிறுவனம், சென்னை, 1983.

தமிழில் ஆவணங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113.

திருக்குறள், பரிமேலழகர் உரை, கழகம், சென்னை.

திருவீழிமிழலைக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை 8.

தொல்காப்பியம் (4 தொகுதிகள்), கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113.

நவநீதப்பாட்டியல், உ.வே. சாமிநாதையர் நூலகம், சென்னை 41.

நன்னூல் (விருத்தியுரையுடன்), ஆறுமுகநாவலர் பதிப்பு.

நாகபட்டின மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை 8.

நாலடியார், மதுரைப் பல்கலைக்கழகப் பதிப்பு, நாகமலை புதுக்கோட்டை, மதுரை 21.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், சென்னை.

நிர்மலாதேவி, சூ., *அரவமுத்துவீரன் கதை*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113.

நெல்லை நெடுமாறன், S.D., 'வலங்கை உய்யக்கொண்டார்', *Epigraphical Society of India,* Mysore, Vol. 23.

---------, *எழுநூற்றவர்,* குமரி மாவட்ட ஆட்சியர் அரங்கில் சொற்பொழிவாற்றிய தலைப்பு, 1994.

---------, '*சான்றோர் அவை*' 'Court of the Lords', *Epigraphical Society of India,* Mysore.

---------, '*நிழல் வீரர் உரை*', *Epigraphical Society of India,* Mysore.

---------, (தொகுப்பாசிரியர்), *சான்றோர்குலச் செப்புப் பட்டயங்கள்,* தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை 115,.

பதிற்றுப்பத்து, அவ்வை துரைசாமிப் பிள்ளை உரை, கழகப்பதிப்பு, சென்னை 1.

பழமொழி நானூறு மூலமும் உரையும், கழகம், சென்னை 1.

பன்னிரு பாட்டியல், கழகப் பதிப்பு, சென்னை 1.

பாண்டிக்கோவை, ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை 5.

பாண்டியர் செப்பேடுகள் பத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113.

புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், சென்னை அருங்காட்சியக வெளியீடு, சென்னை 8.

புறத்திரட்டு, சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு, சென்னை 5.

மார்க்சீய காந்தி, *கும்பகோணம் கல்வெட்டுகள்,* தமிழகத் தொல்லியல் துறை வெளியிடு, சென்னை 8.

மேகம் சிறைகொண்ட ஐயனார் வில்லுப்பாட்டு, மகிழ் வண்ண நாதபுரம், பாவூர்ச்சத்திரம், தென்காசி.

வீரநாராயண விசயம், புலவர் கந்தசாமி (பதிப்பாசிரியர்), இராசிபுரம்.

ARE Reports, Archeaological Survey of India, Mysore, 1916.

Epigraphica Indica, Vol. XXVI, XXIII, Archeaological Survey of India, Mysore.

ARE Reports, Archeaological Survey of India, Mysore, 1916.

Indian Antiquary, Vol. XX, Archeaological Survey of India, Mysore.

Nellai Nedumaran, S.D., *Sanror Kasu - A New Interpretation,* South Indian Numismatic Society, Tirucchur, Kerala, 1997.

South Indian Inscriptions, Vol. VIII, XXIII, V, XIII, XXVI, Archeaological Survey of India, Mysore.

Thasarathan, A., *Maanaadu - A Social History of Maanaviiravalanaadu,* Centre for Preservation of Tamil Palmleaf Manuscripts, Chennai 115.

Travancore Archaeological Series, Vol I, II, III, IV, V, Trivandrum.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை	60.00
நீறணி பவளக் குன்றம்	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
கலீலியோ முதல் கலாம் வரை	35.00
குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம்	60.00
தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்	30.00
நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி	30.00
ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்	30.00
சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை	30.00
சங்கத் தமிழ் பகுதி 1	100.00
சங்கத் தமிழ் பகுதி 2	100.00
சங்கத் தமிழ் பகுதி 3	115.00
சங்கத் தமிழ் பகுதி 4	130.00
சங்கத் தமிழ் பகுதி 5	110.00
ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள்	60.00
தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும்	160.00
இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்)	50.00
திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு	40.00
பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்	70.00
காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு	40.00
Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study	125.00
இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல்	290.00
தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு	310.00
பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும்	170.00
தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள்	185.00
மனிதப் புனிதர் கக்கன்	110.00
மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை	75.00
மூவர்தமிழ் மூன்று பார்வைகள்	50.00
காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள்	100.00
அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா	145.00
அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு	160.00
இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	55.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	150.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	55.00
சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று	170.00
தமிழ் நாடக மொழியும் வரலாறும்	110.00
வா.செ.கு. என்ற ஆளுமையாளர்	50.00
உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன்	45.00
மருதத்தில் மக்கள் வாழ்வியல்	40.00
பழந்தமிழும் கிளைமொழிகளும்	65.00

---

721 அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் 115.00